[illegible]

பிஸ்மில்லா

23503

# ஷம்சுத்தாசீன் கோவை.

இது

பிரபல வர்த்தகரும்

வெட்டுவாங்குளமாதிய கிராமங்களுக்கிறைந்தாரும்

பாளையங்கோட்டை ஆனரெரி மாஜிஸ்ட்டிரேட்டுமான

மேலப்பாளையம் ஸ்ரீமான்

வ. செ. த.

ஷம்சுத்தாசீன் தரகனாரவர்கள்மீது

—————*—————

மதுரைத் தமிழ்ச்சங்கத்துப் புலவரு ளொருவரான

தேவாமிர்தப் பிரசங்கக் களஞ்சியம்

மகாமதி, சதாவதானி

கோட்டாறு

கா. ப. செய்குதம்பிப் பாவலரவர்களால்

இயற்றியது

மேலப்பாளையம், வித்வான்

வ. அ. மல்க்கான்அலி சாகிபவர்கள்

இயற்றிய

அரும்பதவுரையோடு

சென்னை:

ஸ்ரீபத்மநாப விலாச அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

1919

# இப்புத்தகத்திலடங்கியவை


க. சாத்துகவிகள். க—கூ

உ. பாயிரம். எ—அ.

ங. ஹம்சதூதின் கோவை க கoச.

ச. ஷை அரும்பத வுரை க—கஉ.

ரு அபிதான விளக்கம். நங.

சு. அகப்பொருட்செய்தி காலவரையறை நச

எ. விஷயசூசிகை. நரு

அ. செய்யுள் முதற்குறிப்பகராதி நசு—நசு.

கூ. பிழைதிருத்தம். சo.



ஸ்ரீமான்,

வ. சே. த. ஷம்சுத்தாசீன் தரகனார்

பிரபல வர்த்தகர், இனாம்தார்,

ஆனரெரி மாஜிஸ்திரேட்.

மேலப்பாளையம்.

சகாயம்.
பிஸ்மில்லாஹ்.

# சாத்துகவிகள்.

---

சென்னை கிறிஸ்டியன் காலேஜ் தமிழ்ப் பண்டிதரும்
ஸர்வகலாசங்கத்துத்
தமிழ்ப் பரீக்ஷகருமான ஸ்ரீலஸ்ரீ,
கா. ஸ்ரீ. கோபாலாசாரியாரவர்களால்
இயற்றப்பட்டது.

கட்டளைக்கலித்துறை.

கோட்டாறு வந்தசெய் குத்தம்பிப் பாவலன் கூறுதமிழ்ப்
பாட்டாருங் கோவைமே லப்பாலையத்துதி பாறுதென்சொன்
மாட்டா தரஞ்செயும் க்ஷம்சுத்தா சின்கண வான்றருமேற்
கூட்டரப் படர்ந்து புகழ்மணம் வீசிக் குலாவின்றதே.

---

மதுரைவாசியும்,
ப்பாட்டுடைத் தலைவரது இரங்கூன் தலைமை ஆபீஸ்மானேஜரும்
இரங்கூன் சோலியா முஸ்லீம் சங்கத்தின் மாஜி காரியதரிசியு
மான வித்வான், ம-ா-ா-ஸ்ரீ,
ம கா. மு. காதிறுமுஹியித்தீனவர்கள்
இயற்றியது.

அறுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்.

ன்னவயல் சூழ்மேலப் பாளையமா முருகரா னயலார்க் கென்று
ானலமே ாசமேவட கரைஷெய்த மன்சூ றென்னுமத் தோன்செய் [கும்
ன்னலமே சடமெடுத்தா லன்னஷம்சுத் தாசிமெனு மெழிலோன் யார்க்
ன்னலமே பணிக்கவிர்தப் பாரிலவ தரித்தவன்னல் பாரி யொப்பான்.()

த்துவித சித்தாந்த வருணிலைக்கோர் பொருணிலையா யவில மெல்லாஞ்
ந்திபெற வந்துதித்த செய்யதிருக் கோடைவளச் செல்வ ரென்னும்
த்தகமெய்ஞ் ஞானேசர் வீறுமலர்த் தாட்டுணையே வேண்டி நாளும்
ந்தியொடு மணம்வாக்குக் காயமெலா மொருசேரப் பணித்த நாயன்.

ாரூச் தென்னாட்டிற் நிகழ்பாளை யங்கோட்டைச் செழும்ப திக்குப்
ாரு மானாரி மாஜிஸ்திறேட் டானபெரும் பெற்றி யான
ாான வண்மைவேட்டு வாங்குமைர் நியபலஹூர்க் கேளுந்தா ரிக்கத்
ாரூம் ஜார்ஜு மன்னன்]தகைமைபுணர்த் தனித்தமெடல் தரிக்கப்
[பெற்றோன்.

ன்னாட்டிற் தமிழ்கல்கத் தாகடலூர் புதுவைசென்னை தேர்தெ ஜுங்க
ாட்டிற் காக்கியநா டாவிலுங்கோச் சீயதிறு ாவிநும் பர்மா
ன்னாட்டிற் சிகழிரங்கோன் ஜுவ்வுமாண் டலேசித்தா னின்னு முன்ன
ாட்டி லும்பரந்த வாணிபச்சா லைகள்பல படைத்த யோகன். (4)

வறியவருக் கீவதுவே யிசையென வள்ளுவனார் சாற்ற லுத்த
நெறியதனுக் கிலக்கியமா யிருப்பவர்கள் சித்தரித்த நிறையச் சொன்னம்
குறிப்பறிந்து கொடுப்பதன்றிக் குடியிருக்கக் குடில்பலசதங் குயிற்றி னாயு
புரியதென்னும் பெயர்புனைந்து வறிஞருக்கெ லாமளித்த புண்ணிய னென்.

எத்தானத் திலுமன்ன தானமதே யேற்றமென விசைப்பர் பல்லோ
ரத்தானத் திலுமிக்க தாகும்வித்தி யாதான மதற்கீ ணைக்கு
பத்தாயி ரங்கொடுத்துக் குடியேற்றத் தார்க்காகப் பள்ளி யொன்றுங்
கத்தாவைத் தொழுதிடற்கோ ராலயமுங் கட்டிவைத்த கனதி யானென்.

ஆக்கமிலாத் தனமதென்று மதைப்படைத்த மாக்களெலா மவனி மீது
நோக்கமுறக் காதகரங் கால்களெனு மங்கமொடு நோயில் லாத
வாக்குயிருந் தாலுமவை யில்லாராய் வாழ்வரென வழங்கு முன்னோர்
வாக்கையெலாம் பொய்யாக்க வாக்கையெடுத் தவதரித்த வாய்மை யா

இன்றுசெய் தார்சரண விதஞ்செய்த லேமுறையென் றியம்பு மாறே
யின்னுளூர் தானுமில்ல மிழந்தயலி லோரிடத்து மேவுங் காலை
யொன்னாரி னுரைக்கிணங்கி யுபயபுத்தி ரர்க்கும்விட வுண்டி யீந்த
வன்னுளுக் காயிரங்கி யபயமுட னர்த்தமளித் தாண்ட வண்ணல்.

இத்தகைய வாண்டகைமேற் கோவையொரு நானூற்றி னேடி ரண்டு
பத்ததன்மே லேந்துகவி யாலியற்றிப் பார்க்களித்தான் பகரு மத்த
வுத்தமனா ரோவென்னி னுரைக்குதுங்கோட் டாறுநக குறைந்திடுஞ்செந்
துத்தம்பிப் பாவலனு முத்தமிழின் சாகரமாங் குரிசின் மாதோ.

தேவாமிர் தப்பிரசங் கக்களஞ்சி யம்மெனவுந் தெரிந்த மேலோர்
நாவான்ம காமதியா னெனவுமிரு பட்டங்க ளல்கப் பெற்றுப்
பூவாருஞ் சென்னைமிசை யவதான மொருநூறும் புரிந்த வித்தப்
பாவாண னருள்கோவைப் பயன்விரித்த லெவர்க்கும்வெகு பார மம்மா.

---

நல்லாசிரியன் பத்திராதிபரும்
மதுரைத் தமிழ்ச்சங்கத்துப் புலவருளொருவரும்
சென்னை வேப்பேரி குயின்மேரிஸ்காலேஜ் தமிழ்ப்பண்டிதருமான
ம-ா-ா-ஸ்ரீ, கா. நமச்சிவாய முதலியார்
அவர்கள் இயற்றியது.

அறுசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்.

பாமருவும் புகழ்படைத்த மேலப்பா ளையம்புரக்கும் பண்பு வாய்ந்தோன்
நாமருவுங் கவிவாணர் நயமருவப் பொருள்வழங்கு நலமே சான்றோன்
காமருவு கொடையாளன் ஷம்சுத்தா சின்பெயர்கொள் காவ லோன்மேற்
றேமருவு சுவைமருவு கோவைநூல் வளம்பெறவே செய்திட் டானால்.

எண்ணைய பனுவலையு மிம்மென்று மனைவயினி லியற்ற வல்லோன்
செவ்வியசெந் தமிழ்ப்புலவன் ஷெய்குதம்பிப் பாவலனுந் திகழு மேலோன்
அவ்வியலின் றமைத்ததைக் காணுமரும் பொருளினைத்து மறிவித் தாலும்
இவ்வியசெற் புலமைபழுத் தெழுமல்கா னவிபெண்ணுஞ் சொரி யோனே.

---

இந்நூலாசிரியரது மாணாக்கருளொருவரான
தென்கம் புதூர் வித்வான்
ம-௱-௱-ஸ்ரீ, சாத்தான்குட்டிப்பிள்ளை
அவர்கள் இயற்றியது.

அறுசீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்.

சீரேறு கலைபடையான் செய்யதிருக் குணமுடையான் சேணுலாவுங்
காரேறு கரதலத்தான் காட்சிமிகு ஞானியெனக் கழறு மூரான்
பாரேறு புகழுடையான் பரம்பொருளை புகழ்நிறத்தும் பான்மையுள்ளான்
தாரேறு செழுமார்பன் ஷம்சுத்தா னென்பெயர்கொள் தக்கோன் மீதே.

தெள்ளியபாற் கடல்கடைந்து தேவர்பொருட் டமுதம் நிரட்டிய போ, லொள்ளியநீர் தமிழ்க்கடலி னுயர்வுபெறு மகப்பொருளி லோருவன்பி, னுள்ளியவை நினைக்கோவை யெனவொருநூ லுலர்நிசைந்தா லுலக முய்யத், தள்ளியவெவ் வினைதணித்த தக்கோனை யாவனெனச் சாற்றக் கேண்மோ.

விண்பட்ட தருமலிபூம் பொதிகையில்வாழ் குறுமுனிவன் விரித்த வைந்து, பண்பட்ட விலக்கணமு மிலக்கியமு முலகுவப்பப் படித்துத் தேர்ந்தோன், கண்பட்ட மணிபோல்வான் கருதுமுயிர் பான்மையுளான் கற்றோர்போற்று, மெண்பட்ட புகழுடையா னிகழ்வடையான் சோலைடாக ரிருந்து வாழ்வோன்.

முன்னரிய சென்னைதனில் மூதறிஞர் பலர்கூட முறையே நூறு
பன்னரிய வவதானப் பண்பெடுத்துக் காட்டியிரு பரிசு பெற்றோ
னுன்னரிய புலவரொடு முகேசனிடை மாமதியா யொளிரு மேலோன்
மன்னரிய நலனுடையான் ஷெய்குதம்பிப் பாவலனு மதிவல் லோனே.

---

இந்நூலாசிரியரது மாணாக்கருளொருவரான
பறக்கை, வித்வான் ம-௱-௱-ஸ்ரீ,
தா. மாணிக்கவாசகம்பிள்ளை அவர்கள்
இயற்றியது.

அறுசீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்.

சீர்தழுவுஞ் சோலையிடைக் கனிதேனுங் கமழ்மலர் கடமுங் காவு
மேர்தழுவுஞ் செந்தமிழு மிடைச்சேரி பாலித்து மிருஞ்செஞ் சாந்தம்
போர்தழுவி யிருமருங்கும் பொன்விசி மணமாறும் பொருநைப் பாங்கர்ப்
பார்தழுவும் பனையத்தோர் பழம்பதியா மீன்புரமென் பார்கண்மன்னோ

அச்சகரான் றன்னிடையே யடைந்தவர்க்குக் குறிப்பறிந்து கருளே மாற்றுந், பொன்னகரான் றருக்கோன் புயவொலியான் மதனிகரான பொருந்து கீர்த்திக், கென்னிகரான் கம்சத்தா சின்புயத்திற் கேற்றிடவே யியற்று கோவை, பன்னரிய துறையிணைத்த பரமானே சதுரமைப்புத்தான் மாதோ. (2)

சொன்னலமும் பொருணலமுந் தொடைநலமு நடைநலமுந் துறையிற்றோன்று, மின்னலமு மிதனிடையே யெழின்மடக்குச் சிலேடையுமொருங்கே மோனைப் பன்னலமும் பழந்தமிழாற் பழுத்தொழுகு மிந்நூலைப் பண்டு வோர்செய், நன்னலமு முறுகோவை நவிலருந்தி நாவாநவிற்ற லாமே. (3)

அன்னவன்யா ரெனிலுரைப்ப னருந்தமிழைப் பண்டறிஞர்க் கருளிவைத்த, முன்னவனே யிப்புவியின் முன்னினனென் றன்றோர்கண் மொழியு மாற்றன், சென்னைதனி லவதானஞ் செய்துபல கற்றறிஞர் தேர்துரைத்த, மன்னவனும் மிகச்சிறந்தோன் மதிவலர்க்கு மிடிவேறு மிமை சான்றோன். (4)

அருளுருவோ பொருளுருவோ வன்புருவோ வின்புருவோ வான செல்வன், கருவுருவோ வினியிலதான் காசினியிற் புக்குருவே கற்ற யாருமெருளுறவே விடைபகர்வோன் வேறுமுள வெம்மதமும் வேறென் றுமலொருபொருளே கடவுளென வுரைபகர்வோன் வரைதறுரு வுண்மைமிக்கோன். (5)

திருவாரு நலம்படைத்த திருநகராங் கோட்டாற்றிற் சிறப்புற் றோங்கு, மொருவாத நண்புடையா ரெளிர்பக்கீர் மீறனன் பொருவா செருசன், தருவான கொடைக்கரத்தான் றன்மகவென் றுலகுதித்தான் றழங்கும் வேலை, பொருவாத நற்கலையான் புலவர்மகா மதியெனப் புகழ்ப்பெற்றான். (6)

மாவாரு மேருதனை மருவினருக் குயர்வருளு மாறே கல்விக், காவாரு மடையிலுட னரும்புலமைக் கானாக்கு மருமை வாய்ந்தோன், நாவாரு நறுந்தமிழை நன்றெனக்கு மருள்குரவன் ஞான ரூபன், பாவாரு சாவட்டியான் பண்புடைசெய் குத்தம்பிப் பாவலோனே. (7)

---

இந்நூலாசிரியரது மாணாக்கருளொருவரான
கோட்டாறு வித்வான் ம-ள-ள-ஸ்ரீ,
பி. ஆறுமுகம்பிள்ளை அவர்கள்
இயற்றியது.

கொச்சகக்கலிப்பா.

பூமணக்கும் பொழிலுமெழிற் புனன்மணக்குந் தடமுமரு
ளுமணக்குந் தமிழுமிரு கலைமணக்கும் புலவருடைய
தேமணக்கு மதியினருஞ் சிறைமணக்குந் தபருமைசேர்
கோமணக்கும் புகழ்மணக்குங் கோட்டாறெனும் பதியில்.

என்னரும்பெய்த் தூளியர் செறுமுனிவர் மகமாபே
பன்னியகல் வறப்பபறும் பகர்தரும்பன் னூறுணர்வி
னுன்னியபச் செய்யீறுண் சோன்மைபுஞ்செந் தமிழுணங்கு
நன்னியமெய் போசுமுமே கல்லுருக்கொண் டெழுந்தவே. (2)

வறிந்துமிரு கலைதெளிந்து முட்பொருளின் பயனுணர்ந்திற்
பறிந்துமயல் வியபொருட்குப் பகர்தருக்க நூலோரும்
மறிந்திடகல் லுரைவழுங்கி மணர்தருசீர் வள்ளுவர்நூல்
விறிந்தபடி கடையயின்று விளங்குறுஞ்சற் குணமேலோன். (3)

செக்செல்வளர் திருவாகூர்க் குத்திரிபா மக்தாநி
பன்னருர்தண் கோட்டாற்றுக் குப்பதிற்றுப் பத்துமுதற்
சொன்னவன்றன் றூயபெரும் புகழுடையான் றுணையுடையான்
அன்னவனு ளென்னின்மிக வன்புளனால் வம்பிலனே. (4)

என்னிநயத திருளுடைவித் தெழிறருதற் சொர்ணாளும்
தன்னருமைற் றனிபிருத்தித் தருக்கலைகள் பலமொழிச்தே
புன்னரும்பே ரிரைம்பா னவதான மொருங்கியற்றும்
பன்னருஞ்சீர் செய்குதம்பிப் பாவலவன் பரிவினெனும். (5)

பண்பரவு புகழ்மேலப் பாளையமாம் பெரும்பதியில்
விண்பரவு கொடையாலே மேவியசீ ரேவிரும்பும்
எண்பரவு மெழில்ஷம்சுத் தாசிறு மிருர்தவன்றன்
றிண்பரவு புயவலியின் சிறப்பொளிறத் தெண்ணியரோ. (6)

எழுத்துமுத லிலக்கணமு மிலக்கியத்தின் பெருஞ்செறிவும்
பழுத்தொழுகப் படிக்குநர்க்கும் பகருநர்க்கும் பழகுநர்க்கும்
விழுத்தகுசீ ரறிவுதர மேன்மையுடை யகப்பொருளால்
வழுத்தினிலாக் கிளைக்கோவை மகிதலத்து வளமையுற. (7)

சொற்கண்டு பொருள்கண்டு தொடைகண்டு நடைகண்டு
முற்கண்ட நற்சுவையே முதிர்கண்ட வர்தாற்குக்
கற்கண்டு சர்க்கரைமுக் கனியமிழ்திற் றினைக்கோனை
மற்கண்ட நாக்கொண்டு வாயார வாழ்த்துதற்கே. (8)

---

இந்நூலாசிரியரது மாணுக்கருளொருவரும் கோட்டாறு ஹையர்கிரேட் செகின்டரி ஸ்கூல் தமிழ்ப்பண்டிதருமான

பறக்கை, ம-ள-ள-ஸ்ரீ,

## எம். குமாரசாமிப்பிள்ளை அவர்கள்

இயற்றியது.

நேரிசை வெண்பா.

வெற்றி தருங்கரத்தான் வெள்ஷம்சுத் தாசிறுடை
சொற்றனன்றன் பாரம் குலவுதற்கே—கற்றவர்கள்
உட்குமகு தப்புலைக்கா ரெனைக் கிளைக்கோவை
செய்குதம்பி பாவலவன் சேர்ந்து.

# சாத்துகவிகள்.

இந்நூலாசிரியரது மாணக்கருளொருவரான
கோட்டாறு வித்வான், ம-ா-ா-ஸ்ரீ,
**கிருஷ்ணசாமிப்பிள்ளை அவர்கள்**
இயற்றியது.

நேரிசையாசிரியப்பா.

திருவளர் தாமரைத் தேம்பொழி லுடுத்த
மருவளர் பாண்டி வளநாட் டின்கண்
தண்டுறை மேவுந் தாம்பிர வன்னியும்
வண்டுறை சோலையு மருங்கு விளங்கும்
ஹாமீம் புரமெனு மரும்பதி வாழுஞ்
சோம லெண்குடை அக்கிய செல்வன்
தக்கோன் ஷம்சுத் தாசி னெனும்புகழ்
மிக்கோ னகம் விளங்க வைத்தினைக்
கோவை யென்னுங் குலவிய வாரம்
மேவச் சூட்டினன் விரிநீர்க் கோடைப்
பதிவாழ் செல்வன் பண்புறு குணத்தோன்
கதிபெற வெற்குத் தமிழ்கற் பித்தோன்
தொல்காப் பியமுதல் தோன்றி லக்ஷணமும்
பல்காப் பியமும் பயிறரு நாவினன்
சொன்னய முதலாச் சொன்னபன் னயமுந்
தோன்றப் பாடுந் தூயாற் கவிஞ
னுன்று மவதான மொருநூறும்
பன்னிய செய்குத் தம்பிப்பா வலனே.

---

இந்நூலாசிரியரது மாணக்கருளொருவரான
காமரகுளம் ம-ா-ா-ஸ்ரீ,
**எம். சிவதாணுக்கவிராயரவர்கள்**
இயற்றியது.

நேரிசை வெண்பா.

பொன்னணிகொண் மாடமலி ஹாமீம்புரிக்கோர்
மன்னனென வந்துதித்த வள்ளலெனும்—மின்னுலிசே
கோவை பலபுனைந்த கோன்ஷம்சுத் தாசின்மேல்
கோவையொன் றுசெய்தளித்தான் கூர்ந்து.
சீரார்செய் குத்தம்பிச் சீரியன்றன் தேம்பாவை
ஆரார் புகழாதா ரம்புவியிற்—பேராரும்
கண்மணியா யென்றுமுட் கலர்தகின்ற கற்பகமா
யென்னுங் கவிராச ரேறு.

---

ஞ ர பீ ம்.

பிஸ்மில்லாஹி.

# சிறப்புப்பாயிரம்.

சென்னை பச்சையப்பன் காலேஜ் தமிழ்ப்பண்டிதர்

ம-ா-ா-ஸ்ரீ, கா. ர. கோவிந்தராஜ முதலியார்

அவர்கள் இயற்றியது.

அறுசீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்.

சீர்கொண்ட குணங்களுக்குச் செவ்வியசல் லியலிடமாய்த் திகழு நல்
லோன், ஏர்கொண்ட நிலமெல்லா மெழில்கொண்ட தன்புகழே யிலக வை
த்து, ஈர்கொண்ட மனத்தோர்க ளன்மொழிகொண் டினிதுரைக்கு
நலமே கொண்டோன், கார்கொண்ட கொடைக்கரத்தோன் கவின்
கொண்ட நன்முகத்தோன் கனிந்த சொல்லோன். (1)

உப்புநெறி முறைக்குறுகல் லுறுநெலா யினிதுணரா வுலக மும்பச்,
செய்யுமமு தனையவருந் திங்கவிகள் பலவியற்றிச் சிறந்தோர் தாமும், அய்
யனெனப் பணிந்திடச்சா ருஞ்ஞானி யார்சாய்பா மலர் பொற்பார், தூய்
யவடி யிணைக்கமலந் தன்னவுறு மெனவே துலங்கு நெஞ்சன். (2)

இசையாருங் கனிமழலை யேய்ந்துறுதன் மக்களுக்கா யீந்த ஞ்ச, வசை
யாகு மொருவனுக்கு மதிபுலத்தா லலம்புரிந்து மாசை தந்த, அசை
யாத வறநெறியோ னளியினுக்கோ ரகரமா யமைந்த மேலோன், இசை
யாரும் விழைதருஞ்சீர் வெட்டிவாங் குளத்தனக்கின் மிகுந்தா ராலேன்.

தண்மதிசேர் குளிர்முகத்துச் சார்சென்று மாசர்பிரான் றந்த வெ
ப்பில், மண்மதிசேர்ப் பொற்பதக்க மாண்புறுதன் றகைமையினால் வாய்க்
கப் பெற்றோன், பண்மதிக்கு மொழிமழலைப் பைங்குழன்மெல் லிடையட
வார் பார்த்து ருகாள், விண்மதிக்கு மிகத்தளர்ந்து மெலிவுற்று மனங்கல
ஙும் வேளே போல்வான். (4)

பேசரிய பெருஞ்செல்வன் பெருமைமிகு வாணிபத்திற் பிறங்கு மிற்
போன், மாசிலகுண் முகம்மதிஸ்ற மாமறையி னெறியகலா மாண்பார் நெ
ஞ்சன், தேசுறுநல் லும்சுத்தா சினைப்பேர் செறிந்திலகு செம்மை யோ
ன்றன், ஆசிலருங் குணக்கவெலா மகத்தன்னி யதனுலா மன்பு அண்ட.

பொன்னணியி னண்மணிகள் பொருத்தியவாத் தன்னரிய புலமை
சான்ற, புன்னணிகொண் டினிதிலகும் பாக்களிடை யுவன்புகழே பதிய
வைத்து, மன்னவிரு மியற்றமிழின் வளஞ்சார்ந்த கோவையொன்று வழ
ங்கி னுனால், முன்னருஞ்சொற் புலவோர்கண் முதநிகு னிவனென்று
மொழிய மன்னே. (6)

அன்னவன்ற னிருவரு மருக்கோட்டின் வாய்மைதரு மெய்ப்பதியோ னின்னலஞ்சேர் கோட்டாறென் றினியெய்யும் பதியினிடை யினிதுவாழ் வோன், உன்னருஞ்சீ நவநீத மொருநாம னெம்பெருமான் புலமைமேவி, பன்னுமெழிற் சொற்புலவோர் பாடிமென் றிசைத்திடப்பா வலர்யுமெய்து றேன். (7)

பண்டையருந் தமிழ்நூற்கள் பலவுணர்ந்தோ னரியதுரன் பார்த்த யாசில், வண்டலர்ந்து தெரிந்தபோ னிசைசெய்குத் தம்பிப்பா வலனென் றோதும், பண்டமைபுல் லவிவாணன் பண்புடைய சட்பானன் படியிற்சீ ர்த்தி, வண்டிசைபுக் தழைவித்தோ னின்மொழியன் பன்னலஞ்சேர் நின்று வோனே. (8)

அன்னவனக் கோவையகத் தரும்பொருளை யாவருமே யறியும் வண்ணம், பன்னுமருந் பதவுரையைப் பகுத்தளித்தான் பாங்காகப் பதிற்செய்ய, பொன்னிறுக்கும் பொன்னைப் பொலிந்துணர்த்தான் வாணிபத்தின் புலமை மிக்கான், உன்னருஞ்சீர்ப் புகழ்மணமில் வுலகமெலாம் பரவுறு முறுதி யாளன். (9)

கற்றவர்க்கு கற்றுணைவன் கனிதோற்ற மின்மொழியன் காசி னென்றன், கற்றிறஞ்சார் செந்தமிழ்நூ னவிலுமருந் பொருட்டெளிவு மாய்ந்த னாவன், செந்தமிலாக் கோட்டாற்றச் செய்யவருண் ஞானியர்பாற் செழித்த வன்பன், பற்றியநீர்க் கருமுகில்போற் பாவலர்பாற் றன்னனிசெய் பண்பின் மிக்கோன். (10)

பொன்றலில்சீர் முகம்மதிறை புனிதமறை வழியொழுகும் புலமை யன்பன், என்றனக்கு மின்றுணைவ னெழிலார்க்கு பொலிமுகத்த னியைந்த செல்வன், மன்றல்செறி குழன்மடவார் வணர்தனங்க டோயவிழை வளர்ந்தோள் மார்பன், துன்றமல்கா னவியெனுஞ்சீர் தோய்பெயர்கொ ணற்றனத்துத் தாயன் மன்றே. (11)

சிறப்புப்பாயிரம்

முற்றிற்று.



ஹாமீம்.

பிஸ்மில்லாஹி.

# ஷம்சுத்தாசீன்

# கோவை.

MAHAMAHOPADHYAYA
DR. U. V. S. IYER LIBRARY
BESANT NAGAR, MADRAS-90

—:*:—

## காப்பு.

கட்டளைக்கலித்துறை.

திருவார் மருமநற் செய்குமன் சூர்தினன் செய்தவரோ
டுருவா யமைந்தபு மான்ஷம்சுத் தாசி னுவந்தணியுங்
கருவா ரகப்பொரு ளோத்திலேக் கோவை கழறநித
மருவா ருருவி னகப்பொருட் குள்ள மமைந்ததுவே.

---

## நூல்.

## களவியல்.

அஃதாவது-பொருளதிகாரத்துட் கூறப்பட்ட உருவும் திருவும் பருவமும் குலனும் குணனும் அன்பும் பிறவுந் தம்முளொத்த பதினாறாண்டும் பத்துமாதமுஞ்சென்ற தலைவனும் பன்னிரண்டும் பத்துமாதமுஞ்சென்ற தலைவியும் கொடுப்போரும் பிறருமின்றி யூழ்வயத்தாற் றாமேயெதிர்ப்பட்டுப் புணர்தற்றன்மை. இங்ஙனம் புணர்தல் அகப்பொருளிற் கூறிய எண்வகை மணத்துட் காந்தருவமணமாய்க் கைக்கிளைமுதல் வரைவிடை வைத்துப் பொருள்வயிற் பிரிதலீறாகிய பதினேழு கிளவித்தொகைகளை யுடையது; அவை வருமாறு:—

---

## கைக்கிளை.

அஃதாவது-தலைவன் மாட்டாவது தலைவிமாட்டாவது நிகழு மொருதலைக்காமம்; அவற்றுளிது- தலைவன்பாற்படு மொருதலைக்காமமாய்க் காட்சி ஐயம் துணிவு குறிப்பறிதல் என நான்குவகைப்படும்; அவை வருமாறு:—

காட்சி.

(இ-ள்.) தலைவன் தலைவியை ஒருபூஞ்சோலையிடத்துக் காணுதல்.

மாவேவி தழைத்து வனசமுங் கோங்கு மருவியல்லிப்
பூவே புணர்ந்து புதுமற வேற்றனி பூண்டுபுகழ்க்
கோவே யெனவரு வோன்ஷம்சுத் தாசின் குளிர்சிலம்பின்
காவே சிறப்பு மடுவிலொர் பூங்கொடி காண்கின்றதே. (1)

ஐயம்.

(இ-ள்.) கண்ட தலைவன் இவள் எந்த வுலகத்துப் பெண்ணோ? வென்று சந்தேகப்படுதலைக் கூறுதல்.

வானோ புவியோ மலையோ கடலோ மதியிரவி
தானோ வனசத் தனித்தவி சோவுற்ற தண்டமிழ்க்கோர்
கோனோ வெனவருள் வோன்ஷம்சுத் தாசின் குளிர்சிலம்பின்
கானோ டொளிதரு வாளிரு டந்தவக் காவகமே. (2)

துணிவு.

(இ-ள்.) சந்தேகிக்கப்பட்ட தலைமகள்பாதம் பூமியிற் படிதலாலுங் கண்புடை பெயர்ச்சியாலும் பூலோகத்துப் பெண்ணெனத் தெளிந்து கூறுதல்.

காலே பதிந்தன கண்ணே யிமைத்தன காணுமலர்
மேலே புலர்ந்தன மெய்ங்கிழல் கண்டன மேவுமிவற்
றாலே பரசர்பி ரான்ஷம்சுத் தாசி னருட்சிலம்பின்
பாலே யமரிட மன்றிமற் றில்லையிப் பாவையர்க்கே. (3)

குறிப்பறிதல்.

(இ-ள்.) தெளிந்த தலைமகன் தலைவியின் வேட்கை அவள் பார்வையாற் றன்னிடத்துள்ள தென்றறிதலைக் கூறுதல்.

படையேறு கைத்தலத் தோன்ஷம்சுத் தாசின் பனிவரைசேர்
தடையே யிலருளர் நெஞ்செனன் றிரண்டொரு தண்கமலப்
புடையே சமர்த்தனர் நீத்தல்செய் பண்டிதர் போன்றவிவ
ளிடையே யிலையா லினித்தன மோவந்தின் கெய்துறுமே. (4)

கைக்கிளை - முற்றிற்று.

---

## இயற்கைப் புணர்ச்சி.

அஃதாவது-தெய்வத்தாலாவது தலைவியாலாவது கூடுதல்; அவற்றுள் இது—தலைவியாற் கூடுதலென்க. அது: வேட்கைபுணர்த்தல், மறுத்தல், உடன்படல், கூட்டமென நான்கு வகைப்படும்; அந்நான்கும் இரந்துபின்னிற்றற் கெண்ணல் முதலிய பதினாறும் பிறவுமாகிய விரிகளையுடையன; அவையாவன:—

இரந்துபின் னிற்றற் கெண்ணல்.

(இ-ள்.) தலைவன் தலைவியையாசித்துப் பின்னிற்றற்கு நினைத்தல்.

தேடித் தனர்தரு வேள்ஷம்சுத் தாசின் செழுஞ்சிலம்பில்
வாடி யலையேல் வருவாய் மனமே மகிழ்ந்திரத்தற்
கோடி புறுவோ முறுவா யமுதோ டொளிர்வரைபோற்
கோடித் தனமுள ரொன்றிரண் டிதுவர் கூடுகர்க்கே. (5)

இரந்து பின்னிற்றல்.

(இ-ள்.) அன்னமென்னிய தலைவன் தலைவிக்கு இதஞ்சொல்லிப் பின்னே நிற்றல்.

கெம்போ டொளிர்புயத் தோன்ஷம்சுத் தாசின் கிளர்வரைசேர்
வம்போடு கூந்தன் மடமயி லேயுன்றன் வார்தனப்போர்க்
கொம்போட விட்ட கொழுமூரத் துன்னிரு கூர்விழியா
மம்போட வைப்பி னமையுங்கொ லோவென்ற னாருயிரே. (6)

முன்னிலையாக்கல்.

(இ-ள்.) தலைவி நிற்பது தன்காரியத்திற்கு [illegible] மென்றெண்ணி அவளைத் தலைமகன் முன்னிலையாக்கி மொழிதல்.

கோடும் பிறைநுதற் கோமள மேயுளங் கூர்ந்தெவரும்
பாடும் புகழ்ப்பெரு மான்ஷம்சுத் தாசின் பனிவரைவாய்
காடும் பொழிலுஞ் சுனையு மடுத்துன்ற னூரியரோ
டாடுந் தொழின்மறந் தாய்தனித் தாயென்கொ லாதரமே. (7)

வண்டோச்சி மருங்கணைதல்.

(இ-ள்.) தலைவன் தலைவியினது கூந்தலிலுள்ள வண்டினை யோட்டுதல்போலத் தலைவியினது பக்கத்திற் சார்தல்.

தாதை யெனப்புரப் போன்ஷம்சுத் தாசின் றமிழ்க்கிரிசேர்
பேதை யிவள்பா லளிகா ளிசைவகை பேசியிவள்
கோதை யடைந்தீர் மறந்தீ ரொருநூல் கொளுமியனீர்
மேதை புரிவீர் செறுவி ரிசைவலர் மேவகமே. (8)

மெய் தொட்டுப் பயிறல்.

(இ-ள்.) தலைவன் தலைவி சிரத்திலுள்ள குழலைத் தீண்டிப் பழகுதல்; அஃதாவது - தோளைத் தொட்டுரையாடல்.

சொற்கண்ட வாணர் தொடை [illegible] டைகுடுமுயர்
மற்கண்ட திண்புய மால்ஷம்சுத் [illegible] வெற்பிற்
கற்கண்டு வேண்டுங் கனதன [illegible] பட்டதாஞ்
நூற்கண்ட மெய்ப்பொரு ளோர் [illegible] தை முற்றுறுமே. (9)

### பொய்பாராட்டல்.

(இ-ள்.) தலைமகன் தலைமகள்பாற் சென்று இல்லதுங் கூறிப் புகழ்ந்து கொண்டாடுதல். ஆயின்; உள்ளது கூறுதலும் பொய்பாராட்டலோவெனின்? அற்றன்று. மற்றென்னையெனின்? இல்லது கூறுவான் உள்ளதை விட்டுவிடுவோ னல்லனென்க.

எல்லாரு மேத்துமிக் கோன்ஷம்சுத் தாசீ னிருஞ்சிலம்பில்
வல்லாருங் கொங்கை மடமயி லேயுன்றன் வார்குழற்சீர்
செல்லார வேண்டி யலைவாய்ப் பயமிகச் சென்றலறி
யல்லாரு மேனுமக் கோசலம் விட்டங் கழுங்கிடுமே (10)

### இடம்பெற்றுத் தழால்.

(இ-ள்.) தலைவன் தலைவியைத் தழுவுதற்கு வாய்த்த இடத்தைக் கண்டு கூறுதல்.

முந்தத் தவத்தின் முழுதுல கேத்த முதிர்ந்துதித்த
சந்தத் தடமுலை யீர்றுந்தங் கட்கணை தைத்தவலஞ்
சிந்தத் துயங்குமென் சிந்தா குலமறச் சேர்ந்ததரு
விந்தத் திருப்பத வேள்ஷம்சுத் தாசீன் வியன்பொழிலே. (11)

### வழிபாடு மறுத்தல்.

*(இ-ள்.) இரந்து பின்னிற்றன் முதலாகப் பொய்பாராட்ட லீறாகத் தலைவன் வழிபட்டதனைத் தலைவி மறுத்தல்.

பண்ணேறு மென்மொழிப் பாவலர் போற்றுநற் பைந்தமிழ்ச்சீர்
விண்ணேறு மாறமைத் தோன்ஷம்சுத் தாசீன் வியன்சிலம்பிற்
றண்ணேறு சாந்துஞ் சமைந்தனி தேறலுஞ் சார்ந்தனவி
லெண்ணேறு போதங்கொண் மாதவி யேயெம்மை யேற்றருளே.

### இடையூறு கிளத்தல்.

(இ-ள்.) தலைவி வெட்கமுற்றுக் கண்ணை மூடிக்கொண்டு நிற்றலினு லெழுந்த துன்பத்தைக் கூறுதல்.

பாட்டாற்றி வந்தநற் பாவலர் வேண்டும் பரிசளித்துங்
கேட்டாற்ற வல்லபு மான்ஷம்சுத் தாசீன் கிளர்வரையிர்
தேட்டாற் றிகழ்ந்த செழுங்கண நீத்துக்கை சேரலர்போற்
கோட்டாற்றை விட்டுய ராமீன் புரங்கொளுங் கொள்கையன்றே.

### நீடுநினைந்திரங்கல்.

(இ-ள்.) புணர்ச்சி யெய்தாமையா லிவளுள்ள மென்னுள் நிலையுமோ? வென நெடுநேரந் தலைவனினைந்து தலைவியைப் பார்த்துக் கூறுதல்.

பாராளு மன்னர்பி ரான்ஷம்சுத் தாசீன் பனிவரைசேர்
காராளுங் கூந்தற் கனியமு தேயுன் கனகவட

மாறாகும் கும்பத் தினையே துணையாய் மதித்தெழுந்தன்
னீராரு மந்தக் கடிதட நீந்தி நிலைப்பதென்றே. (14)

மறுத்தெதிர் கோடல்.

(இ-ள்.) முன்வழிபாடு மறுத்ததனை மறுத்துத் தலைவி தலைவன் கூறிய சொல்லை யேற்றுக் கோடலைக் கூறுதல். பேரேற்று னென்பதற்குப் பேரெதிர்த்தானென்புழிப்போல. எதிர்தல் - ஏற்றல்.

கோடா தருள்குணத் தோன்ஷம்சுத் தாசின் குளிர்வரைவாய்
வாடா மலர்த்தொடை மன்னர்தங் காமவெவ் வாரிபொங்கி
போடா தெழுந்துறி னெஞ்சே நமக்கோ குறுந்துணையாய்
நாடா தடுத்தெதிர் நிற்குங்கொ லோசந்த நாணணையே. (15)

வறிது நகைதோற்றல்.

(இ-ள்.) தலைவி முகத்திலே சிறுநகை தோன்றுதல்.

பொன்னு மொளிருமிப் பூங்கொடி தன்னுளப் போக்கனைத்து
மென்னு மெனமயங் கேந்தறம் மேக்க விருட்காசர்
மன்னு மொளிருமெம் மான்ஷம்சுத் தாசின் மலையவெற்பின்
மின்னு மொளிர்ந்தது மெல்லிநல் லாண்முத்த வெண்ணகையே. ()

இக்கவி உரைப்போருங் கேட்போரு மின்மையாற் கவிக்கூற் றென்று கொள்க.

முறுவற் குறிப்புணர்தல்.

(இ-ள்.) தலைவி சிறுநகையின் குறிப்பைத் தலைவனுணர்தல்.

பகைதந்த மன்னர் தினந்தந்த மூல பலந்தனக்கோர்
தகைதந்த வண்ணல்பி ரான்ஷம்சுத் தாசின் றமிழ்ச்சிலம்பில்
வகைதந்த வேரணி கொண்டோர் முலைக்கொடி மையலரு
ணகைதந்த தாலினி மன்றற் சுகமிவ ணண்ணிடுமே. (17)

முயங்குதல் உறுத்தல்.

(இ-ள்.) தலைவி புணர்ச்சிக்குடன்பட்ட அருமையை வற்புறுத்திக் கூறுதல்.

நிலையான வந்த கவிவாணர் தம்மைக் கனககுவி
பலையான வைத்தபு மான்ஷம்சுத் தாசி னருஞ்சிகர
மலையானன் கண்டக் கோட்டா றடைந்தன மாமதன்வாய்ச்
சிலையானஞ் செய்தரு தேரூர் தெரிந்தினிச் சேருதுமே. (18)

கலவியின் மகிழ்தல்.

(இ-ள்.) தலைவன் தலைவியைக் கலந்தலான் மகிழ்தல்.

திடங்கண்ட வாணர்பி ரான்ஷம்சுத் தாசின் செழுங்கிரிசேர்
விடங்கண்ட வேல்விழி மாதர சேயுன்றன் மெய்படுமோ

ரிடங்கண்ட சொர்க்கத் தின்பக் கனியமு தீர்த்தெனையுன்
றடங்கண்ட வாகந்த வெள்ளத்து ளாழ்த்த தகைமையன்றே. (19)

புகழ்தல்.

(இ-ள்.) தலைவியினது நலத்தைத் தலைவன் வியந்து பாராட்டல்.

குன்று மணிப்புயக் கோன்ஷம்சுத் தாசீன் குளிர்வரைவாய்
நின்றா ரணிகுழ லேயர விந்தமுன் மெல்லடிச்சீ
றொன்றா வாடி யலைவாய்ப் பயமலர்த் தோங்குகண்ணீர்
பொன்று திறைத்தொரு காவின்றன் னுந்தங்கண் பூத்ததுவே.

இப்பதினொரு துறைகளுள், இரந்து பின்னிற்றற் சென்னல் முதல் நீடுநினைந்திரங்கலீறாகிய பத்தனுள், வழிபாடு மறுத்தலொழிந்த ஒன்பதும் வேட்கை புணர்த்தற்கும், வழிபாடுமறுத்தலொன்றும் மறுத்தற்கும், மறுத்தெதிர்கோடலும் வறிதுநகை தோற்றலுமாகிய இரண்டும் உடன்படற்கும், ஏனையவொன்றுங் கூட்டத்திற்கு முரியன.

இயற்கைப் புணர்ச்சி முற்றிற்று.

---

## வன்புறை.

அஃதாவது-தலைவி ஐயுற்றவழி ஐயந்தீரத்தலைவன் வற்புறுத்திக் கூறல்: அஃது-ஐயந்தீர்த்தல், பிரிவறிவுறுத்தலென இருவகைப்படும்; அவை: ஏற்புறவணிதல் முதல் இடமணித்தென்றலீறாகிய எழுகிளவியுடையன: அவை வருமாறு:—

ஏற்புற வணிதல்.

(இ-ள்.) புணர்ச்சியிடத்துத் தலைவி புனைந்த முத்தார முதலிய கொங்கையணி குழலணிகள் வேறுபட்டவற்றைத் தலைவன்றன்கையினால் வேறுபாடுதீரப் புனைதல்.

பொன்னணி சேர்புயத் தோன்ஷம்சுத் தாசீன் பொலன்கிரிவாழ்
மின்னனை நுண்ணிடை மெல்லிய லாயுன் மெலிக்கிரங்கேன்
முன்னணி பின்னணி முற்றும் வகுத்து முதலிடைகான்
புன்னணி யாவுமின் னுயமு பின்புற மாட்டுவனே. (21)

அணிந்துழிநாணிய துணர்ந்து தெளிவித்தல்.

(இ-ள்.) தலைவன் அவ்வாறு புனைந்துழித் தலைவி பாங்கியாலணியப்பட்ட அணிக்கு இவர் கைபோலணியும் அணி வேறுபடுமென்றும், அதைப் பாங்கியறியில் ஐயம்பிறக்குமென்றும், நாணுற்றவெட்கப்பட்டாளாக, அதைத்தலைவனறிந்து தலைவியைத் தெளிவித்தல்.

பாவிய லாய்ந்தருள் வோன்ஷண்முகத் தாசன் பனிவரையி
ளேவிய மன்ன னொளிர்முகத் தாபுன்ற னுண்மைசெறி
காவியங் கைவைத் தெழுத்தோடு சொற்பொருள் கண்டழியாப்
பாவிய லோதி முடித்தே னணியும்பின் னுய்தாவே. (22)

பெருநயப் புரைத்தல்.

(இ-ள்.) இனி, தலைவன் வருவானோ? வாரானோ? வென்று தலைவி முகம் வேறுபட, அதைத்தலைவன் குறிப்பாலுணர்ந்து தனது மிகுந்த காதலைக் கூறுதல்.

காதுங் கனிந்துட் கரைதரப் பாடனி காளுதியி
னோது மொருகைப் பிடியனம் போனடக் தோங்குமிரு
போது முலைமுத்தர் தந்துரை யாடற் புதவளியோன்
றேதும் பரும்புகழ் மால்ஷண்முகத் தாசி னிறும்பகத்தே. (23)

தெய்வத்திறம் பேசல்.

(இ-ள்.) மேற்கூறியதைத் தலைவிதெளியாதவளாகத்தலைவன் அவளூழ்வலியின் திறத்தைக் கூறுதல்.

விதியா லுயர்ந்த துரைஷண்முகத் தாசி னெடுவரைவாய்த்
துதியா ரயில்விழித் தூமொழி யேயுடற் றேமொழியே
மதியா தியற்றும் வலியுள தாயின் மருவருமோர்
விதியாம் பிணையிற் பிணைப்புறு நம்மையும் வெல்லரிதே. (24)

பிரியேனென்றல்.

(இ-ள்.) தலைவன் பிரிவனென்னுங் கவற்சியால் தலைவி புடல் விளர்ப்பக்கண்ட தலைவன் உன்னைவிட்டுப் பிரியமாட்டேனென்று கூறுதல்.

சிறந்து வளர்கிரி போன்ஷண்முகத் தாசன் செழுங்கிரிவாய்ப்
பிறந்து வளர்ந்தநற் பெண்கொடி யேயஞ்சிப் பேதுறனிற்
றுறந்துங் கனலி னவோ டுணுவுங்கை சோர்ந்திடய
மறந்தும் பிரியேன் பிரியிற் றரிக்கிலன் மன்னுயிரே. (25)

பிரிந்துவருகேன்றல்.

(இ-ள்.) பிரியேனென்றது கேட்டு மகிழ்ந்த தலைவிக்குத் தலைவன் பின்பிரிந்து வருவேனென்று கூறுதல்.

அற்றே ரணிகுழ லாயிழை யாய்பொழி லாடுதிபோர்ச்
செற்றே பகைதடிந் தோன்ஷண்முகத் தாசின் செழுங்கிரிவாய்ச்
சற்றே பிரிந்து வருவேன் றரியேன் றரிக்கினுமக்
குற்றே யெயிலக்கொடு வந்திடு மென்னக முன்னகமே. (26)

இடமணித்தென்றல்.

(இ-ள்.) தலைவனூர் தூரத்திலுள்ளதோ? சமீபத்திலுள்ளதோ? வென்று தலைவி வருந்திய அதனைக் குறிப்பாற்கண்ட தலைவன் யானிருக்குமிட மிகச்சமீபத்திலுள்ளதென்று கூறுதல்.

யோகத்திற் சிறி துயர்விற் றகைமி னூற்றபல
போகத்திற் சேர்த்தபு மான்ஷெம்சுத் தாசின் பொலங்கிரிவாய்
மேகத்தி லோங்கு குழன்மட வீர்ங்கள் வேறலாங்
பூகத்தி னும்பூர் கறிக்கொடி யேறிப் புணர்ந்திடுமே (27)

இவற்றுள் முன்னையவாறும் ஐயந்தீர்த்தற்கும், பின்னையமூன்றும் பிரிவறிவுறுத்தற்கு முரியன.

வன்புறை முற்றிற்று.

---

தெளிவு.

அஃதாவது - தலைவன் கூறிய சொல்லைத் தலைவி மெய்யெனத் தெளிந்தாற்றுவது; இது - வகையும் விரியுமில்லாமனின்றது.

வான்பிறழ்ந் தாலு மலைபிறழ்ந் தாலு மதியிரவி
தான்பிறழ்ந் தாலும் பிறழாத் தகையர்சொற் றுன்றவுறி
யென்பிறழ் வார்பிற ழார்வரு வார்மன மேன்குறல்பூந்
தேன்பிறழ் மார்பகத் தோன்ஷெம்சுத் தாசின் சிலம்பகத்தே. (28)

தெளிவு - முற்றிற்று.

---

பிரிவுழி மகிழ்ச்சி.

அஃதாவது-பிரிந்துபோகுமிடத்துப் பேதுறுகின்ற தலைவி தன்மையைக்கண்டு தலைவன் மகிழ்தல்; இது - வகையின்றிச் செல்லுங்கிழத்தி செலவுகண் டுளத்தொடு சொல்லலும் பாகனொடு சொல்லலுமாகிய இரண்டு விரிகளையுடையது; அவை வருமாறு:—

செல்லுங்கிழத்தி செலவுகண் டுளத்தொடு சொல்லல்.

(இ-ள்.) புணர்ச்சிக்குறி யிடத்தினின்றும் பெயர்ந்து செல்லாநின்ற தலைமகளது செலவைக்கண்டு தலைவன் றன்னெஞ்சொடு சொல்லுதல்.

மேகமு மோர்கைவெண் சோமமு மோர்கை விளக்கிரு
நாகமுங் கொண்டொரு நாகமு மன்னமு நாணுறவெச்

சோகமுந் தீர்த்தருள் வோன்ஷம்கத் தாசின் கடற்கரைவா
யாகமு மொல்க வசைந்துழ மானந்த மாருயிரே. (29)

பாகனொடு சொல்லல்.

(இ-ள்.) தலைவன் தன்னைத் தேடிவந்த தேர்ச்சாரதியிடத்தில் தலைவி செல்லுதலைக் காட்டிக் கூறுதல்.

முன்னொடு பின்னு முறைமுறை பார்த்துண் முதிருமச்சர்
தன்னொடு வேர்ப்புந் தளர்வுமென் போன்புந் தாங்கிமன்னர்
மன்னொடு மாணிகர்த் தோன்ஷம்கத் தாசின் மலைவலவ
பொன்னொடு மின்னெனப் போவது பாரொரு பூங்கொடியே. (30)

பிரிவுழி மகிழ்ச்சி - முற்றிற்று.

---

## பிரிவுழிக்கலங்கல்.

அஃதாவது - தலைவி பிரிந்த இடத்துத் தலைவன் வருந்துவது; அது மருளுற்றுரைத்தல் தெருளுற்றுரைத்தலென இரண்டுவகைப்படும்; அவை; ஆயவெள்ளம் வழிபடக்கண்டிது மாயமோவென்றல் முதல்கண்படை பெறாது கங்குலொடு நோவுமைந்து விரிவினையுடையன; அவை வருமாறு:—

ஆயவெள்ளம் வழிபடக்கண்டிது மாயமோவென்றல்.

(இ-ள்.) தலைவியைப்பிரிந்த மாதர்கூட்டம் வந்து வழிபடுதலைக் கண்டு இம்மாதர் கூட்டத் துள்ளாளென்னைத் தனித்துக் கூடியது என்ன மாயமோ? வென்று தலைவன் மயங்கிக் கூறுதல்.

மெய்யோ டிரண்டெடுத் தன்பொன் றனித்தயர் மென்குழலின்
மையோ டொளிருங் கணமதி போல்வதி வானிலனோர்
கையோ டமர்தரு வோன்ஷம்கத் தாசின் கனகவெற்பிற்
பொய்யோ கனவோ பிறிதோ வறியேன் புணர்ந்ததுவே. (31)

வாயில்பெற்றுய்தல்.

(இ-ள்.) தலைவி உயிர்ப்பாங்கி முகத்தைநோக்கிச் செல்லுதலைப் பார்த்துத் தலைவன் அப்பாங்கியைத் துணையாகப் பெற்று உய்வதாகக் கூறுதல். பாங்கி - பக்கத்திலிருக்கு முயிர்த்துணைவி.

வருத்தி மயக்கு மயனே யகற்ற மருந்துளதோர்
திருத்தி மணமே யினியே லிவட னிணைவிழிவன்
டருத்தி யறிந்தளிப் போன்ஷம்கத் தாசி னருட்கிரிவா
பொருத்தி முகதா மரைமல ரோடி யொளிர்ந்ததுவே. (32)

பண்பு பாராட்டல்.

(இ-ள்.) தலைவியின் அழகைத் தலைவன் வியந்து கொண்டாடுதல். பண்பு - ஈண்டு அழகென்மே னின்றது.

அடிபடும் வட்டு மலர்படும் போது மமரிலெதிர்த் ,
தொடிபடுங் கொம்பு முடைபடும் வெற்பு மொளிர்பிறைக்குட்
பிடிபடும் புன்னும்பெம் மான்ஷம்சுத் தாசீன் பெருங்கிரிவாய்த்
துடிபடு நுண்ணிடை கொங்கைக் கிணைசொலத் தோற்றுறுமே ()

பயந்தோர்ப் பழிச்சல்.

(இ-ள்.) தலைவியைப் பெற்றோரைத் தலைவன் வாழ்த்தல்.

வந்திரத் தார்க்கருண் மான்ஷம்சுத் தாசீன் மலையமின்னை
யெந்திர வாவியை யின்பக் கனியை யெமக்களித்தோர்
சந்திர சூரிய ருள்ளள வும்புகழ்ச் சம்பனரா
யிந்திர னுஞ்சநி யுங்கடுத் தோங்கி யிலங்குகவே (34)

கண்படைபெறாது கங்குனோதல்.

(இ-ள்.) அன்றிரவிலே தலைவி தந்த ஆசையால் நித்திரை பெறாது இருட்காலத்தைத் தலைவன் நொந்து கூறுதல்.

படியோர் குடையிற்கொள் வோன்ஷம்சுத் தாசீன் பனிவரையின்
முடியோ கிசிகட லோவிழி யிந்தோ முகமெனயாங்
துடியோ டுரைத்த தொடரா லெமையவை சூழ்ந்தெழுந்து
விடியோ மெனநீண் டுறக்கிக் கருக்கி வெகுண்டிடுமே. (35)

இவற்றுள் முன்னைய தொன்றும் மருளுற்றுரைத்தற்கும், பின்னைய நான்குந் தெருளுற்றுரைத்தற்கு முரியன. காட்சிமுதல் கண்படை பெறாது கங்குனோதலிறுதியாகக் கூறிய முப்பத்தைந்துறைகளும் முதல்நாள் நிகழ்ச்சி யென்க.

பிரிவுழிக்கலங்கன்-முற்றிற்று.

---

## இடந்தலைப்பாடு.

அஃதாவது - இயற்கைப் புணர்ச்சியிற் கலந்த தலைவன் மறுநா ளவ்விடத்தில் வந்து தலைவியைக் கூடுதல்; அது: தெய்வத்தெளிதல் கூடல் விழைதலென மூவகைப்படும்; அம்மூன்றுந் தந்த தெய்வந் தருமெனச் சேறல் முதல் ஆயத்துய்த்தலீறாகிய ஐந்து விரிவினையுடையன; அவை வருமாறு:—

தந்ததெய்வந் தருமெனச்சேறல்.

(இ-ள்.) முன் கூட்டியவிதி பின்னுமவ்விடத்திற் சென்றாற் கூட்டுமெனத் தலைவன் சேறல்.

இன்றந்த விசைபு மின்மையும் யார்க்கு மியல்பெனிற்செம்
பொன்றந்த மார்பன்பு மான்ஷம்சுத் தாசீன் பொதியவெற்பிற்

நன்றந்த வண்பொழிற் றோகையி னெம்முயிர்த் தோகையின்னே
முன்றந்த தெய்வ மினுக்தரு மாலங்கு முர்த்தமே. (36)

முந்துறக் காண்டல்.

(இ-ள்.) முன்போலத் தலைவியைத் தலைவன் காணுதல்.

மாறு வமுத மழையோ சுகிர்த மருவுருவோ
நாறு மணிவிளக் கோமதி யோவிதி நண்ணழகோ
தெறார் குடிகெடுத் தோன்ஷம்சுத் தாசின் சிலம்பகத்தோர்
கூறு யொளிரு முயிர்க்குயி ராமென் குலதெய்வமே. (37)

முயங்கல்.*

(இ-ள்.) தலைவியைத் தலைவன் புணர்தல்.

மன்னர்க் கதிபதி மால்ஷம்சுத் தாசின் மலையமுத
மன்ன வருவா ளகங்கனிந் தாடு மருள்வெளியு
ளென்னி லவளு மவளகம் யானு மிரண்டறவொன்
றென்னக் கலந்த விருஞ்சுகம் யார்க்கு மியம்பரிதே. (38)

புகழ்தல்.

(இ-ள்.) தலைவன் றலைவியைப் புகழ்ந்து கூறுதல்.

குடைபட்ட கோனுடைக் கோன்ஷம்சுத் தாசின் குளிர்சிலம்பின்
றொடைபட்ட கோதை யிவள்விழி நோக்கித் தொடர்ந்தலைவாய்க்
கடைபட்டுத் தீப்பட் டடிபட்டுச் செம்புனற் கக்கிக்கக்கி
முடைபட்ட தன்றிச் சரிப்பட் டிலையினு மொய்க்கணையே. (39)

ஆயத்துய்த்தல்.

(இ-ள்.) தலைவன் தலைவியை மகளிர் கூட்டத்துள் விடுத்தல்.

முலைகாட்டி முத்த நகையிதழ் காட்டி முழுதுமின்ப
நிலைகாட்டிக் காட்டுமென் னெஞ்சமன் னீர்கமழ் நெய்க்கணவே
விலைகாட்டி யோங்குகை யோன்ஷம்சுத் தாசி னிருஞ்சிகர
மலைகாட்டி யாடுநம் மாயத்துட் போர்தங்கு மன்னுகவே. (40)

இவற்றுள் - தந்ததெய்வந் தருமெனச்சேறலொன்றுந் தெய்வந் தெளிதற்கும், காண்டல் முயங்கல் புகழ்தலாகிய மூன்றுங் கூடற்கும் ஆயத்துய்த்தலொன்றும் விடுத்தற்கு முரியன. இவையாவையும் இரண் டாரான் கேழ்ச்சி.

இடந்தலைப்பாடு முற்றிற்று.

## பாங்கற் கூட்டம்.

அஃதாவது - மூன்றுநாள் தோழனாற் கூடுங் கூட்டம்; அது: சார்தல் கேட்டல் சாற்றல் எதிர்மறை நேர்தல் கூடல் பாங்கிற்கூட்டலென எழுவகைப்படும்; அவ்வேழுந் தலைவன் பாங்கனைச் சார்தல் முதல் பாங்கிற் கூட்டலீறாகிய இருபத்துநான்கு விரிகளையுடையன; அவை வருமாறு:—

### தலைவன் பாங்கனைச்சார்தல்.

(இ-ள்.) தலைவன் தலைவியால் வந்த ஆசைநோய் தோழனா லன்றித் தீராதென்றெண்ணி அவனைச் சார்தல்.

வாவியிற் காவிநற் பாலெரிடு நீரென மாதலசஞ்
சிவியி லோங்குபு மான்ஷம்சுத் தாசின் சிமையமத
னேவிய வெஞ்சிலைக் கஞ்சினெஞ் சேயினை யேல்வருவா
யாவியி னாவியன் னானை னின்றென் னருந்துணைக்கே. (41)

### பாங்கன் தலைவனையுற்றது வினவல்.

(இ-ள்.) பாங்கன் தலைவனது மனமும் புயமும் வாடிய வேறுபாடு கண்டு இவ்வேறுபாடு வந்ததற்குக் காரணமென்னை? யென்று கேட்டல்.

நீடாழி வைய நிலைபிறழ்ந் தாலு நிலாப்பகலற் [ல்
றோடா தொழியினு மொண்டமிழ் தேர்ந்துணர்ந் தோர்க்கொருத்த
கோடாது கோடிதந் தோன்ஷம்சுத் தாசின் குளிர்சிலம்ப
வாடா மலர்ப்புயம் வாடிய வாறென் வழுத்துகவே. (42)

### தலைவனுற்றதுரைத்தல்.

(இ-ள்.) அங்ஙனங் கேட்ட பாங்கனுக்குத் தலைவன் தனக்குற்ற வேறுபாட்டின் காரணத்தைக் கூறுதல்.

நீதஞ் செறிகுணத் தோன்ஷம்சுத் தாசி னெடுங்கிரிவா
யேதந் தவிருற வேசவெழிற் காமனுற் றெய்தருமென்
போதஞ் சரியப் பொதியவனி சாடப் பொருதுதந்த
வாதங் கடுப்ப மலிபுலன் றார்த்ததோர் மாதங்கமே. (43)

### கற்றறி பாங்கன் கழறல்.

(இ-ள்.) வேதாகமங்கள் யாவுங் கற்றறிந்த பாங்கன் தலைவனை யிடித்துக்கூறல்.

என்னே கலைகண் முழுதுற வாய்ந்தின் றெழிலனகை
மன்னே யெனவரு மால்ஷம்சுத் தாசின் மலையவெற்பின்
பொன்னே புரையுமெய்ப் பூணலங் கண்ட புரவலவும்
மின்னே நிகர்த்தபெண் பேதைக் கழிதல் வியப்பலவே. (44)

கிழவோன் கழற்றெதிர் மறுத்தல்.

(இ-ள்.) பாங்கன் கூறிய உறுதிமொழியைத் தலைவன்மறுத்தல்.

ஆட்சியுங் கோளுங்கொள் வோன்ஷம்சத் தாசி னருண்மலையின்
மாட்சியுங் கொங்கை மலையும் வதன மலருமைம்பா
னீட்சியும் பால நிலவும் புருவ வில்லுமையுங்கண்
காட்சியுங் காண்கிலை காண்கிற் கவல்வைகொல் கட்டுரையே. (46)

பாங்கன் கிழவோற் பழித்தல்.

(இ-ள்.) அவ்வணங் கூறிய தலைவனைப் பாங்கன் இகழ்ந்துக் கூறுதல்.

காரைத் தருவையன் றேன்ஷம்சத் தாசின் கனகவெற்பொன்
றாரை நிகர்ப்பவொ ராயிழை யாட்கங்கி லாதவிடைச்
சீரை நினைந்துடைத் தாயர சேயிது தேரிற்சிறு
கோரை வளர்ந்துயர் கோபுர மாய்த்தெறுங் கொள்கைத்தன்றே.

கிழவோன் வேட்கை தாங்கற் கருமைசாற்றல்.

(இ-ள்.) தலைவன் பாங்கனை நோக்கி நீ பழிக்கின்ற என்னுள்ளத் தேறுதற்கு வேட்கை யென்னுற் றாங்கமுடியாதெனக்கூறுதல்.

துங்கத் திருகுணத் தோன்ஷம்சத் தாசின் சுடர்க்கிரிவாய்த்
தங்கக் கடுத்தொளிர் தையனல் லாடனக் காங்கிடைவெஞ்
சிங்கம் பிளந்த செழுமுரத் தன்பனின் றீயெனுஞ்சொற்
புங்கம் புகுதிற் பொறுப்பன்கொ லோவுயிர் போன்றுறுமே. (47)

பாங்கன் றன்மனத்தழுங்கல்.

(இ-ள்.) அதுகேட்ட பாங்கன் எம்பெருமான் ஆற்றுணு மிவ்வாறு கூறினால் அதற்கு நானென் சொல்வேனென்று தன்னுள்ளே வருந்துதல்.

முத்துண் டொளிர்புயத் தோன்ஷம்சத் தாசின் முதிர்கிரிவாய்
வெத்துண் டிலகுமொ ரேந்திழை யெய்த விணைவிழிவேற்
குத்துண் டிருமுலைக் கோடுண் டனுதினங் கூர்ந்தமையற்
பித்துண் டழிந்தன னம்மா செஞ்செயும் பேருலகே (48)

பாங்கன் றலைவனோடழுங்கல்.

(இ-ள்.) இவ்வணம் வருந்திய பாங்கன் சகியாதவனாய்த் தலைவனோடு வருந்துதல்.

கலகத் தருமொரு கட்கடை மாதிடு காமவலை
யிலகுஞ் சுழனுனக் கென்சொலென் றேனினி யெங்குமொளிர்
திலக மெனவமர் வோன்ஷம்சத் தாசின் சிமையவெற்ப
வுலகம் புரளி லொருவருண் டோவுதத பொத்திடற்கே. (49)

MAHAMAHOPADHYAYA

எவ்விடத்தெவ்வியற்றென்றல்.

(இ-ள்.) பாங்க னிவ்வாறு கூறியும் தலைவன் வருந்துதலைக் கண்டு இவன் தலைவியைக் கூடாதொழியின் இறந்துபடுமென்று தேறித் தலைவனை நோக்கி நின்றாற் காணப்பட்ட உரு எந்தவிடத்து எந்தவியலை புடையதென்று வினவுதல்.

வானகஞ் சூழ்ந்த மகிதலத் துன்மன வன்மையெல்லாந்
தானகற் றற்கெழு மம்மான் றனக்கிடந் தண்ணருட்கோ
ரானகம் போன்றமர் வோன்ஷம்சுத் தாசீ னருஞ்சிகரக்
கானக மோகட லோவிய லேது கழறெனக்கே. (50)

அவணஃநீய்விடத்திவ்வியற்றென்றல்.

(இ-ள்.) தலைவன் என்னால் காணப்பட்டவுரு இந்தவிடத்து இந்த இயலை புடையதென்று கூறுதல்.

புயலே குழலம் புயமே முகமுடற் பொன்னிடைநூல்
கயலே விழிமுக் கனியே மொழிமுலை கைக்கனிறென்
மயலே தருவாட் கியலிட மார்வல மாழைமழை
பெயலே பெறுகரத் தோன்ஷம்சுத் தாசீன் பெருவனமே. (51)

பாங்கனிறைவனைத் தேற்றல்.

(இ-ள்.) இவ்வாறு நீ வருந்தா தொழிக: நீ சொன்ன குறியிடத்துச் சென்று தலைவியைக் கண்டு யான் வருகிறேனென்று தலைவனைப் பாங்கன் தேற்றல்.

திருவே யமர்புயத் தோன்ஷம்சுத் தாசீன் செழுங்கிரிசேர்
மருவேய் பெருவனத் துன்மன மாள்வித்து மன்னுயிரைப்
பொருவேல் விழியைப் புலன்கொளு மாசையைப் போக்கதிர்த்து
வருவேன் வருமள வும்பொறுப் பாயென்றன் மன்னவனே. (52)

குறிவழிச்சேறல்.

(இ-ள்.) தலைவன் கூறிய குறியிடத்துத் தலைவியைக்காணப் பாங்கன் தேடிப்போதல்.

முலைப்பகை கண்டு மொழிப்பகை தேடி முழுதுமக்கக்
கொலைப்பகை கொய்ய வெழுவள்கொல் லோகறை கூர்வனத்தும்
பலைப்பகை கொள்ளுநாத் தோன்ஷம்சுத் தாசீன் பனிவரைவாய்க்
கலைப்பகை தோட்டுணைக் காவலன் கண்டவக் காரிகையே. (53)

இறைவியைக்காண்டல்.

(இ-ள்.) அவ்வனைத்தேடிச்சென்றபாங்கன்தலைவியைக்காணுதல்.

வானே முடிவடி வானே விழிமலர் வாய்வளைதோள்
தேனே மொழிமதிச் சீரே முகமுடற் றேசமெங்கு

ரானே யெனப்புரப் போன்ஷம்சுத் தாசி னளிர்வரையின்
றனே யொருவனத் தெம்பிறை சொற்றவத் தாழ்குழலே. (54)

இகழ்ந்ததற்கிரங்கல்.

(இ-ள்.) தலைவிபேரழகைக் கண்ட பாங்கன் காணுமுன்னம் எம்பெருமானை யறிவின்றியிகழ்ந்தனை யென்றிரங்கிக் கூறுதல்.

நாவுண்டு செல்பரி வேன்ஷம்சுத் தாசின் றமிழ்வரைவாய்
மேவுண்டு வாழுமில் வெண்ணகைத் தேமொழி யின்னுதலேக்
கேவுண்டு நெஞ்ச மினைவுண்டு யந்தவென் னேந்தலையா
றேவுண்டு வாட துவன்றவெ லாமென்ற னெப்பறிவே. (55)

தலைவனை வியத்தல்.

(இ-ள்.) தலைவி கண்வலையிற்சிக்கி அத்தடைபோமேர் தலைவன் சம்மிடத்து வந்தது வியப்பென்று பாங்கன் அதிசயித்துக்கூறுதல்.

பொறையார் பெருந்தனப் பொற்றொடிச் சிற்றிடைப் பூவையின்று
ணிறையா ரலர்க்குழ லின்முகி லோடி திகழ்ந்துபன்னாற்
குறையா துணர்ந்தவென் கோன்ஷம்சுத் தாசின் கொழுங்கிரிவாய்
மறையா திருந்ததெவ் வாறெம்பி ரான்கலை மாமதியே. (56)

இதுவுமது.

கலைதாண்டி யோங்குமிக் கோன்ஷம்சுத் தாசின் கனவரையின்
னிலைதாண்டிக் கூர்ந்த னிசிதாண்டித் தேம னிலவுமுலை
மலைதாண்டித் துண்ட மதிதாண்டி யெம்மன் மறிநயன
வலைதாண்டிக் காம வலைதாண்டி வந்ததங் கற்புதமே. (57)

தலைவியை வியத்தல்.

(இ-ள்.) தலைவியைப் பாங்கன் வியந்து கூறுதல்.

பருக்கும் பெருமுலைப் பாரத்தி னந்தரப் பற்றொழிந்திங்
கிருக்கு மொருமின் னிவள்விழி நோக்கினை யென்றமுற்றோர்
திருக்குங் கருத்துமொத் தோன்ஷம்சுத் தாசின் சிலம்பரசைக்
கருக்கு மயல்விடக் காய்வுக் கமுதெனக் காத்திடுமே. (58)

இவ்வைந்தும் பாங்கன்றன்னுட் கூறியவை.

தலைவன்றனக்குத் தலைவி நிலைகூறல்.

(இ-ள்.) தலைவி குறியிடத்துத் தனித்து நிற்கின்ற நிலையைப் பாங்கன் கண்டுவந்து தலைவனுக்குக் கூறுதல்.

காவுங்கண் டேன்குழற் காடுங்கண் டேனின்னைக் காத்துறகட்
கோவுங்கண் டேனுடற் கோலங்கண் டேனலங் கூர்பெருகும்
பாவுங்கண் டேமகிழ் வோன்ஷம்சுத் தாசின் பனிவரைவாய்
யாவுங்கண் டேன்கண்டி லேனிறை வாயின் னியமின்மையே. (59)

### தலைவன்சேறல்.

(இ-ள்.) தலைவன் பாங்கன் சொற்படி குறியிடத்திற் போதல்.

மணமாய் விரைந்தவன் மன்னுதற் கேற்ற வழியெதுவு
மினமா யதிர்ந்தில மேயக மேசெய்வ தேதெனியோர்
தனமா பொளிரும்பு மான்ஷம்சுத் தாசின் றடஞ்சிலம்பி
னனமா யமர்ந்துறிற் பார்தமைக் கூடி யளாவுதற்கே. (60)

### தலைவியைக் காண்டல்.

(இ-ள்.) தலைவன் தலைவியைப் பார்த்தல்.

வற்றாச் சுகிர்தமெய் வாழ்வளித் தென்னுள மன்னிநின்ற
முற்று முகிழ்முலை மொய்குழ லான்கலை முற்றுமுற்றக்
கற்றார்க் கமுதனை யான்ஷம்சுத் தாசின் கனகவெற்புட்
பொற்று மரையனம் போற்றனி நின்றனள் பூம்புனத்தே. (61)

### கலவியின் மகிழ்தல்

(இ-ள்.) புணர்ச்சியின் மகிழ்தல்.

மெய்யுஞ் செவியும் விழிநாசி வாயும் விரைந்தருத்திப்
பெய்யு மமுதப் பிழம்பனை யிரும்பிற் பெற்றசுகம்
செய்யும் புலையுமற் றோன்ஷம்சுத் தாசின் பொதியவெற்பி
லெய்யுஞ் சுகனோ டிகதலத் தாருமிங் கெய்தரிதே. *(62)

### புகழ்தல்.

(இ-ள்.) தலைவன்புணர்ந்தபின் றலைவியைப் புகழ்ந்துகூறுதல்.

அலைவாய்ப் படிந்தனை யாகமுங் கூனி யறக்குறுகி
மலைவா யெழுந்தனை மாசே செறிந்தனை மாமறைநாற்
கலைவாய் வருமியல் போன்ஷம்சுத் தாசின் கனகமலை
நிலைவா யிணைமுலை சேர்நுத லொத்திலை நீணிலவே. (63)

### பாங்கியோடு வருகெனப் பகர்தல்.

(இ-ள்.) இனி நீ புன்னுயிர்ப்பாங்கியுடனே வருவாயென்று தலைவிக்குத்தலைவன் கூறுதல்.

கண்ணுக் கிமையுங் கடத்துக் குயிருங் கலந்ததொத்தெம்
மெண்ணுக் கருளனை யிரினி நீரிவ ணேகினென்றும்
பண்ணுக் கிசைபுக ழோன்ஷம்சுத் தாசின் பனிவரைவாய்
மண்ணுக் கணிசெய்தம் மன்னையர் தம்மொடு மன்னுகவே. (64)

### பாங்கிற் கூட்டல்.

(இ-ள்.) தலைவன் தலைவியை ஆயத்தார் சேர்த்தல். ஆயம்-மாதர் கூட்டம்.

சுனைநயப்புரைத்தல்.

(இ-ள்.) பாங்கி தலைவி புணர் நிகழ்ச்சியை வெளிப்படுத்தச் சுனையினது நன்மையைக் கூறல்.

அணியுந் திருத்தி யழகும் பொருத்தி யழிதருநற்
றுணியு மிருத்தித் துனிநீ ளருத்தித் தொடர்ந்தரசர்
பணியும் பதத்தனெம் மான்ஷெய்கத் தாசின் பதியினலர்க்
கணியும் புனைந்தெங் கண்மணி யீரெங் கனிச்சுனையே. (68)

சுனைவியந்துரைத்தல்.

(இ-ள்.) பாங்கி அச்சுனை வியப்பை யானுமாடிக் காண்பேனென்று கூறல்.

காவி சிவந்து கமலம் பசந்து கருதுமல்லி
மேனி வெளுத்து விடுமே யடியோன் விளங்குமொன்று
ராவி யகற்றுமெம் மான்ஷெய்கத் தாசி னணிவரைவாய்த்
தாவி பொலிந்துமின் னேகுடை வேனந்தத் தண்சுனையே. (69)

தகையணங்குறுத்தல்.

(இ-ள்.) தலைவியினது வேற்றழகு கண்டு அவளைத் தெய்வப் பெண்ணாகப் பாங்கி வலியுறுத்திக் கூறுதல்.

காவே புகுந்து கழங்காடி யாடிக் கதித்தசுனைப்
பூவே கொணருமென் பொன்னொருப் போன்றுமிப் பூதலத்தோர்
கோவே யெனவரு வேலன்ஷெய்கத் தாசின் குலக்கிரியின்
றேவே வெளுத்திதழ் மெய்பசந் தக்கண் சிவந்தனையே. (70)

நடுங்க நாட்டம்.

(இ-ள்.) தலைவி நடுக்கத்தக்கதாகப் பாங்கி யாராய்தல்.

பொய்யா மொழித்திறத் தோன்ஷெய்கத் தாசின் பொதியைமலர்ச்
செய்யா ளனவொளிர் சேயிழை யீரவன் செம்பொன்மழை
பெய்யா விருந்து மிறங்கிச் சிவந்த பெருங்கரம்போன்
மையார் களிற்றொரு கோடுகண் டேமன மாழ்கினனே. (71)

இத்துணையு மூன்றாநாள் நிகழ்ச்சி யென்க.

---

## குறையுறவுணர்தல.

அஃதாவது - தலைவன் தழை முதலியவற்றைக்கொண்டு தன்பாற் குறையுற்று நிற்பக்கண்டு பாங்கி அதனானே கூட்டமுண்டென்றறிதல்; அது: தேர்தல் தெளிதலென இருவகைப்படும். தேர்தல்-ஆராய்ச்சி செய்தல். அவை வருமாறு:—

பெட்டவாயில்பெற்றிரவு வலியுறுத்தல்.

(இ-ள்.) இயற்கைப் புணர்ச்சிக்குப் பின்னர்ப் பிரிவுழிக் கலங்கலின் வாயில் பெற்றுய்தலை யாண்டு விரும்பப்பட்ட பாங்கியைத் தலைவன் ஆதரவுபெற்றுக் குறையிரந்தலை வற்புறுத்திக் கூறுதல்.

பொருளா லறமும் பொலிவாற் புகழும் பொருந்துறல்போற்
றெருளா துயர்த்தபி ரான்ஷம்சத் தாசின் செழுஞ்சிலம்பி
லிருளா மதிமுகத் தேந்திழை தன்றுயி ரென்னுயிர
ளருளாற் பெறலா மகமே யவட னருத்தனமே. (72)

ஊர் வினாதல்.

(இ-ள்.) தலைவன் கன்னியுந் தழைபுமேந்திக் குறையுற்றவன் போலவந்து நின்று ஊர்யாதென்று பாங்கியைக் கேட்டல்.

மதியே நிகர்த்த மலர்முகத் திர்வண்மை வாய்ந்தவிரு
நிதியே யெனவருள் போரன்ஷம்சத் தாசி னெடுவரைக்கோர்
புதியேன் றனியிவன் போந்தன னும்பிற் பொலிவுறுமப்
பதியே துரையீர் பகரிற் சிதறுங்கொல் பான்முத்தமே. (73)

பெயர் வினாதல்.

(இ-ள்.) வெளி.

காரே யனைய தருங்குழ லீர்நற் கனகமணிச்
சீரே பெறுகழ லோன்ஷம்சத் தாசின் செழுஞ்சிலம்பி
னூரே புரைக்கவி லீருமக் கின்புவந் தாற்றதிருப்
பேரேனு மோதுதி ரேழைபென் மீது பிரியமுற்றே. (74)

கெடுதிவினாதல்.

(இ-ள்.) கெட்ட பொருளைத் தலைவன் பாங்கியிடத்தில் வினவுதல்.

துப்புண்டு சேக்குந் துவரித ழீரென் சுடர்க்கணைமுன்
றப்புண் டடிக்கடி தாவுண் டொருமான் றரணிமுற்று
மொப்புண் டொளிர்புயத் தோன்ஷம்சத் தாசி னுயர்வரைவாய்
வெப்புண் டொழித்துறக் கண்டதுண் டோவின்று வீரமக்கே. ()

வழிவினாதல்.

(இ-ள்.) தலைவன் முன்செல்லும் வழியைப் பாங்கியிடங் கேட்டல்.

கல்லுங் கருதுங் கனதனத் திரொளி கண்டுகெறி
ரெல்லும் பணிமுடி யோன்ஷம்சத் தாசி னிருஞ்சிலம்பிற்
செல்லும் வழிதெரி யேன்றினைத் தேனுளக் கேர்ந்தகலச்
சொல்லு மொருவழி சொன்னு லிலைபிலைச் சூழ்பிழையே. (76)

ஒழிந்ததுவினாதல்.

(இ-ள்.) பாங்கி யொன்றும்பேசாதிருத்தலைத்தலைவன்கேட்டல்.

பெருவாய்ப் பிடிநடைப் பொன்னனை யீர்களின் பிறங்குமஞ்சு
தருவாய்த்த தினைக்கரு வோன்ஷம்சுத் தாசீன் றமிழ்ச்சிலம்பின்
மருவாய்க் கமல மலர்கண்டு வாடு மதிமுகத்தாள்
திருவாய் திறந்தொரு செய்திசொன் னாலென்ன தீவினையே (77)

பாங்கியிவள் மனத்தெண்ணம் யாதெனத்தேர்தல்.

(இ-ள்.) மேற்கூறியவாறு கண்ணியுந்தழையு மேந்திவந்துவேழ முதலியவை வினாவி நின்றவர் யாவரோ? இவர் மனத்தினினைப்பு யாதோ? எனப்பாங்கி தன்மனத்தில் ஆராய்ச்சி செய்தல்.

ஊரும் பொரு முறைவழி யாதின் றமுன்னொரு மான்
தேரும் படியிவன் சென்றதுண் டோவென்பர் திக்கெட்டுமிப்
பாரும் புகழ்வளர்ந் தோன்ஷம்சுத் தாசீன் பனிவரைசேர்
தாருங் கருதுநின் காலொன்னை யுற்றது மாய்ந்திலமே. (78)

பாங்கியறிந்தெளிதல்.

(இ-ள்.) தலைவனினைப்பைப் பாங்கி தெளிதல்.

ஊரும் பெயரு முறையும் வழியு முவக்தவரன்
ஞரும் புகழும்பு மான்ஷம்சுத் தாசீ னணிவரைவா
யேருங் குணமு மிசையும பொருகிவ ளேய்த்தவினா
நீருங் கனியு நினைந்தவர் காம நெடும்பசிக்கே. (79)

---

## இருவருமுளவழி யவன்வரவுணர்தல்.

அஃதாவது-தலைவியுந் தானுமொருங்கிருந்த விடத்தில் தலைவன்றனிவரப் பாங்கிகண்டு அதனுனே கலப்புண்மையறிதல், அதன் விரி வருமாறு:—

தலைவன் கையுறையேந்தி வருதல்.

(இ-ள்.) தலைவியும் பாங்கியுஞ் சேர்ந்திருப்பதுகண்டு தலைவன் கையுறை யேந்திவருதல். கையுறை-காட்சிப்பொருள்.

விண்பட்ட சோமனும் வெண்மையும் போலவிம் மேதினிக்கோர்
பண்பட்ட வள்ளல்பு மான்ஷம்சுத் தாசீன் பனிவரைவாய்த்
தண்பட்ட தேமொழி யாரிருந் தாரிது தான்சமயர்
புண்பட்ட காதற் பொலிவுற யாவும் புகலுதற்கே. (80)

தலைவனவ்வகை வினாதல்.

(இ-ள்.) தலைவன் முன் கெழுதி வினாவியதுபோல மீண்டும் யானை வந்ததோ? வென்று வினாவல்.

பொப்புன் றொளிரிடைப் பூவையன் னிருங்கட் புங்கமங்கன்
வைப்புண் டவிர்புய மால்வழும்கத் தாரின் மலையவெற்பிற்
றைப்புண் டிரத்தகர் தழும்புண்டு வாடித் தளர்க்துணைபிக்
கெப்புண் டிரிந்திவன் வந்தனன் டேபொவ சிருங்களிரே (81)

எதிர்மொழி கொடுத்தல்.

(இ-ள்.) பாங்கி தலைவன் வினவுக்கு விடைகூறுதல்.

என்னுயிர் மாதங்க மன்றியொர் மாதங்க மீங்கிலையுந்
தன்னுயி ருங்கொடு சார்ந்ததின் றென்றுந் தாரணிக்கோர்
மன்னுயிர் மானவங் கோன்வழும்கத் தாரின் மணிவரைவாய்ப்
பொன்னுயிர் போலும் புனிதமற் றேது புகலுதற்கே (82)

இறைவனை நகுதல்.

(இ-ள்.) தலைவனைப்பாற் சென்றனைப் பாங்கி தலைவியை நோக்கி அசதியாடல். அசதியாடல் - சிரித்துப்பேசுதல்.

தழையுயா லொருதனி தான்பறி போகடற் றானிரின்
மழையயா விருமா மாய்வுறு மோனியர் மாற்றமென்றுங்
குழையுயாப் பொருந்தவக் கோன்வழும்கத் தாரின் குளிர்வரைவாய்ப்
பிழையாங் கபடாம் பிரித்தெடுத் தாயிலெம் பெண்ணணங்கே. ()

பாங்கி மதியி னவர்மனக் கருத்துணர்தல்.

(இ-ள்.) பாங்கி தன்னறிவால் தலைவன் தலைவியென்ற இருவர் மனக்குறிப்பை யாராய்தல்.

வாயாற் கலையும் வளைவாற் புனமு மகிழ்ந்திருவ
ராயா வுறினு மகமோ மயல்கொண் டலைதருங்கண்
ணோயா தழுகுறை யாவு முரைக்கு முலகணைத்துந்
தாயாய்ப் புரந்தளிப் போன்வழும்கத் தாரின் றடத்தகத்தே. (84)

இவ்வைந்து மிருவருமுள்வழி யவன் வரவுணர்தலின் விரியென்க.

பாங்கிமதி யுடன்பாடு முற்றிற்று.

---

## பாங்கிற்கூட்டம்.

அஃதாவது - பாங்கியாற் கூட்டுவிக்கத் தலைவன் தலைவியைக் கூடுங்கூட்டம், அஃது இரந்து பின்னிற்றல் சேட்படை மடற்கூற்று மடல்விலக்கு உடன்படல் மடற்கூற்றொழிதல் குறைநயப்பித்தல் சேத்தல் கூட்டல் கூடல் ஆயங்கூட்டல் வேட்டல் எனப் பன்னிரண்டு வகையினை யுடைத்து; அவை வருமாறு:—

தலைவ னுட்கோள் சாற்றல்.

(இ-ள்.) தலைவன் தான் தன்னுள்ளத்தின்கட் கொண்ட காதலைக் கூறுதல்.

கண்டே கிசர்த்த கனிமொழி யிர்சொலிற் கற்பகமுங்
கொண்டே வருவ ளெருதிதி யென்றே குறுகலர்கூற்
றண்டே பணிபதத் தோன்ஷம்சுத் தாசின் றடத்திடைநாக்
தொண்டே பணிப்பதத் துணைபுரிந் தாளுமென் றோத்திரமே ()

பாங்கிகுலமுறை கிளத்தல்.

(இ-ள்.) தலைவன் இவ்வாறு கூறியதற்குப் பாங்கி குலமுறை மையா லியையாதென மறுத்துக் கூறுதல்.

புனமே புவனம் பொருவறக் காத்திவண் போந்ததுந்தங்
கனமே சிறுமை கருதிலே நாளுங் காதலர்க்கு
வனமே தருங்கொடை மான்ஷம்சுத் தாசின் மலையவெற்பி
வினமே பறிதி யிழிக்கோர்க் குயர்ந்தோ ரிணையிலரே. (86)

தலைவன் றலைவி தன்னை யுயர்த்தல்.

(இ-ள்.) தலைவன் தலைவியை யுயர்த்திக் கூறுதல்.

சிப்பியின் முத்தமுஞ் சேற்றுண் மரையுஞ் செனித்திடினு
மொப்பியிங் கேற்கிலை நன்றிகொ லோவுல குங்கசுனுஞ்
செப்பிய மாதவத் தோன்ஷம்சுத் தாசின் சிலம்பிணையி
ரப்பிய நன்னல மல்லா லிலைகுல மாயிழைக்கே. (87)

பாங்கி யறியாள்போன்று வினாதல்.

(இ-ள்.) தலைவன் தலைவியிடத்துக் காதல்கொண்ட தறியாள் போல நீ எவளிடத்துக் காதல்கொண்டாயெனப் பாங்கி வினாதல்.

கலையும் பொழில்கமழ் கூசல்பந் தோடலர் சூழ்தெழிலம்
மலையும் பயிலுநர் பற்பல ரான்மத மாரிசிந்தி
முலையுங் கடகளிற் றோன்ஷம்சுத் தாசின் முழுமலைக்கென்
றலையு மறைத்தனைத் தான்மறை யாரெவர் கார்மன்னனே. (88)

இறைபோனிறைவிதன்மை யியம்பல்.

(இ-ள்.) தலைவன் தான் காதலித்த தலைவி தன்மை கூறுதல். தன்மை - இலக்கணம்.

மருளும் பிணைவிழி மாகுஞ் சரமுலை வாய்குமுத
மிருளும் புயல்குழ லேகின் மதிமுக மென்றுமின்று
மருளுந் திருக்காரத் தான்ஷம்சுத் தாசி னருட்சிலம்பிற்
றெருளும் பொலிவுங்கொள் சேயிழை யேயென்றன் றேமொழிக்கே.

பாங்கி தலைவி யருமை சாற்றல்.

(இ-ள்.) தலைவி கிடைத்தற்கரியளென்று பாங்கி கூறுதல்.

அறிவே யுருவா யவதரித் தெங்க ணருந்தவத்தின்
செறிவே யெனவருந் தெய்வத மின்முன் சினந்தெதிர்த்தோர்

முறிவே நாப்பொரு தோன்ஷம்சந் தாசின் முதிர்கிரியிர்
பிறிவே தருமுனை யாதொன்றும் யாமங்குப் பேசிரே. (90)

தலைவனின்றியமையாமை யியம்பல்.

(இ-ள்.) தலைவியில்லாது வாழ்வெனக்கில்லையெனத் தலைவன் கூறுதல்.

சொன்னமி லாது சுகம்வரு மோவென் றுந் துற்தவசர்
சின்னமி லாதழிப் போன்ஷம்சந் தாசின் செழுங்கிரியாய்
பின்னமி லாதொளிர் பேரரு ளிரங்கப் பிடிபடுமோ
ரன்னமி லாதின் றமையுங்கொ லோவென்ற ஞநிரே. (91)

பாங்கி நின்குறை நீயேசென் றுரையென்றல்.

(இ-ள்.) தலைவியினிடத்து எனக்கு வேண்டுவனவற்றை நீயே சொல்லென்று பாங்கி கூறுதல்.

வாயே யெவர்க்கும் வருங்குறை சொற்றிட வாய்த்துளதிந்
தாயே னெதற்கு நவிலொவா ணுற்ற நற்றமிழ்க்கோர்
தாயே யெனவருள் வோன்ஷம்சந் தாசின் றவிச்சிலம்பி
னீயே யிகழ்த்துக நின்குறை யாவுமச் சேரிழைக்கே. (92)

பாங்கியைத் தலைவன் பழித்தல்.

(இ-ள்.) தலைவன் பாங்கியை நிந்தித்துக் கூறுதல்.

செயலா லுயர்ந்தபு மான்ஷம்சந் தாசின் சிமையமின்னின்
கயலா யமர்ந்த கடுவிழி பாய்ந்து கலங்குமென்றன்
மயலாங் கனற்கு மழையாய் நினைத்தநின் வார்த்தைமுற்றும்
புயலாய் முடிந்தது பூவையன் னீசொன்ன புத்திமே. (93)

குறையுறவுணர்தன் முதலிதுகாறு நான்கானும் கேழ்ச்சியென் றுணர்க.

பாங்கி பேதைமை யூட்டல்.

(இ-ள்.) தலைவி பிறர்துயரமறியாளென அவளது பேதைமையைப் பாங்கி தலைவனுளங் கொளச் சாற்றல்.

பாரார் பழிச்சும்பு மான்ஷம்சந் தாசின் பதிக்கரசே
காரார் கரிகலை மான்முத லாம்பல கான்விலங்கை
போரா றுறவதைத் தானுறும் வேட ருவந்தளித்த
கூரா ரயில்விழி யின்னோ ளறியுங் குணமிலளே. (94)

காதலன்றலைவி மூதறிவுடைமை மொழிதல்.

(இ-ள்.) அவ்வாறு கூறிய பாங்கியை நோக்கி முதிர்ந்த அறிவினையுடையாள் தலைவியாதலின் அவளை யங்ஙனங் கூறற் பாலையல்லையென்று தலைவன் கூறுதல்.

வாயா ளுலகம் வழுத்தும்தம் மெண்ணை மதிவிழிகொண்
டேர்யா துரைத்தனைக் குன்னையுந் தந்துடைத் தோடுகைத்

தாயாய்ப் புரந்தருள் வோன்ஷம்சுத் தாசீன் சயிலமன்னு
போமாதுநீயு மேயவட் கோனில்லை யீர்ங்குணமே (95)

பாங்கிமுன்னுறுபுணர்ச்சி முறையுறக்கூறல்.

(இ-ள்.) இவ்வாறு கூறக்கேட்ட பாங்கி முன் இன்வேட்கைநீர்த்தானென்றுகூறினையே அங்ஙனமேயின்னங்கூறுகவென்றுகூறுதல்.

முன்னு லறிந்தவின் முற்றிழை தன்னை முடுகுதற்குப்
பின்னு லொருநாளை வேண்டுங்கொலோபுவிப் பொன்னணங்கின்
மன்னு புதித்தமுமாம்ஷம்சுத் தாசீன் மலையவெற்ப
தன்னால் வருந்துயர் தானறியாளங்குச் சாருதியே. (96)

தன்னிலை தலைவன்சாற்றல்.

(இ-ள்.) அதுகேட்ட தலைவன் வேட்கை நோயால் வருந்துந் தன்னிலைமையைப் பாங்கிக்குக் கூறுதல்.

கடலிற் படிந்தெழு காவகம் புக்குங் கனிந்தசென்ற
னுடலிற் புகப்புனைந் தானுந்தன் சீர்த்தி யுலகளித்த
கடலிற் பெரியபுமான்ஷம்சுத் தாசீனன் னுடனையீர்
விடலி லவண்மயல் வெந்தீக் குளியன்றி வேறிலையே. (97)

பாங்கியுலகியலுரைத்தல்.

(இ-ள்.) உலகில் வேட்கை கொண்டார் சான்றோரை முன்னிட்டு வரைந்து கொள்வர். அவ்வா றுலகியலாதலால் நீயும்வரைந்து கொள்கவெனப் பாங்கி கூறுதல்.

மறையார் மொழிப்படி மாநிலத் தெங்கு மகிழ்வுறநன்
னிறையார் கனிதரு நீண்மணங் காண்பது நேர்மையல்லாற்
பொறையார் அருணப்பு மான்ஷம்சுத் தாசீன் பொதியவெற்பிற்
குறையார் மொழிபல கூறிலெவ் வேனுயர் கொற்றவனே. (98)

தலைமகன் மறுத்தல்.

(இ-ள்.) அவ்வுலகியலைத்தலைவன் வேட்கையாற்றாதுமறுத்தல்.

வருந்தி மயங்கு மயனோ யனித்தவம் மாதரசை
விருந்தி புறவரைந் தேற்றிடென் றுபிது வெற்றரைக்குச்
செருந்தி யிளம்பிறைச் சேய்ஷம்சுத் தாசீன் சிமையமன்னுப்
பருத்தி விதைத்துப் படக்கொள நாடுமப் பான்மையன்றே. (99)

பாங்கியஞ்சியச்சுறுத்தல்.

(இ-ள்.) பாங்கி இக்களஞ்சி பிறரறிவரென்று பயந்தவளாய்த் தலைவனை அப்புனம்விட்டுப்போக அச்சுறுத்திக்கூறுதல்.

மாலையும் வந்ததெம் மன்னர்பெயல் லார்வந்து வாய்ந்தவறச்
சாலைய நாடுமென் னோன்ஷம்சுத் தாசீன் றடஞ்சிலம்பிற்

சோலையுங் கோலையுஞ் சூழ்வரி யோடகல் சூரணமல்
வேலையுட் போக்தன விற்கின்றெங்கள் வேலையில் வேலையிலே. (100)

தலைவன் கையுறை புகழ்தல்.

(இ-ள்.) இனிக்காலந் தாழ்க்கலாகாதென்று தான்கொண்டு வந்த கையுறையைத் தலைவன் புகழ்ந்து கூறுதல்.

தழையே யுடைக்குந் தரள முலைக்குந் தருவர்தம்
மழையேய் குழற்கு வனைக்குங் குவளை மகிழ்ந்துலகம்
பிழையே யறப்புரப் போன்வாணன் றஞ்சைப் பெருஞ்சிலம்பிற்
கழையே பொருபுயத் தீர்கொணர்ந் தேன்கொளுங் கையகத்தே.

பாங்கி கையுறை மறுத்தல்.

(இ-ள்.) அவ்வனம் புகழப்பட்ட கையுறையைப் பாங்கி யிகழ்ந்து மறுத்துக் கூறுதல்.

ஈவ துயர்வினி யேற்ப திழிவென வோங்குமுறை
யாவ தறிந்தனை மானியு மேற்றலை மாய்க்கெளியோர்
மேவ வரையறை வேள்வாணன் றஞ்சை வியன்சிலம்பிற்
றேவ மறக்குலம் யாமெமக் கேனிவை தேர்மன்னனே. (102)

ஆற்றா நெஞ்சொடவன் புலத்தல்.

(இ-ள்.) பாங்கி மறுத்தலைச் சகியாத நெஞ்சுடனே தலைவன் வருந்திக் கூறுதல்.

என்செய்த தோமனை மேதறை நம்போ லிருந்தலர்ந்து
மின்செய்த வேல்விழி மெய்ண்டா தொழுந்து விரியலர்சேர்
பொன்செய்த மார்பன்பு மான்வாணன் றஞ்சைப் பொதியவெற்பிற்
கொன்செய்த வன்சொற் கொழுங்கனிற் கேசும்மைக் கூட்டினனே.

பாங்கி யாற்றுவித் தகற்றல்.

(இ-ள்.) இவ்வனம் வருந்துதலைக்கண்ட பாங்கி தலைவனையஞ் சுவதே! காணேவாவெனக் கூறிவிடுத்தல்.

குடியிற் பிறக்குங் குலக்கொழுந் தாமென்றன் கொற்றவையிற்
றடியிற் பலிகொள் கணமெலாம் சொற்பினு றகன்றவர்
முடியிற் பயிலுந் தோன்வாணன் றஞ்சைப் பொதியிலவாய்
விடியிற் பெறுவனுங் கைத்தலை போதிலெங்ஙன் பெற்றிலையே. ()

இவற்றுள்-தலைமகன் கூற்றுவினையெல்லாம் இரந்துபின்னிற்றற்கும் பாங்கி கூற்றுவினையெல்லாஞ் சேட்படுத்தற்கு முரியன. இதுகாறும் இரந்துபின்னிற்றற் கெழுச்சியென்க.

இரந்து குறைபெறாது வருந்திய கிழவோன்
மடலே பொருளென மதித்தல்.

(இ-ள்.) மறுநாட் காலையில் வந்த தலைவன் பாங்கியாற் காரிய மின்றெனக்கருதி இரந்து குறைமுடியா தாயினுமென்று வருந்த முற்று இனி நமக்குப் பொருளாவது * மடலேறலேயெனத் தன்னு ள்ளே மதித்துக்கூறுதல்.

மாறாக் கொடிய மயலானுர் கொண்டு மயங்கிநெஞ்சே
தீராக் கரிந்த நெடுந்துயர்க் கேதிலர் சீருடற்
கூறாக் கயிற்காக் கோன்ஷம்சுத் தாசின் குளிர்வரைவாய்ப்
பேறாஞ் சிவிறிப் பெண்ணையல் லாலில்லைப் போகுதற்கே. (105)

பாங்கிக்குலகின்மேல் வைத்துரைத்தல்.

(இ-ள்.) தலைவன் அம்மடலேற்றினை உலகின்மேல்வைத்துப் பாங்கிக்குக் கூறுதல்.

வீறு பொருந்திசெய் காமவெந் தீயுள் விடையிடைக்கோர்
தாறு மிருந்து துயரடைந் தோரென் றுஞ்சொன்னமணிப்
பூணு ரிவிலைப்புயத் தோன்ஷம்சுத் தாசின் பொதியவெற்பி
னாறு குமரர்பனை யூர்ந்துய வாரக்க வொண்டொடியே. (106)

* மடலேறலாவது - டனக்கருக்காற் குதிரையும் பனந்தருவி னுள்ளவற்றால் வண்டி முதலானவுஞ்செய்து அக்குதிரையின்மே லேறுவது. அங்ஙனமேறுவான் நிர்ப்பயனாய்த் தான் காமித்ததலை வியினுருவை யொருபடத்திற் றன்கையாலெழுதி அப்படத்தின்றலை யிலே தன்பெயரை யெழுதித் தன்கையிற் பிடித்து நடுவூருள்ளே நாற்சந்தியி லாகார நித்திரையின்றி அப்படத்தின்மேற் பார்வை யையு மனத்தையுமிருத்தி ஆசைவயத்தனாய் வேறுணர்ச்சியின்றி ஆவுரிஞ்சினும் அழல்மேற்படினுமறிதலின்றி மழைவெயில் காற்றான் மயங்காதிருப்புழி, அவற்றைக்கண்ட அவ்வூரிலுள்ளார் பலருங்கூடி வந்து நீ மடலேறிச் சோதனை தந்தால் நீ யிச்சித்த பெண்ணைக் கொடுக்கச்செய்வோமென்று கூற, அதற்கவ னிசைந்தானாயி னரசனுக் கறிவித்து அவனேவலால் ஏறவேண்டு; அங்ஙனமேறும்போது பூளை யெருக்கம்பூ இவைகளாற்கட்டிய மாலை புனைந்துகொள்ளல் வேண்டும். அக்குதிரையின் வடத்தை யிழுத்தலும், அக்குதிரை யத் தேர்த்துருளை புருண்டோடும்போது பனங்கருக்கு அறுத்த விட மெல்லாம் இரத்தம் வெளிப்படாது வீரியம் வெளிப்படின் அப்போ தவனை யலங்கரித்து அவனுக்கு அரசன் கொடுக்கச்செய்தல் வேண் டும். இரத்தம் வெளிப்படி லவனை யரசனாற் கொலைசெய்துவிடல் வேண்டும் என்பன புலவரா னிருமிக்கப்பட்ட வழக்கு.

தலைவன் றன்மேல் வைத்துரைத்தல்.

(இ-ள்.) தலைவன் அம்மடலேறுவேனென்று பாங்கிக்குக் கூறுதல்.

வேலையி னெக்குமிக் கோன்ஷண்முகத் தாசின் வியனசலச்
சோலையி லாடும்மைத் தோகையன் னீர்மடல் சூழ்ந்தெருக்க
மாலையும் பூளையு மற்றவும் பூண்டினி மன்றுமறு
காலையி னும்மூர் வலம்வரு வேனும்மைக் காண்பதற்கே. (107)

பாங்கி தலைமகனையவயவத்தருமை சாற்றல்.

(இ-ள்.) அவ்வாறுகூறக்கேட்ட பாங்கி படமெழுதியபின்னன்றோ மடலேறுவது. ஆதலால் தலைவியவயவ மெழுதற் கருமையென்று கூறுதல்.

குடையு மாசங்கொள் கோன்ஷண்முகத் தாசின் கொழுங்கிரியா
படையுமென் காரிகை கோதையைத் தாதி யனைத்துமொரு
தடையும் வாரா மெழுதினு நன்னுதல் தருபியது
நடையு முரையு மெழுதலெவ் வாறு நவிற்றரசே. (108)

தலைமகன் றன்னைத்தானே புகழ்தல்.

(இ-ள்.) இவ்வாறெழுத லரிதென்று கூறிய பாங்கியைநோக்கித் தலைவன் றன்னைத்தானே புகழ்ந்து கூறுதல்.

மண்டலத் தோர்பெரு மான்ஷண்முகத் தாசின் மலயகிரி
கொண்டவர்க் காகாக் குறையுள தோவிங்கென் கூர்ங்கரத்தால்
விண்டமின் வெய்ந்தொளிர் காயமுந் தோர்க்கமு மேனிடையா
லண்டமு முன்னுரு வோடமைப் பேனமக் காரிகையே. (109)

பாங்கி யருளியல் கிளத்தல்.

(இ-ள்) அவ்வாறு தலைவன் கூறக்கேட்ட பாங்கி அருண்முறைமை கூறுதல்.

விண்ணைப் பழித்தகை யான்ஷண்முகத் தாசின் மிளிர்தடத்தென்
கண்ணைப் பொருவுகண் ணாளையல் லண்டமுங் காணுமிரு
மண்ணைப் பிரிந்து மறுகுற நீகொளும் வன்னெஞ்சினிப் [ளோ.
பெண்ணைக்கொண் டேறுவொரு பெண்ணைக் கொளலென்ன பேரரு

பாங்கி கொண்டுநிலை கூறல்.

(இ-ள்.) தலைவனுயிரைத் தாங்கிக்கொண்டு நிற்கு நிலைமையாகிய மொழியைப் பாங்கி கூறுதல்.

ஆரும் கருமயின் றேதெனில் யான்சென் றடுத்தடுத்துன்
னேருங் கரும முவனுவ லன்னவ ளுண்டிறனும்
வாரும் படைத்தபு மான்ஷண்முகத் தாசின் மலயவெற்பி
னீரும் பதிலதிக் தேற்பன காணென் னியலரசே. (111)

இவற்றுள் - தலைமகன் கூற்றாயின வெல்லா மடற்கூற்றிற்கும் பாங்கி கூற்றாயின வெல்லா மடல்விலக்கிற்கு முரியன.

தலைவியிளமைத்தன்மை பாங்கி தலைவற்குணர்த்தல்.

(இ-ள்.) பாங்கி தலைவியினது மங்கைப்பருவ மாரம்பமாமையைத் தலைவனுக்குக் கூறுதல்.

முலையோ பருத்தில மொழியோ நிறைந்தில முற்றுமங்கள்
கொலையோ பழகில கூந்தற் றிரைந்தில கூடலர்வெண்
டலையோ டமரிற் கோன்ஷம்சுத் தாசீன் றடத்துறைபைங்
கலையோ வுடுக்கறி யாளிவள் மீட்டென் கொலுவகை (112)

தலைவன்றலைவி வருந்தியவாமை யுரைத்தல்.

(இ-ள்.) அங்ஙனங் கூறிய இளமைப்பருவமே தன்னை வருத்திய விதத்தைத் தலைவன் பாங்கிக்குக் கூறுதல்.

புள்ளிற் பொலியும் புணர்முலை யீர்மதன் பூவம்போ
டெள்ளின் முலையரும் பேதைப் பிறைத்தழ லென்னுயிர்க்கே
விள்ளிற் பொருமுக வெள்ஷம்சுத் தாசீன் பனிர்வரைவாய்
முள்ளின் முனையென மொய்த்தன தாற்கொலை மொய்விழிக்கே.

பாங்கி செவ்வியருமை செப்பல்.

(இ-ள்.) பாங்கிதலைவியின் சமையத்தினருமை தலைவனுக்குக் கூறுதல்.

சுனையுங் கடமுஞ் சகமும் பணியுந் துணியுநல்லம்
மனையும் பொழிலு மறந்தன ளேயுற்ற மாற்றலர்மேன்
முனையும் பெருந்தளத் தோன்ஷம்சுத் தாசீன் முதிர்சிலம்ப
வினையும் படியவட் கிங்கென்கொ லோயா னிசைக்குவதே. (114)

தலைவன் செவ்வியெளிமை செப்பல்.

((இ-ள்.) தலைவன் றன்குறை சொல்லுதற்குத் தலைவி சமையமெளிதெனக் கூறுதல்.

ஒருநாண் மறந்துறைத் தாலுமென் பேருவந் தோடிவந்துன்
னருகாய்த் தழுவி யறைகில னோது மணிமகுடத்
தருகாற் றழும்புடைக் கோன்ஷம்சுத் தாசீன் றடவரைவா
யிருநா ளியம்பிலென் னுயிரை யாமுனிற் கேய்க்கிடுமே. (115)

பாங்கி யென்னை மறைத்தபின் னெளிதென நகுதல்.

(இ-ள்.) நீவி ரிருவரு மெனக்குத் தெரியாமல் மனமொத்துக் கலந்தபின் இக்களவொழுக்க மொழுகுதற் கெளிதென நகை யாடிப் பாங்கி கூறுதல்; எனவே யென்னையன்றி யுங்க ளொழுக்க நிகழாதென்பது குறிப்பாற் பெறப்பட்டது.

நகமுஞ் சுதையுமன் னவ்வெயிறுங் கோதை நவிருக்குன்
னகமும் புறமு மளிப்பதொத் துங்க ளருவினையுங்
கிகமும் பரமும் புகழ்வாணன் றஞ்சைத் தாரி னெழிற்சிலம்ப
நகமும் பொலிவு மெனையல தன்பிலெகாள் சொல்லுதற்கே (116)

அந்நகை பொறாதவன் புலம்பல்.

(இ-ள்.) பாங்கி நகையாடிக் கூறுதல் சகியாமற்றலைவன் வருந்திக்கூறுதல்.

வெள்ளத்துண் மூழ்கி மிதக்குநர் போற்கண் மிரைக்கிருக்கிப்
பள்ளத்து ளாழ்ந்துயப் பான்மையன் றேசெழும் பைந்தமிழோ
ருள்ளத்துள் வாழும்பு மாண்வாணன் றஞ்சைத் தாரி னுலகவன்கட்
கள்ளத்துண் மாழ்கு மெனைநகைத் திங்ஙன் கலக்குவதே. (117)

பாங்கி தலைவனைத் தேற்றல்.

(இ-ள்.) அங்ஙனம் வருந்திய தலைவனைப்பாங்கி நின்கருத்து முடிப்பலெனத் தெளிவித்தல்.

என்னுயி ரன்னவ னின்னுயிர் யானென் றிருப்பதல்லாற்
பின்னுயிர் வேறென் றிலைசொலு மன்னனிப் பேருலகந்
தன்னுயி ரென்னுமெம் மாண்வாணன் றஞ்சையி னடைகொலாய்
நின்னுயிர் வாடி நிலைகுலை யேல்சுக நேர்வருமே. (118)

பாங்கி கையுறை யேற்றல்.

(இ-ள்.) தலைவன் கொடுத்த காட்சிப் பொருளைப் பாங்கி யங்கீகரித்து வாங்கிக்கொள்ளுதல்

விதியே வலிதென வேதினி கூறுமம் மெய்ம்மொழிசம்
மதியே யெனவித் தழையாண் மதித்தனம் வாண்புவிக்கோர்
பதியே யெனவொளிர் வாணன்றஞ்சைத் தாரின் பனிவரைவாய்த்
துதியே யபிற்கரத் தோயருள் வாய்சென்று சூட்டுதற்கே. (119)

கிழவோனுற்றல்.

(இ-ள்.) தலைவன் துன்ப நீங்கிச் சொல்லுதல்.

பொய்க்கொண்ட வன்மொழி போதித் தலைவித்த புன்மையெல்லா
மெய்க்கொண்ட வன்பால்நீ வேறிலைப் பூந்தழை வேட்டுநீர்ச்
செய்க்கொண்ட றாமம்புர வாணன்றஞ்சைத் தாரின் சிலம்பிலெம்மைக்
கைக்கொண்ட வட்குற்ற கைம்மாறு யாதொன்றுங் காண்கிலமே. ()

இவற்றுள்-பாங்கி கூற்றுவின வெல்லாங் குறைநேர்தற்குந் தலைவன் கூற்றுவின வெல்லாமடற்கூற்றொழிதற்கு முரியன.

இறைவன் றனக்குத் துறைநேர் பாங்கி
இறைவிக்கவன்றுயருணர்த்தல்.

(இ-ள்.) தலைவன் வருத்தந்தணிப்பலென்றுசொல்லிய பாங்கி அவ்வருத்தத்தைத் தலைவிக்குக் கூறுதல்.

தழைபாரார் காமுந் தளர்வா றோடுந் தனிமையுமாய்ப்
பழையாரி லோர்புதி யார்வரு வார்வந்து பற்றலர்போன்
மழையார் திருக்கர மால்ஷம்சுத் தாசீன் மலைவெற்பி
லுழையா ரகலா றுனையார் கருத்தென்கொ லோதுதற்கே. (121)

இறைவி யறியாள்போன் றறியாள் கூறல்.

(இ-ள்.) பாங்கி யிவ்வார்த்தை கூறவே தலைவிகேட்டுத் தா னொன்று மறியாள்போல மனத்திற் கருதாத வேறொன்றைக்கருதிக் கூறுதல்.

திணைமே லருக்கார் சேய்ஷம்சுத் தாசீன் செழுமலைச்சீர்க்
கணைமே புகலாக் கருதல ரோடிக் கருத்தழிந்து
வணைமே யிடனு வளரிலை காய்கனி மற்றுமடுத்
திணைமே யலைவொன் னோக்கிழை யிரிய விரும்பொழிற்கே. (122)

பாங்கி யிறையோற் கண்டமை பகர்தல்.

(இ-ள்.) பாங்கி தலைவனின்வயத்தனாக வந்தவதனைக் கண்டேனென்று கூறுதல்.

பாருங் ககனும் பகர்ஷம்சுத் தாசீன் பனிவரைவா
யாரும் புகழு மணிமுலை யீரும் மருநலம்வேட்
டேரும் பெயரு முறையும் வழியு முவந்தவரைக்
காரும் படருநங் காவகத் தின்றெதிர் கண்டனனே. (123)

பாங்கியைத் தலைவி மறைத்தல்.

(இ-ள்.) தலைவி தன்களவொழுக்கத்தைப் பாங்கிக்கு மறைத்துக் கூறுதல்.

வீணாய் விளம்பல்பெண் பாவம்பொல் லாது வெறுத்துனையான்
காணா தெழுந்து காந்தனன் டோகடற் காசினிக்கோர்
மாணா ரதிபதி மால்ஷம்சுத் தாசீன் மலையவெற்பிற்
பூணா ரிணைமுலை யாயுன்ப ரோகஞ்சம் புத்திவைத்தே. (124)

பாங்கி யென்னை மறைப்பதென்னெனத் தழாஅல்.

(இ-ள்.) இவ்வாறு மறைத்துக் கூறிய தலைவியைப் பாங்கி யுனக்கு நான் வேறோ? வென்று உவகையாகத் தழுவிக்கூறுதல்.

ஊடறி யாவுள்ள மொன்றுள மொன்றுவப் பொன்றன்றின்றோர்
பாடறி யாவுயிர்ப் பாவையன் னீர்மறைப் பன்னலென்றுங்

கோடதி யரச்செழுஞ் சேர்ஷம்சுத் தாசின் கொங்கிரிகள்
ளூடதி யாச்சுடர் காவதி யாச்சனை காளுகின்றதே. (125)

பாங்கி கையுறை புகழ்தல்.

(இ-ள்.) பாங்கி தலைவன்கொடுத்த காட்சிப்பொருளைப் புகழ்ந்து கூறுதல்.

சிலையுங் குலையுஞ் செழுந்தனத் தீர்செகி சிற்றிடைக்காங்
கலையுங் குழையுங் கனியுந் திரைமுங் கருதவருண்
மலையும் படிபொரு மான்ஷம்சுத் தாசின் மலையவெற்பி
னிலையுந் தழைநு மணியு மிவையுவந் தேற்றருளே. (126)

இவற்றுள்-பாங்கி கூற்றுயினவெல்லாங் குறைநயப்பித்தற்கும், தலைவி கூற்றுயினவெல்லா மறுத்தற்கு முரியன.

தோழி கிழவோன்றுயர்நிலை கிளத்தல்.

(இ-ள்.) பாங்கி தலைவனது வேட்கைகொண்ட துயர்நிலையைத் தலைவிக்குக் கூறுதல்.

குளிறுங் கனையுங் குரையு மருந்திக் குலவிவென்று
மொளிறுங் கழற்றுணை யோன்ஷம்சுத் தாசீ னெளிர்தடத்தோர்
களிறும் பிடியுங் களிதுயில் கொண்டுறல் கண்டணங்கே
வெளிறு முகத்தி னுயிர்த்தெனை நோக்கி வெகுண்டனரே. (127)

மறுத்தற் கருமை மாட்டல்.

(இ-ள்.) இவ்வாறு பாங்கி கூறிய சொற்கட்கு விடையின்மையால் இனி அத்தலைவன்வரி லென்னுன் மறுத்தற்கரிதெனப் பொருத்திக் கூறுதல். மாட்டல் - பொருத்தல்.

எவுஞ் சலித்த விழியி ரிறைசுமைக் கொம்மறிவு
யாவுஞ் சலித்தபு மான்ஷம்சுத் தாசீ னிருஞ்சிலம்பிற்
காவுஞ் சலித்தசெங் கையுஞ் சலித்தபொய்க் கட்டுரைக்கோர்
நாவுஞ் சலித்தவிந் நாமுஞ் சலித்துன்க ணண்ணினமே. (128)

தலைவன் குறிப்புவேறுக நெறிபடக் கூறல்.

(இ-ள்.) தலைவனென்னுங் குறிப்பு நம்பாலிரப்பவன்போற் றேற்றவில்லை. வேறு நினைப்பாகத் தோன்றியதென் றொழுங்குபடப் பாங்கி கூறுதல்.

விளையாற் பயனும் விளைவாற் பொருளும் விளங்கலொத்தோர்
பணையாற் கனிவரும் பாரென்ப ரன்பர் பகைபணித்து
முனையாற் றெறுமயில் வேன்ஷம்சுத் தாசீன் முதிர்கிரிசேர்
சுனையார் கருங்குழ லீர்பொரு ளோதவர் கட்டுரைக்கே. (129)

பாங்கி தலைவியை முனிதல்.

(இ-ள்.) தலைவி யொன்றற்கு மறுமொழிகொடாமையால் அவளை ச்சினந்து பாங்கி கூறுதல்.

அறியா தறைந்தே னறிந்தே னருமையிற் காமலரைக்
குறியா தடக்குங் குழலேயார்க் குரைகுறை கூறுபன்னா
ணெறியா புணர்ந்தபின் கோஷம்சுத் தாசி னெடுவரைசேர்
பொறியா ரிளமுலை யாய்கும்பிட் டேன்சொற் பொறுப்பதற்கே. ()

தலைவி பாங்கியை முனிதல்.

(இ-ள்.) அங்ஙனங் கூறிய பாங்கி சொற்களைப் பொறுதவளாய்த் தலைவி பாங்கியைக் கோபித்துக் கூறுதல்.

வெறுக்கும் பழிமொழி விண்டனை தாவி மெலிவுறமெய்க்
குறுக்குங் குணத்தனங் கேகுலை நீர்மைக் குறித்தினித்தெவ்
வறுக்கும் பெருமூரத் தான்ஷம்சுத் தாசி னருட்கிரிவாய்
மறுக்கு முரைநச வோதொள வோசொலென் வாயகத்தே. (131)

தலைவி கையுறை யேற்றல்.

(இ-ள்.) அங்ஙனங்கூறியபின் இனி, பாங்கியையன்றி யொன்று முடியாதென்று கருதி அவன் கொடுத்த கையுறைப் பொருளைத் தலைவி வாங்கிக்கொள்ளுதல்.

கொண்டாற் பழியொடு கொள்ளில மேனின் குறைமொழியு
முண்டா மெனக்கலக் குற்றுலை வேமை யுவக்தொளிர்பூந்
தண்டா மரைப்பதத் தான்ஷம்சுத் தாசின் சயிலமன்னுப்
விண்டா தரவி னளித்தவை யாவதில் வேண்டுதமே. (132)

இவற்றுள்-பாங்கி கூற்றுயினவெல்லாங் குறையயப்பித்தற்கும், தலைவி கூற்றுயினவெல்லாங் குறைநேர்தற்கு முரியன.

இறைவி கையுறை யேற்றமை பாங்கி யிறைவற் குணர்த்தல்.

(இ-ள்.) தலைவி தழைமுதலியவற்றை யேற்றுக்கொண்டமையைத் தலைவனுக்குப் பாங்கி கூறுதல்.

வாங்காய் தழையெனு முன்னுவள் தோடி வளர்முலைகண்
பாங்கார் முகமிதழ் வாய்சிரம் யாவும் பதித்தவனி
தாங்கா விரங்கதி ரோன்ஷம்சுத் தாசின் றமிழ்ச்சிலம்ப
நீங்கா நீயெனப் பல்கான் முகர்ந்து நினைந்தனளே. (133)

பாங்கி தலைமகற்குக் குறியிடங் கூறல்.

(இ-ள்.) தலைவன் தலைவியைச் சந்திப்பதற்கு ஒரு அறிகுறியுள்ள இடத்தைப் பாங்கி கூறுதல். அறிகுறி-அடையாளம்.

செல்லுங் கருதாஞ் செழுங்காத் திருட் டிபிக்குறத்திகல்
வெல்லும் பெருந்தன வேள்ஷம்சத் தாசின் கிரிவரைவெண்
கல்லும் வயிரமுங் கொத்துவ முத்துங் கலந்தனிலோ
ரல்லும் பகலா யனிரிடம் பாம்பக லாடிடமே. (134)

பாங்கி குறியிடத் தலைவியைக் கொண்டுசேறல்.

(இ-ள்.) முன்சொன்ன அடையாளமுள்ள இடத்துக்குத் தலைவியைப் பாங்கி கூட்டிக்கொண்டு செல்லுதல்.

பொன்னு மமுதப் பிழம்பே வருதி பொருமுலைச்சி
றன்னு நெகுமலைக் கின்றெதிர் கேட்டிடி பிடலை
மன்னு னதிபதி மான்ஷம்சத் தாசின் மலையவெற்பிற்
கன்னு லலைவரு கண்ணிர்க் குவலயங் காண்பதற்கே. (135)

பாங்கி தலைமகளைக் குறியிடத்து உய்த்து நீங்கல்.

(இ-ள்.) கூட்டிச் சென்ற தலைவியைக் குறியிடத்து விடுத்துவிட்டுப் பாங்கி நீங்குதல்.

கண்பகை காற்பகை கைப்பகை போற்பகை கண்டுபயமோ
ரண்பகை தீர்த்தடை யாமபி ராய்ந்திய ராகவென்று
மண்பகை தீர்த்தவெம் மான்ஷம்சத் தாசின் மலைவரைவாய்த்
தண்பகை தீர்த்தொளி ரின்சொல்லாய் யாற்றுத் தங்குகவே. (136)

இறைவி இறையோனிடத் தெதிர்ப்படுதல்.

(இ-ள்.) தலைவியைத் தலைவனேரே வந்து காணுதல்.

வாளாக் கிடந்து மயற்பசி கொண்டு மயங்குமென்னை
யாளாக்க வென்றோ வருள்வா யமுத மருந்தனமுங்
கோளாச் சமர்கொன் குலதெய்வம் போன்முன் குறுகினைசெந்
தாளா லரசரிப் பேர்ஷம்சத் தாசின் றடத்தணங்கே. (137

புணர்ச்சியின் மகிழ்தல்.

(இ-ள்.) வெளி.

வழுத்துஞ் சகித்த மருவுரு வாயெனை வாழ்வித்தின்ப
மழுத்துஞ் செழுந்தனத் தாருபி ரோயின் றாசர்முடி
விழுந்த மலர்ப்பத வேள்ஷம்சத் தாசின் வியன்சிலம்பின்
முழுத்துஞ் சகாகந்த வாரிகண் டேயுண் முழுகினனே. (138

புகழ்தல்.

(இ-ள்.) வெளி.

பூணு மகுடப்பு மான்ஷம்சத் தாசின் பொதியமன்றுய்
காணுந் துடிபு மடிபட் டலறியெக் [illegible]
...ADHYAYA

கோளுறு பிறையுங் குழையு மிவணங் கொண்டலையுஞ்
சேணுறு மதனுந் திகைதரு சோற்றுன் சிற்றிடைக்கே. (139)

தலைமகளைத் தலைமகன் விடுத்தல்.

(இ-ள்.) தலைவியைத்தலைவன் ஆயக்கூட்டத்திற்செல்லவிடுதல்.

கனைமா மமுதக் கடல்கடைந் தின்பக் கனிவருள்வோய்
சினைமா ரயிற்கரச் செய்ஷம்சுத் தாசின் சிலம்பகத்தெம்
மனைமாந் துணையின் வணங்கடந் தன்குழு மன்னியிங்க
னினைமா யனுப்புதி யேகுதி நல்லிடை யீக்கொடிக்கே. (140)

பாங்கி தலைவியைச் சார்ந்து கையுறை காட்டல்.

(இ-ள்.) குறியிடத்து நிறுத்திப்போயின பாங்கி தலைவன்போயினபின் தான் கையுறை கொண்டுவரப்போயின பாவனையாகக் கையுறை கொண்டுவந்து காட்டல்.

முலைகண்டு வாயிதழ் மூடரும் பொன்னி முழுமுட
னிலைகண்டு வாடும சோகமு நீத்து நிருபர்திறை
மலைகண் டுவக்குமெம் மான்ஷம்சுத் தாசின் மலையகம்பல்
விலைகண்டு பூக்கண் டெடுத்துவந் தேன்கொள்ளெ னேந்திழையே.

தலைவியைப் பாங்கிற் கூட்டல்.

(இ-ள்.) பாங்கி தலைவியை மகளிர் கூட்டத்திற் சேர்த்தல்.

நந்தா வனத்து நறுமலர்க் காவுள்ளு நண்ணுமல
ரெந்தா யெடுத்தணிந் தென்குழற் கென்று விரும்புகிக்கோர்
சிந்தா மணியனை யான்ஷம்சுத் தாசின் சிலம்பிடையு
வந்தாயத் தார்வினை யாடிடங் கண்டங்கு மன்னுதுமே. (142)

நீங்கித் தலைவற் கோம்படை சாற்றல்.

(இ-ள்.) தலைமகளை ஆயத்துட்சேர்த்து மீண்டுவந்து பாங்கி தலைவற்கு ஓம்படை சொல்லுதல். ஓம்படை-மறவாமை.

கண்ணுஞ் சுகிர்தமெய்ஞ் ஞானேசர் தாண்மலர் நாடியுள்ளத்
தெண்ணும் பெரும்பதத் தோன்ஷம்சுத் தாசி னெழிற்சிலம்ப
கண்ணுங் கருத்துமென் னும்பிரி வோரைக் கலந்தவெற்குப்
பண்ணும் வரமற வாமைய தேயென்னொள பாக்கியமே. (143)

உலகியன் மேம்பட விருந்து விலக்கல்.

(இ-ள்.) உற்றூர் அயலூரிலிருந்து வந்தாலவர்க்கு உணவுகொடுத்துபசரிப்ப துலகியல் பாதலா லவ்வுலகியல் பெருமைப்படத் தலைவனை யெம்மூர்க்கு வந்திருந்து விருந்துண்டு போவெனப்பாங்கி தலைவன் செல்லுதலை விலக்குதல்.

வில்லிற் றுணையிலெம் வேள்வாணன் றஞ்சைத் தாசின் வியனகலப்
புல்லிற் றொழுமறிப் பாலுங் கறியும் புனத்தனமு
மல்லிற் பழனு மடுத்தே சிறிதெம் மனைவதிந்தோய்
கல்லிற் பகலோ டகலிற் பிறைபெண்கொ லாண்டகையே. (144)

விருந்திறை விரும்பல்.

(இ-ள்.) அவ்வுணவைத் தலைவன் விரும்பிக் கூறுதல்.

சித்தமும் புத்தியுங் கோடைமெய்ந் தொனியர் சிறுக்கண்
ணித்தமும் வைத்தபு மான்வாணன் றஞ்சைத் தாசி னெடுவரைசி
லத்தமு மன்புமொரன் றெய்வ நீகொன் னொருவிடமும்
புத்தமு தாயின் புசிக்கில ருண்டுகொல் பூந்திருவே. (145)

இவற்றுள் - பாங்கி கூற்றாயினவெல்லாங் கூட்டற்கும் பாங்கிற் கூட்டற்குந் தலைவன் கூற்றாயினவெல்லாங் கூட்டற்கும், வேட்டற் குமுரியன.

இத்துணையும் ஆறாகத் தொகுப்பி யென்க.

பாங்கிற்கூட்டம்-முற்றிற்று.

---

## ஒருசார் பகற்குறி.

அஃதாவது-ஒருகூற்றுப் பகற்குறி; அது-யாதெனில்? தலைவன் மறுநாள் தன்வேட்கை மிகுதியால் பகற்குறியிடத்துவந்து நிற்கத் தலைவியைப் பாங்கி குறியிடத்துச்செலுத்தாது மறுத்துக்கூறத் தலைவன் வருந்திப்போதல். ஆதலாற் பகற்குறியாகாது ஒருசார் பகற்குறியாயிற்று; அஃது-இரக்கல் வன்புறை இற்செறிப் புணர்த்தலென மூவகைப்படும்; அவை வருமாறு:—

கிழவோன் பிரிந்துழிக் கிழத்தி மாலையம் போது கண்டிரங்கல்.

(இ-ள்.) மேற்கூறியவாறு தலைவன் பிரிந்துபோகத்தலைவி மாலைக்காலத்தைக் கண்டுவருந்துதல்; இக்கூற்றுப் பாங்கியைநோக்கி கூறுதலும் மாலையை நோக்கிக் கூறுதலுந் தன்னுட் கூறுதலுமென மூன்றும்; அவற்றுளிது தன்னுட் கூறுதல்.

துறந்தார்ப் பிழைத்தார்க் கடுசினம் போலுமென் றேதைநல்லாய்
பிறந்தா ரிருள்செறி மாலையம் போழ்து பெரிதுறுத்தி
மறந்தார்ச் சிறைசெயு மால்வாணன் றஞ்சைத் தாசின் மணிவரைவாய்க்
கறந்தா ருயிருறு மென்செய்வ லெல்லைக் கடல்கழித்தே. (146)

பாங்கி புலம்பல்.

(இ-ள்.) தலைவி வருத்தங்கண்டு பாங்கி வருந்துதல்.

மீறும் பெருந்தா வேள்வாணன் றஞ்சைத் தாசின் வியன்கிரிவாய்க்
கூறுங் குணகலத் தோர்செல மாமதன் கூர்த்துவந்தங்

கேறும் பரியு மிரதமுங் காளமு மீர்ங்குடையுஞ்
சீறும் படிகரிக் கிங்கென்கொ லோவிவள் செய்ததுவே. (147)

தலைவனிடத் தலைவி வருந்தல்.

(இ-ள்.) தலைவன் வாராது நாழிகை நீடிக்கத் தலைவி வருந்திக் கூறுதல்.

பொங்கு மயலுற்ர் பூட்டியென் னின்பப் புதுகலங்கொண்
டெங்கும் புகழுகல் லோன்ஷம்சுத் தாசி னிருஞ்சிலம்பிற்
றங்கு மெனைமறந் தன்னையர் சாருமுன் சார்ந்தவிந்த
மங்கு லிரவிடை வந்தொரு முத்தம் வழங்கிலரே. (148)

தலைவியைப் பாங்கி கழறல்.

(இ-ள்.) பாங்கி தலைவியை நீவருந்துவது முறைமையன்றெனக் கட்டுரைத்தல்-கழறல்-கட்டுரை, இடித்துக் கூறல், உறுதிச்சொல்.

நஞ்சு மமுது நனவு மறப்பு நலனலதொத்
தஞ்சநஞ் செழுந்தனந் தஞ்சமன் னீருள் ளழுங்கலென்று
மிஞ்சும் பெரும்புகழ் வேள்ஷம்சுத் தாசின் வியன்சிலம்பி
லொஞ்சும் பிரிவும் புணர்ப்பு முளவுலத் தோதுதற்கே. (149)

தலைவி முன்னிலைப் புறமொழி மொழிதல்.

(இ-ள்.) பாங்கி யெதிரே நிற்கவுந் தலைவி அவள்மேல் வெறுப் பாலவளை நோக்கிக் கூறாது புறமாய்க் கூறுதல்.

வெறியார் மயலும் வினையுஞ் சிறையு மிலைந்தாவற்
பொறியா யுழலுமென் புன்கணுற் றோன்றிப் போந்தமற்றோ
ரறியார் மலடி யறியாள் பிரசவ வல்லலென்று
நெறியா யுயர்தவத் தோன்ஷம்சுத் தாசி னெடுவரைக்கே. (150)

தலைவி பாங்கியொடு பகர்தல்.

(இ-ள்.) வெறுப்பால் முன்னிலைப் புறமொழிகேட்ட பாங்கி தலைவியை யுபசரித்தலா லவ்வெறுப்பு நீங்கிப் பாங்கியொடு தலைவி கூறுதல்.

சற்றும் பிரியேன் றரியே னெனத்தடுத் தார்பருட
மெற்றுந் திருப்பதத் தோன்ஷம்சுத் தாசி னிருஞ்சிலம்பர்
சொற்றுங் கலந்துந் தழுவியு முத்தியுஞ் சூழ்ந்தவெல்லா
முற்றும் பழுதாய் முடிந்தகொ லோவென்றன் மொய்குழலே ()

தலைவியைப் பாங்கி யச்சுறுத்தல்.

(இ-ள்.) அங்ஙனங் கூறியுந் துன்பமுறுந் தலைவியை அதுநீங்குமாறு பாங்கி பயமுறுத்திக் கூறுதல்.

புனமே மறந்துறு புள்ளு மறந்தொரு போராசின்
கனமே நினைந்துழல் கன்னிநல் லாயன்னை காணினருட்

டனமே பெறுபொரு மாஸ்ஷும்சுத் தாரின் றமிழ்ச்சிலம்பி
னினமோ விடுத்தில் லிடமே கருமென் னியற்றுவையே. (152)

நீங்கற்கருமை தலைவி நினைத்திரங்கல்.

(இ-ள்.) தலைவன் றன்னைவிட்டு நீங்கற்கருமையைத் தலைவி நினைத்து தன்னுள் ளிரங்கிக் கூறுதல்.

ஆவியு மெய்யுமென் றொன்றிரண் டாயொரு மையாக்கியக
மேவிய வன்மையு மென்மையு மாயினை விந்தமாரில்
தாவிய வாய்தக்கத் தொல்ஷுரக்த் தாரின் றமிழ்க்கிரியப்
கூவிய மாமுதல் சார்பொழித் தால்லெய் துறுதற்கே. (153)

தலைவிக் கவன்வரல் பாங்கி சாற்றல்.

(இ-ள்.) அங்ஙனமயிரங்குந் தலைவிக்குத் தலைவன் வருதலைப் பாங்கி கூறுதல்.

சீர்தரும் வள்ளல்பு மாஸ்ஷும்சுத் தாரின் செழுஞ்சிலம்பிற்
றேர்தரு மோனை திருவே தெரிவினிச் செப்புமக
னூர்தரு காளங் கனைகுடை தேர்முர சாரமிற்றா
யேர்தரு மாறிலை நின்னா சார்ந்து மிதந்தருமே (154)

சிறைப்புறமாகச் செறிப்பறிவுறுத்தல்.

(இ-ள்.) தலைவன் சிறைப்புறமாகக்குறியிடத்துவரப் பாங்கிதங் களுக்குள்ள செறிப்பையறிவுறுத்திக் கூறுதல். சிறைப்புறம்-வெளிப் புறம். செறிப்பு-காவலர் தினைகொய்யப் புறத்தினில் வாரிருத்தல்.

மணியார் கலாப மயிலீ ருறைபிர் மகிழ்க்குனையீர்
பணியா ரிருளைய ராடட் ப்பப் பருத்தெழுமோர்
திணியா சலப்புயச் செய்ஷும்சுத் தாரின் செழுங்கிரியிற்
கனியா ரலர்க்கண் கணித்தா ரெமக்கிலைக் காய்புனமே. ((155)

தோழி தலைமகற்குமுன்னிலைப் புறமொழி மொழிந்தறிவுறுத்தல்.

(இ-ள்.) தலைவன் முன்னிலையாய்நிற்பத் தோழி தலைமகனைக் காணாதவன்போலப் புறமொழியாய்ப் புட்கள் விலங்குகளை நோக்கிக் கூறுவான் போன்று செறிப்பறிவுறுத்தல்.

நிறந்தாங் குழைகாண் மயில்காள் கிளிகா ணிதழுமலர்ப்
புறந்தாழ் கருங்குழற் பொன்னனை யாளைப் புணர்ந்துகந்த
சிறந்தார் மணிமுடிச் செய்ஷும்சுத் தாரின் சிலம்பிலெம்மை
மறந்தாலு நீவிர் மறவா திருமொரு வந்தனமே. (156)

பாங்கி தலைமகன் முன்னின் றுரைத்தல்.

(இ-ள்.) தோழி தலைவனுக் கெதிரேநின்று நினையுறத்தலை வினி யெம்மூர்க்குப் போவேம். இப்புனத்தின்கண் வருதலொழிக வெனக் கூறுதல்.

பலர்வாய்ப் புகழ்தரித் தோன்ஷம்சுத் தாசீன் பனிவரையீர்
மலர்வாய் வினாவிநீ தெம்மற வோர்புனம் வாரியிடு
முலர்வாய்க் குரவி னுறைவரி தில்லெனு மோர்க்கெதமையு
மலர்வா யகத்திற் கறைத்தன ரேருது மங்கெறிக்கே. (157)

பாங்கி முன்னின் றுணர்த்தி யோம்படை சாற்றல்.

(இ-ள்.) அங்ஙன முன்னின்று கூறிய பாங்கி வெம்மை மறவாமை வேண்டுமென்று கூறுதல்.

கண்மறந் தாலு மிமைமறந் தாலுங் கனிமயில்கார்
விண்மறந் தாலும் வெயின்மறந் தாலும் விரைமலர்வாய்
பண்மறந் தாலும் பகர்ஷம்சுத் தாசீன் பதியிலுயிர்
மண்மறந் தாலு மறவா துறவெம்மை வாழ்த்துதுமே. (158)

கிழவோன் றுஞ்சப்பெறாது நெஞ்சொடு கிளத்தல்.

(இ-ள்.) இவ்வாறு கூறக்கேட்ட தலைவன் வேறோர் பற்றுக் கோடு பெறாது நெஞ்சுடன் கூறுதல்.

ஆந்தனை யும்புனங் காத்தறி வாதி யனைத்துமன்னி
யேந்தனை யார்தொழ வின்றகன் றுன்பின் னிரும்புவிக்கோர்
வேந்தனை யான்விறல் ஷம்சுத் தாசீன் வியன்சிலம்பிற்
போந்தனை யான்மனை மேவினி யென்பிவன் போதுவையே. (159)

இவற்றுள் - கிழவோன் பிரிந்துழிக் கிழத்தி மாலையம்பொழுது கண்டிரங்கலும் பாங்கி புலம்பலுந் தலைவனீடத் தலைவி வருந்தலு முன்னிலைப் புறமொழி மொழிதலுந் தலைவி பாங்கியொடு பகர்தலும் நீங்கற்கருமை தலைவி நினைந்திரங்கலுங் கிழவோன் றுஞ்சம்பெறாது நெஞ்சொடு கிளத்தலுமாகிய வேழு மிரங்கற்கும், தலைவியைப் பாங்கி கழறலும் பாங்கி யச்சுறுத்தலும் பாங்கி தலைவிக் கவன்வரல் சாற்றலுமாகிய மூன்றும் வன்புறைக்கும், பாங்கி இறைப்புறமாகச் செறிப்பறிவுறுத்தலு முன்னிலைப் புறமொழி மொழிந்தறிவுறுத்தலு முன்னின்றுணர்த்தலு மோம்படை சாற்றலுமாகிய நான்கும் பிற்செறிப்புணர்த்தற்கு முரியன. முன்னைய வேழில் நெஞ்சொடு கிளத்தலொழிந்த வாறும்வரைதல் வேட்கைக்கும், பின்னைய நான்கும் வரைவு கடாதற்கு முரியன.

ஒருசார் பகற்குறி-முற்றிற்று.

## பகற்குறியிடையீடு.

அஃதாவது:—பகற்குறிக்கண்வந்த தலைமகன் குறிக்கட் செல்லாது இடையீடு பட்டுப்போதல். இடையீடு-தடை; அது-விலக்கல் சேறல் கலக்கமென மூவகைப்படும்; அவை வருமாறு:—

இறைவனைப் பாங்கி தறிவாய் விலக்கல்.

(இ-ள்.) இனி அடிக்கடி தாய்வருவள். நீவந்தாற் பழியுண்டா மென்று தலைவனைப் பகற்குறியிடத்து வாராதே யென்று பாங்கி கூறுதல்.

அன்போ டருள்குணத் தான்ஷம் மைத் தாயி னருந்திலம்பின்
முன்போ லடுத்தடுத் தண்ணலன் னொமலென்று மொய்புனத்தி
னென்போர் மறவ ரினிநிருந் தாயின்று போந்தனையாற்
பொன்போ லொளிருடை யன்னையால் தாய்வந்து போதுவனே. (160)

இறைவியைப் பாங்கி தறிவாய் விலக்கல்.

(இ-ள்.) பாங்கி தலைவியை நோக்கி புன்றுறைடைய தனபாரங்க வினமுலை யையுற்றுத் தாய் பார்த்துக் கலங்கின்றனள். இனியிப்பு னத்தில் வரலொழிவாயென்று கூறுதல்.

இரப்பார்க் களிக்குமெய் மான்ஷம்மைத் தாயி னிருந்திலம்பிற்
பரப்பார் மதர்விழிப் பாவையாள் ளையுன்றன் பாமுலைப்
சுரப்பார் பொலிவுமெய்ந் தோற்றமு மாற்றமுஞ் சூழ்ந்தனைதன்
கரப்பார் மனங்களன் றேங்க வின்றினிக் காவகமே. (161)

இறைமகை யாடிட நோக்கி யாடுங்கல்.

(இ-ள்.) தலைவி தான் விளையாடிய விடங்களைவிட்டுப் பிரிதற் கஞ்சி வருந்தல்.

ஆடித் திரிந்த சுனையும் பொழிலு மருந்தடமுந்
தேடிக் குழுகுதாக் கென்றெறிந் தெல்லை யென் செப்புமுள்ள
நாடித் தருந்திரு மால்ஷம்மைத் தாயி னளினவெற்பிற்
கூடிப் பிரியவர்க் கில்லையெங் காலுமெய்ப் கோணிலையே. (162)

பாங்கி யாடிடம் விடுத்துக்கொண் டகறல்.

(இ-ள்.) தலைவியைப் பாங்கி விளையாடிடத்தைவிட்டுத் தம் மூர்க்குக் கொண்டுபோதல்.

கார்கண் டுவக்கு மயில்காள் கிளிகாள் கனைகமணிப்
போர்கண் டுவந்தபு மான்ஷம்மைத் தாயின் புனிதவெற்பி
னேர்கண்டு நம்பிரி வென்னவியுண் மாழ்கு பிறைவர்க்கெங்கண்
ணீர்கண்டு மேவ கிகழ்த்துவி ரோவிந்த நீணெறியே. (163)

இதுவரையும் எழாசான் நிகழ்ச்சி யென்க.

பின்றுனெடுந்தகை தறிவாயி லிடுசென்றிரங்கல்.

(இன்.) எட்டாநாள் தலைவன் குறியிடமாகிய மாதவிப்பந்த ரிடத்துவந்து காலநீட்டித்துத் தலைவியை நினைத்து வருந்துதல்.

கூடுஞ் சுகம்பிரிந் தாற்றெரி வாளனைக் கூர்ந்தெவரும்
பாடு மொழிபதிந் தோமறந் தோவிந்தப் பாரிடங்கொண்

டாரும் புகழ்ப்பெரு மான்ஷம்சுத் தாசி னருட்கிரிவா
யோயுங் கலைபினங் காளவ னோடி யொளித்ததுவே. (164)

வறுங்களநாடி மறுகல்.

(இ-ள்.) தலைவியில்லாத தினைப்புனத்தை நோக்கித் தலைவன் வருந்துதல்.

வெல்லு மதமலை வென்ஷம்சுத் தாசின் வியன்வரைவாய்க்
கல்லுங் கரைதரக் கண்ணீர் சொரிந்து கசிந்துருகி
யல்லும் பகலு மழிவேற் கெனையென் னளிபினங்காள்
செல்லும் பொழுதெந்துஞ் செப்பின ளோவந்தத் தேமொழியே. ()

குறுந்தொடி வாழ்பதிநோக்கி மதிமயங்கல்.

(இ-ள்.) தலைவியி லூர்தேடிச் செல்வோமானால் அறிகில மென்று தலைவன் மதிகலங்கிக் கூறுதல்.

காடரி தாலவ ரூரும் பெருமு னன்றுநெறி
நேடரி தாலென்றுஞ் செல்லரி தாலவண் சேர்மறவர்
பாடரி தாலருண் மால்ஷம்சுத் தாசின் பனிவரைவாய்க்
கூடரி தாலென்செய் வேன்மன மேகிலே கொள்ளுதற்கே. (166)

இவற்றுள் - இறைவனைப் பாங்கி குறிவரல் விலக்கலு மிறைவியைப் பாங்கி குறிவரல் விலக்கலுமாகிய விரண்டும் விலக்கற்கும், ஆடிடம் விடுத்துக்கொண் டேகலொன்றுஞ் சேறற்கும், இறைமகளாடிட நோக்கி யழுங்கல் முதலிய நான்கும் கலக்கத்திற்குமுரியன.

பகற்குறி யிடையீடு-முற்றிற்று.

---

## இரவுக்குறி.

அஃதாவது:—தலைவன் தலைவியை யிரவுக்குறியிற் கூடுதல்; அது-வேண்டல் மறுத்தல் உடன்படல் கூட்டல் கூடல் பாராட்டல் பாங்கிற் கூட்டல் உயங்கல் நீங்கல் ஆகிய ஒன்பது வகைப்படும்; அவை வருமாறு:—

இறையோ னிருட்குறி வேண்டல்.

(இ-ள்.) தலைவன் இருட்குறியைவிரும்பிப்பாங்கியுடன்கூறுதல்.

தருந்தா மலரக்கரத் தான்ஷம்சுத் தாசின் றமிழ்ச்சிலம்பி
லிருந்தார மேக மொழுக்கது வானி லிரவியுமத்
திருந்தார் கவியகஞ் சேர்ந்தனன் கங்குலுஞ் சேர்ந்ததுங்கள்
விருந்தாக வந்தனன் மெல்லிசல் லீரிந்த வேலையிலே. (167)

பாங்கி நெறியின தருமை கூறல்.

(இ-ள்.) அதுகேட்ட தோழி தலைவன் வரும் வழியில் சிங்கமுதலிய மிருகங்கள் சஞ்சரித்தலால் அவ்வழி வரலரிதென்று கூறுதல்.

திண்டந்த மற்புயர் செய்ஷம்கத் தாசின் செழுஞ்சிலம்பி
னெண்டந்த வெண்கலை வண்கலை தார்த்தற் குவக்கெழுமுச்
செண்டத்த பல்சுய மெற்று மரியணைத் திட்டெதிர்க்கிங்
கண்டந்த வல்லிருட் போதுமு மாறென்கொ லாண்டகையே. (168)

இறையோ னெறியின தேதங் கூறல்.

(இ-ள்.) அந்நாளுக் கூறிய வழியிலுள்ள மிருகங்களுக் கஞ்சே னாதலால் அவ்வழி வருத லில்லையென்று தலைவன் பாங்கிக்குக் கூறுதல்.

இனமா ரயிற்படைச் செய்ஷம்கத் தாசின் இமையமன்னாட்
டனமாங் கரிக்குந் தடமாம் பணித்துந் தழைக்கக்கு
வினமா யிருட்கு மிடையா மரிக்கு மிடைவதல்லால்
வனமார் விலங்கின் வரைக்கிடை யேயென் றுமாறுமாசே (169)

பாங்கி யவனாட் டணியியல் வினாதல்.

(இ-ள்.) தலைவனது நாட்டிற்பெண்க ளணியு மணியையு மியலையும் பாங்கி வினவுதல்.

ஆடும் பொழிலு மணியுந் தொடையு மணிகலனுந்
தேடுஞ் சுனையுந் திகிரு மணமுடிக் கோமெங்குந்
கூடும் பெருந்திறல் வெண்ஷம்கத் தாசின் கிரியினாற்ப
காடும் படியென்னை போலுங்க ளூர்ப்பெண் காரியர்க்கே. (170

தலைவ ளவனாட் டணியியல் வினாதல்.

(இ-ள்.) பாங்கி குறிப்பறிந்து தலைவன் அவளுடைய நாட்டி லுள்ள வணிகலன் முதலியவற்றை வினவுதல். குறிப்பறிதல் - வேண்டுவன கொடுத்தற்கென்க.

என்னாட் டணியிய லெல்லா மறிந்தனை யென்பயன்செம்
பொன்னாட் டணியியற் பூவைக ளாய்செழும் புத்தமிழ்தின்
சொன்னாட் டணியியல் மாலைஷம்கத் தாசின் பொருப்பமைவாய்
நின்னாட் டணியிய லீயே சொலப்பய னிச்சயமே. (171)

தன்னாட் டணியியல் பாங்கி சாற்றல்.

(இ-ள்.) வெளி.

கழையார் தரளஞ்செங் காந்தளாப் போது கனைக்கரந்தத்
தழையா ரணிகலந் தந்தன்ன வேலெழுந் தண்பொழில்வாய்
மழையார் திருக்கர மாலைஷம்கத் தாசின் மலையகத்தெம்
மிழையார் சுனைபடிந் தாடுவ ரெல்லியெவ் யாமத்துமே. (172)

இறைவிக் கிறையோன் குறையறி வுறுத்தல்.

(இ-ள்.) பாங்கி தலைவனை யோரிடத்து நிறுத்திவிட்டுத் தலைவியிடத்திற் சென்று தலைவன் குறையை யறிவித்தல்.

கொல்லும் புலியுங் கொடுவரி வேங்கையுங் கூர்ந்தெழுந்து
செல்லும் பெருவனத் தோர்தனி யாய்க்கன்றுஞ் செவ்விதிற்போர்
வெல்லும் பரிமத வேள்ஷம்சுத் தாசின் வியன்கிரிக்குள்
வல்லும் பொருதனத் தீர்வரு வார்கொல் வழுத்துவதே (173)

நோனா திறைவி நெஞ்சொடு கிளத்தல்.

(இ-ள்.) இவ்வாறு கூறக்கேட்ட தலைவி பொறையாது தன்னெஞ் சுடன் சொல்லுதல்.

இருளும் புயலு மிபமு மரியு மெதிர்க்குதம்மில்
வெருளுஞ் சுழுநெறிக் கானடைக் கெம்பிறை மேவருமோ
அருளும் பொருளுமுள் ளோன்ஷம்சுத் தாசி னருங்கிரிவாய்
மருளும் படிமன மேவசெத் தாளொரு வன்கணனோ. (174)

நேரிழை பாங்கியோடு நேர்ந்துரைத்தல்.

(இ-ள்.) நெஞ்சொடு கூறிய தலைவி தோழியோ டுடன்பட்டுக் கூறுதல்.

உடலோ டுயிர்பொரு ளெல்லா மவரென் றுணர்ந்தவென்பாற்
கடலோ பொருவாய்க் கருமேனிக்கண் ணுளர் கனிந்தெழிற்றெவ்
வடலோ டமரறப் போன்ஷம்சுத் தாசி னருட்கிரிவாய்
மடலோ டொளிரு மலர்முகத் தீரென் வழுத்துவதே. (175)

நேர்ந்தமை பாங்கி நெடுந்தகைக் குணர்த்தல்.

(இ-ள்.) தலைவி யுடன்பட்டமையைத் தலைவனுக்குத் தோழி கூறுதல்.

போற்றியுந் தாழ்ந்தும் புகழ்ந்தும் பலபல புத்துரைகள்
சாற்றியு மன்னவ ணெஞ்சங் கனியத் தரணிமுற்றும்
நீற்றிய வெண்புகழ்ச் சேய்ஷம்சுத் தாசின் செழுஞ்சிலம்பிற்
றேற்றிய வாறா சேபென்னென் கோவளர் தோர்க்குணக்கே. (176)

குறியிடை நிறீஇத் தாய்துயி லறிதல்.

(இ-ள்.) பாங்கி தலைவனைக் குறியிடத்து நிறுத்தித் தாயினது நித்திரையை யறிதல்.

மணந்தந்த சந்தனம் புன்னை யசோகமன் மாதவிவங்
கணந்தந்த மல்லிகை முல்லையெ லாமொரு கைக்கனிதற்
றுணைந்தந்த மெய்ந்நல வேள்ஷம்சுத் தாசி னிருந்தடத்தம்
பணைந்தந்த வல்குலம் பாவாய் நிரையறப் பாய்கின்றதே. (177)

இறைவிக் கிறைவன் வரவறி வுறுத்தல்.

(இ-ள்.) தலைவிக்குத் தோழி தலைவன் குறியிடத்து வருதலை யறிவித்தல்.

பூவார் மலருந் தழைபுனை சேர்ந்தனம் போந்தவரின்
றேவார் விழிப்பணை றேகை காடியெ மார்த்தறிநர்
காவார் கரும்புகழ் மான்ஷம்சத் தாசி யளினவெற்பிற்
சேவா ரணிபொளி பேவழி யாமின கொண்டனரே. (178)

தலைமகளைக் குறியிடத்துக் கொண்டு சேறல்.

(இ-ள்.) தலைமகன் வந்து சேருங் குறியிடத்தற்குத் தலைவியைப் பாங்கி யழைத்துக் கொண்டு செல்லுதல்.

கஞ்சே புரிந்தபடை நல்லிசைக் காவெரு கண்ணிநுள் வாய்த்
தஞ்சேவை காணக் களிக்கிருந் தாயர் தன்னவர்கா
வஞ்சே யருட்காரத் தான்ஷம்சத் தாசி யடிக்கணினைக்
கெஞ்சே வழிதரப் போதுகம் வாயங்கை சேர்கிறபே (179)

குறியுய்த்தகறல்.

(இ-ள்.) பாங்கி தலைவியைக் குறித்த காவிடத்திலே சேர்த்து நீங்குதல்.

தண்டா மரைமுலை சேலஞ்செங் கோங்கலி தன்னினைகண்
டண்டா வெளியும்மென் ஞாணங் கேயுட காண்மைமுற்றுங்
கண்டார் புகழ்பெரு மான்ஷம்சத் தாசின் கனகவெற்பிற்
றெண்டா யெடுத்தமைப் பேன்வரு வேனில்லை சூழ்பொழிற்கே.

வண்டுறை தாரோன் வந்தெதிர்ப் படுதல்.

(இ-ள்.) தலைவன் தலைவியை நேரே வந்து காணுதல்.

நூலேணி யில்லிலை மானமு மில்லை நாயுணும் விஞ்சை
யாலேது மில்லையென் ஞானங் கேகியன்னிட் டார்கண்மேற்
கோலேற வாளுயிக் கோன்ஷம்சத் தாசின் கொழுந்தடத்துங்
காலேணி யால்வந்த வாறெந்த வாறிந்தக் கன்றுமிலே. (181)

பெருமகனாற்றின தருமை நினைந் திரங்கல்.

(இ-ள்.) தலைவி தலைவன் வரும் வழியின தருமை நினைந்து வருந்துதல்.

சுழிக்கு நதிக்குந் துளியா றருவிக்குஞ் சூழ்ந்தகராக்
குழிக்குந் துணிந்தில் வொருதனி யாண்மயல் கொண்டலை
மொழிக்குங் குணப்பெரு மான்ஷம்சத் தாசி தொனிர்வரைமுன்
வழிக்குஞ் சினவாது வந்தமைதல் வாறென் மழைவள்ளலே (182)

புரவலன் தேற்றல்.

(இ-ள்.) அன்னம் வருந்திய தலைவியைத் தலைவன் றெளிவித்தல்.

சீர்கண்ட வள்ளல்பி ரான்ஷம்சத் தாசின் சிலம்பகத்துன்
கார்கண்டு கஞ்சு விருட்பிடை மின்றெளி கண்டனிகள்

டேர்கண்ட மென்முலை பல்குற் றடங்கொளு மென்னிலையின்றக்
கேர்கண்ட போதஞ்ச நாகங்க ளென்செயு மேரிழையே. (183)

புணர்தல்.

(இ-ள்.) வெளி.

எடுக்க வெடுக்கக் குறையா வமுத விருகலங்கொண்
டடுக்கப் படைத்தது வோவின்ன றுயுன்ற னிகமென்றன்
கொடுக்கப் பிறந்தபு மான்ஷம்சுத் தாசின் கொழுங்கிரிவாய்
மடுக்க மடுக்கவுண் மாறுர் சுகந்தந்து வாழ்வித்ததே. (184)

புகழ்தல்.

(இ-ள்.) வெளி.

எமையா தரிக்குமிக் கோன்ஷம்சுத் தாசீ னிருஞ்சிலம்புஞ்
சமையாத பொம்மற் றருதனத் தீருந்தஞ் சாயலெல்லா
மிமையாது நோக்கி யிகவிலை யின்றி யிருப்புமிங்கு
னமையாது விண்ணோர் தலைந்தனர் காணவ் வரம்பையரே. (185)

இறைமக னிறைவனைக் குறிவால் விலக்கல்.

(இ-ள்.) யானையைச் செங்கோதை மிராக்காலத்திலே வரிற் றன்பயமுண்டாமென்று பயந்து தலைவி தலைவன்வருதலை விலக்கல்.

ஒருகைக் களிறு மராவு மரியு முழுதக்கெழுந்து
பொருகைக் குரியவிப் பொங்கிருட் சாலிற் போக்கெவர்க்குந்
தருகைக் குயர்ந்தகக் கோன்ஷம்சுத் தாசின் றமிழ்ச்சிலம்பில்
வருகைக் கெளிதல வந்தால் வருந்துவர் மன்னவனே. (186)

இறைவியை யில்லயின் விடுத்தல்.

(இ-ள்.) தலைவன் தலைவியை வீட்டி னிடத்துச் செல்லென விடுத்தல்.

கோனுது காக்குகற் கோன்ஷம்சுத் தாசின் கொழுங்கிரிவாய்ப்
பூணுது நூபுரச் சிற்றெலி வாணகைப் போதனைத்தும்
பேணுது செஞ்சிலம் பேற்று தடிபுனைப் பெற்றவன்னை
காணுது போர்தருங் கன்னிகல் லாயுன் கடிமனைக்கே. (187)

இறைவியை யெய்திப் பாங்கி கையுறை காட்டல்.

(இ-ள்.) குறியிடத்து நீங்கிய பாங்கி தலைவியை யடைந்து கையுறை காட்டுதல்.

தண்ணுர் சுறவத் தனவமெல் லாமுன் றனிநகைகண்
டண்ணுர் துடைந்து மலர்வாய் விடுத்து மனுதினமு
மண்ணுன் பெரும்புய மால்ஷம்சுத் தாசின் மலயவெற்பி
லெண்ணு தெடுத்தவர் தேனனி வாவென்று நேர்திழையே. (188)

ஒந்கொண்டேகல்.

(இ-ள்.) தலைவியைப் பாங்கி வீட்டிற்குக் கூட்டிக் கொண்டு செல்லுதல்.

ஒல்காப் புகழ்ப்பெரு மான்வாணந் தஞ்சை யுயர்சிலம்பிற்
பல்கா ரமுதன்ன பாப்புமி ழித்தன பார்க்கினம்மை
யில்கா ரணமினிக் தென்னினி யாள்சரி யின்றினிநீ
செல்கா லெனைகடை வாவடை வாமத் திருமனைக்கே. (189)

பின்சென் றிறைவனை வரவு விலக்கல்.

(இ-ள்.) தோழி தலைவியை மனையிற் சேர்த்த பின்பு தலைவன் பாற்சென்று இவ்விருளில் நீ வாரதே யென்று விலக்கிக் கூறுதல்.

கன்மேற் பொருபுயத் தோன்வாணந் தஞ்சையின் கனகதடத்
தின்மேற் பொருமுலைக் கின்பவன் பாயிவ் விரவிலொருத்
தன்மேற் பொருபுலி வாழ்கிற சாரலிற் சாரலினி
யென்மேற் பொருபழி யின்றுவந் தாற்பழி யென்றைக்குமே. ()

பெருமகன் மயங்கல்.

(இ-ள்.) பாங்கி யிவ்வாறு இரவுக்குறி விலக்கிய சொற்கேட்டு தலைவன் மனங் கலங்கிக் கூறுதல்.

செல்லே பொறுக்கும் வரவே விரும்புஞ் செகதலமங்
கலவே மறக்கொரு கட்டுரை தாங்கியிக் கானிலத்தோர்
குலவே னெனவரு கோன்வாணந் தஞ்சையின் கொழுங்கிரிவா
ழிலவே நிகர்த்தாய் மடந்தா யிதுகொல் லியல்புனக்கே. (191)

தோழி தலைமக னேக விசைந்து விடுதல்.

(இ-ள்.) பாங்கி தலைவனுக்குத் தலைவிக்கு நேருந் துயரைக் கூறி நீ வரைபோய்ச் சேர்ந்த செய்தி யா மறியும்படி அடையாளங் காட்டென்று கூறி விடுத்தல்.

வெறியார் மலர்த்தொடை வேள்வாணந் தஞ்சையின் வியன்கிரிவாய்ப்
பொறியா ரரவப் பொதும்பிருட் சாரலிற் போதுமுன்னூர்
நெறியா லலமரு சேரிழைக் கன்ன னிலக்கினுன்றன்
குறியா லுயிரளித் தாளுதி போதியென் கொற்றவனே. (192)

திருமகட் புணர்ந்தவன் சேறல்.

(இ-ள்.) தலைவியைக் கலந்த தலைவன் றன்னூர்க்குப் போதல்.

தொடிக்கடி செய்கரத் தோகை மருங்கெழிற் சூழ்ந்தரசர்
முடிக்கடி தந்தபெம் மான்வாணந் தஞ்சையின் முதிர்கிரிவா
படிக்கடி நோக்குந் தலமரு மின்னினல் லாய்க்குநெறி
கொடிக்கடி மாற்றி யடைகுவ லென்பதி நன்னிடையே (193)

இவற்றுள்-இறையோ னிருட்குறி வேண்டலும் நெறியினதேளிமை கூறலும் தலைமகனவனாட் டணியியல்வினாதலும் பாங்கி இறைவிக்கு இறையோன் குறையறிவுறுத்தலுமாகிய நான்கும் வேண்டற்கும், பாங்கி நெறியினதருமைகூறலும் இறைமகன் இறைவனைக்குறிவரல் விலக்கலும் பாங்கி இறைவனை வரவு விலக்கலுமாகிய மூன்றும் மறுத்தற்கும், பாங்கி யவனாட் டணியியல் வினாதலும் அவற்குத் தன்னாட் டணியியல் பாங்கி சாற்றலும் நேரிழை பாங்கியொடு நேர்ந்துரைத்தலுமாகிய மூன்றும் உடன்படற்கும், தலைமகன் சேர்ந்தமை பாங்கி தலைவற்குணர்த்தலும் குறியிடைச் சேறித்தாய் துயிலறிதலும் இறைவிக்கு இறைவன் வரவறிவுறுத்தலும் அவட்கொண்டு சேறலுமாகிய நான்கும் கூட்டற்கும், தலைமகன் தலைமகளை யெதிர்ப்படுதலும் தேற்றலும் புணர்தலுமாகிய மூன்றும் கூடற்கும், தலைமகன் புகழ்தலும் கையுறைகாட்டலுமாகிய இரண்டும்பாராட்டற்கும், தலைமகன் தலைவியை யில்வயின் விடுத்தலும் பாங்கி தலைமகளை இற்கொண்டேகலுமாகிய இரண்டும்பாங்கிற்கூட்டற்கும், நேரிறைவி நெஞ்சொடு நினைத்தலும் தலைமகன் ஆற்றினதருமை நினைத்திரங்கலும் பெருமகன் மயங்கலும் தோழி தலைமகன் துயர் கண்டுவிடுதலுமாகிய நான்கும் முயங்கற்கும், பாங்கி குறிபுய்த்தகறலும் இருமகட் புணர்ந்தவன் சேறலுமாகிய இரண்டும் நீக்கற்குமுரியன. முயங்கல்-வருந்துதல்.

இதுவரையும் எட்டாரான் கிழச்சி.

இரவுக்குறி-முற்றிற்று.

---

## இரவுக்குறி யிடையீடு.

அஃதாவது - இரவுக்குறிக்கண்வந்த தலைமகன் அல்ல குறிப் பறிதலால், இடையீடுபட்டுப்போதல்; அஃது - அல்லகுறியெனவும் வருந்தொழிற் கருமையெனவு மிரண்டுவகைப்படும்; அவை வருமாறு. இடையீடுபடுதல் - குறி தவறுதல்.

இறைவிக் கிதனை யிறைவா வுணர்த்தல்.

(இ-ள்.) மறுநா ளிரவில் தலைவன் வருதலைத் தலைவிக்குப் பாங்கி கூறுதல்.

பொன்னுக மேனிப் புணர்முலை யாயென்கொல் பூவரசர்
மன்னுக வந்தவெம் மான்ஷம்சுத் தாசின் மருவலர்போற்
புன்னுக சேக்கைப் புறம்விடுக் கிவ்விருட் போதிலன்னர்
தன்னுகஞ் சோரச் சலியா தெழுந்து தழுங்கின்றதே. (194)

தான் குறி மருண்டமை தலைவி யவட் குணர்த்தல்.

(இ-ள்.) தலைவி தான் அல்ல குறியிடத்துத் தலைவனைக் காணாமையால் மீண்டு விடியற்காலத்துவந்து பாங்கியுடன் கூறுதல். அல்லகுறியிடம் - குறிதவறிய விடம்.

உன்னற் கெளிதலவே யிருங் குறையுமென் னுடைமை
வன்னற் குறியென மாறித் தொருத்தி மங்கையுடனுஞ்
சொன்னற் குறுபுகழ்க் கோன்ஷம்சுத் தாசின் கொழுங்கிரிவாய்க்
கன்னற் பொழிலிடை நான்பட்ட துன்பமென் னங்கையரே. (195)

பாங்கி தலைவன் றீங்கேற் றியம்பல்.

(இ-ள்.) தோழி தலைவன் பொல்லாங்கை யெடுத்துக் கூறுதல்.

ஆயர் தவரை யெடுத்தன நாமலை யம்பொழிற்றிங்
கோயா துறைவத் தோன்ஷம்சுத் தாசி னொளிர்வரையிற்
பாயா வருமிருட் பாநு விரவிடைப் பற்றலர்போன்
மாயா தியற்றி மறைத்தன னிந்த வழிக்குறியே. (196)

தலைவன் புலர்ந்து போதல்.

(இ-ள்.) தலைவன் தான் குறிக்கப்பட்ட இடத்தி லிருக்க, தலைவி அல்லகுறி படைத்து வாராமையால் வருந்தித் தன்னூர்க்குப் போதல்.

போர்தந்த வாட்கைப்பு மான்ஷம்சுத் தாசின் பொருந்தலர்போன்
மார்தந்த கொங்கை மகிழ்நலம் வேட்டு வரவழைத்திக்
கார்தந்த கங்குற் கணியிருட் சாரலிற் கைவிட்டுவெஞ்
சூர்தந்த கஞ்சே புனக்கே னொருகொம்பு சூடுதற்கே. (197)

இதுவரையும் ஒன்பதாநாள் நிகழ்ச்சி.

புலர்ந்தபின் வறுங்களந் தலைவிகண் டிரங்கல்.

(இ-ள்.) ஒன்பதாநாள் இருள் புலர்ந்த பின் தலைவி வெற்றிடத் தைக்கண்டு வருந்துதல். இருள்புலர்தல்-விடிதல்.

கார்செய்த வண்மைப்பு மான்ஷம்சுத் தாசின் கனகவெற்பில்
யார்செய்த மாதவ மோமட நாளல தற்பகலு
நீர்செய்த மாதவ மோவென்ற னாயக னீணெறியிலோன்
நேர்செய்த துன்மை யிருஞ்சகம் யாவுமின் றெய்துறவே. (198)

தலைவி தன்றுணைவிக் குணர்த்தல்.

(இ-ள்.) தலைவி தன் றுன்பத்தைத் தன்றோழிக்குச் சொல்லுதல்.

முடியிருந் துண்ப தெனவினைத் தேனவர் மூட்டியவன்
படியிருந் தின்னுங் கரும்பினை யாய தகிலமெல்லாங்
குடியிருந் தார்புகழ்க் கோன்ஷம்சுத் தாசின் கொழுங்கிரிவாய்த்
தொடியிருந் தோங்குகை யாயினிச் சூழ்வதென் றொல்வினைக்கே.

தலைமக ளவலம் பாங்கி தணித்தல்.

(இ-ள்.) தலைவியின் றுன்பத்தைத் தோழி தணித்துக் கூறுதல்.

தேறாத் தெளிவினென் செல்வர்வர் தேறார் திருவருகைக்
கூறா யருளார வோன்ஷம்சுத் தாசி னொளிர்வரையி
னீறாக் கரித்தெனை நித்தலுங் காய்ந்தவிர் நீண்மதிக்கு
மாறாக் களங்க மலிந்து மதியிலை மாதரசே. (210)

கூகை குழறுதல்.

(இ-ள்.) கூகை குழறக் கேட்ட தலைவி யஞ்சிக் கூறல்.

வஞ்சின மோபகை யோமுனி வோவரு மங்குலிற்றுன்
மஞ்சின மோங்குகைம் மால்ஷம்சுத் தாசின் வளநகர்வாய்த்
துஞ்சின தோர்ந்துமென் றானைகைவெங் கூகை தொடர்ந்தரா
ரஞ்சின ராக வரற்றியென் னாவி யழிக்கின்றதே. (211)

கோழி குரற் காட்டுதல்.

(இ-ள்.) இருவர்க்கு மிடையூறாய்க் கோழி கூவுதல்.

ஆவற் கருமருந் தன்னநம் மன்ப ரணைத்தகல
மாவற் புயப்பெரு மான்ஷம்சுத் தாசின் மலையமனாய்
மேவற் கடையெழு யாமத்தி னஞ்சிறை விட்டடித்துச்
சேவற் குரற்செயச் செய்ததென் னோமுனந் தீவினையே. (212)

இவ்வேழும் இரவுக்குறி யிடையீட்டில் வருந்தொழிற் கருமையின் விரி; இவ்வேழில் ஒவ்வொன்றுக்கும் நந்நான்கு நாழிகையாகக் கொள்க.

இரவுக்குறியிடையீடு-முற்றிற்று.

---

## வரைதல் வேட்கை.

அஃதாவது - இடையீடுபட்டதனாற் பதினொராநாள் தலைவி மணஞ் செய்தலை விரும்பல்; அஃது - அச்சம் உவர்த்தல் ஆற்றாமை யென மூன்றுவகைப்படும்; அவை வருமாறு:—

தலைமகளைப் பாங்கி பருவரல் வினவல்.

(இ-ள்.) தலைவி துன்பமுற் றிருத்தலைத் தோழி கேட்டல்.

வாடா மலர்முகம் வாடினை மைக்கண் வடித்தனைபைந்
தோடா ரலரெதுஞ் சூடிலை யாயன்னை சொற்றதுண்டோ
கோடாத கோன்மையங் கோன்ஷம்சுத் தாசின் குளிர்சிலம்பி
னோடாத மானனை யாயுரை யாயென்கொ லுற்றதுவே. (213)

அருமறை செவிலி யறிந்தமை கூறல்.

(இ-ள்.) தலைவி யரிய களவொழுக்கத்தைச் செவிலித்தா யறிந்தமை பாங்கிக்குக் கூறுதல்.

தண்டா வளத்தன தோன்ஷம்சுத் தாசின் றடத்தணங்கே
யொண்டா ரகைமதி போனுநம் மன்னை யுடற்பசப்பும்
வண்டார் புனைகுழற் சோர்வுங்கட் சேப்பு மயக்குமெதிர்
கண்டா ளயர்த்தறிந் தாலொடுத் தாளிரு கட்கணையே. (214)

தலைமகன் வருந்தோழிற் கருமை சாற்றல்.

(இ-ள்.) தலைவி தலைவன் வருதற்கருமை பாங்கிக்குக் கூறல்.

தாயோ துயில்கிலள் ஞாளியு மூரன்ன சாற்றுபறை
வாயோ வடைக்கில கூகையுங் கோழியு மானுமதித்
தீயோ சுடுமிவை யெல்லாந் தொலைத்தன்பர் சேர்வதெவ்வா
றுயோ வெனுங்குணத் தான்ஷம்சுத் தாசி னருட்கிரிக்கே. (215)

தலைமகனூருக்குச் செலவோருப்படல்.

(இ-ள்.) தலைவ னிருப்பிடத்துக்குப்போதற்குத் தலைவி துணிந்து பாங்கிக்குக் கூறுதல்.

கூரா ரயில்விழிக் கோமள மேநந்தங் கொற்றவரூர்
சேரா யடைந்தவர் நேர்மையெ லாங்கண்டு நீக்கமுறின்
றோரார் குலவரிச் சேய்ஷம்சுத் தாசின் செழுஞ்சிலம்பி
லோரா துடல்பொரு ளாவியெ லாமவர்க் கொப்பிப்பமே (216)

பாங்கி யிறைவனைப் பழித்துரைத்தல்.

(இ-ள்.) தோழி தலைவனை நிந்தித்துக் கூறுதல்.

மறங்கா லயில்விழி மங்கைநல் லாயவர் வார்த்தையன்பிற்
புறங்கா தனுமுள தன்றகன் றூரவண் போந்துமென்றோ
வறங்கா தலித்தபு மான்ஷம்சுத் தாசி னருஞ்சிலம்பி
லிறங்காத் துறையி லிறங்கிய தானமக் கிவ்வினையே. (217)

இறைவி யிறையோன்றன்னை நேர்ந்தியற்பட மொழிதல்.

(இ-ள்.) பாங்கி தலைவனியலைப் பழித்தது பொருளாய்த் தலைவி தலைவனோ டென்பட்டவளா யவனியலைக்கூறுதல்.

அல்லும் பகலு மடுத்தடுத் தாகு மனைமிலஞர்
புல்லுஞ் சுகமும் புறத்துள தாலெனிற் போற்றலர்போர்
வெல்லும் பெருந்திறல் வேள்ஷம்சுத் தாசின் வியன்சிலம்பிற்
சொல்லுங் குறையெவை யோவன்பர் பாலினித் தோகையரே. ()

இதுவரையும் பதினொராகள் நிகழ்ச்சி.

கனவு நலி புரைத்தல்.

(இ-ள்.) தலைவன் கனவிற் கூடினனாக, விழித்தபின்பு பொய்யாய்ப்போன துன்பத்தைப் பன்னிரண்டாகாள் தலைவி பாங்கியினிடத்திற் கூறுதல்.

கூரா தொருதுயில் கொள்ளவு மன்பர் குறுகியென்னை
வாராப் முலைதிற வாய்மெகி பூாப்கலை வாயமுதர்
தாரா யெனுமுனல் லோன்ஷம்சுத் தாசின் றமிழ்ச்சிலம்பிற்
காரார் குழல்ணங் கேவிழித் தேனவர்க் காண்கிலனே. (219)

கவினழி புரைத்தல்.

(இ-ள்.)* விரைத்தாற் றலைவிதன் னலனழிந்ததைப் பாங்கி
யுடன் கூறுதல்.

காட்டுக் கெறித்தகி லாவென வென்னிரு கைக்கயச்செங்
கோட்டுத் தனகல மன்பர்கைப் பேழையிற் கூடலின்றிப்
பாட்டுக் கினியபெம் மான்ஷம்சுத் தாசின் பனிவரைவாய்ச்
சோட்டுக் கருங்கொடி சூழ்நத லாய்கிதஞ் சோர்கின்றதே. (220)

தன்றுயர் தலைவற் குணர்த்தல் வேண்டல்.

(இ-ள்.) தலைவி தன் றுன்பத்தைத் தலைவனுக்கு அறிவிக்கவேண்
டுமென்று பாங்கியுடன் கூறுதல்.

பிடியோ டனநடைப் பெண்ணணங் கேமயல் பெற்றதல்லா
லடியோ டுவரை யடைந்தன மன்பர்க் கரசர்மணி
முடியோ டிறைஞ்சிசை வேள்ஷம்சுத் தாசின் முதிர்கிரிவாய்த்
தொடியோ டறுவை தொலைந்தன வென்னமுன் சொல்லுதற்கே.()

துன்புறுற் பாங்கி சொல்லெனச் சொல்லல்.

(இ-ள்.) யான் துயரடைதலைத் தலைவற்கு நீ சென்று சொல்
லென்று தலைவி கூறியதற்குத் தலைவியை நோக்கிப் பாங்கிகூறுதல்.

பிணைதந்த வன்பிரு பேர்க்கிடை மற்றையர் பேசலென்றே
கணைதந்த வேல்விழிக் கன்னிநல் லாய்புவிக் காவலர்கட்
கணைதந்த செம்பதத் தான்ஷம்சுத் தாசி னருங்கிரிமே
லிணைதந்த தின்மய னீயே சொலச்சுக மெய்துறுமே. (222)

அலர் பார்த்துற்ற வச்சக்கிளவி.

(இ-ள்.) ஊரி லுள்ளார் சொல்லும் பழிச்சொல்லைக் கருதி
அதனை யுற்ற பயத்தாற் றலைவி கூறுஞ்சொல்.

மலர்க்குன் னொளிரு மதிமுகத் தீரைம் மலர்க்கணைவில்
வலர்க்குள் ளுடைந்து மறுகேன் மறுகன் மண்டலிகர்
பலர்க்குள் ளுயர்ந்தபு மான்ஷம்சுத் தாசின் பவ்வவல்லி
யலர்க்குள் ளவரை வளர்ந்த திந்த வரும்பதியே. (223)

ஆறு பார்த்துற்ற வச்சக்கிளவி.

(இ-ள்.) வழியைப்பார்த்து அச்சமடைந்த பயத்தாற் றலைவி
பாங்கியை நோக்கிக் கூறுஞ்சொல். பார்த்தல்-கருதல்.

பேரா ரமுதப் பிழம்பே யெளியேன் பெறற்குறுமோ
காரார் கயற்றுவைத் தன்பர்செந் நீர்படி கான்மலர்பூந்
தாரார் துணைப்புயத் தான்ஷம்சுத் தாசின் றடத்திலென்கண்
ணீரார் கழுவியைம் பாலாற் றுடைக்குமந் நீர்மையின்றே. (224)

காம மிக்க கழிபடர் கிளவி.

(இ-ள்.) தலைவி ஆசைமிகுந்து சிறப்பச் சிந்தித்துச் சொல்லுஞ் சொல்; இக்கிளவிக்குக் கடல், கானல், விலங்கு, புள் முதலியவற்றை விளித்துத் தலைவி யிரங்கிக் கூறுதன் மரபு.

எறியு மலைகட லேசுற வேகுரு கேயினமுஞ்
செறியும் பெருந்தவத் தோன்ஷம்சுத் தாசின் செழுஞ்சிலம்பிற்
பறியுந் தொடியும் படருந் துணியும் பசப்புமையல்
வெறியுஞ் சிறையும் வினைவு முணர்ந்திலர் மெய்யன்பரே. (225)

தன்னுட் கையாறெய்திடு கிளவி.

(இ-ள்.) தலைவி தன்னிடத்துத் துன்பத்தைப் பிறிதொன்றன் மேலிட்டுச் சொல்லுதல்.

மஞ்சங் கடுத்தனை மையற் பெருத்தனை மாமுலையும்
விஞ்சப் பொலிந்தனை மெய்யும் வெளுத்தனை வேற்றரசர்
துஞ்சப் பொருபடை வேள்ஷம்சுத் தாசின் சுடர்க்கிரிகண்
டஞ்சும் பிறையே யகன்றதுண் டோநிற்கு மன்பிலறையே. (226)

நெறி விலக்குவித்தல்.

(இ-ள்.) தலைவி தலைவன் வரும்வழியை விலக்கெனப் பாங்கியொடு கூறுதல்.

பேரா தரப்பெரு மான்ஷம்சுத் தாசின் பிறங்கலென
வேரா ரிளமுலை யேகுறள் பேயோ டிருசுடருந்
தேரா தயிர்க்குஞ் சிறுநெறிச் சாரற் செறியிருளில்
வாரா திருக்க வழுத்துதி யன்பர்க்கென் வந்தனமே. (227)

குறி விலக்குவித்தல்.

(இ-ள்.) தலைவி தலைவன்வரு மிரவுக்குறியை விலக்கெனப் பாங்கியொடு கூறுதல்.

வெறிக்குங் கருங்குழ லாய்புனங் காவ னிகழ்த்தினளெல்
லெறிக்கும் பகலவ னெய்வதல் லாலன்பர்க் கேதிலரைத்
தறிக்குங் கடுந்தலை வேள்ஷம்சுத் தாசின் றடத்தகத்தற்
குறிக்குங் குறிக்குட் குறுகலென் றோதலர்க் கோதையின்னே. ()

வெறி விலக்குவித்தல்.

(இ-ள்.) தாய்தந்தையர் வெறியாடலை விலக்கும்படி பாங்கிக்குத் தலைவி கூறுதல். வெறியாடல் - ஆடறுத்துப் பலியிடல்.

செய்கொண்ட பூம்பதத் தோன்ஷம்சுத் தாசீன் சிலம்பிலெம்மைப்
பேய்கொண்ட தென்ன வறிவழிக் தன்பருட் பெய்புனைய
னேய்கொண்ட தோர்கில னாய்வெறி யாட னுடங்குமிடைத்
தாய்கொண்ட வாவணங் கேநவிர்ப் பாய்வருந் தண்புகழே. (229)

பிற விலக்குவித்தல்.

(இ-ள்.) தலைவி பிறர வரவைத் தலைவற்குச் சொல்லி அவர் வரவைவிலக்கெனப் பாங்கிக்குக் கூறுதல்.

சரச குணசுக மால்ஷம்சுத் தாசீன் றனிச்சிலம்பி
லரச மதகரி யட்டவர்க் கன்றி யணிமறுகின்
முரச மதிர்தொனி யார்மணத் தென்ன முடுகிமலர்ப்
பிரச நறுங்குழ லாய்விலக் காயவர்ப் பிற்படவே. (330)

குரவரை வரைவெதிர் கொள்ளுவித்தல்.

(இ-ள்.) நந்தலைவர் விட்ட பெரியோர் மணம்பேசிவர அவரை நம்மவ ரெதிர்கொண் டழைக்குமாறு செய்யெனத் தலைவி பாங்கி யொடு கூறுதல்.

வான்கொண்ட மெய்ப்புகழ் மால்ஷம்சுத் தாசீன் மலயவெற்பி
னுன்கொண்ட கற்பழி யாதன்னை யாதியர் நாடுமன்பர்
தான்கொண்ட மன்றலந் தூதெதிர் கொள்ளத் தழைத்தசுனைத்
தேன்கொண்ட காவியஞ் சேல்விழி யாய்சொல் செழுங்கிளைக்கே.

இவற்றுள் - அருமறை செவிவயறிந்தமை கூறலுந் தலைமகன் வருந்தொழிற் கருமை சாற்றலும் அலர்பார்த்துற்ற அச்சக்கிளவியும் ஆறு பார்த்துற்ற அச்சக்கிளவியும் நெறி விலக்குவித்தலும் குறி விலக்குவித்தலும் வெறி விலக்குவித்தலும் பிற விலக்குவித்தலும் குரவரை வரைவெதிர் கொள்ளுவித்தலுமாகிய ஒன்பதும் அச்சத்திற்கும், தலைமகனூர்க்குச் செல வொருப்படுதலும் பாங்கியிறைவனைப் பழித்தலும் தலைவி யிறையோன்றனை நேர்ந்தியற்பட மொழிதலுமாகிய மூன்றும் உவர்த்தற்கும், பாங்கி பருவரல் வினவலும் கனவு நலிபுரைத்தலும் கவினழி புரைத்தலும் தன்றுயர் தலைவற் குணர்த்தல் வேண்டலும் துன்புறல் பாங்கி சொல்லெனச் சொல்லலும் காமமிக்க கழிபடர் கிளவியும் தன்னுட்கையா றெய்திடுகிளவியுமாகிய ஏழும் ஆற்றாமைக்குமுரியன. பருவரல் வினவிய பாங்கியென்பதற்குவினவலு மொரு துறையாக்கலாற் சூத்திரத்திற் கூறிய பதினெட்டெக்குமேற் பத்தொன்பதாயிற்று.

இதுவரையும் பன்னிரண்டாநாள் நிகழ்ச்சி.

வரைதல் வேட்கை-முற்றிற்று.

## வரைவு கடாதல்

அஃதாவது - பாங்கி தலைவனுடன் வரைவுகடாதல். வரைவு கடாதல் - மணம் வினவுதல் ; அது - பொய்த்தல் மறுத்தல் கழறல் மெய்த்தலென நான்கு வகைப்படும் ; அவை வருமாறு :—

### வினவிய செவிலிக்கு மறைத்தமை விளம்பல்.

(இ-ள்.) முன் வரைதல் வேட்கையில் தலைவி அருமறை செவிலியறிந்தமை கூறியவதனைத் தோழி தன்னைச் செவிலி வினவியதாகவும் அதற்குத் தான் மறைத்துக் கூறியதாகவுந் தலைவற்குக் கூறுதல் ; இக்கிளவிமுதல், பின்வருங் கவினழிபுரைத்த லீறாகக் கூறிய கிளவிகள் பலவற்றுள்ளும் குறிப்பினானும் வெளிப்படையானும் வரைவுகடாவிய வாறு கண்டுகொள்க.

கிளையோ டுலகளிப் போன்ஷம்சுத் தாசின் கிளர்சிலம்ப
முளையோ டிகல்புயத் தன்னையு மென்னை முடுகியிவள்
வளையோ டறுவை வழங்கிய தேதென மங்குலெல்லாங்
களையோ டிசைவகை கற்றன ளென்னக் கரந்தனனே. (232)

### அலரறிவுறுத்தல்.

(இ-ள்.) ஊரில் தலைவியைத் தூற்றும் அலர்விரித்ததென்று தலைவனுக்குப் பாங்கி யறிவுறுத்தல். அலர் - பழிமொழி. அறிவுறுத்தல் - அறியும்படி கூறுதல்.

ஆர்வா யடைப்பினு மூர்வா யடைப்ப தரிதெனநன்
கோர்வா யிறைவா யுனதிரு கையல ருற்றவிந்தப்
பார்வா யலரெனப் பைங்கொடி சோரப் படர்ந்தமுடிச்
சார்வா யலர்ந்ததெம் மான்ஷம்சுத் தாசின் றடத்தகத்தே. (233)

### தாயறிவுறுத்தல்.

(இ-ள்.) தலைவியின் களவைத் தாயறிந்தாளென்று தலைவனுக்குத் தோழி யறிவுறுத்தல்.

காமா கலஞ்சுடக் காய்த்தொளி மாழ்கிக் கரிந்தழலைக்
காமா வலிபசப் பாதிகண் டேங்கி யகிலமெல்லாந்
தாமா வருபெரு மான்ஷம்சுத் தாசின் றடஞ்சிலம்போ
யேமாந் தனையிவை யென்கொலென் றுளன்னை யென்னையுமே. ()

### வெறியச்சுறுத்தல்.

(இ-ள்.) அன்னை வெறியாடல் செய்ய நினைத்தாளென்று தலைவனுக்குப் பயமுறுத்திப் பாங்கி கூறுதல்.

அடலுற்ற வண்ணல்பி ரான்ஷம்சுத் தாசி னருஞ்சிலம்பின்
மிடலுற்ற வேலன்ப நீயவி யாமயல் வெவ்வழன்மூண்

டேனுற்ற தோர்மல ளாயுலை வாயயர்க் துள்ளுடைந்து
கடனுற்ற கன்னியென் றுய்வெறி யாடற் கருதினளே. (235)

பிறர்வரை வுணர்த்தல்.

(இ-ள்.) பிறர் மணங்குறித்து வந்ததைத் தலைவற்குப் பாங்கி கூறுதல்.

சங்கைக் குரியபு மான்ஷம்சுத் தாசீன் றடத்துறுவேற்
செங்கைக் கொளிரா சேமுகத் திங்களுஞ் சேல்விழியுங்
கொங்கைக் குடமுங் குறுநகை யுங்குழற் கொண்டலுங்கண்
டெங்கைக் குருகா தவரெவ ரேயில் விருநிலத்தே. (236)

வரைவேதிருணர்த்தல்.

(இ-ள்.) பாங்கி தலைவனை நோக்கி நீ மணங்குறித்துத் தூதனுப்பினுல் தலைவி சுற்றத்தா ரெதிர்கொண்டு வருவரெனக் கூறுதல்.

பொய்க்கலை யாப்பொரு ளோன்ஷம்சுத் தாசீன் பொதியவெற்பின்
மெய்க்கலை கண்டவர் மேவினன் பாவவர் மேயவரு
கைக்கலை யாதெதிர் வாரெமர் வெண்ணெய் காத்திருந்தி
[illegible]க்கலை வாரென நீயலை யேலல்லி னீள்குறியே. (237)

வரையுநாளுணர்த்தல்.

(இ-ள்.) தலைவனுக்குப் பாங்கி மணஞ்செய்புநாளை யறிவித்தல்.

[illegible] னிகத்திரு மால்ஷம்சுத் தாசீன் மலையவெற்பிற்
[illegible]ருங் கலைமதி வட்டமுங் கண்டதன்றி
[illegible]பெரு மாவலர் வாயமு தாயிழையை
[illegible] மணம்பெறக் காலமு நேரமு நாளுமின்றே. (238)

அறிவறிவுறுத்தல்.

(இ-ள்.) பாங்கி தலைமக ளறிவைத் தலைவனுக் கறியக் கூறுதல்.

[illegible]ளுதனெம் மான்ஷம்சுத் தாசீன் புனிதவெற்பி
[illegible]க ளுமக ளென்னநன் னீதி நயந்தெவர்க்குங்
கோமக னின்பழி யன்னையி னென்னையுங் கொண்டொழித்துக்
காமக ளாயின ளன்பமற் றேது கழறுவதே. (239)

குறிபெயர்த்திதல்.

(இ-ள்.) பாங்கி யிக்குறி யியல்பல்ல, வேறோர் குறியிடை வருக வென்று தலைவனுக்குக் கூறுதல்.

மாணுப் பொலிபுய மான்ஷம்சுத் தாசீன் மணிவரைவாய்ப்
பேணுப் பெருந்தவத் தன்னனின் சார்வைப் பெரிதுமுன்னி
வீணுய்க் கலங்குமென் மெல்லிகல் லாளன்னை மேனி
காணுக் குறிபெயர்த் தாகெ நீயுமுன் கன்னியுமே. (240)

### தலைவ னீங்கல் வேண்டல்.

(இ-ள்.) தலைவன் பாங்கியை யுடன்படுத்தி நீங்கற்பொருட்டு வேண்டிக் கூறுதல்.

ஏகமென் றோரெம் மிருவோ ருயிர்க்கு மிசைந்தபெருஞ்
சோகமென் னேனுமென் னென்வரு வேனுடன் றன்னலர்தம்
மாகமென் பேய்க்கனிப் போஷம்சுத் தாசி னருஞ்சிலம்பிற்
போகமென் றோணங் கேவிடை வேண்டும் புகன்றருளே. (254)

### தலைவனைப் பாங்கி விடுத்தல்.

(இ-ள்.) பாங்கி தலைவனை யூர்க்குப் போய்வருகென விடுத்தல்.

வள்ளத் திருவாய் மலரமு தெம்மனை வாழினுமுன்
னுள்ளத் திருத்தி யுடன்வரல் வேண்டுமின் கொன்னலர்தோள்
விள்ளத் துணித்தவெம் மான்ஷம்சுத் தாசின் வியன்சிலம்பி
லள்ளத் தருமரு ளோயயர்ந் தாலுண் டரும்பழியே. (255)

### பாங்கி தலைவிக்கவன் செலவுணர்த்தல்.

(இ-ள்.) தலைவிக்குப் பாங்கி தலைவன் பிரிவைச் சொல்லுதல்.

தன்னு ருயிரென்கை தந்தகன் றார்சில சாதித்தற்கா
னின்னு ருயிரனை யார்தரி யாரெதிர் நேரலர்முன்
மன்னு யுயருமெம் மான்ஷம்சுத் தாசின் மலையவெற்பிற்
பொன்னு ரணியிழை யாய்புல ராபின்று போதுவரே (256)

### தலைவி நெஞ்சொடு புலத்தல்.

(இ-ள்.) தலைவி மனத்தொடு வருந்திக் கூறுதல்.

மறவா வரமளித் தெற்பிரி யேனெனு மன்னரின்று
துறவா விருந்து துயரளித் தாரிது சூழ்நெஞ்சே
யறவாழி யண்ணல்பி ரான்ஷம்சுத் தாசி னருஞ்சிலம்பி
லிறவா திருப்பவர்க் குண்டல வோபல் லிடுக்கங்களே. (257)

### சென்றோனீடலிற் காமமிக்க கழிபடர்கிளவி.

(இ-ள்.) தலைவன் மாலைக்காலம்வரையும் வாராமல் வரவு நீட்டித்தலாற் காமமிக அதனால் மிகுந்த நினைவொடு கூறுதல்.

எறியுந் திரைக்கட லேகுரு கேயெனை யேதணந்து
பறியுந் துணைவர் பயிலிட நோக்கிப் பாவிதுய
ரறியும் படியொரு காலறை வீரற மாயிரமாஞ்
செறியும் பெருந்தவச் செய்ஷம்சுத் தாசின் செழுங்கிரிக்கே. (258)

### தலைவியைப் பாங்கி யாற்றுவித்தல்.

(இ-ள்.) மேற்கூறியவாறு வருந்திய தலைவியைப் பாங்கியவ் வருத்தத்தைத் தணியச்செய்தல்.

சேல்வைத்த வேல்விழி யாயொழ வாயினிச் செல்வருன்றன்
மேல்வைத்த நோக்கின் விரைந்துறு வாரவண் மேவியென்று
நூல்வைத்த நெஞ்சினன் மால்ஷம்சுத் தாசீன் நாவல்கிரிக்குட்
கால்வைத்த பான்முற்றுங் கண்வைத்து முத்திக் களிப்பதற்கே ()

இதுவரையும் பதினொருநாள் நிகழ்ச்சி.

தலைவன் வந்தமை பாங்கி யுணர்த்தல்.

(இ-ள்.) தலைவன் வந்தசெய்தி தலைவிக்குத் தோழிகூறுதல்.

சிந்தா குலமுந் தியக்கு மயக்குந் தெளியவிங்கே
வந்தார் தலைவர் மயக்கேன் மனமினி மாமலர்சூழ் [ய்ச்
கொந்தார் தொடைப்புயக் கோன்ஷம்சுத் தாசீன் கொழுங்கிரிவா
சந்தா ரணிமுலைத் தையனல் லாய்சுகஞ் சாருதற்கே. (260)

வந்தோன் றன்னொடு நொந்து வினாதல்.

(இ-ள்.) பாங்கி வந்த தலைவனொடு துன்பப்பட்டு வினாவுதல்.

இறையள வன்ப நினைப்பிரிந் தாவி யிருந்தறியா
கறையள வாய்குழ னன்னுத லாளொ யோர் நாண்முழுதுஞ்
சிறையள வாக்கித் திகைப்பித்த தேதுயர் தோரசர்
திறையள வேற்குமெம் மான்ஷம்சுத் தாசீன் செழுங்கிரிக்கே. ()

தலைவன் பாங்கியொடு நொந்து வினாதல்.

(இ-ள்.) எவ்வண்ணந் தலைவியை யாற்றியிருந்தாயென்று தலைவன் றோழியொடு வருந்திக் கேட்டல்.

பொல்லா மதன்கணைப் பூவலர் வாரி பொருமொலிவிண்
செல்லா வருமதித் தீசிறு காற்குயிற் செய்பதிர்ச்சி
யெல்லா மறிந்தெதிர்த் தோபொறுத் தோவிருந் தீருரையீர்
பல்லா யிரம்புக ழோன்ஷம்சுத் தாசீன் பனிவரைக்கே. (262)

பாங்கி யாற்றுவித்திருந்த வருமை சாற்றல்.

(இ-ள்.) வெளி.

தின்வாய் மொழிமற வாதரு ளோய்மய னீள்கடலாழ்
பொன்வாய்த் துயரம் புரந்தன ளற்றமைப் போற்றலர்தம்
புன்வாய் கிழிக்குமெம் மான்ஷம்சுத் தாசீன் பொதியமலை
தன்வா யடித்திரு கைகொந்த வாறது சாற்றுதற்கே. (263)

இவற்றன் - தன்பதிக்ககற்சி தலைவன் சாற்றலும் பாங்கி தலைவிக்கவன் செலவுணர்த்தலுமாகிய இரண்டுஞ் செலவறிவுறுத்தற்கும், தலைமகளைப் பாங்கி விலக்கலொன்றுஞ் செலவுடன்படாமைக்கும், நீங்கல் வேண்டலொன்றுஞ் செலவுடன்படுத்தற்கும், பாங்கி விடுத்தலொன்றுஞ் செலவுடன்படுதற்கும், தலைமகன் னெஞ்சொடு புலந்த

லும் காமமிக்க கழிபடர்கிளவியுமாகிய இரண்டுஞ் சென்றுழிக்கலங் கற்கும், தலைமகளை யாற்றுவித்தலும் தலைமகன் வருந்தமை தலைமகட் குணர்த்தலுமாகிய இரண்டுந் தேற்றி யாற்றுவித்தற்கும், பாங்கி லக்தோன் றன்னொடு நொந்துவினாதல் முதல் மூன்றும் வந்துழி நொந்துரைத்தற்கு முரியன.

ஒருவழித்தணத்தல் முற்றிற்று.

---

## வரைவிடைவைத்துப் பொருள்வயற்பிரிதல்.

அஃதாவது விவாகத்தை யிடையிலே நிச்சயித்து விவாகத்துக் கு வேண்டும் பொருள் நிமித்தமாகத் தலைவன் பிரிதல்; அது - பிரி வறிவுறுத்தல் பிரிவுடன்படாமை பிரிவுடன்படுத்தல் பிரிவுடன்படு தல் பிரிவுழிக் கலங்கல் வன்புறை வன்பொறை வருவழிக்கலங்கல் வந்துழி மகிழ்ச்சி யென வொன்பது வகைப்படும்; அவை வருமாறு:-

என்பொருட் பிரிவுணர்த் தேந்திழைக் கென்றல்.

(இ-ள்.) விவாகத்துக்காகப் பொருள் கொண்டுவருதற்குப் பிரியும் என்னுடைய பிரிவைத் தலைவிக்குச் சொல்லென்று தலைவன் பாங்கிக்குக் கூறுதல்.

பொருளே யறஞ்சுகம் பூக்குந் தருவது போந்தடைந்து
தெருளே தரவிவண் சேருவ லென்னவெஞ் சேரலர்முன்
மருளே தரப்பொரு மால்ஷம்சுத் தாசீன் மலையவெற்பி
னிருளே வெருள்குழ லாயிசை யாபந்த வேந்திழைக்கே. (264)

நின்பொருட்பிரிவுரை நீயவட் கென்றல்.

(இ-ள்.) வெளி.

பொன்னசை தாங்கிப் புறஞ்செல நீசொலும் புத்துரைகொண்
டென்னசை மங்கைக் கியம்பரி தாலுல கெண்டிசையுந்
தன்னசைக் கோல்கொடுத் தோன்ஷம்சுத் தாசீன் றடஞ்சிலம்ப
நின்னசை நேர்வர நீயே யுரையற னீள்குழற்கே. (265)

நீடே னென்றவ னீங்கல்.

(இ-ள்.) தலைவன் நீட்டித்திராது விரைந்து வருவேனென்று பாங்கியொடு கூறி நீங்குதல். நீட்டித்தல் - காலந்தாழ்த்தல்.

ஓங்குங் கொடுஞ்சுர முற்றணங் கேயுவப் போடிருகை
தாங்கும் பொருடாச் சார்தரு வேனல்லிற் றாழ்குழற்றன்
வீங்கும் பெரும்புகழ் வேள்ஷம்சுத் தாசீன் வியன்கிரிக்கு
ளேங்கும் படிதரி யேன்றரித் தாற்பழி யென்றனக்கே. (266)

இதுவரையும் பதினேழாநாள் நிகழ்ச்சி.

பாங்கி தலைவிக்கவன்செல வுணர்த்தல்.

(இ-ள்.) பொருள்வயிற் பிரியுந் தலைவன் செல்லுதலைப் பாங்கி தலைவிக்குக் கூறுதல்.

விலையளித் தன்முலை மெய்ம்மணங் காண விரையுமலர்க்
கிலையளித் தண்ணென் றிணையலி ராரென்று மேய்ந்தபன்னூற்
கலையளித் தாளுமெம் மான்ஷம்சுத் தாசின் கனகவெற்பி
னிலையளித் தோங்குகொங் காய்வரு வாரிது நிச்சயமே. (267)

பூந்தழை யிரங்கல்.

(இ-ள்.) தலைவி வருந்தல்.

வேள்விடுத் தான்கணை மெய்பசப் பேற விதிர்க்குமுலைக்
கோள்விடுத் தாருயிர் கொள்ளைகொள் வானினிக் கூர்ந்துளத்திந்
நாள்விடுத் தாரகன் றாரென்செய் வேனண்பர் நாடுமன்பர்க்
காள்விடுத் தேய நள் வோன்ஷம்சுத் தாசி னருங்கிரிக்கே. (268)

பாங்கி கொடுஞ்சொற் சொல்லல்.

(இ-ள்.) இவ்வாறு நீ யிரங்குவ தென்னென்று தோழி தலைவியை நோக்கிக் கொடிய சொல்லைச் சொல்லுதல்.

சார்ந்தார் பிரிவரீ பிரிந்தவர் சார்வர் சகசமிதென்
றோர்ந்தாற் றுயருனக் குண்டுகொ லோவன்ப ரோவிலிப்பார்
தேர்ந்தா ளதிபதி மால்ஷம்சுத் தாசின் சிலம்பணியாய்
சேர்ந்தார் நிதிவரை வெண்ணியன் றேவின்று நீங்கியதே. (269)

தலைவி கொடுஞ்சொற் சொல்லல்.

(இ-ள்.) மேற்கூறியபாங்கியை மனத்திலுணர்ந்துதலைவி கூறல்.

கல்லுங் காடுங் கலந்தவெங் கானிற் கருதுமன்பர்
செல்லுஞ் செயலுமென் சிந்தைத் தியக்குந் தெரிந்துமென்னே
புல்லும் பெருந்தலைத் தோன்ஷம்சுத் தாசின் பொதியவெற்பிற்
சொல்லுந் தமிது நன்றுநன் றலென்றன் றாமொழியே. (270)

வருதவர் மீண்டெனப் பாங்கி வலித்தல்.

(இ-ள்.) பாங்கி தலைவர் திரும்பி வருவரென்று கூறுதல். வலித்தல்-வற்புறுத்திக் கூறுதல்.

தெள்ளுஞ் செழும்புகழ்ச் சேய்ஷம்சுத் தாசின் சிமையவெற்பில்
விள்ளுங் கொடுஞ்சுர வெவ்வழற் காவி வெதும்பியுடற்
பொள்ளுஞ் சிறுபெடைக் குஞ்சிறை நீழற் புரக்குமன்றிற்
கொள்ளுங் குணனறிந் தாற்செல்வ ரோவன்பர் கோற்றொடியே. ()

பருவங் கண்டு பெருமகள் புலம்பல்.

(இ-ள்.) தலைவன் பிரியும்போது கார்காலத்துக்கு முன்னே வருவலென்று குறிப்பாற் கூறிப் போயின னுதலாலே கார்ப்பருவங் கண்டு தலைவி புலம்பிக் கூறுதல்.

சயாக் கொடிய ரிதயமொத் தேகறுத் தெங்குமொலித்
தோயா துறவிழித் தோங்குவெங் கோபமு முற்றருட்கோர்
தாயா யொளிர்பெரு மான்ஷம்சுத் தாசின் றடஞ்சிலம்பிற்
காயா வருமழைக் கார்கண்டும் வந்திலர் கன்னெஞ்சரே. (272)

இது வம்பென்றல்.

(இ-ள்.) அவ்வாறு புலம்பிய தலைவி தேறும் வண்ணம் பாங்கி இது காலத்தின் வந்த மேகமன்று. இடையே வம்பாகத் தோன்றிய தென்று கூறல். வம்பு-காலமல்லாத காலத்திற் றோன்றும் பொருள்.

சாற்றுங் கவிகைப்பி ரான்ஷம்சுத் தாசின் றடஞ்சிலம்பாப்
போற்று முனதிரு பூண்முலை கண்டஞ்சிப் போந்தகரி
கூற்றுங் கொடுவக் குழுவொலி கொண்டற் கொழுமொலியென்
றூற்று மயினட மன்றிது கார்வம்பெ னுமிழையே. (273)

இறைமகள் மறுத்தல்.

(இ-ள்.) தலைவி பாங்கி கூறியவதனை மறுத்துக் கூறுதல்.

கவளக் களிற்றொலி காணொளிற் கொன்றையுங் காந்தளுமுட்
டுவளக் கனிமலர் தோற்றுற மோவின்மின் சூழ்தருமோ
சவளத் திருக்கைப்பி ரான்ஷம்சுத் தாசின் றடஞ்சிலம்பின்
பவளத் தனியித ழாயறி வாய்மழைப் பைம்புயலே. (274)

அவர் தூதாகிவந்தடைந்த திப்பொழுதெனத் துணைவி சாற்றல்.

(இ-ள்.) தலைவி கார்காலம் வந்ததென்று கூறிய சொற்கேட்ட பாங்கி தலைவன் தான் வருகின்ற செய்தியை யறிவித்தற்கு விடுப்ப இப்பொழுது இக்கார் தூதாய்வந் தடைந்ததென்று கூறுதல்.

சூதா ரிளமுலைத் தோகைநல் லாயன்பர் தேரப்பரித்தேர்
மீதா ருரைகொடு மீண்டன ரஞ்சி மிடையலென்றும்
போதார் வதனப்பு மான்ஷம்சுத் தாசின் பொதியவெற்பிற்
றூதா யெழுந்ததிக் கார்கால மேகமுன் சொல்லுதற்கே. (275)

தலைமகளாற்றல்.

(இ-ள்.) தலைவி துன்பத்தைச் சகித்திருத்தல்.

முற்று முடலுயிர் நீயே யெனமுன் மொழிந்தவர்சீர்
துற்றும் பெருந்தகை வேள்ஷம்சுத் தாசின் சுடர்க்கிரிவாய்ச்
சற்றும் பிரியார் தரியார் வருகுவர் சத்தியமென்
றெற்றும் வலிக்கு மிசைக்கு முயிர்கொளற் கேந்திழையே. (276)

அவனவட் புலம்பல்.

(இ-ள்.) பொருளீட்டச்சென்ற தலைவன் றன்கரும முற்றியபின் னிறையே யவ்விடத்துத் தலைவியை நினைத்துப் புலம்புதல்.

அலைவாய்த் துரும்பி னழிநீர் பொழிதா வற்பகனு
முலைவாய்த் துயிலுண வெல்லா மொழித்துள் ளுருகியெண்ணெண்
கலைவாய்ப் பொலிபெரு மான்ஷம்சுத் தாசின் கனகவெற்பின்
மலைவாய்க் கிடக்கு மயிலனை யாட்கென் வழுத்துவதே. (277)

இதுவரையும் பதினேழாநாள் நிகழ்ச்சி.

பாகனொடு சொல்லல்.

(இ-ள்.) சோகங்கொண்ட தலைவன் தேர்ப்பாகனொடு தேரை விரைந்து நடாத்தச் சொல்லுதல்.

பார்கண் டுவந்த வலவா விரைதியிப் பாவிவருந்
தேர்கண் டுவந்துவந் திப்பதற் கேசெக மேழுமெச்சுஞ்
சீர்கண் டுவந்தபு மான்ஷம்சுத் தாசின் செழுஞ்சிலம்பிற்
கார்கண்டு வந்தகண் ணீர்கண்டு மாழ்குமுன் காரிகையே. (278)

மேகத்தொடு சொல்லல்.

(இ-ள்.) தலைவன் வருங்காலத்து மேகத்தைநோக்கிக் கூறுதல்.

சிரித்தே தரும்பெரு மான்ஷம்சுத் தாசின் சிலம்பகத்தென்
பரித்தேர் வரவைப் பகருதற் கோவன்றிப் பாரமுலை
கரித்தே யுயிரறக் காய்வதற் கோமுன் கடிந்தெழுந்தீர்
தரித்தேசொ லுஞ்சொலுஞ் சொல்லிற் பயனுள தண்முகிலே. (279)

பாங்கி வலம்புரிகேட் டவன்வர வறிவுறுத்தல்.

(இ-ள்.) வலம்புரிச் சங்கோசையைக் கேட்டுத் தோழி தலைவன் வரவைத் தலைவிக் கறிவித்தல்.

பேரேந்தி நின்றநற் பெண்ணணங் கேயஞ்சிப் பேதுறல்பைங்
காரேந்தி நின்றகை யான்ஷம்சுத் தாசின் கனகவெற்பிற்
றேரேந்தி நின்றசங் கோசைகண் டாயினித் திக்கனைத்துஞ்
சீரேந்தி நின்றநம் மன்பர்வந் தாரென்னத் தேர்ந்தருளே. (280)

வலம்புரி கிழத்தி வாழ்த்தல்.

(இ-ள்.) வலம்புரிச் சங்கைத் தலைவி வாழ்த்தல்.

கொந்துற்ற தார்ப்புயக் கோன்ஷம்சுத் தாசின் கொழுங்கிரிவாய்த்
தந்துற்ற வெண்புகழ் தானென வோங்கித் தழைக்குகவே
நொந்துற்ற வெந்துயர் நோயற வன்பர் நுவல்பரித்தேர்
வந்துற்ற தென்ன மவுனுற்று நின்ற வலம்புரியே. (281)

தலைவன் வந்துழிப் பாங்கி நினைத்தமைவினாதல்.

(இ-ள்.) தலைவன் வந்தவிடத்துத் தோழி, தலைவியை நினைத்ததுண்டோ? வென்று கேட்டல்.

முனைத்தனை யாவருண் மால்ஷம்சுத் தாசின் முதிர்கிரிவாய்ச்
சினைத்தனை யாசைக் கெழுந்தனை யாயது தீர்ந்தபின்னூர்
தினைத்தனை யாயினுஞ் சித்தமொன் றாகவித் திங்கரும்பை
நினைத்தனை யாவிலை யாநிகழ்த் தாயென் னெடுந்தகையே. (282)

வரைவிடை வைத்துப் பொருள்வயிற் பிரிந்த தலைவன் பொருளீட்டி வந்த இற்றைத்தினம் முப்பத்து நான்கா நாளென்க; முப்பத்து நான்கென்னுங் கணக்கு எற்றாற் பெற்றதெனின், "களவினுட் டவிர்ச்சி வரைவி னீட்டத்,திங்க ளிரண்டி னகமென மொழிப" என்னும் இறையனாரகப் பொருட் சூத்திரவுரையில் பொருளீட்டி வந்த தலைவன் ஆறுநாளில் வரைவு முடிப்பனென்று கூறியதனானும் தலைவன் றலைவியைக் கண்ட பதினெட்டாநாளிற் பொருள்வயிற் பிரிந்ததனானும் ஐம்பத்தாறுநாள் வரைவு முடித்ததாகக் கூறுதலானும் என்க. அற்றேல், "வரைவிடை வைத்துப் பொருள்வயிற் பிரிவோ, ரிருதுவின் கண்ணுடைத் தென்மனார் புலவர்" எனக்கூறினாராலோ வெனின், இருதிங்களென்றது எல்லை கடவாமைக்குக் கூறியதன்றி இருதிங்களுள் வரக்கூடாதென்னும் யாப்புறவின்மையி னென்க. ஆயின், "வரைவி னீட்டந் திங்களிரண் டினக" மென்றதனால் அறுபதாநாள் மணமுடித்ததாகக் கூறினு லென்னையெனின், அச்சூத்திரவுரையில் திங்களிரண்டினு நான்குநாளிருக்க மணமுடிப்ப தியல்பென்று கூறியதனால் கூறலாகாதென்க. மாதத்தினிறுதியாகிய நான்கு நாட்கள் மணத்துக்கு விலக்கப்பட்டனவென்று சோதிடநூலார் சிலர் கூறுதலா லிங்ஙனங் கூறியது போலும்.

தலைவ னினைத்தமை செப்பல்.

(இ-ள்.) வெளி.

அறந்தான் வளர்த்தருப்பு மான்ஷம்சுத் தாசி னருட்கிரிவாய்ப்
புறந்தாழ் கருங்குழற் பூவையின் னையப் பூங்குழலிற்
சிறந்தா ரிருள்செய் சிறுநெறிக் கானத்துஞ் சித்தம்விட்டு
மறந்தா லலவோ நினைத்திடல் வேண்டுமென் மாதரசே. (283)

ஆற்றுவித் திருந்த வருமை சாற்றல்.

(இ-ள்.) பாங்கி தலைவியை யாற்றுவித்திருந்த அருமையைத் தலைவனுக்குக் கூறுதல்.

இந்தா மெழின்முகத் தேந்திழைக் குன்பிரி வெய்தவம்போன்
றந்தா தரிக்கும்பி ரான்ஷம்சுத் தாசின் றடந்தகத்துள்
சந்தா டவிநதி யூர்மலை தண்புகழ் சாற்றிமனச்
சிந்தா குலந்தவிர்த் தேனிருந் தேன்றிறற் றேர்மன்னனே. (284)

இவற்றுள்-என்பொருட் பிரிவுணர்த் தேந்திழைக் கென்றதும் பாங்கி தலைவிக்கவன் செலவுணர்த்துதலாகிய இரண்டும் பிரிவறி

வுறுத்தற்கும், நின்பொருட் பிரிவுரை நீயவட் கென்றலொன்றும் பிரிவுடன்படாமைக்கும், நீடே னென்றவ னீங்கலொன்றும் பிரிவுடன்படுத்தற்கும், தலைவியிரங்கலும் பாங்கி கொடுஞ்சொற் சொல்லலும் பருவங்கண்டு பெருமகள் புலம்பலும் இறைமகன் மறுத்தலும் அவனவட் புலம்பலுமாகிய ஐந்தும் பிரிவுழிக்கலக்கற்கும், வருகுவர் மீண்டெனப் பாங்கி வலித்தலும் இருளை வம்பென்றலும் அவர் தூதாகி வந்தடைந்த திப்பொழுதென்றலுமாகிய நான்கும் வன்புறைக்கும், தலைமக ளாற்றலொன்றும் வன்பொறைக்கும், பாகனொடு சொல்லலும் மேகத்தொடு சொல்லலுமாகிய இரண்டும் வரும்வழிக் கலக்கற்கும், வரவறிவுறுத்தல் முதலாகிய ஐந்தும் வந்துழி மகிழ்ச்சிக்கு முரியன.

வரைவிடைவைத்துப் பொருள்வயிற் பிரிதன் முற்றிற்று.

களவியல் முற்றிற்று.

# வரைவியல்.

அஃதாவது-தலைவன் தலைவியைக் குரவர் முதலாயினோர் கொடுப்பவுங் கொடாதொழியவும் கற்பிற்கு விதித்தவாகிய வதுவைச் சடங்கொடு பொருந்தி மணஞ்செய்துகோடல்; ஆதலாலிது கற்பின் பாற்படுமென்க; இவ்வரைவு வரைவு மலிவும் அறத்தொடு நிற்றலுமாகிய இரண்டு வகைப்படும்; அவற்றுள்,

## வரைவு மலிவு.

அஃதாவது வரைவு தொடங்கி நடக்கு முயற்சி மிகுதல்; அது-வரைவு முயல்வுணர்த்தல் வரைவெதிர் வுணர்த்தல் வரைவறிந்து மகிழ்தல் பராவல்கண் டுவத்தலென நான்கு வகைப்படும்; அவை வருமாறு:—

காதலன் முலைவிலை விடுத்தமை பாங்கி காதலிக் குணர்த்தல்.

(இ-ள்.) தலைவன் தனவிலையாகத் திரவியங் கொடுத்ததைத் தோழி தலைவிக்குக் கூறுதல்.

சொன்மலை வாணர்பி ரான்ஷம்சத் தாசின்றோன் றுடையா
புன்மலை மாமுலைக் குள்ளுடைந் தோடிப்பின் னுற்றிறைஞ்சப்
பொன்மலை வந்தெனப் போர்மலை தோளன்பர் போந்தரித்தார்
கன்மலை போலுங் கனமலை வெம்முலைக் கைவிலையே. (285)

காதலி நற்றாயுள்ள மகிழ்ச்சி யுள்ளல்.

(இ-ள்.) தலைவன் விடுத்த முலைவிலைப் பொருள்களைக் கண்டு நம்மகட்கு மணஞ்செய்யுங் காலமென்று நற்றாய் மகிழு முள்ளத்து மகிழ்ச்சியைப் பாங்கி நினைத்துக்கூறுதல்.

ஆலைச் சிலையனன் ஞன்ஷம்சுத் தாசி னருட்சிலம்பின்
சோலைக் குயின்மொழித் தோகைநல் லாயன்பர் சூட்டுமலர்
மாலைக் குவகை மலிதர நம்மனை மாமுகமுங்
காலைக் கமல மெனவல ராசிற்குங் காசினிக்கே. (286)

பாங்கி தமர்வர வெதிர்ந்தமை தலைவிக் குணர்த்தல்.

(இ-ள்.) தலைவன் தமர் மணங்கூறி வந்துழித் தலைவி தமர் மண மெதிர்ந்தமை பாங்கி தலைவிக் குணர்த்தல்.

கொற்றத்தி னேங்குமென் கோன்ஷம்சுத் தாசின் குளிர்வரைசேர்
செற்றத்தி னேங்கயிற் சேல்விழி யாயனை செப்புபல
சுற்றத்தி னேரெதிர் சூழ்தர நின்மணந் தோய்தரநம்
முற்றத்தி னேங்கி முழங்குவ தன்பர் முழுமுரசே. (287)

தலைமக ளுவகை யாற்ற துளத்தொடு கிளத்தல்.

(இ-ள்.) தலைவி மகிழ்ச்சி யடங்காது நெஞ்சொடு கூறுதல்.

பாரோ ரலரும் பழியு மறத்துயர் பாரமதன்
றேரோ டலையத் தெருவினெஞ் சேயுற்ற திக்கனைத்துஞ்
சீரோ ருருவெனுஞ் சேய்ஷம்சுத் தாசின் செழுஞ்சிலம்பிற்
காரோ டிகலிக் கறங்குவ தன்பர் கடிமுரசே. (288)

தலைவனைப் பாங்கி வாழ்த்தல்.

(இ-ள்.) தலைவனைத் தோழி புகழ்தல்.

முடிமாலை சூட்டும்பி ரான்ஷம்சுத் தாசின் முதிர்கிரிவாய்
வடிமாலைக் கூந்தன் மயிலனை யாடுயர் மாறவம்பொற்
கடிமாலை மாலைக் கடியென வேதந்த காதலர்சிற்
றடிமாலை காலையெக் காலமும் வாழி யருள்பெறவே. (289)

தலைவி மணம்பொருட்டாக வணங்கைப் பாங்கிலை காட்டல்.

(இ-ள்.) தலைவி மணம் நிமித்தமாகத் தெய்வத்துக்குச் சிறப் புச்செய்து வாழ்த்திக்கொண்டு நிற்கு நிலையைப் பாங்கி தலைவனுக் குக் காட்டுதல்.

இணங்கா ரடுகரிக் கோன்ஷம்சுத் தாசி னிருஞ்சிலம்பிற்
சுணங்கா ரிளமுலைத் தோகையன் ஞளுளந் தோய்தரநின்
மணங்கா ரணமா மறைபல வோதி மதித்தணங்கை
வணங்கா விருந்து மகிழ்வது பாரென்றன் மன்னவனே. (290)

கண்டோன் மகிழ்தல்.

(இ-ள்.) தலைவி தெய்வத்தை வாழ்த்துதலைக் கண்ட தலைவன் மகிழ்தல்.

மின்னஞ் சிறியா ளுலகியல் யாதொன்றுந் தேர்ந்தறியா
ளன்னம் பிடிநிகர் வாள்கற்ற தேதிவ் வணங்கினைத்தெவ்
பின்னம் படப்பொரு வேள்ஷம்சுத் தாசின் பிறங்கலிலோர்
தன்னந் தனியாய்த் தருமலர் தூஉய்நனித் தாழ்வதற்கே. (291)

இவற்றுள்-காதலன் முலைவிலை விடுத்தமை பாங்கி காதலிக்குணர்த்தலும் தலைவி மணம் பொருட்டாக அணங்கைப் பராகிலை காட்டலுமாகிய விரண்டும் வரைவு முயல்வுணர்த்தற்கும், பாங்கி தமர்வரை வெதிர்ந்தமை தலைமகட் குணர்த்த லாகிய வொன்றும் வரைவெதிர் வுணர்த்தற்கும், நற்றாயுள்ள மகிழ்ச்சி யுள்ளலும் உவகையாற்றா துளத்தொடு கிளத்தலுந் தலைவனைப் பாங்கி வாழ்த்தலுமாகிய மூன்றும் வரைவெதிர்ந்து மகிழ்தற்கும், தலைமகளணங்கைப் பராகிலை கண்டோன் மகிழ்தலாகிய வொன்றும் பராவல் கண் டுவத்தற்கு முரியன.

இதுவரையும் ஐம்பத்தொன்றநாள் நிகழ்ச்சி.

வரைவுமலிவு முற்றிற்று.

## அறத்தொடு நிற்றல்

அஃதாவது-களவை முறையே வெளிப்படுத்தி நிற்றல். முறையே வெளிப்படுத்தி நிற்றலாவது; தலைவி பாங்கிக் கறத்தொடு நிற்றல், பாங்கி செவிலிக்கறத்தொடு நிற்றல், செவிலி நற்றாய்க் கறத்தொடு நிற்றல், நற்றாய் தன்னையர்க் கறத்தொடு நிற்றலெனக் கொள்க. அறத்தொடு நிற்றற்குப் பொருள்; முறையே வெளிப்படுத்தி நிற்றலென்பது; இப்பொருள் எவ்விடத்திற்கு மாகாது இவ்விடத்திற்கு மாத்திரமென்று கொள்க. அது - முன்னிலை முன்னிலைப் புறமொழியென இருவகைப்படும், அவை வருமாறு:—

கையறுதோழி கண்ணீர் துடைத்தல்.

(இ-ள்.) களவுப் புணர்ச்சியால் மிகவும் அவரொழுதல் கண்டு தந்தையர் முதலாயினோர் வெறுப்புற்ற தறிந்த தலைவன் பிரிந்தேக, அப்பிரிவாற்றாமையா லழுதுகொண்டிருந்த தலைவியை ஆற்றிக் கையற்றதோழியருகிருந்து கண்ணீர் துடைத்தல், கையறல்-செயலறல்.

பந்தகத் தாரை பரிந்திலை பைந்துணர் பற்றிலைசெய்
சிந்தக வண்டலுஞ் சேர்த்திலை யன்னை சினத்ததுண்டோ
கொந்தகம் வாடினை நோற்றனை கண்ணீர் குடங்கிடையே
வந்ததென் ஹாமீம் புரஷம்சுத் தாசின் மகிழ்கிரிக்கே. (292)

கலுழ்தற்குக் காரணங் கூறல்.

(இ-ள்.) தலைவி யழுதற்குக் காரணஞ் சொல்லுதல்.

தூங்குங் கனவிற் றுணிந்திறை தோய்தரத் துஞ்சலற்றுள்
ளேங்கும் படியெழுந் தேனினைத் தேனுடைந் தேழலகுந்
தாங்கும் பெருந்திறத் தான்ஷம்சுத் தாசின் றடங்கிரிபோன்
றோங்கு மொளிர்முலை யாயிலை வேறொன்று முற்றதுவே. (293)

தலைவன் றெய்வங் காட்டித் தெளிப்பத் தெளிந்தமை கூறல்.

(இ-ள்.) தலைவன் றெய்வத்தைக் காட்டிக் கரியென்று சூளுற வு சொல்ல மெய்யென்று தெளிந்த அதனைப் பாங்கிக்குப் பொருந் தக் கூறுதல்.

தருகார் நிகர்கரத் தான்ஷம்சுத் தாசின் றனிச்சிலம்பிற்
குருகார் நிழலல வண்டும் பலவுள கூண்டவின்பம்
பெருகா ரமுதனை யாய்கப டாயன்பர் பேணியெம்மை
யருகா யிருத்தி யறைந்தபல் சூழ்கண் டறைவதற்கே. (294)

இறைவி தலைவ னிகந்தமை யியம்பல்.

(இ-ள்.) தலைவி தலைவ னீங்கினமை பாங்கிக்குக் கூறுதல்.

வற்போ லுயர்முலை மங்கைநல் லாயுண் மறக்கிலனென்
றற்போ டறைந்து மகன்றன ரன்ப ரவணிமுற்று
மற்போர் வலர்பெரு மான்ஷம்சுத் தாசின் மலையவெற்பிற்
சொற்போ னடையுந் தொடர்ந்தறிந் தாரிலர் சொல்லுதற்கே. ()

பாங்கி யியற்பழித்தல்.

(இ-ள்.) தலைமக னியலைப் பாங்கி பழித்துக் கூறுதல்.

வல்லார் புகழுமெம் மான்ஷம்சுத் தாசின் மலையவெற்பி
னல்லார் குழலனங் கேமற வார்வரு வாரிருப்பார்
நல்லா ரெனநினைந் தேனவ ரின்று நடுவிகந்த
பொல்லா ரெனவெழுந் தாரகன் றார்பிகப் புண்ணியரே. (296)

தலைமக ளியற்பட மொழிதல்.

(இ-ள்.) அங்ஙனங் கூறக்கேட்ட தலைமகள் தலைமக னியற்கை யோ ரியல்புபட மொழிதல்.

கைக்கு முலைக்குங் கடுகினின் றூனுங் கனவொடுள்ள
மெய்க்கும் படிவரு வாரிருப் பாரெதிர் மேவலரை
மொய்க்கும் பெருந்தள வேள்ஷம்சுத் தாசின் முதிர்கிரிவாய்ப்
பொய்க்குங் குணத்தர் செயலல வேயிது பொற்றொடியே. (297)

தெய்வம் பொறைகொளச் செல்துவமென்றல்.

(இ-ள்.) தலைவர் தெய்வத்தின்மேற் பிரியேனென்றுரை கூறிப் பிரிந்துபோனா ராதலால் அத்தெய்வம் சீறுதபடி அவர் எங்கட்குக் குற்றஞ் செய்தாரல்லர், நீ பொறுத்துக்கொள்ளென்று வேண்டிக்

கோடற்கு இருவேமும் போதுவேமென்று தலைவி பாங்கியுடன் கூறுதல்.

கோபர் தருபடைக் கோன்ஷம்சுத் தாசின் கொழுங்கிரிக்கோர்
தீபங் கடுத்தநந் தோன்பர் முன்னமைமர் சேர்ந்தினிவெஞ்
சோபந் தரப்பிரி யேனெனத் தெய்வத்தைச் சூழ்ந்திசைத்த
பாபம் பொறுக்கப் பணிகுவம் வாவென்றன் பைந்தொடியே. ()

இல்வயிற் செறித்தமை யியம்பல்.

(இ-ள்.) தலைவி தன் மெய் வேறுபாட்டாலும் ஊரி லுள்ளாரலர் தூற்றுதலாலும் நற்றாயுளத்தில் வெறுப்பாகி மனையிடத்தி லென்னைக் காவல் செய்தா ளென்று பாங்கிக்குக் கூறுதல்.

உலையொன்று வெம்பரி வேள்ஷம்சுத் தாசி னொளிர்சிலம்பில்
வலையொன்று கைத்தல மங்கைநல் லாய்பிறர் வாயலருங்
கலையொன்று மேனியுங் கண்டன ளாய்மனை காவலிட்டாள்
தலையொன்று கண்டிலள் கண்டா லிடுவள்மெய்ச் சத்தியமே. ()

செவிலி கனையிருளவன்வரக் கண்டமை கூறல்.

(இ-ள்.) செவிலித்தாய் செறிந்த இருட்குறியிடத்துத் தலைவன் வரக் கண்டாளெனத் தலைவி பாங்கிக் குணர்த்தல்.

திருவுற் றிலகுபு மான்ஷம்சுத் தாசின் செழுஞ்சிலம்பின்
மருவுற்ற கஞ்ச மதிமுகத் தோய்தென்னன் மன்னுமன்பர்
தருவுற்ற நங்குறி சார்வுற்று மீண்டதைத் தாயனங்க
ளுருவுற் றிரவி னுலவுற்ற தோவென் றுலைந்தனளே. (300)

எறிவளை வேற்றுமைக் கேது வினுதல்.

(இ-ள்.) செவிலித்தாய் தலைவியின தவயவ வேறுபாட்டுக்குக் காரண மென்னை? யென்று பாங்கியைக் கேட்டல்.

முலையும் பசப்ப மொழியுந் தளர முழுதுமுடை
னிலையுங் குலைய நிகழ்ந்ததென் னேநித்த கோலரை
மலையும் படிபொரு மால்ஷம்சுத் தாசின் மலையமின்னுட்
கலையும் பொருகணல் லாய்புனங் காவ லகன்றபின்னே. (301)

பாங்கி வெறி விலக்கல்.

(இ-ள்.) செவிலித்தாய் வெறியாட்டாளனை யழைத்து மகட்கு நோயுற்றவாறும் அது நீருமாறுஞ் சொல்லவேண்டுமென்று கேட்புழித் தெய்வம் வந்தாடும்போது பாங்கி அத்தெய்வத்தை யாடவேண்டாமென்று விலக்குதல். வெறியாட்டாளன் ஆடு பலிகொடுத்தாற் றீருமென்புழி அவ்வாட்டைக் கொல்லாமல் விலக்கலெனினு மமையும்.

மெய்க்கும் பெருந்தவ வேள்ஷம்சுத் தாசின் வியன்சிலம்பிற்
பொய்க்குந் துடியிடை யாய்நீனி யேனுமைப் போற்றுதுமா
லுய்க்கு நெறியறி யாதவ மேயுவந் தோம்பறியா
மைக்கு மிகைக்குமல் லாலக லாதிவள் வண்டுயரே. (802).

வெறி விலக்கிய வழி செவிலி வினுதல்.

(இ-ள்.) வெறியாடல் விலக்கிய காரணத்தைப் பாங்கியுடன் செவிலித்தாய் கேட்டறிதல்.

பொன்னூர் துயரம் புலரவென் றெண்ணிப் புகுந்தவெங்கண்
முன்னூர் வெறியை விலக்கினை யோநின மூன்றுலகுந்
தன்னூ ருயிரெனு மால்ஷம்சுத் தாசின் றடஞ்சிலம்பி
னின்னூ ருளத்தி னிகழ்வென்கொ லோசொல்வ னேரிழையே

பூத்தரு புணர்ச்சியா லறத்தொடு நிற்றல்.

(இ-ள்.) பூவைக் கொடுத்ததனுற புணர்ந்த களவை வெளிப்படுத்திக் தோழி கூறுதல்.

வரத்தா லுயர்ந்தபு மான்ஷம்சுத் தாசின் வரைக்கொருவன்
கரத்தா மரையில் விழித்தா மரைகள் கவியகின்ற
தரத்தா லரிவாய் வருவாய் பெறுநீ தருதுமென
வுரத்தா லளிப்ப நயனமொத் தேற்றங் குவந்தனளே. (801)

புனறரு புணர்ச்சியா லறத்தொடு நிற்றல்.

(இ-ள்.) புனலாற் கூடும் புணர்ச்சியை வெளிப்படுத்திக் கூறுதல்.

பிழியோ டலங்கற்பெம் மான்ஷம்சுத் தாசின் பிறங்கலிடைக்
குழியோ டியர்வனிக் கோனதி பாய்ந்து குடையவுந்திச்
சுழியோ டிகல்சுழி சூறச் சுழிந்துத் தொடர்ந்தணங்கைப்
பழியோ டெடுத்துய பார்த்தெடுத் தானொரு பார்மன்னனே. ()

களிறுதரு புணர்ச்சியா லறத்தொடு நிற்றல்.

(இ-ள்.) யானையைத் தடுத்துக் காத்தக் கூடும் புணர்ச்சியை வெளிப்படுத்திக் கூறுதல்.

காரானை யன்னைக் கோன்ஷம்சுத் தாசின் கனகவெற்பி
லோரானை முன்னு முரத்தானை யுற்றெழுந் தோங்குகொங்கை
யீரானை பின்னு மிகறரப் போர்தடிந் தேற்றவெற்றிச்
சீரானை யென்று மறப்பள்கொ லோவின்றன் றேமொழியே. ()

தலைமகள் வேற்றுமை கண்டு நற்றாய் செவிலியை வினுதல்.

(இ-ள்.) தலைவி வேறுபாட்டை நற்றாய் தெரிந்து அதனுண்மையைச் செவிலியைக் கேட்டறிதல்.

பாலுங் கசப்பப் பழமும் புளிப்பப் படர்ந்தமுலை
மேலும் பசப்ப விழிநீ ரரும்ப மிடைந்தனளாற்
கோலும் பெருந்தவக் கோன்ஷம்சுத் தாசின் கொழுங்கிரிவா
யேலுங் குணத்தணங் கேயிசை யாயுற்ற தேந்திழைக்கே. (307)

செவிலி நற்றாய்க்கு முன்னிலை மொழியா லறத்தொடு நிற்றல்.

(இ-ள்.) முன்னிலைப் புறமொழியா லுணர்த்தாது முன்னிலை மொழியினாலே களவை வெளிப்படுத்தி நற்றாய்க்குச் செவிலி கூறல்.

நாவொன்று மெய்ந்நலந் தோன்ஷம்சுத் தாசி னலத்தகிரிக்
காவொன்று கூந்தலைக் கன்னிநல் லாயொரு காமன்வந்து
பூவொன்று தந்து புனலிடை காத்துப் புகுந்தமர்ந்த
மாவொன்று வென்று மருவினனாமென்ன மாயமிதே. (308)

இவற்றுள்-வெறி விலக்கலொன்று முன்னிலைப் புறமொழிக்கும்,
ஏனைய பதினாறு முன்னிலை மொழிக்கு முரியன.
அறத்தொடு நிற்றன் முற்றிற்று.

---

## உடன்போக்கு.

அஃதாவது-தலைவன் றன்னூர்க்குத் தலைவியை யுடன்கொண்டு போதல்; அது - போக்கு கற்பொடு புணர்ந்த கவ்வை மீட்சியென மூன்று வகைப்படும்; அவற்றுள்-போக்காவது - போக்கறிவுறுத்தல் போக்குடன் படாமை போக்குடன் படுத்தல் போக்குடன் படுதல் போக்கல் விலக்கல் புகழ்தல் தேற்றல் என எட்டுவகைப்படும்; அவ்வெட்டும் பாங்கி தலைவற்குடன் போக்குணர்த்தல் முதல் தலைவன் றன்பதியடைந்தமை தலைவற் குணர்த்தலீ றாகிய பதினெட்டு விரிகளையுடையன ; அவை வருமாறு:—

பாங்கி தலைவற் குடன்போக் குரைத்தல்.

(இ-ள்.) காவ லதிகப்படுதலால் தலைவியை யுன்னூர்க்குடன் கொண்டு போதியெனப் பாங்கி தலைவனுக்குக் கூறுதல்.

அண்ண லருளா ரவனியெல் லாமனித் தானுமெங்கட்
பெண்ணா ரமுதைப் பிரித்தெம ரொன்றுமிப் பேருலகின்
கண்ணா யொளிருமெம் மான்ஷம்சுத் தாசின் கனகவெற்பி
லெண்ணா தழைத்துட னேகுதி யுன்ற னிருநகர்க்கே. (309)

தலைமகன் மறுத்தல்.

(இ-ள்.) தலைவி கொடிய பாலையில் நடக்கச் சகியாளென்று தலைவன் தடுத்துக் கூறுதல்.

ஆவா வுலுத்த ரறைமொழி போலு மடர்ந்தெழுந்து
வேவா விருக்குமவ் வெவ்வழற் பாலையின் மேவரிதாற்

மாவா ரிருங்குண மால்ஷம்சுத் தாசீன் மணிவரைவாய்ப்
பூவா யொளிர்தரும் பூவைகற் பாதமென் பூங்குழலே. (310)

போக்குடன் படுத்தல்.

(இ-ள்.) தலைவியைத் தலைவன் கூட்டிப் போதற்குப் பாங்கி யுடன்படுத்திக் கூறல்

உள்ளக் கரிக்குமுன் மாமய லன்றி யுறுத்தவன்னை
விள்ளக் கரிக்குமவ் வெவ்வுரை வெப்பினு மேவுகலி
தள்ளக் கரிக்குமெம் மான்ஷம்சுத் தாசீன் சுடர்க்கிரிவாய்க்
கொள்ளக் கரிக்குங் கொழுந்தழற் பாலை கொடிதலவே. (311)

தலைவன் போக் குடன்படுதல்.

(இ-ள்.) தலைவன் தலைவியை யுடன்கொண்டு போதற்குச் சம்மதித்தல்.

விடவா ளரவெங்கும் வெண்முத்தஞ் சிந்தி மெலிந்துடலந்
தொடவாவி யஞ்சுஞ் சுடுபரற் பாலை துணிந்தநின்சொற்
கடவா தடைகுதுங் கன்னிகல் லாயெம்பொன் கைவரப்பஃ
றிடவா ரணமெனுஞ் சேய்ஷம்சுத் தாசீன் செழுங்கிரிக்கே. (312)

தலைவிக் குடன்போக் குணர்த்தல்.

(இ-ள்.) தலைவனுடன் தலைவி போதலை யவளுக்குப் பாங்கி கூறுதல்.

சுனையுந் தடமும் வரையும் பொழிலுந் தொடர்ந்துபயின்
மனையு மறந்த வசையுண்டென் றுரினி மாற்றலரு
நினையுந் திருப்பத வேள்ஷம்சுத் தாசீ னெடுங்கிரிவாய்ப்
புனையு மலர்க்குழ லாயென்கொ லோவவர் போதனையே. (313)

தலைவி நாணழி விரங்கல்.

(இ-ள்.) உடன் போக்கில் நாணழியுமே யென்று அதற்குத் தலைவி வருந்துதல்.

வெளிப்பணி நீப்பினு மெய்ப்பணி யாகி விளங்குமந்நா
ணொளிப்பணி நீப்பவ ருண்டுகொ லோவென் றுமுற்றபெருங்
களிப்பணி வேந்தர்பி ரான்ஷம்சுத் தாசீன் கனகவெற்பிற்
றளிப்பணி கூந்தன்மென் றோகைநல் லாயிவண் சொல்லுதற்கே.

கற்பு மேம்பாடு பாங்கி கழறல்.

(இ-ள்) தலைவிக்குப் பாங்கி கற்பின் பெருமை கூறுதல்.

நாணொன்று மேன்மை நலத்தென் றுனுமந் நாணநத்தும்
பூணொன்று கற்பே பெரிதுகண் டாயிந்தப் பூதலத்தின்

மாறென்று வாய்மையெம் மான்ஷம்சுத் தாசின் மலைபவெற்பிற்
சேறென்று கூந்தனல் லாய்பொன்ன ரூர்க்கெகுதத்தேயத்துமே.

தலைவி யொருப்பட் டெழுதல்.

(இ-ள்.) தலைவி தலைவனுடன் றுணிந்துபோகச் சம்மதித்தல்.

ஊரோ ரலரு முறவினர் கோபமு முற்றபெ றும்
பாரோர் பழியும் பலிப்பலிங் காக்கிப் படர்வலென்றுங்
காரோ டிகல்கரத் தோன்ஷம்சுத் தாசின் கனகவெற்பின்
சீரோ ருருவனை யாயன்பர் சொற்றவத் தீச்சுரமே. (316)

பாங்கி சுரத்தியல் புரைத்துழி தலைமகள் சொல்லல்.

(இ-ள்.) பாலையின் கொடுமை கூறிய தோழிக்குத் தலைவி கூறுதல்.

கொல்லு மமளி கொலைமத வேள்கணை கூர்த்தவன்னை
சொல்லும் பெரும்பழி தோய்குழற் குன்னலர் தன்னுமுட
லெல்லு மொடிக்கும்பெம் மான்ஷம்சுத் தாசி னிருஞ்சிலம்பிற்
செல்லுஞ் சிறுசுரந் தீபதன் றேவென்றன் சேயிழையே. (317)

பாங்கி கையடை கொடுத்தல்.

(இ-ள்.) தலைவனுக்குத் தலைவியைப் பாங்கி யடைக்கலங் கொடுத்தல்.

மிஞ்சா விளமுலை மீண்டுந்தி காட்டி விரிந்தமுடி
பஞ்சா வெளுப்பினும் பாவையன் றளையிப் பாருலகின்
மஞ்சார்யொளிர்பெரு மான்ஷம்சுத் தாசின் மலையவெற்பி
லஞ்சா தளித்திவை யாவின்று போலென்று மன்புவைத்தே. (318)

பாங்கி வைகிருள் விடுத்தல்.

(இ-ள்.) இருளார்ந்த இடையாமத்திற் பாங்கி தலைவியைத் தலைவனுடன் விடுத்தல்.

கூப்பிட் டுதவுமென் கோன்ஷம்சுத் தாசின் கொழுங்கிரிவாய்ச்
சேப்பிட்ட மெல்லடித் தேமொழி யேகிற் சினந்தவர்வாய்க்
காப்பிட்டு நெஞ்ச மளவிட்டுச் சொற்ற வலர்மொழிக்கோர்
காப்பிட்டு காலைக் கடுகுவல் பாறுமக் காய்சுரமே. (319)

இதுகாறும் ஐம்பத்திரண்டாகாட் செய்தியென் றுணர்க.

தலைமகளைத் தலைமகன் சுரத்துய்த்தல்.

ஆடும் பொழில்விடுத் தோகநீ தாண்டின மார்ந்தமரக்
காடுங் கடந்து கலந்தன மானற் கவினுரெல்லாங்

கூடுந் திருமுன்றிற் கோன்ஷம்சுத் தாசின் குலக்கிரிவாய்
நீடுங் கனற்சுர மஞ்ஞைநல் லாயிது நேர்ந்தருளே. (320)

தலைமகள் றலைமக னசைவறிந் திருத்தல்.

(இ-ள்.) தலைவியினது வருத்தத்தை யறிந்து தலைவ னவளுட னிருத்தல்.

கற்றே யலரடி கன்றிய மேனி கனைத்ததினி
விற்றே ரணிநுதன் மெல்லிய லேமடு வேந்தர்வந்து
குற்றேவல் செய்யுமென் கோன்ஷம்சுத் தாசின் கொழுங்கிரிவாய்ச்
சற்றே தரித்துச் சலிப்பொழி வாமிந்தத் தண்பொழிற்கே. (321)

உவந்தலர்சூட்டி யுண்மகிழ்ந் துரைத்தல்.

(இ-ள்.) தலைமகளை மகிழ்ந்து அவள் கூந்தற்கு மலரைச் சூட்டி அதனாற் பரவசமகிழ்ச்சி யடைந்து கூறுதல். உவகை அறிவொடு கூடியது. மகிழ்ச்சி அறிவழிந்தது. என்னை? "உள்ளக் களித்தலுங் காண மகிழ்தலுங் கள்ளுக்கில் காமத்திற் குண்டு" என்னுந் திருக்குறட்குப் பரிமேலழகர் கூறிய வுரையானு முணர்க.

எய்திட்ட வன்சுரத் தின்னலெல்லாமற வேற்றவர்க்குப் [க்
பெய்திட்ட பொற்கைப்பெம் மான்ஷம்சுத் தாசின் பெருவரைவாய்
கொய்திட்ட குந்தமுன் கொண்டையிற் சூட்டிக் குலவுறுபான்
செய்திட்ட மாதவ மென்னைகொ லோவென்றன் றேமொழியே. ()

கண்டோ ரயிர்த்தல்.

(இ-ள்.) வடிவின் மேம்பாட்டாற் றலைவனையுந் தலைவியையுங் கண்டோ ரையமுறக் கூறுதல். கண்டோர்-பாலைநிலத்தெயிற்றியர்.

வான்கொண்ட கொண்டலெம் மான்ஷம்சுந் தாசின் மலையவெற்பிற்
றூன்கொண்ட வாழ்க்கைய ரோவன்றி வானகஞ் சார்ந்தவரோ
வூன்கொண்ட சீயமும் வேங்கையு மெண்கு முலாவருமிக்
கான்கொண்ட வெவ்வழற் பாலையி லின்று கலந்தவரே. (328)

கண்டோர் காதலின் விலக்கல்.

(இ-ள்.) மேற்கூறிய கண்டோர் ஆசையுடன் இவ்விருந்து நாளைப் போகலா மென்று வழிச்செலவு விலக்குதல்.

போதோ விழுந்தது புக்கது வல்லிருட் போர்த்தமலர்
மாதோ வயர்ந்தனண் மாலினை யாயுற்ற வையமெல்லாந்
தீதோவக் காக்குமெம் மான்ஷம்சுத் தாசின் செழுஞ்சிலம்பின்
மீதோர் பொழுதெம் மிருக்கையின் றேகிலென் மெய்க்கைக்கே. ()

தன்பதி யணிமை சாற்றல்.

(இ-ள்.) இவ்விடத்தில் வைகிப்போதல் வேண்டுமென்று தலைவி கூறியவழித் தலைவனுடைய பதி சமீபத்தி லுள்ளதென்று கண்டோர் கூறுதல்.

கூரம் பனையகட் கோலமு நீயுங் குறித்தெழுந்தாற்
றாரம் பெரிதிலைத் தோய்குன்ற மொன்றுண்டு சூழ்ந்தகன்றா
லாரந் தருபுயத் தான்ஷம்சுத் தாசீ னருட்கிரியி
னீரஞ் செறிவனி ஹாமீம் புரமங் கெதிர்வருமே. (325)

தலைவன் பதியடைந்தமை சாற்றல்.

(இ-ள்.) வெளி.

வேலையுங் காவியும் வேயுக்கண் ணாய்மலர் மேற்பலபா
மாலையுக் தோய்புய மால்ஷம்சுத் தாசீன் மலையவெற்பின்
சோலையுஞ் சாலையும் வன்னியும் வாவியுஞ் சூழ்ந்தகருப்
பாலையு மாடமும் ஹாமீம் புரமுமி னாய்க்கருளே. (326)

இவற்றுள்-பாங்கி தலைவற் குடன்போக்குணர்த்தலும் தலைவிக் குடன்போக் குணர்த்தலுமாகிய விரண்டும் போக்கறிவுறுத்தற்கும், தலைமகன் மறுத்தலும் தலைவி நாணழிந் திரங்கலுமாகிய விரண்டும் போக்குடன்படாமைக்கும், பாங்கி தலைவனையுடன்படுத்தலும் தலைவி கற்புமேம்பாடு பாங்கி கழறலுமாகிய விரண்டும் போக்குடன்படுத்தற்கும், தலைவன் போக்குடன்படுதலும் தலைவி யொருப்பட் டெழுதலும் பாங்கி சுரத்தியல் புரைத்துழிச் சொல்லலுமாகிய மூன்றும் உடன்போக் குடன்படுதற்கும், பாங்கி கையடை கொடுத்தலும் வைகிருள்விடுத்தலும் தலைமகன் தலைமகளைச் சுரத்துய்த்தலுமாகிய மூன்றும் போக்கற்கும், தலைவன் தலைவியசைவறிந்திருத்தலும் கண்டோர் காதலின் விலக்கலுமாகியவிரண்டும் விலக்கற்கும், தலைவன் தலைவியை புலந்தலர்சூட்டி யுண்மகிழ்ந்துரைத்தலும் கண்டோ ரயிர்த்தலுமாகிய விரண்டும் புகழ்தற்கும், கண்டோர் தன்பதியணிமை சாற்றலும் தலைவன் தன்பதி யடைந்தமை தலைவிக் குணர்த்தலு மாகிய விரண்டுந் தேற்றற்கு முரியன.

உடன்போக்கு-முற்றிற்று.

---

## கற்பொடு புணர்ந்த கௌவை.

அஃதாவது-தலைவி தலைவனதுடைமையாய்க் கற்பொடு கூடி அதனை அயலார் விராய சேரியர் பலருமறிதல்; அது-செவிலி புலம் பல் நற்றாய் புலம்பல் மனைமருட்சி கண்டோரிரக்கம் செவிலி பின் றேடிச்சேறல் என ஐந்துவகைப்படும்; அவை வருமாறு :—

செவிலி பாங்கியை வினுதல்.

(இ-ள்.) தலைவியைத் தேடிக் காணுமற் செவிலி பாங்கியைக் கேட்டல்.

ஆயமு மன்னையும் யானுமிவ் வீடு மழிதரவெத்
தேயமும் போற்றுமெம் மான்ஷம்சுத் தாசின் செழுஞ்சிலம்பி
னேயமும் வாசமு நீத்தெம தாருயிர் நீங்கியவம்
மாயமுஞ் சூழ்ச்சியு மென்னைகொ லோசொலென் மாதரசே. ()

பாங்கி செவிலிக் குணர்த்தல்.

(இ-ள்.) தலைவி தலைவனுடன் சென்றதைப் பாங்கி செவிலிக் குக் கூறுதல்.

மலையும் படிபல வம்புரைத் தாளன்னை வந்தமுலை
விலையுங் கருதிலள் வேறென்செய் வாளுற்ற மெல்லியலெண்
சிலையுங் குலையுந்திண் டோள்ஷம்சுத் தாசின் செழுங்கிரிவா
யலையும் படியகன் றாள்சுர மன்பர்பின் றொணங்கே. (328)

செவிலி தேற்றுவோர்க் கெதிரழிந்து மொழிதல்.

(இ-ள்.) வெளி. அழிந்து கூறல் - நொந்து கூறுதல்.

தருந்தாரு வன்னகை யான்ஷம்சுத் தாசின் றமிழ்ச்சிலம்பில்
வருந்தா திருக்க வழுத்துகின் றீரெம்மை மாணவொரு
திருந்தா ருயிரைத் திமிர்த்தமு தூட்டிப்பின் செல்லவிடுத்
திருந்தா லலவோ வறிகுவிர் நீருமவ் வின்னலையே (329)

செவிலி தன்னறிவின்மை தன்னை நொந்துரைத்தல்.

(இ-ள்.) தலைவி போதற்குத் தன் குறிப்பினு லறிவித்த தன் மையை யறிந்திலேனென்று தன்னறிவின்மையை நொந்து செவிலி கூறுதல். நோதல்-வருந்துதல்.

என்னையும் வீட்டையு மேங்குற நோக்கி யிருவிழிநீர்
தன்னையுங் காட்டியம் முன்றிலும் பார்த்த தரத்தையெட்டுப்
பொன்னையும் வேட்டப் மான்ஷம்சுத் தாசின் பொலங்கிரிவாய்
முன்னையும் பின்னையு மோர்ந்தில னென்னமோசமிதே. (330)

செவிலி தெய்வம் வாழ்த்தல்.

(இ-ள்.) தலைவிக்கு இடையூறு நிகழாவண்ணந் தெய்வத்தைச் செவிலி வாழ்த்துதல்.

சிந்திப்ப தற்குற்ற தெய்வங்க ளேயெந்தஞ் செல்வியையாஞ்
சந்திப்ப தற்கெதிர் தந்தருள் வீர்கித்தஞ் சார்ந்தெவரும்
வந்திப்ப தற்குற்ற மால்ஷம்சுத் தாசின் மலையனெற்பி
லந்திப்ப தற்கெமக் கும்மைய லாலில்லை யாந்துணையே. (331)

இவ்வளவுந் செவிலி புலம்பலின் விரியென்க.

செவிலி நற்றாய்க் கறத்தொடு நிற்றல்.

(இ-ள்.) *செவிலி நற்றாய்க்குத் தலைவி தலைவனுடன்போக்கை வெளிப்படுத்திக் கூறுதல்.*

*காணக் கரிக்குங் கடுஞ்சுரத் தோர்திருக் காளைபின்னே*
*பேணக் கரந்தன ளுன்மக ளென்னினிப் பேசலொன்றோ*
*நாணக் கடிந்தநங் கோன்ஷம்சுத் தாசி னளினவெற்பிற்*
*பூணக் கதிக்கும் புணர்முலை யாய்நென்னற் போதகத்தே* (332)

நற்றாய் பாங்கியொடு புலம்பல்.

(இ-ள்.) *நற்றா யுயிர்ப்பாங்கியுடன் வருந்திக் கூறுதல்.*

*எல்லா மறிந்து மதலா யிசைவி னெனக்கொருசொற்*
*சொல்லா திருந்தவத் தோடமன் றோமகள் சூழ்ந்தவர்க்கோர்*
*நல்லா னருட்பெரு மான்ஷம்சுத் தாசி னளினவெற்பிற்*
*கல்லாய்ப் பொலிந்த கடும்பரற் பாலை கரந்தனளே.* (333)

நற்றா யயலாரோடு புலம்பல்.

(இ-ள்.) *வெளி.*

*பன்னா டலங்கிடந் தங்கமெ லாநொந்திப் பாவிபெற்ற*
*மின்னாளு மென்னை விடுத்தகன் றாளினி மேலுமொன்றோ*
*மன்னா யுதித்தபு மான்ஷம்சுத் தாசின் மலையவெற்பிற்*
*பொன்னா ரமுதனை யிர்மக வாலென்ன புண்ணியமே* (334)

நற்றாய் பயிலிடந் தம்மொடு புலம்பல்.

(இ-ள்.) *தலைவி பழகி விளையாடு மிடங்களோடு நொந்து நற்றாய் வருந்திக் கூறுதல்.*

*ஊன்றா முயில்வலத் தோன்ஷம்சுத் தாசி னுயர்சிலம்பிற்*
*கான்றாழ் சுனைகாள் பொழில்கா ணதிகாள் கவலைகொள*
*வீன்றா ளெனைமறந் தேகையி லேயிந்த வேழைக்கென்னத்*
*தேன்றாழ் குழலியுஞ் செப்பின ளோவெதுஞ் சிந்தைவைத்தே* ()

*இந்நான்கும் நற்றாய் புலம்பலின் விரியெனக.*

நிமித்தம் போற்றல்.

(இ-ள்.) *தலைவி வருதற்குத் தக்க சகுனத்தைத் துதித்து நற்றாய் கூறுதல்.*

*பாலோ டமுதும் பரிந்தளிப் பேன்பரற் பாலைசென்ற*
*காலோ டரிவை கலந்துற வேகடற் காசினிக்கோர்*
*கோலோ டுயர்குடைக் கோன்ஷம்சுத் தாசின் கொழுங்கிரியின்*
*மேலோ டருட்கொடி யேகரை வாயிந்த வேளையிலே.* (336)

சுரந் தணிவித்தல்.

(இ-ள்.) தலைவிக்குப் பாலைநிலத்தின் வெப்பந் தணியுமாறு நற்றாய் பிரார்த்தித்தல்.

வரமே பெருகுமெம் மான்ஷம்சுத் தாசீன் மணிவரையின்
சுரமே பரல்செய் சுடுநெருப் பேயவன் தோய்ந்தவளத்
திரமே பெருகுநல் ஹாமீம் புரத்தொடு சேரளவின்
றரமே தரக்குளிர் வாய்மிக வாவென்றன் றாழ்குழற்கே. (337)

தன்மகள் மென்மைத்தன்மைக் கிரங்கல்.

(இ-ள்.) நற்றாய் தன்மகள் மெல்லியதன்மைக்கு இரங்கிக்கூறல்.

மழையுங் கரிந்து மனமுங் கரிந்த மலிகனற்கான்
குழையும் படிசென்ற கொள்கையென் னேவறக் கோண்மையினல்
விழையும் பெரும்புகழ் வேள்ஷம்சுத் தாசீன் வியன்கிரிவாய்த்
தழையு மணிச்சமுந் தாவத் தளர்பதத் தாழ்குழலே. (338)

இளமைத் தன்மைக் குளமலிந் திரங்கல்.

(இ-ள்.) நற்றாய் தன்மக ளிளமைத் தன்மைக்கு மனமெலிந்து வருந்திக் கூறுதல்.

பாலோ டமுதம் பருகில தென்றுமைம் பாவை யைமார்
மேலோ டணைத்து விழிநீ ருகுக்குமென் மெல்லியல்வெவ்
வேலோ டொளிர்கர வேள்ஷம்சுத் தாசீன் மிளிர்கிரிவாய்
மாலோ டொருவன்பின் போவள்கொ லோமுன்செய் வல்வினையே.

அச்சத் தன்மைக் கச்சமுற் றிரங்கல்.

(இ-ள்.) நற்றாய் தலைவியினது வெருவுந் தன்மையை நினைந்து தான் பயமுற்று வருந்துதல்.

இற்புலி காணினு மேக்குற் றழுங்கி யிரங்குமவ
ணற்புலி காணி னலிவத லாலுயிர் நண்ணலர்க்கோர்
பொற்புலி யன்னபு மான்ஷம்சுத் தாசீன் பொதியவெற்பிற்
கற்புலி யுற்ற கடுஞ்சுரத் தென்செய்வள் காரிகையே. (340)

இவ்வைந்தும் மனமருட்சியின் விரியென்க.

கண்டோரிரக்கம்.

(இ-ள்.) வழியிற் கண்ட மாதர் தலைவியைநோக்கி வருந்தி யழுங்கல். இரக்கம் - அழுங்குதல்.

எங்கும் விழுமெழு மெம்மனை யெங்கெனு மின்னலுற
வீங்குங் கரையு மெலியு முலையு மிகுந்தபுகழ்
தாங்குஞ் சுகிர்தபு மான்ஷம்சுத் தாசீன் றடஞ்சிலம்பின்
பாங்குங் கழங்குநற் பாவையும் பூவையும் பார்த்தனையே. (841)

இஃதொன்றுங் கண்டோரிரக்கம்; இதற்கு விரியில்லை.

### செவிலி யாற்றத் தாயைத் தேற்றல்.

(இ-ள்.) *தலைமகள் பிரிவைச் சகியாத நற்றாயைச் செவிலி தேறுமாறு கூறுதல்.*

*வெப்பா லவிந்த வெறும்பரற் பாலை விரைந்தவடா*
*னெப்பா லிருப்பினு மின்னே கொணர்வ லிசைந்தெவர்க்கு*
*மொப்பா னுயநர வோன்ஷம்சுத் தாசி னொருமொழிபோற்*
*றப்பா தனையே தளரா தமரவன் றண்பொழிற்கே.* (342)

### ஆற்றிடை முக்கோற் பகவரை வினாதல்.

(இ-ள்.) *செவிலி தேடிப் போங்கால் வழியிடை யெதிர்வருந் திரிதண்டமுடைய அந்தணரை வினவுதல்.*

*உண்மைப் பொருளை யுவந்தடை வான்றவ மோர்ந்துசெய்யும்*
*வெண்மைத் திருச்சடத் தீர்விள்ளு வீரெழு மேதினிக்கும்*
*வண்மைக் குயர்கர மால்ஷம்சுத் தாசின் மலையவெற்பி*
*லொண்மைக் கொழுமயிற் காளையின் னெம்மயி லுற்றதுவே.* (343)

### மிக்கோ ரேதுக் காட்டல்.

(இ-ள்.) *செவிலி வினாயதற்கு உயர்ந்தோர் அஃது உலகவியல்பென்று காரணங் காட்டிக் கூறுதல்.*

*வலம்புரி யீன்ற மணிதனக் கல்லது மற்றையர்க்கு*
*நலம்புரி வாறுமின் னங்கையு மேகின ஞானிலத்தின்*
*குலம்புரி யண்ணலங் கோன்ஷம்சுத் தாசின் கொழுங்கிரிவா*
*யலம்புரி கூந்த லணங்கனை யாய்மற்றெ னாய்வதுவே.* (344)

### செவிலி யெயிற்றியோடு புலம்பல்.

(இ-ள்.) *செவிலி பாலைநிலத்துப் பெண்ணொடு வருந்துதல்.*

*பொன்மா துறைபுயத் தோன்ஷம்சுத் தாசின் பொதியவெற்பி*
*னன்மா தவப்பே றனைத்துமொன் றாயுற்றிந் நாண்மறவர்*
*தன்மா தெனவருந் தையநல் லாய்சொலித் தாவழற்கா*
*னென்மா தொருதிருக் காளையின் போந்த விருநெறியே.* (345)

### செவிலி குரவோடு புலம்பல்.

(இ-ள்.) *செவிலி குராமரத்தொடு வருந்துதல்.*

*கல்லென் றடர்ந்த கடும்பரற் பாலையோர் காளையின்னே*
*வல்லென் றுயர்முலை வந்தது கண்டுமவ் வான்முகிலைச்*
*செல்லென் றெதிர்கரச் செய்ஷம்சுத் தாசின் செழுஞ்சிலம்பி*
*னில்லென் றொருசொன் னிகழ்த்திலை யேவஞ்ச நீள்குரவே.* (346)

குவடுகண் டிரங்கல்.

(இ-ள்.) நிலத்தின்மேற் காலமூர்ந்திய குறியைச் செவிலி கண்டிரங்கிக் கூறுதல்.

பூவிற் படரப் பொறுதவம் போருகப் பொன்னடியித்
தாவிற் படாத் தவக்குறை யோகற்ற தண்டமிழோர்
நாவிற் படர்புக ழோன்ஷம்சுத் தாசி னளினவெற்பின்
காவிற் படருங் களிமயி லாமென்றன் கன்னியர்க்கே. (317)

செவிலி கலந்துடன் வருவோர்க் கண்டு கேட்டல்.

(இ-ள்.) உடன்போக்குப் போய தலைவனும் தலைவியும் போல அன்பு கலந்து வழியிடை வருவோ ரிருவரைக் கண்டு செவிலி வினாதல்.

அன்றிலும் பேடு மெனவரு வீரிவ் வதரிருவ
ரொன்றிய வுள்ளத்தி னுற்றன ரோவுல குங்ககனுந்
துன்றிய வென்றியன் மால்ஷம்சுத் தாசின் சுடர்க்கிரிமேற்
கன்றிய வன்னையொ டென்னையு மிங்ஙன் கவலைவைத்தே. (348)

அவர் புலம்ப றேற்றல்.

(இ-ள்.) செவிலி யிரங்கிப் புலம்புதலை யெதிர்வந்தோர் தெளிவித்தல்.

தாருடை வள்ளலைக் கண்டனன் யானுமுன் றாழ்குழலை
வாருடைக் கொங்கையென் மங்கையுங் கண்டனள் வான்புவிக்கோர்
பேருடை வேந்தர்பெம் மான்ஷம்சுத் தாசின் பெரும்பகைவாழ்
சூருடைக் கான்விடுத் தாமீம் புரமின்று சூழ்குவரே. (349)

செவிலி புதல்வியைக் காணாது கவலை கூர்தல்.

(இ-ள்.) செவிலி தன் புதல்வியைக் காணாது துன்ப மிகுதல்.

மானார் விழியை வழிமுழு துள்ளி மலைந்ததல்லா
னாறை வறிந்தில னேபிறர் வாய்க்கென் னவில்வலினி
யூறு ரயில்வலத் தோன்ஷம்சுத் தாசி னொளிர்வரைமேற்
போனான் மகளெங் கெனுமனைக் கென்கொல் புகலுவதே. (350)

இவ்வொன்பதுஞ் செவிலி பின்றேடிச் சேறலின் விரியென்க.

கற்பொடு புணர்ந்த கௌவை முற்றிற்று.

---

## மீட்சி.

அஃதாவது-மீண்டு வருதல். செவிலி புதல்வியைக் காணாது மீண்டு வருதலும் உடன்போய தலைவனுந் தலைவியு மீண்டுவருதலு மடங்கப் பொதுப்பட மீட்சி யென்றார். அது-தெளிதல் மகிழ்ச்சி வி

றுதல் செப்பலென நான்கு வகைப்படும்; அவை-தலைவி சேணகன்றமை செவிலி தாய்க்குணர்த்தல் முதல் நற்றாய்கேட் டவனூரெங் கோள் வேலனை வினாத லீறாகிய ஆறு விரிகளையுடையன; அவை வருமாறு:—

தலைவி சேணகன்றமை செவிலி தாய்க்குணர்த்தல்.

(இ-ள்.) தலைவி நெடுந்தூரம் போனதைச் செவிலி நற்றாய்க்குச் சொல்லுதல்.

துருவா விடமிலை யென்றாய் முழுதுந் துருவியுநின்
றிருவா ரமுதைத் தெரிந்தில னேமசென்ற சேயொடுநன்
கொருவா வருளுடை யோன்ஷம்சுத் தாசி னுறவிலர்வாழ்
வருவா வனம்விடுத் தாமீம் புரமங் கடைந்தனளே (351)

இதுவரையும் ஐம்பத்து மூன்றாநாள் நிகழ்ச்சி.

தலைவன் றம்மூர் சார்ந்தமை சாற்றல்.

(இ-ள்.) ஐம்பத்து நான்காநாள் தலைவன் மீட்சியில் தமதூரைச் சார்ந்தமை தலைவிக் குணர்த்தல். தம்மென்பது - தலைவன் றலைவியரிருவரையும்.

ஆடுஞ் சுனையிது வண்டலு மிங்கிவை யன்றனையான்
கூடுந் தடமது குன்றமவை பாரென்றுங் கூண்டபுகழ்
நீடுந் திறற்பெரு மான்ஷம்சுத் தாசி னெடுங்கிரிமே
லாடும் பதியிது நங்கைநல் லாய்முன் னடந்தருளே. (352)

தலைவி முன்செல்வோர் தம்மொடு தான்வரல் பாங்கியர்க் குணர்த்தி விடுத்தல்.

(இ-ள்.) தலைவி தனக்கு முன்னே போகும் அந்தணரிடத்தில் தன்வரவைத் தன்றோழிகட்குச் சொல்லி அனுப்புதல்.

கற்பிற் பெரிதல நாணென்று நாடிக் கடும்பரற்கா
னற்பிற் புகுந்தவென் னண்ணலும் யானு மடைந்ததெல்லாம்
பொற்பிற் பொலிந்தபு மான்ஷம்சுத் தாசின் புதுநகர்சேர்
வெற்பிற் புகுமட வீரறை வீரென்றன் மெல்லியர்க்கே. (353)

ஆங்கவர் பாங்கியர்க் குணர்த்தல்.

(இ-ள்.) வெளி.

கண்டனம் யாமுங்கள் கன்னியை போர்திறக் காளைபின்னே
மண்டனற் பாலை வழிவிடுத் திங்ஙன் மருவுறத்தெவ்
பண்டனந் தீர்த்தபி ரான்ஷம்சுத் தாசின் பனிவரைவா
யண்டன மென்னடை யாயிழை யிருந்த மன்புவைத்தே. (354)

பாங்கியர் கேட்டு நற்றாய்க் குணர்த்தல்.

(இ-ள்.) வெளி.

அன்று யமுங்க லடைந்தன ளென்றறைந் தார்சிலர்நம்
பொன்னு ளொருதிருப் போரசோடிவன் பூதலத்தோர்
மன்னுதி மன்னனெம் மான்ஷம்சுத் தாசீன் மலையவெற்பி
னன்று னிலைவரு மிந்நா ளெனவினி நந்தமக்கே. (355)

நற்றாய்கேட் டவனுளங்கோள் வேலனை வினுதல்.

(இ-ள்.) நற்றாய் தன்மகள் வரவை யறிந்து தலைவனுட் குறிப் பின்னதென்று வெறியாட்டாளனைக் கேட்டல்.

ஓதுறு மெய்ப்புக ழோன்ஷம்சுத் தாசீ னுயர்தடத்தென்
மாதுறு மண்ணலம் மாணிழை யோடென்றன் மாமனைக்கே
போதுறு மோவன்றித் தன்மனை கண்டங்குப் புக்குறுமோ
ஏதுறு மோர்ந்திசை யாயயி லாயுவந் தென்றனக்கே. (356)

இவற்றுள் - தலைவி சேணகன்றமை செவிலி தாய்க்குணர்த்த லும் தலைவன் றம்மூர் சார்ந்தமை சாற்றலு மாகிய இரண்டுந் தெளி தற்கும், தலைவி முன்செல்வோர் தம்மொடு தன்வரல் பாங்கியர்க் குணர்த்திவிடுத்தலும் பாங்கி நற்றாய்க் குணர்த்தலுமாகிய இரண் டும் மகிழ்ச்சிக்கும், நற்றாய் தலைமகனுளங்கோள் வினுதலொன்றும் வினுதற்கும், பாங்கியர்க்கு முன்சென்றோ ருணர்த்தலொன்றுஞ் செப்பற்கு முரியன.

மீட்சி முற்றிற்று.

---

## தன்மனை வரைதல்.

அஃதாவது - உடன்போய் மீண்டுவந்த தலைவன் றலைவியைத் தன்னூர்க்குக் கூட்டிப்போய்த் தன் மனையின்கண் வரைந்து கோ டல். அது - வினுதல் செப்பல் மேவலென மூன்று வகைப்படும்; அவை - நற்றாய் மணமயர் வேட்கையிற் செவிலியை வினுதல்முதல் பாங்கி தானது முன்னே சாற்றிய துரைத்தலீறாகிய ஐந்து விரிகளை புடையன; அவை வருமாறு:—

நற்றாய் மணமயர் வேட்கையிற் செவிலியை வினுதல்.

(இ-ள்.) தலைவி நற்றாய் தன்மனையின் மணஞ்செய்யும் விருப் பினுற் செவிலியை வினவுதல்.

நம்மனைக் கோவன்றி நாளு மவரை நயந்தளித்தார்
தம்மனைக் கோமணஞ் சாரற் கியன்ற தனித்தவமோ
கம்மனைக் கோபுரக் கோன்ஷம்சுத் தாசீ னருட்கிரிவா
யெம்மனைக் கேசமட வாயதி யேம்வந்தின் செய்துவதே. (357)

செவிலிக் கிதுவே வரைந்தமை யுணர்த்தல்.

(இ-ள்.) பாங்கி செவிலித்தாய்க்குத் தலைவன் றலைவியை மணந் தமை அறநாற்றெரிந்து கூறுதல்.

சேல்காட்டும் வேல்விழிச் செல்வியைத் தம்மனை சேர்ந்தவர்தா
மால்காட்டு மம்மணஞ் செய்தன ரென்றொற்றர் வந்துரைத்தார்
கோல்காட்டு நற்குடைக் கோன்ஷம்சுத் தாசின் குவட்டிவிதைச்
சூல்காட்டு மன்னையர்க் கன்னைநல் லாயெங்ஙன் சொல்லுவதே. ()

வரைந்தமை செவிலி நற்றாய்க் குணர்த்தல்.

(இ-ள்.) வெளி.

அளிக்குங் கொடைக்கரத் தான்ஷம்சுத் தாசி னருட்சிலம்பர்
துளிக்கு மலர்க்குழற் றோகையை முன் மணஞ் சூழ்ந்தசெய்தி
தெளிக்குநல் வித்தகர் செப்பினர் நாமுந் தெரிசித்ததைக்
களிக்குந் தவமுற்றி லோமன்னை யேயென்ன காலமிதே. (359)

தலைவன் பாங்கிக் கியான் வரைந்தமை நுமர்க்கியம்பு சென்றேன்றல்.

(இ-ள்.) விவாகமுடித்து மீண்டுவந்த தலைவன் தலைவியை விவாகஞ்செய்தமை உன் சுற்றத்தார்க்குச் சென்று சொல்லென்று பாங்கியினிடத்துக் கூறுதல்.

எந்தமர் சூழ்ந்த விருங்குழ னாப்ப ணிசைந்திருந்திந்
நந்தமர் கந்தர நங்கையை வேட்டவந் நன்னலத்தை
வந்தமர் கண்டபெம் மான்ஷம்சுத் தாசின் மலைவெற்பி
னுந்தமர் கேட்ப நவனுதி சென்றென்ற னுண்ணிடையே. (360)

பாங்கி தானது முன்னே சாற்றிய துரைத்தல்.

(இ-ள்.) வெளி.

மணந்தே னெனுஞ்சொன் வருமுன மேபசு மாமயிலைத்
தணந்தே மறுகுமத் தையனல் லாட்கென் றுஞ் சாரலர்தேர்க்
கணந்தேய்த் தொழிக்குமெம் மான்ஷம்சுத் தாசின் கனகவெற்பி
னிணந்தே ரயின்மறை யேயறைந் தேனந்த நீர்மையையே. (361)

இவற்றுள் - நற்றாய் மணமயர் வேட்கையிற் செவிலியை வினவுதலொன்றும் வினுதற்கும், வரைந்தமை பாங்கி செவிலிக் குணர்த்தலும் வரைந்தமை செவிலி நற்றாய்க்குணர்த்தலும் பாங்கி தானது முன்னே சாற்றிய துரைத்தலுமாகிய மூன்றும் செப்பற்கும், யான் வரைந்தமை நுமர்க்கியம்பு சென்றென்ற லொன்றும் மேவற்கு முரியன.

தன்மனைவரைதல் முற்றிற்று.

---

## உடன்போக்கிடையீடு.

அஃதாவது - நம்மனையில் வரைந்து கொள்ளாது தன்னூரில் வரைந்தானென்று தலைவி சுற்றத்தார் வெறுப்படைதலால் தலைவி

யையுடன்கொண்டு போம்போது தலைவி சுற்றத்தா ரிடையிட்டு மீண்டு தலைவி வருதல். அது-போக்கறிவுறுத்தல் வரவறிவுறுத்தல் நீக்கம் இரக்கமொடு மீட்சி என நான்கு வகைப்படும்; அவை நீங்கும் கிழத்தியர் பாங்கியர் தமக்குத் தன்செலவுணர்த்தி விடுத்தல் முதல் தலைமகளவன்புற நோக்கிக் கவன்றுற்ற லீறாகிய ஆறு விரிகளையுடையன; அவை வருமாறு:—

நீங்குங் கிழத்தி பாங்கியர்தமக்குத் தன்செல வுணர்த்தி விடுத்தல்.

(இ-ள்.) ஏழம்பத்தைத்தாரான் தன்னூரைவிட்டு நீங்குந் தலைவி எதிர்வருவார் தம்மொடு தலைவனுடன் செல்லுந் தன் செலவைப் பாங்கியர்க்குச் சொல்லி யனுப்புதல்.

சூலுற்ற வானெனு மால்ஷம்சுத் தாசின் சுடர்க்கிரிசென்
னூலுற்ற நுண்ணறி வீருற வாதியர் கோவறநற்
பாலுற்ற நீரென வன்பர்பின் னுறுமிப் பாழ்ஞ்சுரத்தின்
மேலுற்ற வாறறை வீரய ராதென்றன் மெல்லியர்க்கே. (362)

தலைமக டன்செல வீன்றாட் குணர்த்தி விடுத்தல்.

(இ-ள்.) தலைவி தலைவனுடன் போதலைத் தன்றாய்க்குச் சொல்லி யனுப்புதல்.

கூவி யருளவல் லோன்ஷம்சுத் தாசின் கொழுங்கிரிவா
யாவி யிழந்த வுடல்போ லெனைவிட் டழுங்கனைக்கிப்
பாவி யொருதிருக் காளைபின் வெஞ்சுரம் பற்றினனென்
றோவி லருளுடை யிர்பணிந் தேனுவந் தோதுதற்கே. (363)

நற்றாய்க் கந்தணர் மொழிதல்.

(இ-ள்.) வெளி.

அன்பே யுருவெடுத் தன்னவர் துற்றவொ ராண்டகையின்
பின்பே கனற்பொறி பெய்பரற் கானினுன் பேதைசற்று
முன்பே செலவுணர்ந் தோமினை யேயெதிர் முன்னவர்தம்
மென்பே யொடிக்குமெம் மான்ஷம்சுத் தாசி னிருங்கிரிக்கே. ()

நற்றா யறத்தொடு நிற்றலிற் றமர்பின் சேறலைத்
தலைவிகண்டு தலைவற் குணர்த்தல்.

(இ-ள்.) நற்றாய் தலைவிபின்களவை வெளிப்படுத்தியதனாற் சுற்றத்தார் பின்வருதலைத் தலைவிபார்த்துத் தலைவனுக்கு அறிவித்தல்.

பூசற் கெழுபுயத் தோன்ஷம்சுத் தாசின் பொதியவெற்பிற்
பேசற் கருமயில் வாண்மழு கோதண்டம் பெய்கணையும்
வீசற் கெனவிரைந் தெந்தைய ரன்ப விளக்கிடைபல்
லீசற் குவிந்தெனச் சூழ்ந்தனர் பார்நம் மிரதத்தையே. (365)

### தலைமகனைத் தலைமகன் விடுத்தல்.

(இ-ள்.) வெளி.

*நிதியிற் பெருகுபு மான்ஷம்சுத் தாசி னிமிர்சிலம்பின்*
*மதியிற் பெருகு மலர்முகத் தாயென்றும் வாய்ந்தபஞ்சப்*
*பொதியிற் பெருகு நெருப்பனை வேனெதிர் போந்தவர்க்குன்*
*பதியிற் பெருகுற வேலஞ்சு வேனீ பணிந்தருளே.* (366)

### தமருடன் செல்பவ ளவன்புற நோக்கிக் கவன்றுற்றல்.

(இ-ள்.) *சுற்றத்தாருடன் செல்லப்பட்ட தலைவி அவன் புறங் காட்டிப் போதலை நோக்கிக் கவலைப்பட்டுத் தேறுதல்.*

*என்னுயி ரொன்றே பொருளொனு நாட்டந் தெதிர்ந்தவிந்த*
*மன்னுயிர் காத்த மகிபர்க்கன் றேவுற்ற வையமெல்லாந்*
*தன்னுயி ரென்னுநல் லோன்ஷம்சுத் தாசின் றரியலர்போக்*
*கின்னுயிர் வாழு மெரியழற் கானத் திரும்புகமே.* (367)

*இவற்றன் - நீங்கும் கிழத்தி பாங்கியர் தமக்குத் தன்செல வுணர்த்தி விடுத்தலும் தன் செலவின்றாட் குணர்த்தி விடுத்தலும் ஈன்றாட் கந்தணர் மொழிதலுமாகிய மூன்றும் போக்கறி வுறுத்தற் கும், ஈன்றா ளறத்தொடு நிற்றலிற் றமர்பின் சேறலைத் தலைவி கண் டுரைத்த லொன்றும் வரவறிவுறுத்தற்கும், தலைமகளைத் தலைமகன் விடுத்தலொன்று நீக்கற்கும், தமருடன் செல்பவ ளவன் புறநோக் கிக்கவன் றுற்றலொன்றும் இரக்கமொடு மீட்சிக்குமுரியன.*

*இதுவரையும் ஐம்பத்தைந்தாநாள் நிகழ்ச்சி.*

*உடன்போக் கிடையீடு முற்றிற்று.*

## வரைவு.

*அஃதாவது:—ஐம்பத்தாறாநாள் தலைவன் மீண்டு தலைவியில் லின் வாராநின்றுழித் தலைவி தமரெதிர் கொண்டுபோ யழைத்து வந்தபின் உலகவியற்கையின்படி பலவிதமாக அருங்கல முதலிய வேண்டுவனகொடுத்துப் பெரியோரையுஞ் சான்றோரையு முன்னி ட்டு மணச்சடங்குடனே வதுவை முடித்தல்; இதற்கு வகையும் விரி யுமில்லை.*

### சான்றோர் பெரியோரை முன்னிட் டருங்கலந் தந்து வரைந்துழிக் கண்டோர்மகிழ்ந்து கூறல்.

(இ-ள்.) *சான்றோரையும் பெரியோரையு முன் வைத்துக்கொ ண்டு தலைவன் அரிய ஆபரணங்களைத் தலைவிக்குக் கொடுத்து விவா கஞ்செய்ய ; அதைப் பார்த்தவர் மகிழ்ந்து சொல்லுதல்.*

அமையாத வின்பத் தலர்மணம் போலிவ ரார்ந்தமணங்
குமையா தலகிடைக் கொண்டவ ரார்களி கொள்ளகல்லோர்
தமையா தரிக்கும்பு மான்ஷம்சுத் தாசின் றடத்திடைகா
மிமையாத கண்ணொரு கோடிபெற் றேமில்லை யின்றைக்குமே. ()

இங்ஙனமொரு தலைவனுக்குந் தலைவிக்கும் ஒருகால் மணமுடிப்பதன்றிப் பலகால் மணமுடிந்ததாகக்கூறுதல் உலகின்கண் வழங்குவதன்றே, இவ்வாறு கூறியதென்னையெனின்? உடன்போய்த் தன்னூரின் கண்ணே வரைதலு மீண்டுவந்து தன்மனையின் கண்ணே வரைதலும்பெரியோர் சான்றோரைமுன்னிட்டுத் தாய்தமரறிய மணச்சடங்கின் முறையே முடியாமையான் அவையிரண்டு மணமாகா; அஃதென்னையெனின்? உலகியல்பின்கண் தாய்தமரறியாது மணச்சடங்கின்றி ஒருவன் உரிமைகருதித் தாலிகட்டு மணம் மணமென்றுலகின் கணுள்ளார் கைக்கொள்ளார்; அவர்க்கே மீண்டு மணச்சடங்குடனே மணமுடிப்பார்; ஆதலால் பெரியோர் முதலாயினாரை முன்னிட்டு அவன் மனையின் மணச்சடங்குடனே முடித்தலின், இதுவே மணமாயினவா றுணர்க.

இதுவரை ஐம்பத்தாறாகான் எனக் கணக்கிட்டதுபோல
மேல் நிகழ்ச்சி கணக்கிட முடியாதென வறிக.

வரைவு முற்றிற்று.

வரைவியல் முற்றுப்பெற்றது.

---

# கற்பியல்.

கற்பென்பது - கற்பிக்கப்படுவது. கற்பித்த லாவதென்னையெனின்? தலைவிக்கு அறிவும் ஆசாரமுந் தலைவனானும் இருமுது குரவராலும் செவிலியாலும் பெரியோர் முதலிய சான்றோராலும் போதித்தல்; ஆதலா லிவ்வியல் கற்பியல் எனப்பெயராயிற்று.

ஆயின், இவ்வாறு களவின்கணொழுகல் கற்பின்கணொழுகல் உலகின்கணின்றெனில்? கூறுதும், அறிவுடையோர் மக்கட்கு மணஞ்செய்புங்கால் இத்தன்மையானை நினக்கு மணஞ்செய்ய நினைத்தோம்; இது நினக்கியைபோ? இயைபின்மையோ? எனவினவி அவரவர் கூற்றின்படி செய்வர்; அவர் கூறுங்கால் குறிப்பானுணர்ந்து செய்வரெனக்கொள்க. இங்ஙனம் இருவருள்ளமும் ஒத்தவழி மணஞ்செய்தலியல்பாயிற்று. ஆகவே உள்ளப் புணர்ச்சி நிகழ்ந்ததாம்; உள்ளப்புணர்ச்சி நிகழ்ந்தபோதே மெய்யுறு புணர்ச்சி நிகழ்ந்ததாயிற்று. இதனை "உள்ளத்தா லுள்ளலுந் தீதே பிறன்பொருளைக் கள்ளத்தாற் கள்வே மெனல்" என்னுங்குறட்குப் பரிமேலழகர் உரை

யில் நினைத்தலுஞ் செய்தலோ டொக்கு மெனக் கூறியதனானுணர்க, எனவே உலகின்க ணிகழுங் கற்பொழுக்க மெல்லாங் கந்தருவ மண த்தின்வழிக் கற்பென்றே கொள்க. இக்கற்பு - மகிழ்வும் ஊடலும் ஊடலுணர்த்தலும் பிரிவும் பிறவும் பொருந்தியதாய், இல்வாழ்க்கை பரத்தையிற் பிரிவு ஓதற்பிரிவு காவற்பிரிவு தூதிற்பிரிவு துணைவயிற் பிரிவு பொருள்வயிற்பிரிவு என எழு பாகுபாடுடையது; அவற்றுள்,

## இல்வாழ்க்கை.

அஃதாவது-தலைவனுந் தலைவியும் இல்லின் கண்ணே வாழுத லைக் கூறுதல்; அது-கிழவோன் மகிழ்ச்சி கிழத்தி மகிழ்ச்சி பாங்கி மகிழ்ச்சி செவிலி மகிழ்ச்சியென நான்கு வகைப்படும்; அவை-தலை வன் தலைவிமுன் பாங்கியைப் புகழ்தல் முதல் அன்னவர்காத லறிவி த்த லீறாகிய பத்துவிரிகளை யுடையன; அவை வருமாறு:—

தலைமகன் றலைவிமுன் பாங்கியைப் புகழ்தல்.

(இ-ள்.) வெளி.

தன்றுயர் நோக்கார் பிறர்துயர் நோக்குவர் தாமெனநின்
றென்றுயர் நோக்கி யிரும்பிணிக் கின்னமிழ் தென்னவுல
கின்றுயர் நீக்குமிக் கோன்ஷம்சுத் தாசி னெழிற்சிலம்பி
னின்றுயர் மாமணை நேர்ந்தனை வாழியென் னேரிழையே. (369)

தலைவனைப் பாங்கி வாழ்த்தல்.

(இ-ள்.) வெளி.

மணியொளி யாகி மலர்மண மாகி மரீஇழலா
யணியொளி வாய்ந்த வணங்கொடு நீயுமெ னண்ணலென்றாழ்
பணியொளி மாமுடி வேள்ஷம்சுத் தாசீன் பனிவரைவாய்
நணியொளி போனனி வாழிபல் லாண்டிந்த நானிலத்தே. (370)

பாங்கி தலைவியை வரையுநாளளவும் வருந்தாதிருந்தமை யுரையாயென்றல்.

(இ-ள்.) தோழி தலைவியை நோக்கித் தலைவன் மணஞ்செய்யு மிதுகாறும் பொறுத்திருந்தமையைச் சொல்லென்று கேட்டல்.

மானு ரலரு மதனு ரலரு மருவியொன்றாய்த்
தானூர் பொழுது சகித்ததெவ் வாறன்பர் சாரளவுங்
கானு ரலங்கற்பி ரான்ஷம்சுத் தாசீன் கனகவெற்பிற்
றேனூர் நறுங்குழ லாயுரை யாயிவண் டேர்ந்தெனக்கே. (371)

பெருமக ளுரைத்தல்.

(இ-ள்.) தலைவி தான் வருந்தாதிருந்த காரணம் பாங்கிக்குக் கூறுதல்.

முன்னிலை விட்டுத் தணர்தன ரேனு முழுதுமுள்ளிற்
றன்னிலை விட்டுத் தணந்தில ரேயவர் சார்ந்தபுகழ்ப்
பொன்னிலை வாழ்புயத் தோன்ஷம்சுத் தாசீன் பொதியவெற்பி
லென்னிலைக் கேதிங் கிருந்துயர் நாளுமெ னேந்திழையே. (372)

தலைவனைப் பாங்கி வரையுநா ளளவு நிலைபெற
வாற்றிய நிலைமை வினாதல்.

(இ-ள்.) தலைவியைத் தலைவன் விவாகஞ்செய்யும்வரை யுயிர் தரித்திருக்கச்செய்த நிலைமையைத் தோழி தலைவனிடங் கேட்டல்.

மருப்பும் பொருப்பு மருட்டிய கொங்கைமென் மங்கைமய
னெருப்பும் விருப்பு நெகிழ்ந்தர சேமண நேரளவு
மருப்புந் திருப்பதத் தான்ஷம்சுத் தாசீ னருட்கிரிவா
யிருப்பு மகமு மிசைந்ததெவ் வாறிசை யென்றனக்கே. (373)

மன்றன் மனைவரு செவிலிக் கிதனை யன்புற வுணர்த்தல்.

(இ-ள்.) கலியாண மனையில் வந்த செவிலிக்குப் பாங்கி இருவரது அன்பையும் பொருந்தக் கூறுதல்.

பொன்னகத் தாமரை போந்திருந் தானவன் போந்தவவன்
றன்னகத் தாமரை சார்ந்திருந் தாளிவள் சாற்றிடிது
மின்னகத் தாமரை வேள்ஷம்சுத் தாசீன் வியன்சிலம்பிற்
பன்னகத் தாமரைப் பான்மொழி யேயுன்றன் பாக்கியமே. (374)

பாங்கி யில்வாழ்க்கை நன்றென்று செவிலிக் குணர்த்தல்.

(இ-ள்.) தோழி தலைவியின் இல்வாழ்க்கை நல்லதென்று செவிலித்தாய்க்குக் கூறுதல்.

இல்லற மல்லது நல்லற மன்றென் றியம்புமந்தச்
சொல்லற வாய்ந்தனை யேயுன்ற னறிழை சூழ்ந்தெதிர்ந்தோர்
மல்லற மாய்க்குமெம் மான்ஷம்சுத் தாசீன் மலையவெற்பிற்
பல்லற மாற்றப் படர்தரு மாலது பாரகத்தே. (375)

மணமனை சென்றுவந்த செவிலி பொற்றொடி
கற்பிய னற்றாய்க் குணர்த்தல்

(இ-ள்.) விவாகஞ்செய்யப்பட்ட வீட்டுக்குப்போய்ப் பார்த்து வந்த செவிலித்தாய் தலைவியின் கற்பியலை நற்றாய்க்குச்சொல்லல்.

கிதமா நிதிநிகர் சேய்ஷம்சுத் தாசீ னெடுங்கிரிவாழ்
கனமா ரிருங்குழற் கற்பிற் கிணையெவர் காசினியி
னினமா வருந்ததி யில்லையன் னையென் றியின் றுமுற்ற
மனமாந் தராசகம் வைத்தா னுயருமவ் வானளவே. (376)

நன்மனை வாழ்க்கைத் தன்மை யுணர்த்தல்.

(இ-ள்.) செவிலித்தாய் நற்றாய்க்குத் தலைமகளது நல்ல மனை வாழ்க்கைத் தன்மையைச் சொல்லுதல்.

அரவறிந் தொல்கிய வல்குனல் லாய்மக ளாய்ந்தெளியோ
ரிரவறிந் தீந்து மினியன சொற்று மினம்புரந்தும்
வரவறிந் தேற்று மதித்தன ணல்லறம் வந்தெதிர்ந்தோ
ருரவறிந் தோட்டுமிக் கோன்ஷம்சுத் தாசி னொளிர்கிரிக்கே. (377)

செவிலி நற்றாய்க் கிருவர் காதலையு மறிவித்தல்.

(இ-ள்.) செவிலி நற்றாய்க் கிருவ ராசையையுங் கூறுதல்.

வன்மறந் தாழ்த்துமெம் மான்ஷம்சுத் தாசின் மலையவெற்பர்
சென்மறந் தாங்குளைத் தேசியந் தேரன்னை சென்றவந்த
மன்மறந் தானும் வழிமறந் தானு மருவுமல்லி
னென்மறந் தானு மறவா துறமக ளில்லிடமே. (378)

இவற்றுள்-தலைவன் றலைவிமுன் பாங்கியைப் புகழ்தலொன்றுங் கிழவோன் மகிழ்ச்சிக்கும், தலைவனைப் பாங்கி வாழ்த்தல்முதல் பாங்கி வாழ்க்கை நன்றென்று செவிலிக்குணர்த்த லீறாகிய வாறனுள் பெருமகளுரைத்தலொன்றுங் கிழத்தி மகிழ்ச்சிக்கும், அல்லனவைத்தும் பாங்கி மகிழ்ச்சிக்கும், மணமனைச் சென்றுவந்த செவிலி பொற்றொடி கற்பியனற்றாய்க் குணர்த்தலாகிய மூன்றுஞ் செவிலி மகிழ்ச்சிக்கு முரியன.

இல்வாழ்க்கை முற்றிற்று.

---

## பரத்தையிற் பிரிவு.

அஃதாவது - தலைவன் பரத்தைமேற் காதலாய்த் தலைவியைப் பிரிந்து பரத்தையர் சேரியிற் போதல். அது-வாயில்வேண்டல் வாயின் மறுத்தல் வாயினேர்வித்தல் வாயினேர்தல் என நால்வகைப்படும்; அவை-காதலன் பிரிவுழிக்கண்டோர் புலவிக்கேதுவிதா மவ்விறைவிக்கென்றல் முதல் புணர்ச்சியின் மகிழ்த லீறாகிய பத்தும் உணர்த்த வுணரு மூடலெனவும், வெள்ளணி யணிந்து விடுத்துழிப் புள்ளணி மாலையே லண்ணல் வாயில்வேண்டல் முதல் இணர்த்தார் மார்பனையிகழ்தலும் பிறவு மிறுதியாகிய அனைத்தும் உணர்த்த வுணரா வூடலெனவு மிருவகைப்படும்; அவை வருமாறு:—

காதலன் பிரிவுழிக்கண்டோர் புலவிக்கேதுவிதா
மவ்விறைவிக்கென்றல்.

(இ-ள்.) தலைவன் தலைவியைப் பிரிந்து பரத்தையர் சேரிக்குப் போதலைப் பார்த்தோர் இது வூடலுக்குக் காரணமென்றுகூறல்.

எள்ளும் பிரிகில னென்றிக வாவன்ப ரின்றெழுந்து
துள்ளு மறிவிழிச் சூளையின் றோர்முன்றி றேய்ந்துநின்றார்
கொள்ளும் பெருந்தவக் கோன்ஷம்சுத் தாசின் கொழுங்கிரிவா
யுள்ளும் புலவிக் கிதுவல தில்லையவ் வொண்டொடிக்கே. (379

சங்கித்து வெவ்வேனைப் பாங்கி வினுதல்.

(இ-ள்.) பாங்கி தலைவியை நோக்கி நீயழுதுகொண் டிருத்தகுக் காரண மென்னென்று வினுதல்.

குறையாப் பெருநலங் கூண்டளிப் பார்பக்கங் கூர்ந்திருந்து
நிறையாப் பசியர்போ னின்றினைந் தாலென்று நேரலரைச்
சிறையா விருத்துமெம் மான்ஷம்சுத் தாசின் செழுஞ்சிலம்பின்
பிறையா ரிருநுதற் பெண்ணணங் கேயென்கொல் பேசுவையே (

இறைமகன் புறத்தொழுக் கிறைமக ளுணர்த்தல்.

(இ-ள்.) தலைவன் தன்னிடத்தொழுகு மொழுக்கமின்றிப் பத்தையரிடத் தொழுகுகின்றானென்று தலைவி பாங்கிக்குக் கூறுத புறத்தொழுக் கென்பதற்குப் பொருள் - பரத்தையரிடத் தொழு மொழுக்கமென்று பொருள்கொண்டவா றென்னையெனின்? வட லார் புறமுரைப்பாமென்று கூறுவ ராதலாற் பரத்தையரென்னு சொற்குப் புறமுடையவரென்னும் பொருள்கூறி னின்றவா றுணர் புறமுடைய ரென்ப தென்னையெனின் இவரின்ப மின்பமன்றென் திருவள்ளுவர் வரைவின் மகளி ரென்னு மதிகாரத்தில் இன்பத்தி குப் புறம் இவரின்பமென்று கூறியவாற்றா னுணர்க. "இருமன பெண்டிரும்" என்னும் திருக்குறளானு முணர்க.

வானு ரமுத வகைவிடுத் தோடி மலிந்தநஞ்சத்
தானுர் பவரிற் றவித்தலைந் தார்பரத் தையலரு
ரானு தமர்புக ழோன்ஷம்சுத் தாசி னருஞ்சிலம்பிற்
கானுர் மலர்க்குழற் கன்னிநல் லாய்நந்தங் காவலரே. (38

தலைவியைப் பாங்கி கழறல்.

(இ-ள்.) தலைவிக்குப் பாங்கி புத்தி கூறுதல்.

மனையறம் பேணி மகிழ்நர்சொற் காத்து மகிழ்வதல்லாற்
பினையற மேதணங் கேயுணர் வாயெதிர் பேணலர்தம்
வினையற வென்றவெம் மான்ஷம்சுத் தாசின் மிளிர்கிரிவாய்
நினையற மாதென நேரரி தாலன்பர் நீள்குறையே. (38

தலைவி செவ்வணி யணிந்து சேடியை விடுப்புழி
யவ்வணி யுழையர்கண் டழுங்கிக் கூறல்.

(இ-ள்.) தலைவி பூத்தகாலை மூன்றுநாட் போக்கி நாலாந் நீராடியபின் இவற்றி னறிகுறியாகச் செம்பூவும் செவ்வாடையுஞ்

ஞ்சாத்தும் புனைவித்துத் தோழியைப் பரத்தையினிடத் திருக்குந் தலைவனிடந் தூதாக அனுப்ப, அவ்வலங்காரத்தைத் தோழியினிடத்து அயல்மனையி னுள்ளார் பார்த் திரங்கிக் கூறுதல்.

பாணுறு மென்மொழிப் பாவைநல் லீருற்ற பற்றலர்மெய்
பூணுறும் வாட்கரத் தோன்ஷம்சுத் தாசி னுயர்சிலம்பிற்
றூணைத் தலைவிரித் தாடுநர்க் கோர்கொட்டுத் தான்கிடைத்தாங்
காணாத செவ்வணி சூணிலை யோவெஞ்சொ லாரவரே. (383)

பரத்தையர் கண்டு பழித்தல்.

(இ-ள்.) அச்சேரியிற் போகிய தோழியின் செவ்வணியைப் பரத்தையர் பார்த்து நிந்தித்துக் கூறுதல்.

பூமக ளாய்ப்பல செவ்வணி பூண்டு புறத்தமைந்த
கோமக ளாயிவ ளூற்றவ ளாருளக் கொள்கையென்னே
நாமக னாவினெம் மான்ஷம்சுத் தாசி னலத்தகிரிப்
போமக ளீரறி விருரை யீர்கொண்ட பொய்ம்மையையே. (384)

பரத்தைய ருலகிய னோக்கிவிடுத்தலிற் றலைமகன் வரவுகண்டு வாயில்கள் மொழிதல்.

(இ-ள்.) தலைவி நீராடிய ஞான்று பரத்தையர் தங்கள் சேரியில் தலைவனிருத்தல் உலக முறைமைக்கு இயலாதென்று அவனை யனுப்பத் தலைவன் வருதலைக் கண்ட தாதிகள் பாங்கிக்குச் சொல்லுதல். உலக முறைமைக்கு இயலாமை "பூத்த காலைப் புனையிழை மனைவியை, நீரா டியபின் னீரா றுநாளுங், கருவயிற் றுறூஉங் கால மாதலிற், பிரியப் பெறாஅன் பரத்தையிற் பிரிவோன்" என்பதனானு முணர்க. (அகப்பொருள்-அகத்திணையியல் ௧௧.)

பொன்னார் கமலப் பொலன்றிரு வேவுமப் பூவைமொழி
மின்னாள் செலுமுன் விரைந்தன ராலென்று மேவலரைத்
தன்னா ளனப்பணிப் போன்ஷம்சுத் தாசின் றடஞ்சிலம்பி
னன்னா யிறைவ ருலகியல் காத்திங் களிப்பதற்கே. (385)

வரவுணர் பாங்கி தலைவிக் குணர்த்தல்.

(இ-ள்.) தலைவன் வரவுணர்ந்த பாங்கி தலைவனை யெதிர்கொள்ளத் தலைவிக்குச் சொல்லுதல்.

உள்ளா துனைமுன் னொறுத்தகன் றார்பின்ன ருள்ளியுள்ள
மெள்ளா தடைந்தன ரிற்கடை யேற்றவர்க் கென்றுமின்மை
கொள்ளா தளிக்குமென் கோன்ஷம்சுத் தாசின் குளிர்வரைவாய்த்
தள்ளா தழைப்பதன் றோதன்ம முங்கற்புந் தாழ்குழலே. (386)

தலைவனைத் தலைவி யெதிர்கொண்டு பணிதல்.

(இ-ள்.) தலைவனைத் தலைவி யெதிர்சென்று வணங்குதல்.

முனையுங் கடகரிக் கோன்ஷம்சுத் தாசின் முதிர்கிரிவாய்
நனையு மிருவிழி நீர்விடுத் துன்பத நான்பணிதற்
கெனையும் பொருளென வெண்ணியின் றுன்னை யிவண்விடுமங்
கனையும்பல் லாண்டுபல் லாண்டுயிர் வாழியென் காவலனே. (387)

புணர்ச்சியின் மகிழ்தல்.

(இ-ள்.) வெளி.

வானு ரமிழ்தும் வகையில தேலவர் மன்னியொன்றுய்த்
தானு ரமிழ்தத் தனிநிலைக் கென்றுமித் தாரணிக்கோர்
கோனு யமர்பெரு மான்ஷம்சுத் தாசின் குளிர்வரைவாய்
நானு யெடுத்து நவில்வதென் னேவிந்த நானிலத்தே. (388)

இப்பத்துத் துறைகளும் உணர்த்தவுணரு மூடற்குரியன.

வெள்ளணியணிந்து விடுத்துழித் தலைமகன் வாயில்வேண்டல்.

(இ-ள்.) தலைவி புதல்வனைப் பயந்து நெய்யாடிய செய்திக்கு அடையாளமாக வெள்ளிய ஆபரண முதலியன வணிந்து சேடியைத் தலைவனிடத்துச் செலுத்தி தாயர் விடுக்க, வந்த தோழியைத் தலைவன் அதாக வேண்டிக் கூறுதல்.

வெண்டா மரைமகள் போலுநல் வெள்ளணி வேய்ந்துவிண்ணி
னெண்டா ரகையென வுற்றமின் னேயென்று மொன்னலரைத்
துண்டா விழுத்துமிக் கோன்ஷம்சுத் தாசின் சுடர்க்கிரிவாய்த்
தொண்டாக் கொளவெனைச் சொல்பவ ராரந்தத் தூமொழிக்கே.()

தலைவி நெய்யாடிய திதனை சாற்றல்.

(இ-ள்.) தலைவி புதல்வனைப் பெற்று நெய்யாடியதனைப் பாங்கி தலைவனுக்குச் சொல்லுதல். நெய்யாடுதல்-நெய்தேய்த்து ஸ்நானஞ் செய்தல்; இது - பிள்ளைப்பேற்றுச் சடங்கிலொன்று.

வலம்புரி யீன்ற மணியென நின்மட மாதொருநன்
னலம்புரி யாண்மக வீன்றுநெய் யாடின ளுளுமெழு
தலம்புரிக் கோனுடைக் கோன்ஷம்சுத் தாசின் றடத்தகத்தோ
ருலம்புரி தோளண்ண லேயுணர் வாய்மற்றெ னேதுவதே. (390)

தலைவன்றன்மனத் துவகைகூறல்.

(இ-ள்.) வெளி.

மின்னைப் பழித்த விடையுடை மாதொரு மென்மகவுக்
கன்னைப் பருவ மமைந்தன ளென்னு மருண்மொழிபார்

தன்னைத் தனிபுரப் போன்ஷம்சுத் தாசின் மடங்கிரிவாய்
முன்னைத் தவமல வோவந்தின் றென்செவி முற்றியதே. (391)

தலைவிக் கவன்வரல் பாங்கி யுணர்த்தல்.

(இ-ள்.) வெளி.

மகவுயிர்த் தாளென வாய்வழுத் தாமுன்றன் மாகுறைக்கே
மிகவுயிர்த் தார்மனை மேவிநின் றூரன்பர் மேதினிக்கம்
பகவுயிர்த் தாய்நிகர்த் தோன்ஷம்சுத் தாசின் படர்சிலம்பின்
றகவுயிர்த் தாய்தடை யேல்வரு வாயெதிர் தந்திடற்கே. (392)

தலைவி யுணர்ந்து தலைவனொடு புலத்தல்.

(இ-ள்.) தலைவி தலைவன் வருதலைத் தெரிந்து ஊடுதல்.

மையை நிகர்கரத் தோன்ஷம்சுத் தாசின் மணிவரைவாய்ப்
பொய்யைத் தழுவும் பொதுமகள் வாசலிற் போயிருவென்
மெய்யைத் தொடச்சகி யேனகல் தூர விலகுநில்சொல்
கையை யெடுவிடு சீலையி லின்றென்ன காரியமே. (393)

தலைவி பாணனை மறுத்தல்.

(இ-ள்.) வெளி.

இன்னிசை காட்டி யெனைமயக் காக்கற் கிவணெழுந்த
துன்னிசைப் பாண தொலைதொலை நில்லேல் தொடர்ந்தெவரும்
பன்னிசை சூடுமெம் மான்ஷம்சுத் தாசின் பனிவரைமே
னின்னிசை வேண்டுவ ரெங்கைய ரங்க னிகழ்த்துதியே. (394)

வாயின் மறுக்கப்பட்ட பாணன் கூறல்.

(இ-ள்.) வெளி.

அல்லெறி வார்குழ லன்னமன் னையெதிர்ந் தார்தளத்தின்
மல்லெறி வாகையர் கோன்ஷம்சுத் தாசின் மலையவெற்ப
ரெல்லெறி வாட்கையெம் மான்பெய ரோதி யிசைந்தபச்சைக்
கல்லெறி வார்கருங் கல்லெறிந் தாயின்று காய்ந்துநின்றே. (395)

விருந்தொடு வந்துழிப் பொறுத்தல்கண் டிறையோன் மகிழ்தல்.

(இ-ள்.) வெளி.

துன்பிற் கடைபடு மின்பமென் பாரந்தச் சூழ்ச்சியைக்கண்
முன்பிற் றெரிப்ப விருந்தென வந்தது மூவுலகு
மன்பிற் பரவுநல் லோன்ஷம்சுத் தாசி னருட்கிரிவாய்த்
தென்பிற் பொலிந்தன னின்றினி யென்றும்புன் றீவினையே (396)

விருந்துகண் டொளித்த வூடல் வெளிப்பட நோக்கிச்
சீறே லென்றவள் சீறடி தொழுதல்.

(இ-ள்.) வெளி.

எல்லா மறிந்த வியல்பின ருங்குறை யேற்றுருகாற்
பொல்லா விதிவழிப் புக்கில ரோசெயம் பூண்டபுய
மல்லா னுலகளிப் போன்ஷம்சுத் தாசீன் மலையவெற்பி
னல்லாய் பொறுப்பாய் பணிந்தே னினதடி நாண்மலரே. (397)

இஃதெங்கையர் காணி னன்றென்றல்.

(இ-ள்.) எம் தங்கைமாராகிய பரத்தையர் கண்டால் நீர்செய்த பணிவு குற்றமாமென்று தலைவனுக்குத் தலைவி கூறுதல்.

கோலா கலப்பெரு மான்ஷம்சுத் தாசீன் குளிர்வரைவாய்
மாலா கினைபோன் மயக்கினை யீதந்த மான்மருட்டுஞ்
சேலா ரயில்விழிச் சேயிழை யெங்கையர் தேரிலுன்னைக்
காலா லுதைத்துக் கனலுவர் நாளைக் கலங்குவையே. (398)

அங்கவர் யாரையு மறியே னென்றல்.

(இ-ள்.) அப்பரத்தையர் யாரையுந் தெரியேனென்று தலைவன் தலைவிக்குக் கூறுதல்.

பழுக்கு மமுதப் படர்சுவை யுண்டவர் பாரிலதைக்
கொழுக்கும் படிவிடுத் துண்பர்கொல் லோவிடங் கூண்டெழுந்து
முழுக்கும் பெரும்புகழ் வேள்ஷம்சுத் தாசீன் முதிர்கிரிவா
யிழுக்கு மவரெவர் யாமறி யேமென்று மேந்திழையே. (399)

காமக் கிழத்தியைக் கண்டமை பகர்தல்.

(இ-ள்.) தலைவி அப்பரத்தைமாரைப் பார்த்ததைத் தலைவனுக்குக் கூறுதல்.

மறுகுறப் போந்த மதலையைக் கண்டொரு மங்கைதன்மார் [தோர்
பிறுகுறச் சேர்த்தன்னை யானுமென் றுளுண்மை யென்றெதிர்த்
சிறுகுறச் செய்யுமிக் கோன்ஷம்சுத் தாசீன் சிமையவெற்பிற்
குறுகுற நான்முகங் கோடின ளோடினள் கொற்றவனே. (400)

தாமக் குழலியைப் பாங்கி தணித்தல்.

(இ-ள்,) தலைவி கோபத்தைப் பாங்கி தணித்தல்.

பணிவாற் பகையறு மென்பரன் பாற்சிரம் பார்த்திபருன்
மணிவார் சிலம்படி வைத்துநின் றுரினி மாற்றலரைத்
துணிவாய்ப் பொருபெரு மான்ஷம்சுத் தாசீன் சுடர்க்கிரிவாய்த்
தணிவாய் மதிமுகத் தையனல் லாயவர் தங்குறையே. (401)

தலைமகள் புலவி தணியாளாகத் தலைமக னூடல்.

(இ-ள்.) பாங்கி அங்ஙனந் தணித்தும் தலைவி யூடல் தணியாமை கண்டு தலைவன் ஊடுதல்.

கொல்லுங் களிறுங் குரைபுன லாறுங் குறுகுமங்நாட்
புல்லு மவளிவ ளோவெதிர் நடமென்ன போந்தனமோ
வில்லுங் கணையுங்கொள் வேள்ஷம்சுத் தாசின் வியன்சிலம்பி
லொல்லு மனமே யொழிவா யிவடரு முண்மையையே. (402)

தலைவி யுணர்ந்து தலைவனை யிகழ்தல்.

(இ-ள்.) தலைவி தெரிந்து தலைவனை அன்பில்லாய்! நீ கொடியா யென் றிகழ்ந்து கூறுதல்.

அங்குறை வேசைய ராசையென் செய்தனை யன்றியுமிங்
கெங்குறை யாதுகண் டாயுரை யாயொன்றின் றென்றுமலர்க்
கொங்குறைதோட்டுணைக்கோன்ஷம்சுத் தாசின் குளிர்வரைவாய்த்
தங்குறை காண்கிலர் காண்பார் பிறர்குறை சத்தியமே. (403)

வெள்ளணி யணிந்து விடுத்தல் முதல் தலைவி யுணர்ந்து தலைவனை யிகழ்த லீறாகிய இப்பதினைந்து துறைகளும் உணர்த்த வுணரா வூடற்குரியன.

ஆயிழை மைந்தனு மாற்றமையுமே வாயில்களாக
வரவேதிர்கோடல்.

(இ-ள்.) தலைவன் பரத்தையர் சேரிக்குத் தேரின்மேலேறிப் போம்போது தெரிந்தெடுத்த ஆபரணங்களை யணிந்த புதல்வனெதி ரோடிற்ப அப்புதல்வனைத் தழுவி யெடுத்துக்கொண்டு தலைவனுற்றமையுடன் வந்த இடத்துப் புதல்வனுந் தலைவனுற்றமையுந் தூதுகளாகத் தலைவி தலைவனை யெதிர்கொள்ளல்.

சொல்லரும் வெம்பசி சூழ்ந்துலைந் தாலுந் துணிந்துபுலி
புல்லருந் தாதது போற்புன லூர பொதுமகள்பாற்
றெல்லருஞ் சீர்த்தியங் கோன்ஷம்சுத் தாசின் சுடர்க்கிரிவாய்
வெல்லருங் காமம் விளைவதுண் டோவுற்ற மேலவரே. (404)

மணந்தவன் போயபின் வந்த பாங்கியோ டிணங்கிய
மைந்தனை இனிதிற் புகழ்தல்.

(இ-ள்.) வெளி.

கார்வர வென்றகை யோன்ஷம்சுத் தாசின் கனகவெற்பிற்
போர்வர வென்ற புனற்பெரு மூரர் பொதுமகள்வா
ழூர்வர மீட்டென் னொருமனைக் கேயவ ருற்றபெருந்
தேர்வரச் செய்த சிறுமகன் வாழியென் றேமொழியே. (405)

தலைவி தலைவனைப் புகழ்தல்.

(இ-ள்.) வெளி.

ஆவிக்கு மாவி யெனவுவந் தேற்றநம் மன்பரன்றிப்
பாவிக்குங் கேளிர்மற் றில்லைகண் டாயுற்ற பாரனைத்துஞ்
சேவிக்கும் பூபர்பி ரான்ஷம்சுத் தாசின் சிலம்பினம்மைச்
சீவிக்குங் காதலன் ஞயன்று போரவின்றுந் தேர்ந்தனனே. (406)

சிலைநுதற் பாங்கி தலைவியைப் புகழ்தல்.

(இ-ள்.) வெளி.

கலைக்கணி யாக்கிய வேள்ஷம்சுத் தாசின் கனகவெற்பில்
விலைக்கணி யாக்கிய மெய்யொடு வாயிதழ் மேவுமின்னார்
முலைக்கணி யாக்கிய மொய்ம்புடைத் தோளண்ணன் முண்டகத்தா
டலைக்கணி யாக்கிய தையனல் லாள்கற்புச் சாற்றரிதே. (407)

ஆயிழை மைந்தனு மாற்றுமையும் வாயில்களாக வரவெதிர் கோடல்முதற் சிலைநுதற்பாங்கி தலைவனைப் புகழ்தலீருகிய இவ்வைந்து துறைகளும் மேற்கூறிய விருவகை யூடல்களோடு சேர்ந்து பரத்தையிற் பிரிவின் விரியாமென்க; எனவே இவ்விருபத்தொன்பது துறைகளையும் வாயில் வேண்டல் வாயின் மறுத்தல் வாயினேர்வித்தல் வாயினேர்தல் என்னும் நான்கு வகைக்கு மேற்ற பெற்றி யறிந்து முடித்துக் கொள்க.

பரத்தையிற் பிரிவு-முற்றிற்று.

## ஓதற் பிரிவு.

அஃதாவது-தலைவன் கல்வி காரணமாகப் பிரிதல். தலைவன் தலைவியை யெய்தியிருந்தும் ஓதற்குப் பிரிவு குறைபாடாகாதோ வெனின்? ஆகாது. என்னை? புலமை நிரம்பாம லக்குறை தீர்ப்பான் ஓதற்குப் பிரித லன்று. பண்டே குரவராற் கற்பிக்கப்பட்டு, அறம் பொருள் இன்பம் வீடு முதலிய நூல்களெல்லாங் கற்றுன் பரதேயத்து அவை வல்லாருளரெனிற் சென்று தன்னறிவை மேற்படுத்திக் காட்டற் கென்க. இவ்வோதற்பிரிவு முதலிய எல்லாப்பிரிவுகளும்- பிரி வறிவுறுத்தல் பிரிவுடன் படாமை பிரிவுடன் படுத்தல் பிரிவுடன் படுதல் பிரிவுழிக்கலங்கல் வன்புறை வன்பொறை வருவழிக்கலங்கல் வந்துழிமகிழ்ச்சி என வொன்பது வகைப்படும். ஆங்காங்குக்காண்க.

ஓதற்குப் பிரிவு தலைமகன் றன்னு லுணர்ந்த தோழி
தலைமகட் குணர்த்தல்.

(இ-ள்.) தலைவன் ஓதற்குப் பிரிதலை அத்தலைவனாலறிந்த பாங்கி தலைவிக்குக் கூறுதல்.

L7503
(8673)

ஓங்கும் பெரும்புகழ்க் கோர்விதை யாகி யுயிரனைத்துந்
தாங்கும் பலகலை தாஞுணர் வானன்பர் சார்ந்தனரால்
வாங்கும் வரிசிலை மால்ஷம்சுத் தாசீன் மலையவெற்பி
லேங்குங் கொடுங்கன லேய்பாற் கானத்தெ னேந்திழையே. (408)

தலைமகள் கார்ப்பருவங்கண்டு வருந்தல்.

(இ-ள்.) தலைவி கார்காலம் வர அதுகண்டு வருந்திக் கூறுதல்.

கலைக்கடல் காணக் கடந்தன ரென் செய்வல் காண்கிலரோ
மலைக்கடல் செய்புய மால்ஷம்சுத் தாசீன் மலையமன்னு
யலைக்கடன் மாந்தி யகங்கறுத் தோங்கி யறவுறுத்தென்
னிலைக்கடல் செய்ய நிமிர்ந்தது வானி னெடுமுகிலே. (409)

பாங்கி யாற்றுவித்தல்.

(இ-ள்.) வெளி.

வள்ளக் கமலச்செவ் வாயித ழுண்டு மருவுமின்பங்
கொள்ளத் தலைவர் குறுகின ரென்றெதிர் கூடலர்தோள்
துள்ளத் துணித்தபெம் மான்ஷம்சுத் தாசீன்றன் னுடனையாய்
விள்ளக் கருதி விரைந்தது முன்னிந்த விண்முகிலே. (410)

ஓதற்பிரிவு முற்றிற்று.

---

## காவற்பிரிவு.

அஃதாவது-நாடு காத்தற்குப் பிரியும் பிரிவு. அங்ஙனமாயின் தலைவன் நாட்டை நலிதலுங் கைக்கொள்வதும் உளராக, அவை தீர்க்கச்செல்வானாயின் வலியிலனாதல் வேண்டுமெனின்? அற்றன்று. நாட்டகத்தினின்று நகரகத்துவந்து குறைசொல்ல மாட்டாத மூத்தோரும் பெண்டிரும் கூனரும் குருடரும் பிணியுடையாருமாகிய இத்தொடக்கர் முறைப்பாடு கேட்டுத் திருத்துதல் காரணமாகவும் வளனில்வழி வளந்தோற்றுவித்தற்கும் அறச்சாலை முதலியவற்றை யாராய்தற்கும் உயிர்கள் தாயைக்கண் டின்புறுதல்போல் தன்னாற் காக்கப்பட்ட!அவ்வுயிர்கள் தன்னைக்கண் டின்புறத் தன்னுருவு காட்டற்கு மென்க.

காவற்குப் பிரிந்த தலைமகன் றன்னா லுணர்ந்த
தோழி தலைமகட் குணர்த்தல்.

(இ-ள்.) தலைவனது காவற் பிரிவை அத் தலைவனா லறிந்த தோழி தலைவிக்குக் கூறுதல்.

வான்காக்குங் காப்பினு மற்றையர் காப்பினு மாண்டதென்றுங்
கோன்காக்குங் காப்பெனக் கூறுவ ரம்மொழி கூர்ந்திசைந்த
கான்காக்குங் கண்ணியர் கோன்ஷம்சுத் தாசீன் கனகவெற்பிற்
றுன்காக்குங் காப்பிற் கெழுந்தன ரன்பரென் றூழ்குழலே. (411)

தலைமகள் கூதிர்ப் பருவங் கண்டு வருந்தல்.

(இ-ள்.) தலைவி கூதிர் காலம் வரக்கண்டு வருந்துதல்.

சீதள வாடை சிறுபனி நீரிற் றிமிர்ந்தெழுந்தென்
மீதள வூர்ந்தும் விரைந்தில ரென்செய்வன் மேவுமொன்னார்
மாதளந் தூர்த்தவல் லோன்ஷம்சுத் தாசீன் மலையவெற்பிற்
காதள வோடிய கட்டிருவே சென்ற காதலரே. (412)

தோழி யாற்றுவித்தல்.

(இ-ள்.) வெளி.

மன்னுயிர் காக்க மகிழ்ந்தெழுந் தாருற்ற வாடைகண்டு
நின்னுயிர் காக்க நினைந்தன ரலென்று நேர்ந்தவர்க்கோ
ரின்னுயி ரென்னுமெம் மான்ஷம்சுத் தாசீ னிமையமன்னாய்
தன்னுயிர் பொய்க்கினும் பொய்க்குவ ரோகற்ற தக்கவரே (413)

காவற்பிரிவு முற்றிற்று.

---

## தூதிற் பிரிவு.

அஃதாவது- இரண்டரசர் தம்மிற் பொருகின்ற விடத்து அவரைச் சமாதானஞ் செய்வித்தற்குப் பிரியும் பிரிவு. அரசரைச் சமாதானஞ் செய்வித்தற்குப் பிரியும் பிரிவெனின், தூதுவராவார் பிறர்க்குப் பணிசெய்து வாழ்வார்; அவரொப்பில்லா ராவா ரென்பதென்னையெனின்? இரண்டரசரும் நாளைப் பொருவோமென்று முரண்கொண்டிருந்த நிலைமைக்கண் தா னருளரசனாதலின் மக்களும் விலங்குகளும் பல படல் சகியாது இப்போரையொழிப்பேனென்று, இருவரையு மிரந்து சமாதானஞ் செய்வித்தலாலென்க. அன்றி, தேவருமசுரரும் பொருதகாலத்துத் தேவரையு மசுரரையு மிகைசெய்தாரையானொறுப்பலென்று பாண்டியன் மா கீர்த்தி சமாதானஞ் செய்வித்ததுபோல இவரையு மிகைசெய்தாரை யொறுப்பலென்று தூதாகச் செல்லுதலென்றலு மொன்று.

தூதிற்குப் பிரிவு தலைமகன் றன்னு லுணர்ந்த
தோழி தலைமகட் குணர்த்தல்.

(இ-ள்.) தலைவன் தூதின்பொருட்டுப் பிரிதலை அத்தலைவனாலறிந்த பாங்கி தலைவிக்குக் கூறுதல்.

வஞ்சினங் காட்டி மலையு மிருபெரு மன்னரமர்க்
கஞ்சின ராயின் றகன்றனர் காணடங் காவரசர்
தஞ்சினம் வாங்குமிக் கோன்ஷம்சுத் தாசின் றடத்திறையென்
னஞ்சின வேல்விழி யாய்கடு கின்றற நாட்டுதற்கே. (414)

தலைமகன் முன்பனிப் பருவங்கண்டு வருந்தல்.

(இ-ள்.) வெளி.

குனிக்கும் வரிசிலைக் கொற்றவர் சீற்றங் குலைப்பதற்கென்
றினிக்கு மொருபெருந் தூதெனப் போந்த விறைவரென்றுஞ்
சனிக்கும் பெரும்புக ழோன்ஷம்சுத் தாசின் றடத்திருகட்
பனிக்கும் பனிக்கும் பரிந்தில ரேயென்ன பாதகரே. (415)

தோழி யாற்றுவித்தல்.

(இ-ள்.) வெளி.

போற்றுங் கருங்குழற் பூங்கொடி யேமகிழ் போந்தனர்கூர்ந்
தாற்றும் பெருந்தவத் தோன்ஷம்சுத் தாசி னருட்கிரிவாய்த்
தூற்றுங் கொடும்பனி கண்டுன துள்ளத் துயரனைத்து
மாற்றும் படித்திருத் தூதெனப் போந்தநம் மன்னவரே. (416)

தூதிற்பிரிவு முற்றிற்று.

---

## துணைவயிற்பிரிவு.

அஃதாவது-நட்பாகிய அரசனுக்குப் பகையரச ரிடையூறுற்ற வழி, அது தீர்த்தற்குத் தலைவன் றுணையாகப் பிரிதல். தன்னுழையரி லொருவனைப் படைகூட்டிச் செல்லவிடாது தான் போதல் வேண்டு மென்பதென்னையெனின்? நட்பு மிகையால் தானே யவனுயிருத்தலின் அவன் கருமந் தன் கருமமாக வெண்ணி விரைவினெழுந்து அப்பகை தீர்க்கத் தானே போனு னெனக் கொள்க.

துணைவயிற் பிரிவு தலைமகன் றன்னு லுணர்ந்த
தோழி தலைமகட் குணர்த்தல்.

(இ-ள்.) வெளி.

உற்றவர் போருக் குறுதுணை யாயெதி ருற்றவரைச்
செற்றவர் சின்னஞ் சிதைத்திடச் சென்றனர் சீர்த்தகுண
நற்றவர் சொற்றபி ரான்ஷம்சுத் தாசி னளிர்தடத்துன்
கொற்றவர் மாழ்கல் குறுகுவர் நாளைக் குலக்கொடியே. (417)

தலைமகள் பின்பனிப் பருவங் கண்டு வருந்தல்.

(இ-ள்.) வெளி.

நட்டார்க் குதவ நயந்துசென் றூரெமை நாடலர்வின்
கொட்டா விருக்குமிப் பின்பனிப் போழ்துங் குறித்திலர்பூங்
கட்டார் புரள்புயத் தோன்ஷம்சுத் தாசின் கனகவெற்பின்
மட்டா யழுங்கி வருந்துதற் கேவிதி வாய்த்ததுவே. (418)

தோழி யாற்றுவித்தல்.

(இ-ள்.) வெளி.

வாடி யழுங்கி மயங்கன்மின் னேயன்பர் வந்தனரிங்
கோடி யரசர்க் குறுதுணை யீந்தடைந் தோர்க்கொளிர்பொன்
கோடி யெனக்கொடுப் போன்ஷம்சுத் தாசின் குலவரைவாய்ச்
சூடி யலைந்த துணிமணி யாவுந் துலக்குதற்கே. (419)

துணைவயிற்பிரிவு முற்றிற்று.

---

## பொருள்வயிற்பிரிவு.

அஃதாவது-பொருளீட்டுதல் காரணமாகப் பிரியும் பிரிவு. ஆயின், முன் பொருளிலனும். ஆகவே, "எள்ளுநர்ப் பணித்தலு மிரந்தோர்க் கீதலு, 'நள்ளுநர் காட்டலு நயவா ரொறுத்தலும்" என்னுமிவை யெல்லாம் பொருட் குறை பாடுடையார்க்கு நிகழாமையின், இக்குறைபா டெல்லா முடையனும்; அவையுடையானது ஒப்பின்மை யென்னையோவெனின்? பொருளில்லாதவனும்ப் பிரியுமென்பதன்று. தன்முதுகுரவராற் படைக்கப்பட்ட பலவேறு வகைப்பட்ட பொருள்களெல்லாவற்றையுங் கொண்டு பயன்றுய்ப்பது ஆண்மைத் தன்மை யன்றெனத் தனது தாளாற்றலாற் படைத்த பொருள்கொண்டு வழங்கி வாழ்தற் பொருட்டென்க; இஃதன்றித் தனது முயற்சியாற் கிடைத்த பொருள் கொண்டு செய்த கருமங்கள் தனக்கே பயன்படும் பொருட்டு மாம்.

பொருள்வயிற் பிரிந்த தலைமகன் றன்னை லுணர்ந்த
தோழி தலைமகட் குணர்த்தல்.

(இ-ள்.) வெளி.

பெருமையுங் கீர்த்தியு மின்பமும் வாழ்வும் பெருக்கிவரு
மொருமையுந் தாங்கு மெனவகன் றார்பொருட் குற்றகுணத்
தருமையு மன்புமுள் ளோன்ஷம்சுத் தாசி னருட்கிரிவா
யிருமையுஞ் சேர்த்த வியலணங் கேநந்த மேந்தலரே. (420)

தலைவி யிளவேனிற் பருவங் கண்டு வருந்தல்.

(இ-ள்.) வெளி.

மாசையிற் பூத்த மணிமுலை வேனிலும் வந்தகுயி
லோசையிற் கூய வுறுதுயர் காண்கில ருற்றதவப்
பூசையிற் சீர்த்தபு மான்ஷம்சுத் தாசின் பொருப்பனையா
யாசையி லாசையுற் றார்க்குள வோமற்ற வாசைகளே. (421)

தோழி யாற்றுவித்தல்.

(இ-ள்.) வெளி.

மங்கைக் கரசெனு மாமயி லேயுன்றன் வார்தனப்பொற்
கொங்கைக் கிசைந்த கொழுநர்வந் தாரெதிர் கொண்டலெட்டுஞ்
செங்கைக் கொடையுடை யான்ஷம்சுத் தாசின் செழுஞ்சிலம்பிற்
றங்கைப் பொருள்கொடு வேண்டுவ நாளுந் தருவதற்கே. (422)

பொருள்வயிற்பிரிவு முற்றிற்று.

---

தலைமகன் றலைமகளது உருவெளிப்படக் கண்
டுள்ளே வியத்தல்.

(இ-ள்.) கல்வி வயிற்பிரிவு முதலாய ஐந்தினுள்ளும் அது முத லியவுங் காரணமாகிய பிரிவின்கண் அவ்வினை யோ ராண்டின்கண் முடியாது நீட்டித்துழி தலைமகன் தலைமகளது உருவு வெளிப்பாடு கண்டு சொல்லுதல்.

அரும்பும் பிறையுஞ் சிலையும் புயலு மமையுமம்புங்
கரும்புங் குமிழுங் கதலியு மாலுங் கமலமுநான்
விரும்பும் பெருங்குண வேள்ஷம்சுத் தாசின் வியன்சிலம்பிற்
றிரும்புந் திசைமுழு தெங்கணு மோடித் திரிகின்றவே. (423)

பாசறைமுற்றி மீண்டூர் வயின்வந்த தலைவன்
பாங்கற்குப் பரிவோடு மொழிதல்.

(இ-ள்.) படைவீடு காரணமாகச்சென்று மீண்டு ஊர்வந்த தலைவன் விரைந்து தேர்செலுத்திய சாரதியை மகிழ்ந்து கூறுதல்.

சினத்தினும் போரினுஞ் சீர்த்தெதிர்ந் தாரைச் செகுத்தெழுதேர்
வனத்தினுங் கானினு மன்னநம் மூர்வல வாதனத்தோ
டினத்தினு மிக்கபு மான்ஷம்சுத் தாசி னிருஞ்சிலம்பின்
மனத்தினும் வேக மெனவடுத் தாயிது மாவியப்பே. (424)

தலைமகளோடு கலந்துறுந் தலைமகன் கார்ப்பருவங்
கண்டு களித்தியம்பல்.

(இ-ள்.) தலைவியோடு கலந்துற்ற தலைவன் கார்காலங்கண்டு மகிழ்ந்து கூறுதல்.

செய்யா ளனைவருந் தேவியு நானுஞ் செகதலத்தோர்
மெய்யா ருயிரென மேவிக் கலந்தன மேலுமின்றும்
பொய்யா வரத்துர வோன்ஷம்சுத் தாசீன் பொருப்பிலவன்
கையாய்ப் பொழிபொழி மாதமும் மாரி கனமழையே. (425)

கற்பியல் முற்றுப்பெற்றது.

---

ஷம்சுத்தாசீன்கோவை

முற்றிற்று.

---

ஆமீன்.



வித்வான்

வ. அ. மல்க்சான் அலி சாகிபு.

பிஸ்மில்லாஹி.

# ஷம்சுத்தாசீன் கோவை

# அரும்பதவுரை.

-:*:-

## காப்பு.

திரு - முண்டகாசனை, ஆர் - தங்கிய, மருமம்-மார்பினையுடைய, நல்-நல்ல, செய்குமன்சூர்-செய்குமன்சூரென்பார், தினம் - பிரதி தினமும், செய்-செய்த, தவம்-புண்ணியமானது, ஓர்-ஒப்பற்ற, உருவாய்-வடிவமாய், அமைந்த-பொருந்திய, புமான் - ஆண்டன்மை யுடையவனை, ஷம்சுத்தாசீன்- ஷம்சுத்தாசீனென்பான், உவந்து-மகிழ்ந்து, அணியும்-சூடாநிற்கும், கருஆர்-இருவகைப்பட்ட முதற்பொருளும் பதினான்கு வகைப்பட்ட உரிப்பொருளும் பொருந்திய, அகப்பொருள்-மனத்தினிகழு மின்பமாகிய, ஐந்திணைக்கோவை- அன்புடைக்காமத்தைக் கூறுங் கோவையென்னும் பிரபந்தத்தை, கழற-சொல்ல, நிதம்-எந்நாளும், அருவு-அருவமே, ஆர் உருவின்-அரிய வுருவமாகவுடைய, அகப்பொருட்கு-எல்லா ஜீவராசிகளினுள்ளும் ஒன்றாமலொன்றி நின்ற சத்திய வத்துவாகிய அல்லா ஜல்லஜலாலஹுவத் தஆலாவினது சந்நிதானத்திற்கு, உள்ளம்- எமது மனதை, அமைக்குதும்-அர்ப்பணஞ்செய்கின்றோம், (மனமார வணங்குகின்றோமென்பது கருத்து.) வ ஈற்றசை. தினம் நிதம் என்பனவற்றின் உம்மைகள் தொக்கு நின்றன. யாம் என்பது தோன்றா எழுவாய்.

## நூல்.

1. மா-மாந்தளிர், வனசமும்-தாமரை மலரும், கோங்கும்-கோங்கரும்பும், மருவி-பொருந்தி, அல்லிப்பூ-ஆம்பற் புஷ்பம், புணர்ந்து-தழுவி, புது நறவு-புதியதேன், ஏற்று-தாங்கி, அளி-வண்டு, கோ-அரசன், குளிர்-குளிர்ந்த, சிலம்பின்-மலையினிடத்துள்ள, கா-சோலை, நடுவில்-மத்தியில், இடையில்லாத. ஓர்-ஒப்பற்ற, பூங்கொடி-அழகிய கொடியானது.

2. வானோ - தேவலோகமோ, மதி-சந்திர மண்டலமோ, இரவியோ-சூரிய லோகமோ, வனசத்தனித் தவிசோ-ஒப்பற்ற கமலாசனமோ, தண்-குளிர்ச்சி பொருந்திய, கோன்-அரசன், கான்-காடு, ஒளி-பிரகாசம், இருள்-அந்தகாரம், காவகம்-காவலை யுடைய விடம். ஐயப்பொருளைத்தரும் ஓகாரத்தை மதியென்பதோடுங் கூட்டப்பட்டது. தான் என்பதும் கோனோவென்பதன் ஓகாரமும் அசைகள்.

3. பதிந்தன-பூமியிலழுந்திய, மலர்-புஷ்பங்கள், புலர்ந்தன-வாடிய, மெய்ந்நிழல் - சரீரத்தின் சாயை. கண்டனம் - பார்த்தோம், மேவும்-பொருந்திய, அரசர்பிரான்-மன்னர்க்கு மன்னன், அருள்-கிருபைக்குரிய, பால்-பக்கம், பாவையர்க்கு-சித்திரப் பதுமை போன்ற தலைவிக்கு.

4. படையேறு-ஆயுதமானது ஏறப்பெற்ற, கைத்தலத்தோன் - கையாகிய விடத்தை யுடையவன், பனிவரை-குளிர்ச்சி பொருந்தி மலை, தடையே யிலருளர் தடையில்லாதவர் தடையுள்ளவர், நெஞ்சென்று-மனத்தைப்போலும், இரண்டு-இன்பத்தையும் துன்பத்தையும் தரத்தக்க இருசாதனத்தை, கமலப்புடை-தாமரை மலர்போலும் கண்களினிடத்து, சுமந்து-தாங்கி, அருயர்-நோயையும், நீத்தல் - நோயின்மையையும், செய்-செய்கின்ற, இடை-மருங்குல், தனம்-முலை, எய்துறும்-

5. தேடி-சற்பாத்திர மறிந்து, தனம் நிதி, செழும் - செழிய, வாடி-மெலிந்து, மகிழ்ந்து-மகிழ்வாய், இரத்தற்கு-யாசிப்பதற்கு, ஓடி-விரை

ந்து, உறுவோம் - செல்லுவோம், உறு-பொருந்திய, வாயமுது-அதர பானம், வாயினிடத்துண்ணுகின்ற அன்னம், வரை - மலை, கோடித்தனம்-பிறராற் றீண்டப்படாத கொங்கை - கோடியளவாகிய பொருள், ஒன்றிரண்டு - பொருந்திய அவ்விரண்டையும், ஒன்றோ? இரண்டோ?. கூடுநர்க்கு - தம்மைப் புணர்பவர்க்கு, அடைந்தவர்க்கு.

6. செம்பு-இரத்தினம், கிளர்-உயர்ந்த, வம்பு-வாசனை, மடமயிலே-மடப்பத்தையுடைய மயில்போலும் சாயலைக்கொண்ட தலைவியே, வார்-இரவிக்கையை யுடைய, பொன்-அழகிய, கொம்பு-கோடு, ஓடவிட்ட-செல்லும்படி விடுத்த, கொழும்-செழிய, உரத்து - மார்பினிடத்து, கூர்-கூரிய, விழியாம்-கண்களாகிய, அம்பு-பாணத்தை, ஓடவைப்பின்-செலுத்தினால், அமையுங்கொல் - பொருந்துமோ, ஆருயிர் - அரியவுயிர்.

7. கோடும்-வளைந்த, நுதல்-நெற்றியையுடை, கோமளமே-இளமைச் செவ்வியையுடைய தலைவியே, நாடும்-விரும்புகின்ற, பொழிலும்-சோலையையும், நாரியரோடு-தோழிமாரோடு, ஆடும்-விளையாடுகின்ற, ஆதரம்-ஆசை.

8. தாதை - ஈகையாளன், புரப்போன்-காப்பவனாகிய, பேதை விவன்-தலைவியாகிய இவள், அறியாமையையுடைய இவள், இசை வகை-சங்கீதத்தின் பாகுபாடு, சொல்லுகின்ற காரணங்கள், கோதை - கூந்தலை, குற்றத்தை. நூல் - இடையினது-சங்கீத நூல்களின், இயல்-தன்மை, இலக்கணம். மேதை-தேன். அறிவு, இசைவலர் - பொருந்திய புஷ்பங்கள், பாகவதர்கள். மேவகம்-உற்ற சோலை, தங்கிய வீடு.

9. சொற்கண்ட வாணர்-கவிவாணர், தொடையொடு-மாலையோடு, பூந்தொடை- புஷ்பமாலை, மல்-வலிமை, திண்-திண்ணிய, புயம்-தோள், மால்-பெருமை பொருந்திய, மலைய வெற்பு - பொதியமலை, கற்கண்டு-மலையானது பார்த்து, கற்கண்டென்னு மினியபொருள். கனதனம்-பெரிய கொங்கை, மிகுதியானபொருள், முற்கண்ட-முன்னுற பார்த்த, மெய்ப்பொருள் - சரீரத்தினிடத்துள்ள அவயமாகிய சாதனங்கள், உண்மைப்பொருள், அனர்-துன்பம், இன்பம்-சுகம், முந்துறும்-முன்னால் வரும்.

10. மிக்கோன்-அறிஞன், இரும்-பெரிய, வல்-சூதாடு கருவியை நிகர்த்த, கொங்கை-தனம், வார்-நீண்ட, குழல் - கூந்தல், செல்-மேகம், ஆர-பொருந்த, அலைவாய்-அலைந்து, அலையினிடத்து, பயம்-அச்சம், நீர், அலறி-அழுது, இடித்து, அல்லாரும்-மயங்காநிற்கும், அந்தகாரத்தைப்பொருந்தும். கோசலம் விட்டு-கோசல நாட்டைவிடுத்து, ஆகாயத்தினிடத்திருந்து நீரைப் பொழிந்து. அழுங்கிடும்-வருந்தாநிற்கும், ஒளிக்கும்.

11. முந்தத் தவத்தின்-முன்னாற் செய்த புண்ணியத்தினால், முழுதலகு-உலகம் முழுவதும், சந்தத்தட முலையீர்-சந்தனத்தை அணிந்த பெரிய தனத்தையுடைய தலைவியே, கட்கணை-கண்ணாகியபாணமானது, அவலம்-துன்பம், தயங்கும்-திகைக்கும், சிந்தாகுலம்-மனக்கவலை, அரவிந்தம்-தாமரை, திரு-அழகிய, வேள்-மதனையொத்த, வியன்-பெரிய.

12. பண்-இசை, பைந்தமிழ்-பசியதமிழ், விண்-ஆகாயம், தண்-குளிர்ந்த, சாந்தம்-சந்தனமரம், பொறுமை, சமைந்து - பொருந்தி, அளி-வண்டு, கிருபை, தேறல்-மது, தெளிவு, போதங்கொள்-புஷ்பங்களைக் கொண்ட, அறிவைக்கொண்ட.

13. பாட்டாற்றி-பாக்களைச் செய்து, நல்-நல்ல, பாவலர்-புலவர், பரிசனைத்தும்-பரிசுகளியாவும், ஆற்றவல்ல-கொடுக்கும் வன்மையையுடைய, தேட்டால்-தேட்டினால், திக

ழ்ந்த-பிரகாசித்த, தனம் - பொருளை, கொங்கையை. கைசேரலர்-கையினிடத்துச் சேராதவர், கையிற் சேர்க்கப்பட்ட தாமரை மலர் போலுங் கண்கள். கோட்டாற்றை-யானைத்தந்தத்தை யொத்த தனத்தினது மார்க்கத்தை, கோட்டாறென்னு மூரை; ஆமீன்புரம்-அனசேலையொத்த கண்களாகிய பதியை, ஆமீனென்னும் நகரத்தை.

14. பார்-பூமியை, கார் - மேகம், வடம்-முத்துமாலை, மார்-மார்பு, கும்பம்-கும்பத்தைப்போன்ற தனம், குடம், கடிதடம் - நிதம்பம், பெரிய தடாகம், நிலைப்பது - நிலைத்து நிற்பது.

15. கோடாது-மனங்கோணுமல், அருள்-கொடுக்கின்ற, வாடா-புலராத, மன்னர்-தலைவரது, காமவெவ்வாரி-காமமாகிய வெவ்வியசமுத்திரம், ஓடாது-பின் வாங்காமல், உறின்-உற்ருல், உறுந்துணையாய்-உற்ற துணையாக, நாடாது-கருதாது, எதிர் நிற்குங் கொல்-எதிராக நிற்குமா, நாணணை-நாணுகிய கரை.

16. பொன்-இலக்குமி, என் ஆம்-யாது ஆகும், மயங்கு-மயங்குகின்ற, ஏந்தல்-தலைவரது, எக்க இருட்கு-கவலையாகிய அந்தகாரத்திற்கு, அரசர்மன்-இராஜாதிராஜன், எம்மான்-எமது பிரான், மலயவெற்பு-பொதியமலை, மின்னுய்-மின்னலாய், முத்த வெண்ணகை - முத்தைப்போன்ற வெள்ளிய பற்கள்.

17. பகை-விரோதம், மன்னர்-அரசர், மூலபலம்-அடிப்பலமாயிருக்குஞ்சைன்னியம், தகை-தகுதி, அண்ணல்பிரான்-அரசர்க்கரசன், தமிழ்ச்சிலம்பு-பொதியமலை, வகை தந்த வேர்-பகுப்பினை யுடையவேர், ஒழுங்காகிய அழகு, அளி-வண்டு, இருமை. முலைக்கொடி-முல்லைக்கொடி, தனத்தை யுடைய கொடிபோலும் பெண். மையலருள்-கரிய இராக்காலத்தில் தருகின்ற, மோகத்தைத் தருகின்ற. நகை-பூவரும்பு, சிரிப்பு.

மன்றல்-வாசனை, விவாகம். சுகம்-வண்டு, இன்பம். நண்ணிடும்-சேரும், கிடைக்கும்.

18. கலை-நூற்கள், கலிவாணர்-புலவர்கள், கனககுவியலை-சொர்னக்குவியலை, அரும்-அரிய, சிகரம்-கொடுமுடியையுடைய, மலையாளங்கண்டு - மலையினிடத்திருக்குந் தலைவி அங்குப்பொருந்திய, மலையாள தேசத்தைக் கண்டு. கோட்டாறு யானைத் தந்தத்தையொத்ததனத்தினது மார்க்கத்தை, கோட்டாறென்னுமூரை. அடைந்தனம்-பெற்றேம், சேர்ந்தோம், மாமதன்வாய்-மகத்தாகிய மதனிடத்துள்ள, சிலையாள்-கருப்பு வில்லினுல் ஆளப்படுகின்ற, மலைகள் சூழ்ந்த. அஞ்செய்தரு-பஞ்ச பாணங்களை யெய்தற் கருமையான, அழகியவயல்களைத்தந்த, தேரூர்-தேரை யொத்த நிதம்பஸ்தானத்தை, தேரூரென்னும் பதியை, சேருதும்-அடைகின்றோம், சேர்கின்றோம்.

19. இடம் - வன்மை, விடம்-நஞ்சு, வேல்விழி-வேலாயுதம் போலும் கண்களை யுடைய, மெய்படும்-சரீரத்தினிடத்துண்டாகிய, உண்மையான. இடங்கண்ட - விசால மாகிய, சொர்க்கம் - மூலை, பொன்னுலகு. இன்பக்கனி அமுது-இன்பத்தைத் தருகின்ற கொவ்வைக்கனிபோன்ற அதரபானத்தை, சந்தோஷத்தைத் தருகின்ற கனியாகிய அமுதத்தை, தடங்கண்ட - விசாலமாகிய. ஆநந்த வெள்ளத்துள்-சந்தோஷசாகரத்துள், ஆழ்த்த-மூழ்த்திய; தகைமை-தன்மை, நன்று-நல்லது.

20. குன்றுமணி - மலையைப்போன்ற அழகிய, குறைவுபடாத இரத்தினுபரணங்களைத்தரித்த, கோன்-அரசன், மின்-ஒள்ளிய, தார்-பூமாலை, அணி-அணிந்த, குழலே-கூந்தலையுடைய தலைவியே, அரவிந்தம்-தாமரை, அடிச்சிறொன்று-அடியினது சிறப்பாகிய ஒன்றை. ஆரவாடி-பெருக்கம்புடை-நேர்த்த, பொரு

MAHAMAHOPADHYAYA

ந்தும்படி ஆட்டமுற்று. அலைவாய்-அலைந்து, அலையினிடத்து. பயம்-அச்சம், நீர். கண்ணீர்-கண்ணினீர், கள்ளாகிய நீர். பொன்றாது-குறையாது, பொன்போலு மகரந்தத்தை. ஒருகானின்று - ஒற்றைக்காலோடு நின்று, ஒப்பற்ற வாசனையானது தங்கப்பெற்று. அண்ணாந்து ஆகாயத்தை நோக்கி, சேற்றினிடத்துத் தொங்கி. அங்கண்-அழகிய கண், அவ்விடத்தில். பூத்தது-பூத்துப்போயிற்று, மலர்ந்தது.

21. பொன் அணி-பொன்னினாற் செய்யப்பட்ட ஆபரணங்கள். பொலம்-அழகிய, மின்-மின்னலைப்போலும், அணி-அழகிய, நுண்-நுண்ணிய, மெலிந்து-சோர்ந்து, இரங்கேல்-வருந்தேல், முன் அணி-முற்புறத்துள்ள ஆபரணங்கள், முன் வரிசை. பின் அணி, பிற்புறத்துள்ள ஆபரணங்கள், பின் வரிசை. வகுத்து-வகையாய்ச்சூடி, வகைப்படுத்தி, முதல்-தலை, முன். இடை-மருங்குல், நடு. கால்-பாதம், கடை. மன்அணி - பொருந்திய ஆபரணங்கள், நிலைபெற்ற படைவகுப்பு. ஆயமும்-தோழிமாரும், இன்புற-மகிழும்படி, மாட்டுவேன் - சூட்டுவேன், மாள்விப்பேன்.

22. பா-செய்யுட்களின், இயல்-இலக்கங்களை, ஆய்ந்து - ஆராய்ச்சி பண்ணி, ஓவியம்-சித்திரப்பதுமை, அன்ன-ஒத்த. முகத்தாய்-வதனத்தை யுடைய தலைவியே, உண்மை செறி-உள்ளே மையானது நெருங்கப்பெற்ற, மெய்யைப் பொருந்திய. காவியங் கைவைத்து-நீலோற்பலமலர்போலுங் கண்களினிடத்து அழகிய கரத்தை வைத்து, காப்பியத்தைக் கையினிடத்து வைத்து. எழுத்தொடு - எழுதுகின்ற எழுத்தோடு, எழுத்திலக்கணத்தோடு. சொற்பொருள் கண்டு-சொல்லுகின்றஆபரணங்களைத்தெரிந்து,சொல்லிலக்கணத்தையும்பொருளிலக்கணத்தையு மாராய்ந்து. அழியாப்பாவியல்ஓதி முடித்தேன்; அழிந்தகட்டையும் வாசனையையு முடைய அந்தகாரத்தை யொத்த கூந்தலை முடித்தேன், அழியாத செய்யுளிலக்கணத்தைப் படித்து முடித்தேன். அணியும்-ஏனைய ஆபரணங்களையும், அணியிலக்கணத்தையும். பின் ஆய்தர-பின்னால் ஆராய்ந்து பொருத்தமான விடங்களில் சூட்டுதற்கு, பின்னாற் படிப்பதற்கு.

23. கனிந்து - இளகி, கரைதர-கரையும்படி, பாடு-பாடுகின்ற, அளிகாள்-வண்டுகளே, அறியின்-அறிந்திருந்தால், ஓதும்-சொல்லுங்கள், ஒரு கைப்பிடி-ஒப்பற்ற துதிக்கையையுடைய பெட்டை யானையையும். அன்னம்போல் - அன்னப்பறவையையும் போல, ஓங்கும் இரு போது-ஓங்காநிற்கும் இரு புஷ்பங்கள், நிகழாநிற்கும் இராப்பகலாகிய இரு சமையத்தும். முலைமுத்தந்து-முல்லையரும்பைப் போன்ற பற்களைக்காட்டி, முலையினது முத்தத்தைத்தந்து. உரையாடு-பேசுகின்ற, அற்புத வலியொன்று - ஆச்சரியத்தைக்கொண்ட ஆம்பற்புஷ்பமொன்று, ஆச்சரியத்தை யுடைய வல்லிக் கொடிபோலும் ஒரு பெண் எது - யாது, உம்பரும் - தேவர்களும். இறும்பகத்து-மலையினிடத்து.

24. நிதியால் - செல்வத்தினால், துரை-மேன்மகளாகிய, துதி-புகழ். அயில்விழி-வேல்போலும் கண்களையுடைய. தூமொழியே - பரிசுத்தத்தைக்கொண்ட வார்த்தையையுடைய தலைவியே, தோமொழியே-சோர்வாகிய குறையை யொழிவாயாக, மதியாதியற்றும் வலியுளதாயின்-மதிக்காமற் செய்யும் வன்மையுள்ளதானால், அறிவானது யாது செய்யும வன்மையுள்ளது ஆராய்ந்து பார்க்கின். மருவரும்-அடைதற் கருமையான, ஓர்-ஒப்பற்ற, வீதியாம்பிணையில். ஊழாகியகட்டில், பிணைப்புறும்-கட்டுண்ட, வெல்லரிது-வெல்ல முடியாது.

25. சிறந்து-சிறப்பாய், வளர்-ஓங்குகின்ற, அஞ்சி-பயந்து. பேதுறல்-மயங்கேல், நிற்றுறந்தும் - உன்னை விடுத்தும், கனவில் - சொப்பனத்திலும், நனவோடு - சாக்கிரத்திலும், இதயம்-மனம், தரிக்கிலன்-தரியேன், மன்னுயிர்-நிலைபெற்ற உயிர்.

26. அல்-இரவும், தேர்-ஒப்பாத லைக்கருதியாராய்கின்ற, பொழில் - சோலையினிடத்து, ஆடுதி-விளையாடுவாயாக, போர்ச்செற்று-யுத்தத்தில் பகைவரைக்கொன்று, பகை-விரோதத்தை, தடிந்தோன் - இல்லாமற்செய்தவனை, உற்று-அடைந்து, எனை-என்னை, கொடுவந்திடும்-கொண்டுவரும், என்னகம் - எனது மனம், உன்னகம்-உன்னிடத்து.

27. யோகத்தில்-அதிர்ஷ்டத்திலும், சீரில்-சிறப்பிலும், உயாவில்-பெருமையிலும், தகையில்-தகுதியிலும், உற்ற-பொருந்திய, போகத்தில்-பாக்கியங்களிலும், சீர்த்த-சிறப்புத்தங்கிய, பொலம்-பொன்னையுடைய, மேகத்தில் - மேகத்தைப் போலும், வேறல-வேற்றுமையானதல்ல, பூகத்தில் - கமுகமரத்தில், உம் ஊர்-உமது நகரத்தினது, கறிக்கொடி, மிளகுக்கொடி. புணர்ந்திடும்-தழுவா நிற்கும்.

28. வான்-ஆகாயம், பிறழ்ந்தாலும்-நிலை தவறினும், மதி-சந்திரன், இரவி-சூரியன், பிறழாத்தகையர்-நிலைதவறாத தன்மையையுடைய தலைவர், தவறி-பிழைத்து, மனம்-அண்மைவிளி, ஏங்குறல்-வருந்தேல், பூந்தேன்-புஷ்பத்தி னிடத்துள்ளமது, மார்பகத்தோன்-மார்பாகிய இடத்தை யுடையோன், தான் இரண்டும் அசைகள்.

29. மேகமும் - மேகத்தை யொத்த கூந்தலையும், வெண்சோமனும்-வெள்ளியவத்திரத்தையும், விளக்கி-விளங்கச்செய்து, இருநாகமும்-இரண்டு மலையையொத்த கொங்கைகளும், ஒருநாகமும்-ஒப்பற்ற பெட்டை யானையும், அன்னமும்-அன்னப் பறவையும், நாணுற - வெட்கும்படி. எச்சோகமும், எவ்விதத்துன்பத்தையும். தீர்த்து-நீக்கி, சுடர்-பிரகாசத்தையுடைய. ஆகமும் - தேகமும். ஒல்க-குழையும்படி. அசைந்துறும் - அசைந்து செல்லுவாள், ஆல்-அசை. நந்தம்-நம்முடைய. ஆருயிர்-அரிய உயிர்போன்ற தலைவி.

30. முறை முறை-வரிசை வரிசையாக, உள் - மனது, முதிரும்-அதிகரிக்கா நிற்கும், அச்சந் தன்னொடு-பயத்தோடு, வேர்ப்பும்-வேர்வையும், தளர்வும்-சோர்வும், பேரன்பும்-பெரிய அன்பும், மன்னர் மன்னொடு - இராஜாதி ராஜனோடு, மால்-மாலை, வலவ-தேர்ப்பாகனே, பொன்னொடு-பொன்னாற் செய்யப்பட்ட பலவகை ஆபரணங்களோடு.

31. மெய்யோடு இரண்டு-மெய்யும் வாக்கும் மனமும், மை-மேகம், கணமதி - உடுக்களாற் சூழப்பட்ட சந்திரன், அமர்-யுத்தம், கனகம்-பொன், புணர்ந்தது-தழுவியது.

32. மயனேய்-மையலாகியபிணி, ஓர்ந்து - அறிந்து,
பாய், இனையேல்-வருந்தேல்,
வண்டு, கண்களாகிய வண்டு. அருத்தி-ஆசை, முகதாமரை - முகமாகிய கமலம், ஒளித்தது-மறைந்தது.

33. வட்டு - சூதாடு கருவி, அலர்-மலர்ச்சி, நிந்தை. போது - மலர், கொம்பு - தந்தம், வெற்பு-மலை, சிறை-சிறகுகள், காவல். புள்-சக்கரவாளப் பறவை, துடி - உடுக்கை, தோற்றுறும்-தோற்றா நிற்கும், தோற்றுப்போகும் .

34. மின்னை - மின்னலையொத்த தலைவியை, திர ஆவியை-அழியாத உயிரை, சம்பன்னராய்-குறைவற்றவராய், சசி-இந்திராணி.

35. படி-பூமி, முடி-கூந்தல், இந்து-சந்திரன், வெருண்டிடும் -கோபியா நிற்கும்.

36. இன்-இனிமை, இயல்பு-இயற்கை, வண்-அழகிய, தோகையின்-

மயிலையொத்த, தெய்வம்-விதி, மு ந்துதும்-முற்படச்செல்லுவோம்.

37. சுகிர்தம் - இன்பம், நூறு - கெடாத, மணிவிளக்கு - இரத்தின தீபம், நுண்-நுண்ணிய, தேரூர்-பகைவர்.

38. அன்ன-போல, கலந்த-தழுவிய, இரும்-பெரிய, இயம்பரிது-சொல்ல முடியாது.

39. குடை-கவிகை, கோல்-செங்கோல், தொடை-மாலை, கோதை-கூந்தல், உலைவாய்-உலைந்து, உலையினிடத்து. கடைபட்டு-கடையப்பட்டு, கடையாய். செம்புனல் - இரத்தம். முடை-புலால் நாற்றம். கணை-அம்பு.

40. நகை-பல், நெய்-ஊன், கிணம்-கொழுப்பு, இலை - தகட்டு வடிவம், சிகரம்-கொடுமுடி, ஆயம்-மகளிர் கூட்டம்.

41. வாவி-தடாகம், காவி-நீலம், மாதலம்-பெரிய பூமி, சஞ்சீவி-உயிர்தரு மருந்து, சிமையம்-மலை, வெஞ்சிகி-வெவ்விய அக்கினி, ஆவியின் ஆவி, உயிர்க்குயிர்.

42. நீடாழி - நீண்ட சமுத்திரம், வையம்-பூமி, நிலாப்பகல் - சந்திர சூரியர், ஒள் - ஒள்ளிய ஒருத்தல்-யானை, வாடா - மெலியாத, ஆறுவிதம்.

43. நீதம்-நியாயம், ஏதம்-குற்றம். காமனுற்று-சோலையிற் பொருந்தி, மன்மதன் வந்து, காவலைப்பெற்று. எய்தருமென்போதஞ்சரிய-பொருந்திய மரங்களானவை மெல்லிய புஷ்பங்களோடுசாய, எய்கின்ற மெல்லிய புஷ்பப்பாணமாகிய ஐந்தும் என்னை அறுக்க,எய்தற்கு அருமையான எனது அறிவானது நழுவ. பொறிஅளி-பொறிகளையுடையவண்டு, ஐம்பொறிகளும் அன்பும். தந்தவாதங்கடுப்பி-கொம்பினதுவிரோதம் அங்கு நெருங்க, அவன் இரதமாகத் தந்த தென்றற் காற்றானது என்னைக் கோபிக்க. மலிந்த புலன்-மலிந்த வயற்களை, மிகுத்த எனது அறிவை. தூர்த்தது-அழித்தது. ஓர் மாதங்கம் - ஒப்பற்ற ஒரு யானை, பெருமை பொருந்திய தங்கத்தை ஒத்த ஓர் தலைவி, ஒரு பெண்ணினது சரீரம்.

44. கலைகண் முழுது - சாஸ்திரங்கள் எல்லாவற்றையும், மானையொத்த விழி முழுவதையும். ஆய்ந்து-தெரிந்து, அளகை-அளகாபுரி, மன்-குபேரன், புரையும்-ஒத்த, மெய்பூணலம் - உண்மையான இன்பத்தை. சரீரத்தினிடத்துப பூண்ட அழகை. புரவல-அரசனே, பெண்பேதைக்கு-பெண்ணாகிய பேதைக்கு.

45. மாட்சி-மாண்பு, கொங்கை-தனம், வதனம்-முகம், ஐம்பால்-கூந்தல், பால நிலவு, நெற்றியாகிய சந்திரன்.

46. காரை-மேகத்தை, தருவை-பஞ்ச தருக்களை, ஒன்னாரை-பகைவரை, இடைச்சீரை-மருங்குலினது சிறப்பை. உடைந்தாய்-அழிந்தாய், கோரை-கோரையென்னும் புல்,மாய்த்தெனும்-மாய்த்ததென்று சொல்லும்.

47. துங்கம்-பரிசுத்தம், கடுத்து-ஒத்து, தையல்-பெண், வெம்-வெவ்விய, உரத்து-மார்பினிடத்து, புங்கம் - பாணம், பொன்றும் - கெடாநிற்கும்.

48. முத்துண்டு-முத்தினாற்செய்யப்பட்ட ஆபரணங்களைத் தாங்கி, எத்துண்டு-பொருந்தி, விழிவேல்-கண்களாகிய வேல், குத்துண்டு-குத்துப்பட்டு, முலைக்கோடுண்டு-முலையாகிய கொம்பானது ஏறுண்டு, மையற் பித்துண்டு-மையலாகிய பயித்தியம் பிடித்து, அழிந்தனன்-கெட்டனன், பேருலகு-பெரிய உலகம்.

49. கலகம்-விரோதம், கட்கடை-கடைக்கண், சிமயம் - கொடுமுடி, ஒத்திடற்கு-ஒப்ப வைப்பதற்கு.

50. வானகம்-ஆகாயம், மகிதலம்-பூமி, அம்மான்றனக்கு, அர்த்தநிலை

விக்கு. ஆனகம்-தேவதரு, கானகம்-காடு, இயல்-இலக்கணம், கழறு-சொல்.

51. புயல்-மேகம், அம்புயம்-தாமரை, கயல்-சேண்டைமீன், முக்கனி - வாழை பலா மா இவற்றின் கனிகள். கைக்களிறு - துதிக்கையுடைய யானை, மயல்-ஆசை, இயல்-இலக்கணம், ஆர்வல - பாங்கனே, மாழை, பொன், பெயல் - பொழிதல், வனம்-சோலை.

52. திரு-கொற்றவை, மரு-வாசனை, பொரு-பொருதுகின்ற-புலன்-அறிவு, ஆசையை - ஆசைக்குரிய தலைவியை, போந்து-போய்.

53. மூலைப்பகை - தாமரை யரும்பு, மொழிப்பகை-தேன், அக்கக்கொலைப்பகை-நீலம், நறை-வாசனை, உம்பல்-யானை, கல்-மலை, காரிகை-தலைவி.

54. வான்-மேகம், முடி-கூந்தல். வடி-வடித்த, வரை-மூங்கில், மதி-சந்திரன், உடல்-பொன், நளிர்-குளிர்ச்சி, தாழ்குழல்-தாழ்ந்த கூந்தலையுடைய தலைவி.

55. தாவுண்டு - தாவி, பரி-குதிரை, தமிழ்வரை-பொதியமலை, மேவுண்டு-மேவி, வின்னுதல்-வில்லைப் போன்ற நெற்றி, நோக்கு - கண், ஏவுண்டு - பாணமானது தைத்து, இளைவுண்டு-வருந்தி, ஏந்தல்-தலைவன், நோவுண்டு-துன்பப்பட்டு, நுவன்ற-சொல்லிய. நொய்யறிவு-சிற்றறிவு.

56. பொறை-மலைபோலும், பொற்றொடி - பொன்னினாற் செய்யப்பட்டவளையல், நிறை-நிறைவு, அலர்-மலர், குழனீண்முகில்-கூந்தலாகிய நீண்டமேகம், எம்பிரான்-எமதுதலைவன், கலைமாமதி-கல்வியையுடைய பெரிய அறிவை, கிரணங்களைக் கொண்ட பெரிய சந்திரனை.

57. கலை-நூற்கள், தாண்டி-கடந்து, மிக்கோன்-அறிஞன், நிசி-இரவு, துண்டம்-முகம், எம்மன்-எமது தலைவன், மறிநயனம்-மான்போலும் கண், மறிகின்ற கண். அலை-கடல், காமவலை - காமமாகிய வலை, அற்புதம்-ஆச்சரியம்.

58. பாரத்தின்-சுமையினால், அந்தரப்பற்று-ஆகாய சம்பந்தத்தை, திருக்கு-கண், விடக்காய்வு-விஷக்காய்ச்சல், அமுது-மருந்து.

59. கா-சோலை, குழற்காடு-கூந்தலாகிய காடு, காத்துறு-எதிர்பார்த்துக் கொண்டிருக்கிற, கட்கோ-கண்ணாகிய பாணம், கோலம்-அழகு, பா-செய்யுள், இயலின்மை-அறிவின்மை.

60. மன்னுதல்-சேருதல், தனம்-பொருள், அனம்-அன்னப்பறவை, அளாவுதல்-கலத்தல்.

61. வற்ற-குறைவுபடாத, மன்னி-பொருந்தி, முற்ற - முதிராத, முகிழ் - தாமரை யரும்பைப்போன்ற, கலை-நூற்கள், கனகம்-பொன்.

62. அருத்தி - உண்பித்து, பிழம்பு-திரட்சி-புலை, புன்மை, ககன்-ஆகாயம்.

63. அலைவாய்-அலைந்து, சமுத்திரத்தினிடத்து. ஆகம்-சரீரம், கூனி-கூனுதலுற்று, வளைந்து. அறக்குறுகி-முழுதுங் குறுக்கமுற்று, தேய்ந்து. மலைவாய்-மயங்கி, மலையினுச்சியில். மாசு-குற்றம், களங்கம். நூற்கலை-நூலினது கல்வி, வாய்வரும்-வாயினிடத்துவரும், வாய்-வாய்ந்த, நுதல்-நெற்றி.

64. கடம்-சரீரம், எண், நினைப்பு,
- வந்தால்,
இசை-பொருந்திய, மண்ணுக்கு-பூமிக்கு, அணி-அலங்காரம், அன்னையர்-தோழிமார்.

65. கோவாய் - ஆகாயத்தினிடத்து, குலவு-குலாவுகின்ற, அல்லி-ஆம்பல், பைம்-பசிய, நாவாய்-மரக்கலம், ஏவல்-கட்டளை, ஆயம்-மகளிர் கூட்டம்.

66. பைந்தடம் - பசிய தடாகம், சிந்து-நீர், தெவ்வர்-பகைவர், சின

ந்து-கோபித்து, நகத்தின் - மலையி னிடத்து, இடைத்தந்து, - மருங்கு லாகிய நூல். மேனி-சரீரம்.

67. சதி-வட்டம், சுழன்று-சுழி த்து, சந்தம்-சந்தனமரம், சரித்து-சாய்த்து, தாம்பிர நன்னதி-நல்ல தாம்பரவர்னியென்னும் ஆறு, து றை-தீர்த்துறை, துதி-கீர்த்தி, சுகு ணம்-நல்லகுணம், மதி. அறிவு.மதி-சந்திரன்.

68. அணி-ஆபரணம், அழிதரு-அழிந்த, துணி-வத்திரம், பணியும்-வணங்கும், அலர்க்கணி-மலர்மாலை, புனைந்தது-சூட்டியது, கவின்-அழ கிய.

69. காவி-நீலம், கமலம்-தாமரை, அல்லி-ஆம்பல், ஒன்னார் - பகைவர், ஆவி-உயிர், குடைவேன் -நீராடுவே ன், தண்-குளிர்ந்த.

70. கா - சோலை, கழங்கு - ஓர் வகை ஆடல், பொன்-இலக்குமியை யொத்த தலைவியினது, உரு - வடி வம், குலம்-மேன்மை பொருந்திய, மின்றேவே-பெண்கள் தலைவியே, இதழ்-அதரம், மெய்-சரீரம், அக் கம்-கண்.

71. பொய்யா-பொய்க்காத, செ ய்யாள்-இலக்குமி,சேயிழையீர். செ ம்மையான ஆபரணத்தைத் தரித்த தலைவியே. பெய்யாவிருந்து-பெய் து, பிறங்கி-பிரகாசித்து, மையார்-கருமை நிறைந்த. களிறு-யானை, கோடு-கொம்பு, மாழ்கினன்-மயங்கி னேன்.

72. பொருள்-தனம், அறம்-புண் ணியம், பொலிவு-விளக்கம், பொரு ந்துறல்-சேர்தல், தெருள் - அறிவு, இருளா-அந்தகாரமடையாத. ஏந்தி ழை தன்-ஏந்திய ஆபரணங்களை யு டைய தலைவியினது, அருளால்-தய வால், தனம்-கொங்கை.

73. வண்மை-ஈகை, இருநிதி-சங் கநிதி பதுமநிதி. இவண் - இங்கு, போந்தனன்-வந்தேன், உம்மில்-உ ம்மால், பொலிவு-விளக்கம், பதி-உளர், பான் முத்தம் - பால்போலு முத்தம்.

74. கார்-மேகம், கரும் - கரிய, கனகம்-பொன், மணி-இரத்தினம், திரு-அழகிய, பிரியம்-அன்பு.

75. துப்புண்டு-செந்நிறத்தையுற் று, துவரிதழ்-பவளம்போலு மதர ம், சுடர்-பிரகாசம், கணை-அம்பை, கண்ணை. முன்-ஆதியில், தப்புண்டு-தவறி, தாவுண்டு-தாவி, ஒருமான், ஒரு மானானது, ஒருபெண். ஒப்புண்டு-ஒத்து, வெப்புண்டு - வெம்மை யுற்று, உற-வர, விள்ளுவீர் - சொல் லுவீர்.

76. கல்லும்-மலையும், கனதனம்-பருத்தகொங்கை, கதிர்-கிரணங்க ள், எல்லும்-சூரியனும், பணி-தாழ் கின்ற, முடியோன் - கிரீடத்தை யு டையோனை, இரும்-பெரிய, செல் லும் - போகின்ற, வழி - மார்க்கம், திகைத்தேன்-மயங்கினேன், தேர்ந் து-தெளிந்து, அகல-போக, பிழை-குற்றம்.

77. பெரு-பெரிய, பிடி - பெட் டையானை. அணங்கீர்-தெய்வப்பெ ண்போல்பவளே, விண் - ஆகாயம், மரு-வாசனை. திரு-அழகிய. தீவினை-பாதகம்.

78. தேரும்படி-நீங்கள் தெரியும் வண்ணம். பாரும்-பூமியும். சேர்ந் தாரும்-வந்தவரும், கருத்தும், எண் ணமும். ஆர் என்னை-யாவர் யாது. உற்றதும்-வந்த சமாச்சாரமும், ஆ ய்ந்திலம்-தெரிந்திலம்.

79. உவந்தவர்-விரும்பினவர். ஆ ரும்-யாவரும். ஏரும் - அழகும். இ சையும் - கீர்த்தியும். இளநீரும்-இள நீரையொத்த தனத்தையும். கனி யும்-கொவ்வைக் கனிபோன்ற அத ரத்தையும். காம நெடும்பசிக்கு-கா மமாகிய நீண்ட பசிக்கு.

80. சோமன்-சந்திரன். மேதினி-பூமி. பண்பட்ட-தகுதிபொருந்திய. வள்ளல் - வரையாது கொடுப்போ ன். தேமொழியார்-தேன்போலும்

வார்த்தையை யுடைய தலைவியும் பாங்கியும். புண்பட்ட-வருத்தத்தை யுற்ற. காதற் பொலிவு - விரக மிகுதி.

81. பொய்ப்புண்டு - பொய்த்து பூவை - நாகணவாய்ப்புள். கட்புங் கம்-கண்ணைப்போலும் அம்பு. அங் கண் - அழகிய பூமி. வைப்புண்டு-வைத்து. தைப்புண்டு - தைத்து. உளம்-மனம். மிக்கு - மிக, எய்ப்புண்டு-இளைத்து. இரும்-பெரிய. களிறு-யானை.

82. மாதங்கம்-பெருமை பொருந்திய தங்கத்தை யொத்த தலைவி. மாதங்கம்-யானை. சார்ங்கணை-பெரியபாணம். தாணி-பூமி. மன்-பொருந்திய. பொன்-அழகிய.

83. தழை - தளிர். கரி-யானை. படுமோ - சாகுமோ. இரு-பெரிய. மாய்வுறுமோ - மாயுமோ. மாற்றம்-வார்த்தை. குழையா - வாட்டமில்லாத. பிழையாம்-குற்றமாம். கபடாம்-தந்திரமாம். ஆயின்-ஆராய்ந்தால்.

84. கலையும்-மானும். வினைவு-இசையல். புனம்-தினைக்கொல்லை. ஆயாவுறினும்-ஆய்ந்தாலும். அலைதரும்-அலையாநிற்கும். ஓயாது-நீங்காது. அளிப்போன்-காப்பவனுை. தடத்தகத்து-மலையினிடத்து.

85. கண்டு-கற்கண்டு. கனி-கனிந்த. கற்பகம்-தேவதரு. இருநிதி-சங்கநிதி பதுமநிதி. குறுகலர்-பகைவர். நாற்றண்டு-நான்கு வகைச்சேனை. தொண்டு-ஏவற்றொழில். தோத்திரம்-துதி.

86. புனம்-தினைக்கொல்லை. புவனம்-பூமி. பொதுவற - பொதுமை நீங்க. கனம்-பெருமை. கருதலர்-பகைவர். வனம்-காடு. இனம்-இன்னம். அறிதி-அறிவாய். இயைபிலர்-பொருத்த மில்லார்.

87. சிப்பி-கிளிஞ்சில். சேற்றுள்-சேற்றினிடத்து. மரை - தாமரை. ஒப்பி-சம்மதித்து. ஏற்றிலர்-கொள்ளாதவர். ககன்-ஆகாயம். மாதவம்-பெரிய புண்ணியம். அப்பிய-அணிந்த. நன்னலம்-நல்ல அழகு. குலம்-சாதி. ஆயிழைக்கு - ஆராய்ந்தெடுத்த ஆபரணங்களை யுடைய பெண்களுக்கு.

88. பொழில்-சோலை. கழங்கு-கழற்சி. ஊசல்-ஊஞ்சல். அலர்-மலர். எழில்-அழகு. அம்மனை-அம்மானை. பயிலுநர்-பழகுவோர். மதமாரி-மதமாகிய மழை. முனையும்-பொருதாநிற்கும். கடம்-கதுப்பு. தார்-மாலை.

89. மருளும் - வெருளும். பிணை விழி-மான்போலுங் கண். குஞ்சரமுலை-யானைக்கொம்பைப்போன்ற முலை. குமுதம் அல்லிமலர். புயல் குழல்-மேகம் போன்ற கூந்தல். எதில்-களங்கமற்ற. அருளும்-கொடுக்கும். தெருள்-அறிவு. பொலிவு-அழகு. சேயிழை-செம்மையான ஆபரணத்தைத்தரித்த பாங்கியே. தேமொழிக்கு - தேன்போலும் வார்த்தையை யுடைய தலைவிக்கு.

90. அவதரித்து-பிறந்து. அருந்தவத்தின் - அரிய புண்ணியத்தின். செறிவு-நெருக்கம். தெய்வதம்-தெய்வத்தன்மையுடைய. முறிவேதரா-தோற்கும்படி. பிறிவு-வேற்றுமை.

91. சொன்னம் - பொன். சுகம்-இன்பம். சின்னம்-அடையாளம். பின்னம்-பழுது. கைப்பிடிபடும்-நடையால் துதிக்கையையுடைய பெட்டை யானையுந் தோற்றுப்போகும். ஓர் அன்னம்-ஒப்பற்ற அன்னப்பறவைபோலுந் தலைவி. அமையுஞ் சொல்-பொருந்துமா.

92. வாய்த்தனது-சித்தித்திருக்கின்றது. நாயேன்-நாயையொத்தயான். நற்றமிழ்-நல்ல தமிழ். தனி-ஒப்பற்ற.

93. செயலால் - செய்கையினால். சிமயம்-மலை. கயல்-கெண்டைமீன். கடு-நஞ்சு. பாய்ந்து-ஓடி. கனல்-தீ. புயல்-பெருங்காற்று.

94. பாரார்-உலகத்தார். பழிச்சும்-புகழும். பதி-நகரம். கார்ஆர்-கருமை நிறைந்த. கரி-யானை. கலை-ஆண்மான். கான் விலங்கை - காட்டினிடத்துள்ள மிருகங்களை. வதைத்து-கொன்று. ஊன்-தசை. வேடர்-மறவர். கூர்ஆர்-கூர்மை பொருந்திய-அயில்விழி-வேல்போலுங்கண்களையுடைய தலைவி. நோ-துன்பம்.

95. மறிவிழி-மான்போலுங் கண். ஓயாது-மாறாமல். உடைந்து தோற்று. சயிலம்-மலை. ஏயா-வாராத. ஏயவன்-ஏவிய தலைவி.

96. முற்றிழை-முற்றிய ஆபரணங்களையுடைய தலைவி. புவிப்பெண்-பூமாதேவி. சாருதி-சார்வாயாக.

97. படிந்து - முழுகி. ஏழுகாவகம்-வளர்ந்த சோலைகளினுள், சத்ததீவுகளிலும். தென்றல்-வசந்தகாற்று. நடலில்-நடுதலில். விடலில்-விடாத. வெம்-வெவ்விய.

98. மறை-வேதம். நிறை-கற்பு. கனி-கன்னி, பழம். மணம்-விவாகம், வாசனை. சேர்மை-ஒழுங்கு. பொறை - பொறுமை. குறை - குற்றம். கொற்றவனே-அரசனே.

99. வருந்தி - துன்பித்து. மயல நோய் - மையலாகிய பிணி. விருத்திபுற - செவ்வையாக. வரைந்து - விவாகஞ்செய்து. வெற்றரைக்கு - வெறுமையான அரைக்கு. செருத்தி-கொடி. படம்-துணி. பான்மை-தன்மை.

100. மாலை-இராக்காலம். அறச்சாலை-தருமசத்திரம். தடம் - பெரிய. சூரன்-சூரியன். வேலை-கடல். வேலை-தொழில். வேலை-சமயம்.

101. தழை-தளிர். தரளம்-முத்து. மலர்-பூ. மழை-மேகம். வளைக்கு-வள்ளைத்தண்டுபோன்ற காதுக்கு. குவளை-நீலம். பிழை - குற்றம். புரப்போன்-காப்பவனுனே. கழை - மூங்கில். பொரு-ஒத்த. கையகம் - கையினிடத்து.

102. பறை-முரசு. தேவம்-தெய்வத்தன்மை. குலம் - சாதி. தேர் - இரதம்.

103. உலர்ந்தும்-வாடியும். பொன் - இலக்குமி. கொன் - துன்பம். வன்சொல்-கொடுஞ்சொல்.

104. குடி-கோத்திரம். கொற்றவை-வீரலக்குமி. அமைவன-பொருந்துவன. முடி-கிரீடம். விடியில்-சூரியோதயமானால். போதி- போவாயாக.

105. நீறு-சாம்பலாக. ஏதிலர்-பகைவர். கூறு-பங்கு. பேறு-வாய்ப்பு. சஞ்சீவினி - உயிர்தரு மருந்து. பெண்ணை-பனைமரம்.

106. தீயுள் - நெருப்பில். மிடைமிடைத்து-வருந்தி. துன்-தம்பம். சொன்னம்- பொன். பூண் - ஆபரணம். ஊண்-உணவு. ஒள்-ஒள்ளிய.

107. வேலை-கடல். மிக்கோன்-அறிஞனை. அசலம் - மலை. தோகை - மயில். பூளை - பூளைப்பூ.

108. காரிகை-தலைவி, காரிகை யென்னும் பிரபந்தம். கோவை - தலைவி அணிந்திருக்கு மாலைகள், கோவை யென்னும் பிரபந்தம். அந்தாதி - பாதாதிகேசம், அந்தாதி யென்னும் பிரபந்தம். நன்னூல் - நல்ல நூலைப்போலுமிடை, நன்னூலென்னும் பிரபந்தம். இயல்-இலக்கணம், இயலென்னுஞ் சிறுபிரிவு. நடை-நடக்கை, தொடர்பு. உரை-சொல், அருத்தம். நவிற்று -சொல்வாயாக.

109. கூர்-பெரிய. விண்ட -சொன்ன. மின்-தலைவி, மின்னல். காயம்-சரீரம், ஆகாயம். சொர்க்கம்- தனம், சொர்க்கலோகம். மேவிடை - பொருந்திய மருங்குல், மேவியவிடத்து. பல்-நகை, பல. அண்டம்-நெருங்கிய அழகு, உலகங்கள். உன் உருவு ஓடு - யாவரும் விரும்புகின்ற வடிவத்தோடு, உன்னிடத்துள்ள தோற்றங்களோடு. இணை-ஒப்பு.

110. விண்-மேகம். மிளிர்-பிரகாசிக்கின்ற. கண்ணாளா - நேசத்துக்குரிய தலைவனே. மறுகுற-மறுகும்படி. வன்னெஞ்சு-கொடிய சித்தம். பெண்ணை - பனைமரம். கொன்று - வெட்டி. பெண்ணை - மாதை.

111. நோகும்-வருந்தும். நுவலுவல்-சொல்லுவேன். ஏற்பனகாண்-பொருந்துவன செய்.

112. இசைக்கில-நிரம்பிலது. கூடலர்-பகைவர். தலையோடு-தலையாகிய ஓடு. கலை-வத்திரம்.

118. புள்-சக்கரவாளப்பறவை. புணர்-நெருங்கிய. எள்ளில்-தள்ளாத. ஏவுற்று-ஏவப்பட்டு.

114. சுகம்-கிளி, மாற்றலர்-பகைவர். முனையும் - பொருதாநிற்கும், தளத்தோன்-சேனையையுடையோனை.

115. ஒருகால் - ஒருமுறை. மகுடம்-கிரீடம். தழும்பு-வடு. இமையாமுன்-இமைப்பதற்கு முன்னதாக.

116. தோரை-இரத்தம். அளிப்பது-காப்பது.

117. பான்மை-தன்மை. பைந்தமிழ்-பசிய தமிழ்.

118. அன்னவள்-அத்தலைவி. இன்னுயிர்-அத்தலைவியினது இனியவுயிர். அன்னது-அத்தன்மையானது. நிலைகுலையேல்-நிலை தவறேல்.

119. விதி-ஊழ். மேதினி-உலகம். மெய்ம்மொழி - சத்திய வார்த்தை. பதி-அரசன்.

120. வேட்டு-விரும்பி. செய்-வயல். கைம்மாறு-பிரதியுபகாரம்.

121. தனிமை-ஏகம், பழையாரில் - பழையாரைப்போல. பற்றலர்-பற்றற்றார். உழையார் - இடத்தார். கருத்து-எண்ணம்.

122. சிர்க்கணம் - சிறப்பினது பெருமை. கருதலர்-பகைவர். வனம்-காடு. மடுத்து-அருந்தி. இனம்-இன்னம்.

123. கன்-ஆகாயம். ஆரும்-யாவரும். அருநலம்-அரிய இன்பத்தை. வேட்டு-விரும்பி. கார்-மேகம். காவகத்து-சோலையினிடத்து.

124. விளம்பல் - சொல்லேல். பாவம்-பாதகம். கரந்தது-மறைந்து சென்றது. காசினி பூமி. மாண்-மாட்சிமை அதிபதி-அரசன். பூண்-ஆபரணம். நஞ்சம்-விடம்.

125. ஊடறியா-பிரியாத. பாடு-துன்பம். உயிர்ப்பாவை - உயிரையுடைய சித்திரப் பதுமை. மறைபன்னல் - மறைத்துச்சொல்லேல். கேழ்-சூரியன், சுடர்-சூரியன்.

126. சிலை - மலை. கலை - உடை, கணி-மாலை. கருதலர்-பகைவர். மலையும்படி-மலையும் வண்ணம். இலை-தழை. துணர்-பூங்கொத்து. மணி-இரத்தினம், தனம்செவி இடைக்கு. கலை குழை கணி யென்றது முரணிரை நிறையணி. கலை குழை கணி, இலை து[illegible] [illegible]யென்றது நிரை[illegible] [illegible] கணி யென்[illegible] [illegible]காரம். [illegible]

12[illegible] குள[illegible]-குளிர்[illegible] குழை-[illegible] [illegible] கழல்-வீரதண்[illegible] [illegible]யானை. பிடி[illegible]யானை களிதுயில்-இன்ப[illegible]த்திரை. அணங்கே-தெய்வப்பெண்போலுந் தலைவியே. வெளிறும்-வெளுக்கின்ற. உயிர்த்து-பெருமூச்சுவிட்டு. மெலிந்தனர்-வாடினர்.

128. ஏ-அம்பு. சலித்த-ஒப்பற்றிளைத்த. இறை-தலைவர். கா-சோலை. பொய்க்கட்டுரை-பொய்யாகிய கட்டையுடையவார்த்தை. நண்ணினம்-சேர்ந்தோம்.

129. வினை-செய்கை. பயன்-நன்மை தீமையாகிய பயன். விளைவு-உற்பத்தி. பொருள்-தானிய முதலாகிய பொருள். பனை-பனைமரம். கனி-தலைவி, பழம். முனை-நுனி. தெறும் - அழிக்கும். அயில்-வேல். கனை-பூவரும்பு. பொருள் - அருத்

தம். நாட்டுவோைக்கு-சொல்லிய வார்த்தைக்கு, அவர்தேசச்சொற்கு.

130. நிற்கு-உனக்கு. ஆமலர்-உண்டாகும் பழிச்சொற்களை. குறியாது-கருதாது. அடக்கும்-அமைக்கும். குழுவோர்க்கு-ஆயத்தார்க்கு. குறை-குறைபாடுகளை. நெறியாய்-ஒழுங்காய். பொறி-தேமற்புள்ளி.

131. பழிமொழி - நிந்தைவார்த்தை. குறுக்கும் - குறுகச்செய்யும். குலநீர்மை - குலத்தினது தன்மை. தெவ்-பகைவர். உரத்தான்-வன்மையுடையவனான. வாயகத்து - வாயினிடத்து.

132. பழி - நிந்தை. உண்டாமென-உண்டாகுமென்று. உலைவேமை-வருந்துகின்ற வெம்மை. தண்டாமரை-தண்ணிய தாமரை. விண்டு-நல்ல வார்த்தைகளைச்சொல்லி. ஆவதில்-ஆகப்போவதொன்றுமில்லை.

133. பாங்கு-அழகு. ஆயிரங்கதிரோன்-சூரியனை நிகர்த்தோனே. பல்கால்-பலதடவை. முகந்து-முத்தி. நினைத்தனள்-உன்னைக் கருதினாள்.

134. செல்-மேகம். திடுக்குற-அஞ்சும்படி. தெவ்-பகைவர். தளம்-சேனை. மிளிர் - பிரகாசிக்கின்ற. கௌத்துவம்-மாணிக்கம். அல்லும் பகலாய்-இராக்காலமும் பகற்காலமாக. அவிர்-பிரகாசிக்கின்ற. ஆடிடம்-விளையாடுமிடம்.

135. அமுதப் பிழம்பே-அமுதத்திரளைபோலும் தலைவியே. வருதி-வருவாயாக. எண்ணாது-கருதாது. எழும்-ஓங்காநிற்கும். மலைக்கு-மலையினிடத்து. எதிர்கேட்டு-கூவியெதிரொலி கேட்டு, விடைகேட்டு. அடியிட்டு - தாழத்தில் பாதத்திற்கொப்பாக்கி. அலரை-தாமரை மலரை. அலைவரு - அலையினிடத்துண்டாகின்ற, அலையும். கண்ணீர் - கள்ளாகிய நீரையுடைய, கண்ணின் நீரைக்கொண்ட. குவலயம் - நீலம், உலகம்.

136. கண்பகை - நீலம். காற்பகை-தாமரை. கைப்பகை-காந்தள். மேற்பகை-அசோகம். அண்-நெருங்கிய. இயலாக-இலட்சணத்தைப்பெற. மண்பகை-உலகத்தினிடத்துள்ள விரோதத்தை. தண்-குளிர்ச்சி. இன்சொல்-இனியமொழி.

137. வாளா - வீணே. மயற்பசி-மையலாகிய பசி. வாயமுது-அதரபானம், வாயாற் குடிக்கப்படுகிற நீர். அருந்தனம்-அரியகொங்கை, உண்ணுகின்ற சாதம். கோளா-குணமாக. சுமந்து-தாங்கி, தாள்-பாதம்.

133. சுகிர்தம் - இன்பம். அழுத்தும்-முழுக்கும். முடி-கிரீடம். விழுத்தும்-விழச்செய்யும். வேள்-மதனையொத்த. சுகாகர்தம்-இன்பமாகிய சந்தோஷம். வாரி-கடல்.

139. மகுடம்-கிரீடம். நாணும்-வெட்கும். துடி - உடுக்கை. கோணும்-கோடும். இழை-நூல். குழையும்-வளையும். அரி-சிங்கம். வனம்-வருணம், காடு. சேணும் - ஆகாயமும், மதனும்-மன்மதனும். திசைதரும்-திசைக்கும், திசையைக் காட்டும். நோற்று-ஒப்பின்றி.

140. கனம்-பெரிய. கடைந்து - கலக்கி. சினம்-கோபம். சேய்-குமரனே. குழு - மகளிர் கூட்டம். ஏகுதி-செல்லுவாயாக, விடை-உத்தரவு.

141. மூடு-மூடுகின்ற. எள்ளி - தள்ளி. வாடும்-சோருகின்ற. நிருபர்-அரசர். இறைமலை-கப்பமாகியமலை. உவக்கும்-மகிழும்.

142. நந்தாவனம் -நந்தனவனம். நறும்-நறிய. [illegible]க்கா-பூஞ்சோலை. எந்தாய்-எமது தலைவியே. சிந்தாமணி-தேவமணி. உவந்து-மகிழ்ந்து.

148. நண்ணும்-பொருந்திய. சுகிர்தம்-இன்பத்தைத் தரத்தக்க. மெய்ஞ்ஞானேசர் - மெய்ஞ்ஞானியாரென்னுங்காரணப்பெயரையும், கோட்டாற்று ஊசரத்துஷெய்குமுஹியித்தீன் மலுக்கு முதலியாரென்னும்

இயற்பேரையுமுடைய காமில், முகம்மில், ஆஷிகு, ஆரிபுபில்லாஹ் ஒலியுல்லா அவர்களது. தாண்மலர் - பாதமாகிய தாமரையை. நாடி-விரும்பி. எண்ணும் - கருதாநிற்கும். பதத்தோன்-பதவியையுடையோனை. எழில்-அழகு. மறவாமை - மறவாதிருத்தல். சௌபாக்கியம்-மிகுந்த பாக்கியம்.

144. வில்லில் - வில்வித்தையில். துணையில்-ஒப்பில்லாத. புல்லிற்கு-புல்லினுக்கு. மறி-மான். அன்னம்-சாதம். மல்லில்-வளமையை யுடைய. மடுத்து-உண்டு. சிறிது-சற்றுநேரம். மனை-வீட்டில். வதிந்து - தங்கி. அல்லிற் பகல்-இரவோடு பகற்பொழுது.

145. கோடை-கோட்டாறு. சீரடிக்கண்-சிறந்த பாதத்தினிடத்து. அத்தம்-கை. அருவிடம்-அரிய நஞ்சு. புத்தமுது-புதிய அமுதம்.

146. துறந்தார்-உலக ஆசையை முற்றும் நீத்த மேதாவிகளுக்கு, பிழைத்தார் - பிழைசெய்தவர்களை. சுடுசினம் போலும்-சுகின்ற அம்மேதாவிகளின் கோபத்தைப்போலும். பிறந்து-தோன்றி. ஆர் - அரிய. உறுத்தி-கோபித்து. மறந்தார்-தன்னை நினையாதவர்களை. சிறை செய்யும்- காவலுக்குட்படுத்தும். கறந்து-பிதுக்கி. ஆருயிர்-அரியஉயிர். எல்லை - சூரியனை.

147. மீறும்-ஓங்காநிற்கும். தளம்-சேனை. செல-செல்ல. மாமதன்-பெரிய மன்மதன். கூர்ந்து-மகிழ்ந்து. ஏறும்பரி- ஏறுகின்ற வாசியாகிய கிளி. இரதம் - தேராகிய தென்றற்காற்று. காளம் -எக்காளமாகிய குயில். ஈர்ங்குடை-பெரியகவிகையாகிய சந்திரன். சீறும்படி-கோபிக்கும் வண்ணம். கரிக்கு - அவனது யானையாகிய இருட்கு.

148. பொங்கும்- கொதிக்கின்ற. மயலுறு-மையலாகிய துன்பத்தை. புது-புதிய. நலம்-பயனை. அன்னையர்-தோழிமார். மங்கும்-ஒளிமாறுகின்ற. வழங்கிலர்-தந்திலர்.

149. நனவு-நினைவு. நலன் - நன்மை. அலது-தீமை. அஞ்சும் - அஞ்சாநிற்கும். அஞ்சம்-அன்னம். அழுங்கல்-வருந்தேல். ஒஞ்சும் - ஒஞ்சுகின்ற. புணர்ப்பும்-கூடுதலும்.

150. வெறி-மயக்கம். விளைவும்-ஆசையும். சிறையும்-காவலும். மிலைந்து-சூடி. கனற்பொறியாய்-அக்கினிப்பொறியாக. புன்கண்-துன்பம், உற்றோர் - அடைந்தோர். பிரசவயல்லல்-பிரசவவேதனை. நெறியாய்-ஒழுங்காக.

151. தடுத்தார்-தனது கட்டளையை மறுத்தவர்களது. மகுடம்-கிரீடம். எற்றும்-உதைக்கும். சொற்றும்-சொல்லியும். கலந்தும் - சேர்ந்தும். பழுதாய்-பொய்யாய்.

152. புனம்-தினைக்கொல்லை. புள்-பறவை. போரரசின்-யுத்தத்துக்குரிய தலைவரது. கனம்-பெருமை. உழல்-சுழலுகின்ற. அன்னை-தாய். அருட்டனம்-அருளாகிய செல்வம். இனம்-கூட்டம். இல்லிடம்-வீடு. தரும்-தருவாள். இயற்றுவை - செய்வாய்.

153. ஆவி-உயிர். மெய் - உடல். ஒன்று-ஒரேபொருளை. எம்மையாக்கி-தலைவனும் தலைவியுமாகிய எங்களைச் சிருட்டித்து. அகம்-மனதினிடத்து. வன்மை-கடினதன்மை. மென்மை-மெல்லிய தன்மை. இடைவித்து-துன்பித்து. அளபில் - அளவில்லாத. தாவிய-தாவுகின்ற. ஆய்தம்-ஆயுதம். மா-பெருமை பொருந்திய. முதல்-கடவுள். சார்பொழித்தான்-எங்களது சேர்க்கையை இல்லாமற் செய்தான். மெய் குறுகுதற்கு-சரீரங் குன்றும்படி.

154. சீர்-கீர்த்தி. வள்ளல்-வரையாது கொடுப்போன். தேர்-இரதம். ஓதை-ஒலி. திருவே-முண்டகாசனையையொத்த தலைவியே. மதனார்-மன்மதனனவர். தரு-தருகின்ற. கா

ளம்-குயில். கணை-புஷ்பம். குடை-சந்திரன். தேர்-தென்றற் காற்று. முரசு-கடல். ஆர் அமிழ்தாய்-அரிய அமுதமாக. ஏர்தரும் - அழகைத் தரும். மாறிலை-வேறு பகைகள் இல்லை. கின் அரசார்க்கும்-உனது அரசாகிய மருமஸ்தானத்தைச் சொந்தமாகவுடைய தலைவருக்கும். இதந்தரும்-இன்பத்தைத்தரும்.

155. மணியார்-கண்கள் கிறைந்த. கலாபம்-தோகைகளை யுடைய. மயிலீர்-மயில்களே. உழையீர்-மான்களே. பணி-ஆபரணங்கள். இருளையர்-தோழிமார். ஆடிடம்-விளையாடுமிடம். பருத்து-பருப்பமுற்று. திணியாசலம்-திண்ணியமலையையொத்த. சேய்-குமரனை. கணியார்-வெங்கை மாமானவர். அலர்க்கண்-மலராகிய விழிகளை. கணித்தார்-திறந்தார். இலை இல்லை. காய்புனம்-காய்க்த தினைக்கொல்லை.

156. கிறம் பிரகாசம். உழைகாள்-மான்களே. புறம்-பின்வசம். தாழ்-தாழ்கின்ற. குழல்-கூந்தல். பொன்-முண்டகாசனை. புணர்ந்து-தழுவி. சுகஞ்சிறந்தார்-சுகத்திளுற் சிறப்புற்ற தலைவர். மணிமுடி-இரத்தின மழுத்திய கிரீடம்.

157. வாய்விள-வாய்திறக்க. அரிந்து-அறுத்து. வாரியிடும்-அள்ளியிடுகின்ற. உலர்வாய்க்குரலின்-உலர்ந்த வாயினைக்கொண்ட கதிரைப்போலும். உறைவரிது-இருக்கமுடியாது. அலர்வாய்-பரந்த விடத்தையுடைய.அகத்திற்கு-வீட்டிற்கு. ஏகுதும்-செல்லுகின்றோம். நெறிக்கே-பாதை வழியாக.

158. இமை-இமைமைய. களிமயில்-களிப்பினையுடைய மயில். கார்-மேகத்தை. விண்-ஆகாயம். வெயில்-சூரியனை. விரை - வாசனையை. மலர்-புஷ்பம். பண்-கீதத்தை.பகர்-புகழாகிற்கும். பதியில்-ஊரினிடத்துள்ள. உயிர்-ஜீவராசிகள். மண்-பூமியை. உற-இருக்க. எமை-எங்களை. வாழ்த்துதும்-உம்மை வாழ்த்துகின்றோம்.

159. ஆக்கனையும்-ஆகுமனவும்.அறிவாதி - அறிவுமுதலானவைகளை. அள்ளி-வாரிக்கொண்டு. ஏந்து-ஆபரணங்களைத் தாங்கிய. அனையார்-பாங்கிமார்கள். வேந்தனையான்-அரசனை கிகர்த்தோன். விறல்-வெற்றி. போந்தனையால்-சென்றாய். இவண்-இங்கு. போதுவாய்-வருவாய்.

160. அடுத்தடுத்து-நெருங்கிநெருங்கி. அண்ணல்-தலைவனே. அணேல் - வாரேல். ஏந்திழை பால்-ஆபரணங்களைத் தாங்கிய தலைவியினிடத்து. அன்னை-தாய். பல்கால்-பல தடவை.

161. இரப்பார்க்கு-யாசிப்பவர்க்கு. அளிக்கும்-கொடுக்கும். பரப்பார்-விசாலமாகிய. மதர்-மதர்த்த. பாரம்-பருமையையுடைய. சுரப்பார்-சுரப்பு கிறைந்த. மெய்த்தோற்றமும்-உடலினது காட்சியையும். நாற்றமும்-வாசனையையும். சூழ்ந்து-ஆலோசித்து. அனை-தாய். கரப்பார்-அந்தரங்கம் கிறைந்த. கனன்று-கோபித்து. இன்று-இல்லை. இனிக்காவகம்-மேல் காவலுக்குரிய தினைப்புனம்.

162. தடம்-வாவி. குறுகுநர்க்கு-வருந்தலைவர்க்கு. கனிவம் - இங்கிதம். மெய்க்கோணிலை-உண்மையைக்கொண்ட கிலைமை.

163. போர் - குவியல். புனிதம்-பரிசுத்தம். ஏர்-அழகு. கீணெறி - கீண்டபாதை.

164. கூர்ந்து-மகிழ்ந்து. பாடும்-சொல்லும். பாரிடம்-பூதலம்.

165. மதமலை - யானை.

166. நண்ணும்-செல்லாகிற்கும். நெறி-பாதை-பாடு-வருத்தம். ஆல்கள் யாவும் அசைகள்.

167. தரும்-தருகின்ற. தாரை-கீரொழுக்கு. இரவியும் - சூரியனும். ஆர்கலி-சமுத்திரம். கங்குலும்-இரவும்.

168. திண்-வலிமை. ஒள்-ஒள்ளிய. வெண்கலை - வெள்ளிய சந்திரனது. வண்கலை - அழகிய மானை. ஆர்த்தற்கு-ஆர்ப்பதற்கு. எழும்-எழுகின்ற. மூச்சு-சுவாசம். எண்டங்த-இலக்கத்தைக்கொண்ட. பல்கயம்-பலயானைகளை. எற்றும்-வாரியெறியும். அரி-சிங்கம். அண்டர்ந்த- நெருங்கிய. இருட்போது-இராக்காலம்.

169. சினம்-கோபம். கரி-யானை. தடம்-அல்குல். பணி - பாம்பு. அரி-சிங்கம். இடைவதல்லால்-வருந்துவதல்லாமல். விலங்கு-மிருகம்.

170. திமிரும்-பூசும். திறல் வெற்றி. இளநாரியர்க்கு-இளமைப் பருவத்தை யுடைய பெண்களுக்கு.

171. அணியியல் - அணியினது இயல்பு. என் பயன்-என்னபிரயோசனம். பொன்னுடு - தேவலோகம். பூவை-நாகணவாய்ப் புள்ளை யொத்த. புத்தமிழ்தின் - புதிய-அமுதத்தைப்போலும். சொன்னாட்டு-சொற்களால் நாட்டப்பட்ட. அணியியல்-மாலையினது இலட்சணத்தை யுடைய. நிச்சயம்-திண்ணம்.

172. கழை-கரும்பு. தரளம்-முத்து. காந்தளம்போது-கார்த்திகைப் பூ. தழை-தளிர். அணிநலம் - அணியினது அழகு. மழை-மேகம். இழையார்-ஆபரணத்தைத் தரித்தமாதர்கள். எல்லி-இரவு. யாமம்-சாமம்.

173. கொடுவரி-கொடிய இரேகைகளையுடைய, வனத்து - காட்டினிடத்து, கங்குற் செவ்வியில் - இராப்போதில், பரி - குதிரையை யுடைய, வல்லும்-சூதாடுகருவியும்.

174. புயல்-மேகம், இபம்-யானை, அரி-சிங்கம், வெருளும்-மருளுகின்ற, சிறுநெறிக்கான் - சிறியபாதையையுடைய காட்டினிடத்து, வலித்தாள்-வரும்படி யிழுத்தாள், வனசணள்-வொனமை யுடைய தலைவி.

175. பொருவா - ஒப்பாகாத, கண்ணுளர் - நாயகர், அடல் - வலிமை, அமர்-யுத்தம், மடல்-இதழ்.

176. புத்துரைகள்-புதியமொழிகள், தரணி-பூமி, வெண்புகழ்-களங்கமற்றகீர்த்தி, தேற்றியவாறு - தேறும்படி செய்தவிதம்.

177. மணம்-வாசனை. மாதவி-குருக்கத்தி. வங்கணம் - வருணனை. கைக்களிறு-துதிக்கையை யுடைய யானை. அம்-அழகிய. பணம்-பாம்பின்படம். அல்குல்-நிதம்பம். நிறையற - ஒழுக்குகெட. பாய்கின்றது-சாடுகின்றது.

178. எவார்- அம்பைப்போலும் பொருந்திய. எமாந்து-எமாந்தஎன்பதன்விகாரம். கோவார்-மேன்மை பொருந்திய. அணியொளி-ஆபரணங்களின் பிரகாசம்.

179. நள்ளிருள்-நடுராத்திரி. சேவை-ஊழியம். தண்ணவர்-தேவர்கள். அடுக்கல்-மலை. போதுகம்-போவோம்.

180. முலை-முல்லை. அலி-அல்லி. வினை-அவயவங்கள். தொண்டாய்-அடிமைகளாக.

181. விமானம்-ஒருவகைத்தேர், விஞ்சை-வித்தை. ஆர்கலி-சமுத்திரம். காலேணி-காலாகிய ஏணி.

182. துளி-நீர்த்திவலை. கராக்குழி-முதலைகளையுடைய தடாகம். அவலம்-துன்பம். முள்வழி-முட்களை யுடைய பாதை.

183. கூந்தலிருட்கு- கூந்தலாகிய அந்தகாரத்திற்கு. இடை மின்னொளி-இடையாகிய மின்னலினது பிரகாசத்தை. அணி - ஆபரணம். மென்முலை - மெல்லிய தனத்தையுடைய தலைவியினது. அல்குற்றடம்-நிதம்பமாகிய தடாகத்தை. அங்கேர்கண்டபோது-அந்த உண்மையைக்கண்ட சமயத்தில். அஞ்சு நாகங்கள்-நாகங்கள் அஞ்சாநிற்கும், ஐவகையான நாகங்கள்; அவை, மலை பாம்பு மேகம் யானை சங்குகளையுடைய நீர் நிலைகள்.

184. மின்னனையும்- மின்னலையொத்த தலைவியே. ஆகம்-உடல். மடுக்க மடுக்க-உண்ண வுண்ண.

185. சமையாத - பொருந்தாத, பொம்மல்-பொலிவு. சாயல்-அழகு, அரம்பையர்-தேவப்பெண்கள்.

186. அரா-பாம்பு, அரி-சிங்கம், உறுத்து-கோபித்து, பொருகைக்கு-பொருதலுக்கு, கருகைக்கு-கொடுத்தற்கு, தருவைப்போன்றகைக்கு. வருகைக்கு-வருவதற்கு.

187. நூபுரம்-சிலம்பு. வாணகைப்போது-ஒள்ளிய பற்களைப்போன்ற புஷ்பங்களாகிய முல்லை யரும்புகள். பேணுது-கருதாது. செஞ்சிவட்பு-மிக்க சிவப்பை. அடி-பாதத்தில். கடிமனைக்கு-காவலையுடைய வீட்டிற்கு.

188. தளவம்-முல்லை. நகை-பற்கள், அண்ணாந்து-மேனோக்கி. உடைந்தும்-மனஞ்சோர்ந்தும், முறுக்கவிழ்ந்தும்,அலர்வாய் விடுத்தும்-கிக்கை மொழிகளை மொழிந்தும், வாயானது விரியப்பெற்றும். எண்ணுது-கருதாது.

189. ஒல்கா-குறையாத. பல்கு-பெருகிய, அனை-தாய், இல்காரணம்-இல்லாத காரணத்தை, செல்-செல்லுவாய், காலெனநட - காற்றைப்போலும் நடப்பாய். வா-வருவாய், அடைவாம்-போவோம்.

190. கன்மேல் - மலையின் மீது, முலைக்கு-தனத்தை யுடைய தலைவிக்கு, ஒருத்தன்மேல் - யானையின் மீது, சாரல்-மலையடிவாரம், சாரல்-வாரேல், இன்று - இல்லை, பழி - நிந்தை.

191. ஒறுக்கும்-வெறுக்கும், கட்டுரை-கட்டமான மொழி, இலவு-இலவமரம், இயல்பு-இயற்கை.

192. வெறி-தேன், பொறி-புள்ளிகள், பொதும்பு-பொந்து, போதும் - செல்லாநிற்கும், நெறியால்-பாதையினால், அலமரும் - வருந்துகின்ற, குறியால்-குறிப்பினால், போதி-போவாயாக.

193. தொடிக்கு- வளையல்களுக்கு, அடிசெய்காத்தோகை-கையினது முற்பாகத்தைக் கொடுக்கின்ற மயில்போலுஞ் சாயலையுடைய தலைவியே, மருங்கெழில் - இடையழகை, சூழ்ந்து-ஆராய்ந்து, முடிக்கு-கிரீடங்களுக்கு, அடிதந்த - பாதத்தைக் கொடுத்த, அலமரும்-மயங்குகின்ற, மின்னினல் - மின்னலினுவிருளை, நெறி நொடிக்கு-பாதையினது பள்ளங்களுக்கு, அடிமாற்றி-பாதத்தை மாற்றி, அடைகுவல் - சேர்வேன்.

194. பொன்னுகமேனி - பொன்போலுஞ் சரீரகாந்தியையுடைய, புணர்-நெருங்கிய,பூ-பூமி, புன்னாகம்-புன்னைமரத்திலுள்ள, சேக்கை - படுக்கையை, அன்னம் - அன்னப்பறவைகள், ஆகம்-உடல், சலியாது-தளராது, தழங்கின்றது - ஒலிக்கின்றது.

195. உள்ளற்கு - நினைப்பதற்கு, எளிதல-இலேசன்று, என்னுட்கமலவள்ளல்-எனது இதய தாமரையிலிருக்கின்ற வள்ளலாகிய தலைவர், குறி - அடையாளம், மானித்து-அனுமானித்து, கன்னற் பொழுதிடை - நடு இராக்காலத்தில், பட்டதுன்பம் - அடைந்தவருத்தம், நங்கையரே - தோழியே.

196. பாயாவரும்-பாயும், பானுன்-பாநிரான், பற்றலர் - பகைவர், வடுக்குறி-தவறுன குறி.

197. பொருந்தலர்-பகைவர், மார்-மார்பு, வேட்டு-விரும்பி, கலை-நெருங்கிய, வெஞ்சுர் - வெவ்விய வருத்தத்தை,நஞ்சே-விடமே, கொம்பு-வளைவாகிய வெழுத்துக்கோடு, நஞ்சென்பதன்முன் கொம்பிட்டால் நெஞ்சென்றுவது காண்க.

198. மடிகாள் - தாழைச்செடிகளே. நீளணி-நீண்ட மாலை. சுகம் - இன்பம், வண்டு.

(867)

199. முடி-முனி. மூட்டிய-மூளும்படி செய்த. அடி-மூடு. இணை-ஒப்பு. தொடி-வளையல். சூழ்வது - ஆலோசிப்பது. தொல்-பழமை.

200. படிற்றுரை - பொய்வார்த்தை. வாய்மை-சத்தியம். இயம்-வாச்சியம், அதிர்-ஒலிக்கின்ற. முன்றில்-முற்றம். முடங்கல்-தாழை. அல்லி-ஆம்பல்.

201. ஒறுத்தீர் - வெறுத்தீர், அண்ணல்-தலைவனே.

202. பழி-நிந்தை.

203. ஆவி - தடாகம். வண்குறி-அழகிய அடையாளம். ஆங்கு-அவ்விடம். அனியாயம்-நியாயமின்மை-அங்கோ-இரக்கச்சொல். ஆகம்-உடல். சோங்கன்-மரக்கலத்தையுடையோன். பூங்கனி-அழகிய கன்னியாகிய தலைவி. பூவளவு-பூமியினது அளவு. புஷ்பங்களையுடைய வளைந்தசோலை.

204. வானேறு-இடி. வல்லியம்-புலி. கைம்மலை-யானை. அல்லிடை-இரவினிடத்து. ஏறு-ஆண்சிங்கம். குலம்-மேன்மை பொருந்திய. அன்பர்-தலைவர்.

205. சித்தம் - மனம். அலர்-பூ. அசு-வத்திரம். அர்த்தம்-பொன். அடுக்கல்-மலை. யுத்தம்-மனப்பொருத்தம். வினையோ-தீமையோ. நுதல்-நெற்றி.

206. நள்ளென்று-மிகவாய். நடுநிசி-அர்த்தராத்திரி. போதர-வர. நற்றமிழ்க்கு-நல்லதமிழாற் செய்யப்பட்டநூற்களுக்கு.தெள்ளென்று-தெளிவாய். துயில்-நித்திரை. சஞ்சலம்-துன்பம்.

207. சளம்-மூர்க்கம். பேய்-பைசாசம். கரற்றும்-குரைக்காநிற்கும்.

208. தோடுறங்கா-இதழ்கள் குவியாத. இறை-தலைவராது. சூழ்வற-சுற்றிவரும்வருகை யொழிய. கோடு-ஊதிடு கொம்பு. முன்றில் - முற்றம். கார்-மேகம். கா-சோலை.

209. படிப்பால்-பூமியினிடத்து, கல்வியினால், தொடி - வளையல்களையுடைய. பான்மொழி-பால்போலும் வார்த்தைகளைக்கொண்ட. ஒடிப்பான். நீக்கும்பொருட்டு. காவலர்-நகர்காப்பாளர். பறை-முரசு. கடிப்பான்-கோலினால். காலன்-எமன்.

210. தேருந்தெளிவின்-தேறத்தகாததெளிவினோடு.ஊறாய்-தடையாக. உரவோன்-அறிஞனாகிய. நித்தலும்- பிரதிதினமும், களங்கம்-மனம். மதி-அறிவு.

211. வஞ்சினம்-சபதம். முனிவு-கோபம். சூல்-கருப்பத்தை யுடைய. மஞ்சினம் - மேகக்கூட்டம். வளம் - செல்வத்தையுடைய. துஞ்சினது-துயின்றது. தோகை - மயில்போலுஞ் சாயலையுடையபாங்கியே. கூகை-கோட்டான். அரற்றி-கூவி. ஆவி-உயிரை.

212. ஆவற்கு-ஆசைக்கு. மா-பெரிய. வல்-வலிமையுடைய. மேவு-பொருந்திய. அற்கடை-இரவினிறுதியில்.அஞ்சிறை-அழகியசிறகுகளைகுரற்செய-கூவ. தீவினை-பாதகம்.

213. மைக்கண்-மையெழுதியவிழி. வடித்தனை-நீரைப்பொழிந்தாய். தோடு - இதழ்கள். ஆய்-செவிலித்தாய். அன்னை-நற்றாய். கோன்மை-ஆளுகை. உற்றது-சம்பவித்தது.

214. தண்டா-கெடாத. வளம்-செல்வத்தையுடைய. தனதோன்-குபேரனை.தாரகை-உடு. பசப்பும்-பசுமையையும். புனை-அலங்கரித்த. சேப்பும்-சிவப்பையும். எதிர்-நேராக, அயிர்த்து-அனுமானித்து. கட்கணை-கண்களாகிய பாணம்.

215. ஞாளி-நாய். அன்ன-ஒக்கும். கூகை-கோட்டான். கோழி-சேவல். மானும்-ஒக்கும். மதி-சந்திரன். ஆயோவெனும் - தாயோவென்று சொல்லத்தகும்.

216. கூரார்-கூர்மைபொருந்திய. கோமளமே - இளமைச்செவ்வியையுடைய பாங்கியே. கொற்றவர்-த

லைவராது. நேர்மை-நிதானம். நீக்கம்-பிரிவு. தேரார் - பகைவர். அரி-சிங்கம்.

217. மறம்-கோபத்தை.கால்-கக்குகின்ற. அறம் - புண்ணியம். காதலித்த-விரும்பிய. வினை-தீமை.

218. அமைவில்-பொருத்தத்தைப்போலும், புல்லும் - சேரும். புறத்துளது - அடுத்துள்ளது. போற்றலர்-பகைவர்-திறல்-வீரம்.

219. கூராது-தூங்காது. துயில்-நித்திரை. கலை-வஸ்திரம். வாயமுதம்-அதரபானம். நல்லோன்-உத்தமனை.

220. கைக்கயம்-துதிக்கையையுடைய யானை. கோட்டுத்தனம்-கொம்பையொத்த கொங்கை. நலம்-அழகு. பேழை-பெட்டகம். சோட்டுக்கருங்கொடி-துணையாகிய கரிய காக்கையையொத்த. சூழ்-வளைந்த. நுதலாய்-புருவத்தை யுடைய பாங்கியே.

221. அடியோடு-ஆதியிலிருந்து. முடி-கிரீடம். இறைஞ்சிசை-பணிகின்ற கீர்த்தியையுடைய. தொடியோடு-வளையல்களோடு. அறுவை-வஸ்திரம்.

222. பிணைதந்த- கலந்த. கணை-அம்பு. அணை-தலையணை. இணைதந்த-இணைந்த. எய்துறும்-கிட்டாநிற்கும்.

223. ஐ-ஐந்து. வில்வலர்க்கு-விற்றொழிலில் வல்லவனை மன்மதனுக்கு. உள்ளுடைந்து-மனமானது நொறுங்கி. மறகேன்-மறவாதயான். மண்டலிகர்-அரசர். பவளம்-பவளத்தையொத்த. அல்லியலர்க்குள்-ஆம்பற் புஷ்பங்களுக்குள். அலரா-மலராத. அலர்-பழிச்சொற்களை. அரும்பதி-அரியவூர்.

224. பேர் - பெரிய. காரார்-கருமைநிறைந்த. கயம்-யானைகளை. துவைத்து - தேய்த்து. செந்நீர்படி-இரத்தங்கலந்த. கான்மலர்-பாதமாகிய தாமரையை. பூந்தாரார்-புஷ்பமாலை பொருந்திய, தடத்தில்-மலையினிடத்து. ஐம்பாலால்- கூந்தலினால். நீர்மை-தன்மை.

225. எறியும்-வீசுகின்ற. அலை-திரைகளை யுடைய. குருகே-நாரைகளே. இனமும் - இன்னமும். பறியும்-கழலுகின்ற. தொடியும் - வளையல்களையும். படரும்-அரையை விட்டு மகலுகின்ற, வெறியும் - மயக்கையும், சிறையும்-காவலையும். விளைவும்-ஆசையையும்.

226. மஞ்சங்கடுத்தனை-மேகங்களை அங்கு அடுத்தாய், கட்டிலினிடத்து விரைந்து சென்றாய்,மையற்பெருத்தனை-கரிய விரவை வளரப்பெற்றாய், ஆசையான ததிகரிக்கப்பெற்றாய். மாமுலையும் - பெருமை பொருந்திய முல்லை யரும்புகளும், பெரிய தனங்களும்.விஞ்ச-மிகுக்க. மெய்யும் - உடலும். வெளுத்தனை-வெளிறினாய், வெண்ணிறமுற்றாய். வேற்றரசர் - அன்னிய அரசர்கள். துஞ்ச -மடிய. பொருபடை - பொருதுகின்ற சேனையை யுடைய. அஞ்சம் - பயப்படும். பிறையே - சந்திரனே. நிற்கும் - உனக்கும். அன்பிறை-அன்பையுடைய தலைவன்.

227. பேராதரம் - பெரிய அன்பையுடைய. பெருமான் - பெருமையிற் சிறந்தோனை. பிறங்கல்-மலை, ஏரார்-அழகுநிறைந்த. குறள்-பூதம். இருசுடர்-சந்திரசூரியர். தேராது - தெளியாது. அயிர்க்கும்-சந்தேகியாநிற்கும். சாரல்-மலையடிவாரம்.

228. நெறிக்கும் - முறிப்புக்கொள்ளாநிற்கும். ஆய்-தாய். எல் - சூரியன். எறிக்கும் - ஒளிவீசும். எதிலரை-பகைவரை. தறிக்கும் - வெட்டும். கடுத்தலை-வாள். அல்-இரவு. குறிக்குள் - குறியினிடத்து, குறுகவென்று-வாரேவென்று. கோதை-கூந்தல், மாலை.

229. சேய்-செம்மை. மையனோய்-ஆசையாகியபிணி, வெறியாடல்-

சன்னதமாடுதலை. நுடங்கும் - துவளாநிற்கும். கொண்டவா-கொண்டவாறு.

230. சாசகுணம்-இனிய குணம். அட்டவர்க்கு-மேற்கொண்ட தலைவர்க்கு. அணி-அழகிய. மறுகு-வீதி. தொனி-ஒலி, மணத்தென்ன. விவாகத்திற்கென்று. பிரசம்-தேன். பிற்பட. பின்னுற்போக.

231. மன்றல்-விவாகம். காவி - நீலத்தையும். அஞ்சேல்-அழகியசெண்டைமீனையுமொத்த. கிளைக்கு - உறவினர்க்கு.

232. கிளை-உறவினர். மூளை-மூங்கில். இகல் - பகைக்கின்ற. வளை-வளையல்கள். அறுவை-வஸ்திரம். மங்குல்-இரவு. களை-அயர்வு. இசைவகை-கீதத்தின் பாகுபாடு. கரந்தனன்-மறைந்தேன்.

233. ஊர்வாய் - ஊரிலுள்ளார்வாயை. ஓர்வாய் - அறிவாய். கையலர்-கையினிடத்திருந்தமலர். பார்வாய் - உலகத்தினிடத்துள்ள. அலரென - பழிச்சொல்லைப் போலும். பைங்கொடி - பசியகொடியையொத்ததலைவி. படர்ந்த-விரிந்த. முடிச்சார்பாய் - கூந்தலினது சார்பாக. அலர்ந்தது-மலர்ந்தது.

234. காமாநலம் - காமாக்கினி. மாழ்கி-குன்றி. ஆம்-ஆகிய. ஆவலி-இரேகை. பசப்பாதி-பசலைமுதலானவைகளை. தா - தாவுகின்ற. மாவரு-குதிரையினிடத்து வருகின்ற.

235. அடல்-வெற்றி. மிடல்-வலிமை. அவியா - அவிக்காத. வெவ்வழல்-வெவ்விய நெருப்பு. கடலுற்ற கண்ணி-சமுத்திரத்தைப் போலும் பொருந்திய கண்களையுடையவளான. தாய்-அன்னை.

236. சங்கை-பெருமை. திங்கள்-சந்திரன். சேல்விழி - கெண்டைமீன்போலுங் கண். கொங்கைக்குடம்-தனமாகிய கும்பம். குறுநகை-சிறியபற்கள். குழற்கொண்டல்-கூந்தலாகிய மேகம். எங்கைக்கு - எமது தங்கையாகிய தலைவிக்கு.

237. பொய்க்கு - உண்மையின்மைக்கு. மெய்க்கலை - உண்மையையுடையநூற்களை. கண்டவர்-தெரிந்தவர். மேய-உற்ற. வருகைக்கு - வரவுக்கு. அலையேல் - அலையாதே. அல்லில்-இரவில்.

238. மணி-அழகிய. மாளிகை - அரண்மனை. கணி - வேங்கைமரம். கலை-கிரணங்கள். மதிவட்டம்-பரிவேடம். அணிமாவரு-அழகிய குதிரையினிடத்து வருகின்ற. நணி - நெருங்கி. மணம்-விவாகம்.

239. பூமகனுதன் - பூமாதேவியினது தலைவனுன. புனிதம் - பரிசுத்தம். நாமகள்-கலைமகள். நாமகளென்ன - நாம் மகளென்று சொல்லும்படி. கோமகள் - தலைவி. நின்பழி. உன்னாலுண்டான நிந்தையை. அன்னையின்-தாயைப்போல. காமகள் - காக்கின்ற பெண்.

240. மாணு - பெருமையாக. பேணு - பேண முடியாத. அண்ணல்-தலைவனே. உன்னி-நினைத்து. ஆடுக-விளையாடுவாயாக.

241. வெற்பனே-மலையை யுடைய தலைவனே. அல்லுக்கு-இராக்காலத்திற்கு. அளி-வண்டு, கிருபை. எல்லுக்கு-பகற்காலத்திற்கு. அல்லியிருமலர்-ஆம்பலாகிய பெரிய புஷ்பம், வாய்.

242. அஞ்சலென - நடுங்கேலென்று. விஞ்ச - அதிகரிக்க. மேய - பொருந்திய. கஞ்சம் தாமரை, முகம். சுகம்-வண்டு, இன்பம்.

243. புகல்-வெற்றி. போற்றலர்-பகைவர். இகல்-வன்மை. இசை - கீர்த்தி. அகல்-தீபம்.

244. துயில்-நித்திரை. என்மதி-சூரிய சந்திரர். கல்லும்-தோண்டாநிற்கும். கடகரி-மதத்தை யுடைய யானை. குறள்-பூதம். அலர்-பழிச்சொல். அல்லும்-இரவும்.

245. நீடும்-நீண்ட. சிலை- வில். வடி-வடித்த. மணம்-விவாகம். கோடும்-கோணும். கைதவம்-துன்பம்.

246. கொலைவரி-கொடிய இரேகைகளை யுடைய. சாரல் - மலையடிவாரம். சேரல் - வாரேல். அல்லும் இரவும். ஆய்முத்தம்- ஆராய்ந்தெடுத்த முத்தைப்போன்ற, வெண்ணகைக்கு-வெள்ளிய பற்களை யுடைய தலைவிக்கு.

247. வடிக்கும்-நீரைப்பொழிவாள். மருண்டு - பிரமித்து. உயிர்க்கும்-பெருமூச்சு விடுவாள். சினக்கும்-கோபிப்பாள். உன்னி-நினைத்து. தயங்கும்-இளைப்பாள். கயங்கும்-குழைவாள். அயில்விழிக்கு-வேல்போலுங் கண்களையுடைய தலைவிக்கு. நின்சோகம் - உன்றன்மேலுற்பட்ட துன்பத்தை. கடிந்து-நீக்கி. அருள் - காப்பாயாக.

248. பூபர்-அரசர். இருகாலும்-அல்லும்பகலும். காவலர்-நகர் காப்பாளர். முகில்-மழை. செல்-மேகம்.

249. சினைத்தார்-பூங்கொத்துக்களாற் செய்யப்பட்ட மாலை. செம்மல்-அரசன். ஒன்றார்-பகைவர். கனைத்து-ஒலித்து. நின்-உனது. கானலம்-காமமாகிய நெருப்பை.

250. இடைக்கலை- அரையினிடத்துள்ள வஸ்திரத்தை. கனவு-சொப்பனம். காரிகை-தலைவி. இகல்-பகைக்கின்ற.

251. வண்ணம்-நிறம். புலர்ந்து-வாடி. பூரித்து-பருத்து. சுணங்கு-தேமல். இறை-சிந்துகின்ற. சேப்ப-சிவக்க. சலித்தனள் - சோர்ந்தாள். பன்- சொல்லுகின்ற. வண்ணம்-அழகிய.

252. புணர்-நெருங்கிய. பொன்னகர்-அழகிய ஊர். ஆற்றும்-செய்யும். கருமம்-காரியம். அடைவல்-வருவேன். கூற்றும்-எமனும். கொடியும்-காமமும். தேற்றும்-தெளியச் செய்யும்.

253. கடுஞ்சொல்-கொடிய வார்த்தை. எம்மான் - எமது தலைவி. சிலைவலவா-வில்வித்தையில் வல்ல தலைவனே. உரை-வார்த்தை.

254. ஏகம்-ஒன்று. சோகம்-துன்பம். என்னேனும்-என்னத்தையும். என்னேன் - இகழேன். துன்னலர்-பகைவர். ஆகம்-உடல். மென்-மெல்லிய. போக-செல்ல. விடை-உத்தரவு.

255. வள்ளம்-கிண்ணத்தையொத்த. ஒன்னலர்-பகைவர். வீள-வேறுபட. துணித்த-வெட்டிய. அன்னத்தரும்-அன்னதற்குத் தகுதியான. அயர்த்தால்-மறந்தால். பழி-நிந்தை.

256. சில சாதித்தற்கு-சில காரியங்களைச் செய்து முடிப்பதற்கு. தரியார்-தங்கமாட்டார். எதிர்-எதிர்க்கின்ற. தேரலர்-பகைவர். மலையவெற்பு-பொதியமலை. புலராய்-வாடேல். போதுவர்-வருவார்.

257. எற்பிரியேன்-என்னைவிட்டு நீங்கேன். துறவாவிருந்து-துறந்து. துயர்-துன்பம். சூழின் - ஆலோசித்தால். அறவாழி-தரும சக்கரத்தையுடைய. இகக்கங்கள்-இக்கட்டுகள்.

258. குருகே-நாரையே. தணந்து-பிரிந்து. பதியும்-நீங்கிய. பயிலிடம்-இருக்குமிடம். ஒருகால்-ஒருமுறை. அறம்-புண்ணியம். செறியும்-நெருங்கிய. தவம்-புண்ணியத்தையுடைய. சேய்-குமாரனை.

259. சேல்-கெண்டைமீன். மேல்-மீது. நோக்கின் - கண்களோடு. மேவி-சென்று. நூல் - சாத்திரம். நுவல்-சொல்லுகின்ற. கிரிக்குள்-மலையினிடத்து. பால்-பக்கம். முந்தி-முகந்து. களிப்பதற்கு-சந்தோஷிப்பதற்கு.

260. சித்தாகுலமும்-மனக்கவலையும். தியக்கும் - கலக்கமும். மயங்கேல்-மயங்காதே. கொந்தார்-கொத்துக்கள் நிறைந்த. தொடை-மாலையையுடைய. சந்து-சந்தனம்.

261. இறையளவு - அனுத்தனை. நறை-வாசனை. அளவு - அளாவிய. ஆய்குழல் - ஆராய்ந்த கூந்தலையு

டைய. சிறையளவாக்கி - காவலளவாக்கி. திகைப்பித்தது-பிரமிக்கச். செய்தது. ஏது - என்னகாரணம். தேர்-இரதத்தையுடைய. நிறையளவு-கப்பத்தினது அளவை. ஏற்கும்-ஏற்றுக்கொள்ளும்.

262. வாரி-கடல். பொரும்-பொருதாநிற்கும். செல்லாவரும்-செல்லும். மதி. சந்திரன்-சிறுகால். தென்றற்காற்று. அதிர்ச்சி-முழக்கம். பல்லாயிரம்-பலஆயிரங்கள்.

263. நீள் - நீண்ட. பொன்வாய்-தலைவியினிடத்துள்ள. புரந்தனன்-காத்தனன். போற்றலர்தம்-துதியாதவரது. புன்வாய்-கீழ்மையான வாயை. மலைதன்வாய் - மலையினிட

264. அறம்-புண்ணியம். சுகம்-இன்பம். பூக்கும்-புஷ்பிக்கின்ற. தரு-மரம். தெருள்-ஒளிவு. சேரலர் - பகைவர். மருள்-மயக்கம். வெருள்-அஞ்சுகின்ற.

265. ஆசை-விருப்பம். புறம்-வெளியூர். புத்துரை-புதியமொழி. நேர்வர-நேராக. அறல்-கரிய மணலையொத்த.

266. சுரம்-பாலைநிலம். உவப்பு-மகிழ்ச்சி. பொருள்-திரவியம். அல்-இரவு. வீங்கும்-அதிகரியாநிற்கும். பழி-நிந்தை.

267. விலை-கிரயம். மணம்-விவாகம். அளித்தண்-கிருபையாகிய குளிர்ச்சி. இனையல்-வருந்தேல். கலை-கல்வி. நிலை-நிலைமை. அளித்து-கொடுத்து. கொங்காய்-தனத்தையுடைய தலைவியே. நிச்சயம்-உண்மை.

268. வேள்-மதன். கணை-அம்பு. மெய்-உடல். பசப்பு-பசலை. விதிர்க்கும்-நடுங்கும். கோள்-கொள்கை. கொள்ளை கொள்வான் - திருடிக்கொள்வான். விடுத்தார்-விட்டார். நண்பர்-தலைவர். ஆள்விடுத்து-ஆளனுப்பி.

269. சகசம் - இயற்கை. ஓர்ந்தால்-அறிந்தால். துயர்-துன்பம். துவில்-கெடாத. பார்-பூமி. தேர்ந்து-தெளிந்து. அதிபதி - அரசனாகிய. வரைவு-விவாகம்.

270. கரடும்-முரடும். வெங்கானில்-வெவ்விய காட்டில். தியக்கும்-பிரமிப்பும். புல்லும்-பொருந்தும். தரம்-தகுதி. நன்று நன்று-மிகவும் நல்லது. தூ-பரிசுத்தம்.

271. தெள்ளும்-தெளிந்த. சிமயம்-சிகரம். சுரம்-பாலை. அளற்கு-அக்கினிக்கு. பொள்ளும் - பொக்கும். பெடைக்கு-பெட்டைக்கு. அஞ்சிறை - அழகிய சிறகினது. நீழல்-நிழல். புரக்கும்-கொடுக்கும். அன்றில்-அன்றிற்பறவை. கோற்றொடியே-புள்ளிகளைக்கொண்ட வளையல்களையுடைய தலைவியே.

272. கறுத்து-கருநிறமுற்று, குறைபட்டு. ஒலித்து -இடித்து, அவயமிட்டு. உறவிழித்து-மின்னி, மிகப்பார்த்து. வெங்கோபமும் - வெவ்விய தம்பலப்பூச்சியும், கொடியசினமும். காயாவரும் - காயும். கார்-கார்காலம். கன்னெஞ்சர் - கல்லைப்போலு மனத்தையுடைய தலைவர்.

273. கவிகை - கொற்றக்குடை. பூண்-ஆபரணம். கரி-யானை. கூற்றும்-எமனும். கொடுவ - கூச. குமுறு-முழங்குகின்ற. கொண்டல்-மேகம். கொழும்-செழிய. ஆற்றும்-செய்யும். நடம்-நடனம். வம்பு-வம்பாகத்தோற்றியது.

274. கவளம் - சோற்றுத்திரளை. களிறு-யானை. கொன்றை-கடுக்கை. களிமலர் - கள்ளையுடைய புஷ்பம். வில்-இந்திரதனு. மின் - மின்னல். சவளம்-ஈட்டி. பைம்புயல். பசியமேகம்.

275. சூது- சூதாடுகருவி. உரைகொடு-பொன்கொண்டு. மிடையல்-வருந்தேல். போது-தாமரை. வதனம்-முகம்.

276. துற்றும் - நெருக்கும். தகை - தகுதியையுடைய. எற்றும்-புடைக்கும். வலிக்கும்-இழுக்கும்.

277. அலை-கடல். அழிநீர் - கண்ணீர். உலைவாய்-உலைந்து. துயில்-நித்திரை. கலை-நூல். மலைவாய்-மலைந்து.

278. பார்-பூமி. உவந்த-மகிழ்ந்த. வலவா-சாரதியே. வந்திப்பதற்கு-வணங்குவதற்கு. சீர் - கீர்த்தி. கார்-மேகம். மாழ்குமுன்-மயங்குமுன்னர். சாரிகை-தலைவி.

279. பரித்தேர் -குதிரை கட்டிய இரதம். கடிந்து - விரைந்து. தரித்து-தங்கி. பயன்-பிரயோசனம். முகில்-மேகம்.

280. பேர்-கீர்த்தி. பேதுறல்-மயங்கேல். பைங்கார் - பசியமேகம். இசை-ஒலி.

281. கொந்து-பூங்கொத்து. தார்-மாலை. தந்துற்ற-தந்த. வெண்புகழ்-களங்கமற்ற கீர்த்தி. நவல்-சொல்லுகின்ற. மவுலுற்று-சொல்லி. வலம்புரி-வலமாகச் சுழித்த சங்கு.

282. முனைத்து-துணிந்து. அனையா-தாயாக. நினைத்தனை-நினைத்தாய். ஆசைக்கு-பொன்னுக்கு. தினைத்தனை-தினையளவு. சித்தம் - மனம். தீம்-இனிய.

283. அறம்-புண்ணியம். ஆர்-அரிய. கானத்தும்-காட்டினிடத்தும்.

284. இந்து-சந்திரன். எழில்-அழகு. ஆதரிக்கும்-காப்பாற்றும். சந்தாடவி-சந்தனக்காடு. சிந்தாகுலம்-மனக்கவலை. திறல்-வலிமை.

285. சொன்மலை - சொல்லாற் பொருதுகின்ற. வாணர்-புலவர்கள். பொன்மலை-மேருமலை. போர்மலை-யுத்தஞ்செய்கின்ற. கன்மலை-கல்லாலாயமலை. கனமலை - பொன்மலை. வெம் - விருப்பத்தைத் தருகின்ற. கைவிலை-கைக்கிரயம்.

286. ஆலைச்சிலையன்-கருப்பு வில்லையுடைய மதன். உவகை-மகிழ்ச்சி. காலை-உதயகாலம். காசினி-பூமி.

287. கொற்றத்தின் - வெற்றியினால். செற்றத்தின்-கோபத்தினால். அயில்-வேல். சேல் - கெண்டைமீனையொத்த. சுற்றத்தினோர்-உறவினர்.

288. அலர்-கிர்த்தை. பழி-தீமை. பாற-கெட. காரோடு-மேகத்தோடு. இகலி-பகைத்து. சறங்குவது-ஒலிப்பது.

289. முடி-கிரீடம். வடிமாலை-மதுவினையுடைய மாலை. மயிலனையாள்-மயிலையொத்த தலைவியினது, துயர்-துன்பம். அம்பொற் கடிமாலை-அழகிய பொன்னாற் செய்யப்பட்ட மணமாலை. மாலை-மயக்கத்தை. கடியென-நீக்கென்று, காதலர்-தலைவர்.

290. இணங்கார்-பகைவர். அடுகரி - கொல்லுகின்ற யானையையுடைய. சுணங்கு - தேமல். மறை-வேதமொழி, அணங்கை - தெய்வத்தை, வணங்காவிருந்து-வணங்கி.

291. பிடி-பெட்டையானை. அணங்கினை-தெய்வத்தை. தெவ்-பகைவர். பின்னப்பட-சிதையும்படி. பிறங்கல்-மலை. தன்னந்தனியாய் - மிகவு மேகமாய். நனி-மிகவும்.

292. பரிந்திலை - விரும்பினாயில்லை. பைந்துணர் - பசிய பூங்கொத்து. பற்றிலை-எடுத்தாயில்லை. செய்-அழகிய. சிந்து-நீர். வண்டல்-சேறு. நொந்து-வருந்தி. கோற்றனை - வடித்தாய். நுடங்கு-துவளுகின்ற. வந்ததென்-சம்பவித்தது யாது.

293. கனவு-சொப்பனம். துணிந்து - திடமாய். இறை - தலைவர். தோய்தர-அணைய. துஞ்சல் - நித்திரை. இனைந்தேன் - வருந்தினேன். உற்றது-சம்பவித்தது.

294. தருகார் - கற்பகத்தருவையும் மேகத்தையும், மழையைத் தருகின்றமேகத்தை. குருகு - நாரை. கூண்ட-கூடிய. கபடாய்-வஞ்சகமாய். பேணி-விரும்பி. பல்குன்-பலசத்திய மொழிகளை. கண்டு-தெரிந்து.

295. வல்-சூதாடுகருவி. அற்போ டு-அன்போடு. அவனி - பூமி. மற்போர்-மல்யுத்தம்.

296. அல்-இரவையொத்த. நடுவிகந்த-நீதிதவறிய. பொல்லார்-தீயவர்.

297. கடுகி - விரைந்து. மெய்க்கும்படி-மெய்ச்சும்படி. மேவலரை-பகைவரை. மொய்க்கும் - மூடிக்கொள்ளும். தளம்-சேனையையுடைய-பொற்றொடி - பொன்னாற்செய்யப்பட்ட வளையல்களை யுடைய பாங்கியே.

298. கோபம்-சினம். படை - ஆயுதம். தீபம்-விளக்கு. கடுத்த - ஒத்த. வெஞ்சோபம்-வெவ்விய ஆயாசம். சூழ்ந்து-வளைந்து.

299. உளையொன்று - பிடர்மயிரைப் பொருந்திய. பரி - குதிரை. வளை-வளையல்கள். வாயலரும் - வாயினிடத்திருந் துண்டாகும் பழிச்சொற்களையும். களை - சோர்வு. மேனியும்-உடலையும். ஆய்-தாய். மனை-வீடு. தளையொன்று-ஓர்விலங்கை.

300. திரு-செல்வம். மரு - வாசனை. கஞ்சமதி-தாமரையையுஞ் சந்திரனையுமொத்த. நெல்னல் - நேற்று. மன்னும்-நிலைபெற்ற. தருவுற்ற-மரங்களைப் பொருந்திய. அனங்கன்-மன்மதன், உருவுற்று-தன்வடிவத்தைப்பெற்று. உலைந்தனள்-மயக்கினாள்.

301. பசப்ப - பொன்னிறப்புள்ளிகளைக் கொள்ள. தளர - சோர. உடனிலையும் - சரீரத்தின்நிலைமையும், குலைய-அழிய, நேரலரை-பகைவரை. மலையும்படி - மயக்கும்வண்ணம். அலையும்பொருகண் - கடலையும் பொருதுகின்ற கண்களையுடைய, புனம்-தினைக்கொல்லை.

302. மெய்க்கும்-மெய்ச்சுகின்ற, துடி-உடுக்கையொத்த, முனிவேல்-சினக்கேல். உய்க்கும் - பிழைப்பிக்கும், நெறி-மார்க்கம், அவமே-வீணாக, ஓம்பு - வளர்த்துகின்ற, அறியாமைக்கு-யாதொன்று மறியாத ஆட்டைப் பலியிடுஞ் செய்கைக்கு, அறியாமையாகிய தன்மைக்கு, வண்டுயர்-வளமாகிய துன்பம்.

303. பொன்ஆர்-இலக்குமியைப் போலும்பொருந்திய தலைவியினது. புலர-நீங்க. வெறியை-சன்னதமாடலை, ஆருளத்தின்-அரிய மனத்தினது. நிகழ்வு-நிகழ்ச்சி.

304. வரைக்கு - மலைக்கு, ஒருவன்-ஒப்பற்ற தலைவனது, கரத்தாமரையில் - கையினிடத்துள்ள தாமரைமலரில். விழித்தாமரைகள் - கண்களாகிய தாமரைமலர்கள். கவிய- விருப்பத்தோடு குவிந்துசெல்ல, தரத்தால் - தன்மையினால், அரிவாய்-பெண்ணே, பெறுதி-பெறுவாய், தருதும்-தருகின்றோம், உரத்தால்-வலிமையோடு, நயனம் - கண்களை, உவந்தனள்-மகிழ்ந்தாள்.

305. பிழியோடு - மதுவானது ஓடுகின்ற, அலங்கல் - மாலையை யுடைய, பிறங்கல்-மலை, குழி-குண்டு, வனி-தாம்பிரவர்ணி, குடைய-நீராட, உந்திச்சுழி-கொப்பூழாகிய சுழி. இகல் - பகைக்கின்ற, தொடர்ந்து-பின்பற்றி. அணங்கை-தெய்வப்பெண் போலுந்தலைவியை. பழியோடு-தீமையோடு, பார்-பூமி, மன்னன்-தலைவன்.

306. காரானையன்ன-மேகத்தையுங் காமதேனுவையுமொத்த. ஓரானை-ஒரு யானை, உரத்தானை - வலிமைபொருந்திய கச்சை. கொங்கையிரானை-தனங்களாகிய இருயானை, இகறர-பொருத, தடிந்து-வென்று, சீரானை - சிறப்பை யுடைய தலைவனை.

307. படர்ந்த - விரிந்த. பசப்ப-பொன்போலும் புள்ளிகளைக்கொள்ள, அரும்ப-உண்டாக, மிடைந்தனன்-வருந்தினான். கோலும்-சூழ்ந்த, ஏலும்-பொருந்திய. உற்றது-சம்பவித்தது

308. நாவொன்று - நாவினிடத்துப்பொருந்திய, காவொன்று-சோலையைப்போலும் பொருந்திய. கூந்தலை - முடியையுடைய தலைவியை, காமன் - மதனையொத்த தலைவன், பூவொன்று-ஒரு புஷ்பத்தை. புனலிடை-ஆற்றினிடத்து, மத்தமாவொன்று-ஒரு யானையை, மருவினனும்-தழுவினனும்.

309. அண்ணல்-தலைவனே, அவனி-பூமி, ஏகுதி-செல்வாயாக.

310. ஆவா-ஆ ஆ. உலுத்தர் - உலோபிகள், அடர்ந்து-நெருங்கி, வேவாவிருக்கும் - வேகும், வெவ்வழற்பாலையின், வெவ்விய சூட்டையுடைய பாலைநிலத்தில். மேவரிது-செல்ல முடியாது, மாவார்-பெருமை பொருந்திய.

311. உன்ன - நினைக்க, மா-பெரிய, உறத்த-கோபித்த, விள்ள-பேச, கலி-தரித்திரம், தழல்-சூட்டையுடைய.

312. விடம்-நஞ்சையுடைய, வாளரவு-ஒள்ளிய சர்ப்பம்,தொட-தீண்ட, ஆவி-உயிர், பரற்பாலை-பரற்களையுடைய பாலைநிலம், துணிந்த-செல்லும்படி திடமாய்ச் சொன்ன, கடவாது-கடக்காமல், பொன்-இலக்குமியை யொத்த தலைவி, கைவர-கிடைக்க, பலதிறவாரணம்-பலவன்மையையுடைய யானைகள்.

313. தடமும் - வாவியையும், வரையும்-மலையையும், பயில்-பழகிய, மனையும்-வீட்டையும், வசை-நிந்தை, மாற்றலரும்-பகைவரும், புனையும்-அலங்கரியா நிற்கும், போதனை - போதிப்பு.

314. வெளிப்பணி-புறவணி, மெய்ப்பணி-உண்மையணி, உடலணி. நாணொளிப்பணி-நாணமாகிய ஒள்ளியஅணி. களிப்பணி-சந்தோஷத்தை யணிந்த. துளிப்பணி - மதத்திவலையையும் ஆபரணங்களையு முடைய.

315. நாணொன்று - நாணமாகியவொன்று. நலத்தது - நன்மையையுடையது, நாணகத்தும்-நாணத்தினிடத்தும், பூணொன்று - பூணைப்பொருந்திய, வாய்மை-உண்மையையுடைய, சேணொன்று-மேகத்தைப் போலும் பொருந்திய, பொன்னனார்க்கு-இலக்குமியை யொத்த பெண்களுக்கு. தேயத்தும் - தேசங்களிலும்.

316. அலரும்-பழிச்சொற்களும், பாரோர்-உலகத்தாரது, பழியும் - நிந்தையும், பலிப்ப-பலிக்க,படர்வல்-செல்லுவேன், காரோடு - மேகத்தோடு, இகல்-பகைக்கின்ற, தீச்சுரம்-கொடிய பாலைநிலம்.

317. அமளி-படுக்கை, கணை-அம்பு, கூர்த்த-மிகவுங்கோபித்த,பழி-நிந்தை, தோய்குழற்கு-தங்கிய கூந்தலையுடைய தலைவிக்கு, உன்னலர்-பகைவர், துன்னும்-நெருங்கிய, எல்-என்பு, சுரம்-பாலைநிலம், தீயது-கொடியதா.

318. மிஞ்சா-அதிகரியாத, உந்தி-கொப்பூழ், பஞ்சா-பஞ்சைப்போலும், மஞ்சாய்-மேகமாக, அஞ்சாது-பயப்படாமல், அளித்தி-காப்பாற்றுவாயாக, ஐயா-ஐயனே.

319. கூப்பிட்டேதவும்- அழைத்துக்கொடுக்கும், சேப்பிட்ட-சிவப்பையேற்றிய. நிற்சினந்தவர் - உன்னைக் கோபித்தவர்களது. ஆப்பிட்டு- ஆப்புப்போட்டு, அளவிட்டு - கணக்கிட்டு, அலர்மொழிக்கு-பழிச்சொற்களுக்கு, காப்பிட்டு-காவலிட்டு, கடுகுவல்- விரைந்து வருவேன், காய்சுரம் - காய்ந்த பாலை நிலம்.

320. ஆர்த்த - நெருங்கிய, கலந்தனம்-சேர்ந்தோம்,கவிஞர்-புலவர், முன்றில்-முற்றம், கனற்சுரம்-அக்கினிமயமான பாலைநிலம்.

321. கல்-கல்லினால், தேய்-தேயப்பட்ட, அலாடி - தாமரை மலர் போலும் பாதங்கள், கன்றிய-பதனழிந்தன, மேனி-உடல்,களைத்தது-

சோர்ந்தது, விற்றேர்-வில்லு மொப்பாதலைக்கருதியாராய்கின்ற, நுதல்-நெற்றியையுடைய, மறுவேந்தர்-அன்னிய அரசர்கள், குற்றேவல் அடிமைத்தொழில், சலிப்பு - தளர்ச்சி.

322. எய்திட்ட-அடைந்த, இன்னல்-துன்பம், அற-நீங்க, ஏற்றவர்க்கு-யாசித்தவர்க்கு,பெய்திட்ட-கொடுத்த. பொற்கை-பொன்னைக்கொண்ட கையையுடைய. கொய்திட்ட-கொய்த, குந்தம் - குருந்தமலர், கொண்டையில்-கூந்தலில், செய்திட்ட-செய்த.

323. கொண்டல்-மேகம், வானகம் - தேவலோகம். ஊன் - தசை. வேங்கை-புலி. எண்கு-கரடி. உலாவரும்-உலாவும். கான்-காடு. கலந்தவர்-சேர்ந்தவர்.

324. போது சூரியன். போந்து - வந்து. மலர்மாது - தாமரைமலரிலிருக்கின்ற இலக்குமியைப்போலுந் தலைவி. அயர்ந்தனள்-சோர்ந்தாள். தீதோவ - தீமைநீங்க. அயின்று - உண்டு.

325. கூர்-கூரிய. கட்கோலம் - விழியையுடைய அழகிய தலைவியும். தூரம்-தூலை. தோய்குன்றம் - தங்கிய மலை. ஆரம் - மாலை. ஈரம்-குளிர்ச்சி. வனி-தாம்பிரவர்ணி.

326. வேலையும்-அயிலையும், கடலையும். காவியும்-நீலத்தையும் போல, வேயும்-அணியாநிற்கும். மலர்மேல் - பூமாலையோடு. தோய்-தங்கிய. சாலையும்-மரங்களடர்ந்தபாதையும். வன்னியும்-தாம்பிரவர்ணி நதியும். வாவியும-தடாகங்களும்.

327. ஆயமும்-தோழிமார்கூட்டமும். அழிதர-கெட. தேயம்-தேசம். வாசம்-வாழ்க்கை. ஆருயிர்-அரிய உயிர்போலுந் தலைவி. சூழ்ச்சி - ஆலோசனை.

328. மலையும்படி - திகைக்கும்வண்ணம். வம்பு-வீண்வார்த்தைகள். விலையும் - கிரயத்தையும். மெல்லியல்-மெல்லிய இயல்பினை யுடைய தலைவி. எண்சிலையும்-அட்டகுலபருவதமும். குலையும்-ஒழுங்கு கெடும்.

329. தாரு-கற்பகம். மான-ஒப்ப. ஆருயிரை-அரியவுயிர்போலுந் தலைவியை. திமிர்த்து-வளர்த்து. இன்னலை-துன்பத்தை.

330. எங்குற-எங்கும்படி. முன்றில்-முற்றம். எட்டுப்பொன்னையும்-அட்டலக்குமிகளையும். வேட்ட-மணந்த. பொலம்-அழகிய. மோசம் - தவறு.

331. சிந்திப்பதற்கு- தியானிப்பதற்கு. சந்திப்பதற்கு - அடைவதற்கு. வந்திப்பதற்கு-சார்வதற்கு.

332. சுரம்-பாலை. திரு-அழகிய. காளை - காளைப்பருவத்தை யுடைய தலைவனது. பேண-விரும்ப. கரந்தனள்-மறைந்துசென்றாள். ஒன்னார்-பகைவர். நாண-வெட்க. கடிந்த - ஒழித்த. நளினம் - இங்கிதத்தை யுடைய. கதிக்கும் - ஓங்கா நிற்கும். புணர்-நெருங்கிய. நென்னற்போதகத்து-நேற்றையப்போது.

333. மதலாய் - மகவே. இசைவின் பொருத்தமாக. தோடம் தவறு. நளினம்-இங்கிதத்தையுடைய. பொலிந்த-சிறந்த. வெம்பரல்-கொடிய கிரவைக் கற்களையுடைய. கரந்தனள்-மறைந்துசென்றாள்.

334. பன்னாள்-பல்தினங்களாக. தவங்கிடந்து-புண்ணியஞ்செய்வதிலேயேயிருப்பாகவிருந்து. அங்கம்-உடல். ஒன்னார் - பகைவரது. மன்னும்-அரசனுக.

335. ஊன்-தசை. அயில் வலத்தோன்-வேலைத்தாங்கிய வலக்கையையுடையோனை.சான்றும்-நீரைக்கக்கி யாழ்ந்த. ஈன்றாள்-பெற்றவளாகிய. தாழ்-பிற்புறந் தாழ்ந்த.

336. அமுதம்-அன்னமும். பரிந்து-அன்புற்று. காலோடு - பாதங்களோடு. கலந்துற-சேர்ந்துவர. மேலோடு-மேலே யோடுகின்ற. கொடியே-காகமே. கரைவாய்-கத்துவாய்.

337. வரம்-ஆசீர்வாதம். மணி-அழகிய. வரையின்-மலையினது. அவன்-அந்த ஷட்சுத்தாசி னென்பவன். தோய்ந்த-தங்கிய. வளத்திரம்-செல்வ நிலைமை. அளியின்-அவன் கிருபையின்.

338. மலிகனற்கான்-மிகுந்த நெருப்பையுடைய பாலை. குழையும்படி. வாடும்படி-அறக்கோன்மையினால்-தருமத்தைக்கொண்ட இராசநீதியினால். விழையும்-விரும்பாநிற்கும். வியன்-பெரிய. அனிச்சமும்-அனிச்சப்பூவும். தாவ-நீண்ட.

339. அமுதம்-சாதம். பைம்பாவையை-பசியசித்திரப்பதுமையை. மார்-மார்பினது. மேலோடு-மேற்புறத்தோடு. விழிநீர்-கண்ணீர். உகுக்கும்-சிந்துகின்ற. மெல்லியல்-மெல்லிய தன்மை யுடைய தலைவி. மினிர்-பிரகாசிக்கின்ற. மாவேலொடு-வேட்கையோடு. வல்வினை-வலிய பாதகம்.

340. இற்புலி-பூனையை. ஏக்குற்று-ஏங்கி. அழுங்கி-வருந்தி. இரங்குமவள்-அழாநிற்குமத்தலைவி. நற்புலி-நல்ல புலியை. கண்ணலர்க்கு-பகைவர்க்கு. பொற்புலி-அழகிய வேங்கை. கல்-திரளைக் கற்கள். புலியுற்ற-சேர்ந்துற்ற.

341. எங்கும்-அழுவாள். விழும்-பூமியில் விழுவாள். எழும்-எழுவாள். எம்மனை-எமது தாய். எங்கெனும்-எங்கேயென்று கேட்பாள். இன்னல்-துன்பம். வீங்கும்-சுவாசத்தை யுள்ளிழுத்துப் பூரிப்பாள். கரையும்-பதனழிவாள். மெலியும்-தளர்வாள். உலையும்-கலங்குவாள். சுகிர்தம்-இன்பத்தை யுடைய. பாங்கும்-பக்கத்தையும். கழங்கும்-கழற்சியையும். பாவையும்-சித்திரப்பதுமையையும். பூவையும்-நாகணவாய்ப் புள்ளையும். அனை-தாய்.

342. வெப்பால்-சூட்டினால். அவிந்த-வெந்த. எப்பால்-எந்தவிடத்தில். இன்னே-இப்பொழுதே. கொணர்வல்-கொண்டு வருவேன். உரவோன்-அறிஞனை. தப்பாது-தவறாது. அமர்-இருப்பாயாக.

343. அடைவான்-சேரும்பொருட்டு. சடத்தீர்-தேகத்தை யுடையவர்களே. வண்மைக்கு-கொடைக்கு. ஒண்மைக்கு-பிரகாசத்திற்கு. அயில்-வேலையுடைய. மயில்-மயில்போலுஞ் சாயலை யுடைய தலைவி.

344. தனக்கல்லது-தன்னையன்றி. நலம்புரி-நன்மையைச் செய்கின்ற. குலம்புரி-கூட்டத்தைக் காப்பாற்றும். அல்-அந்தகாரத்தை யொத்த. அம்புரி-அழகைச் செய்கின்ற.

345. பொன்மாது-இலக்குமி. தவப்பேறு-புண்ணியப்பயன். தாவு-தாவிய.

346. கல்லென்ற-கல்லென்று சொல்லும்படி. அடர்ந்த-இறுகிய. வல்-சூதாடுகருவி. முகிலை-மேகத்தை. செல்-அகல்வாயாக. வஞ்சம்-கபடத்தை யுடைய. குரவே-குராமரமே.

347. பூவில்-அனிச்சமலரில். படர-நடக்க. அம்போருகம்-தாமரையை யொத்த. தாவில்-தலத்தில். தவக்குறையோ-புண்ணியக்குறைவோ. நளினம்-இங்கிதத்தையுடைய. காவில்-சோலையில். களி-மகிழ்ச்சியை யுடைய.

348. பேடும்-பெட்டையன்றியும். அதர்-வழியில். ஒன்றிய-ஒன்றுபட்ட உள்ளத்தின்-மனத்தோடு. ககனும்-ஆகாயமும். துன்றிய-நெருங்கிய. வென்றியன்-வெற்றியையுடையோனை. கன்றிய-பதனழிந்த. இங்கண்-இவ்விடத்தில். கவலைவைத்து-கவலைப்படும்படி வைத்து.

349. தார்-மாலை. வார்-கச்சு. பேர்-கீர்த்தி. வேந்தர்-அரசர்களது. பகை-விரோதிகள். சூருடை-துன்பத்தை யுடைய. கான்-பாலைநிலம்.

350. மான்-மான்போலும். மலைந்தல்லால்-திகைத்ததன்றி. நானு-யானுக. பகர்வல்-சொல்லுவேன். ஊனுர்-தசையைப்பொருந்திய. அயில்வலத்தோன்-வேலைத்தாங்கிய

வலக்கையையுடையோனை. அனைக்கு-தாய்க்கு.

351. தருவா-தேடாத. என்றாய்-எனது அன்னையே. திரு - அழகிய. சேயொடு-தலைவனோடு. நன்கொருவா-நன்மை நீங்காத. உறவிலர் - பகைவரது. வாழ்வு-இருக்கை. அருவா-குன்றாத.

352. ஆடும் - விளையாடுகின்ற. வண்டல்-சேறு. தடம்-சோலை. குன்று-மலை. கூண்ட-கூட்ட முற்ற. திறல்-வெற்றியை யுடைய. பெருமான் - பெருமையிற் சிறந்தோனை. கிரி-மலை. நாடும்-விரும்பிய. பதி - ஊர்.

353. நாண்-வெட்கம். நாடி-எண்ணி. அற்பில் - அன்போடு. அண்ணலும்-தலைவனும். பொற்பில்-அழகினால். பொலிந்த-சிறந்த.

354. மண்டு-நெருங்கிய. அனல்-நெருப்பை யுடைய. மருவுற-சேர. தெவ்-பகைவரது. பண்டனம்-போரை. அண்டு - நெருங்கிய. அனம் - அன்னம்.

355. அழுங்கல்-வருந்தேல். பொன்னாள்-இலக்குமியையொத்த தலைவி. நன்னாள்-நல்லதினம்.

356. ஓதுறும்-சொல்லா நிற்கும். தடத்து-மலையினிடத்து. மாதுறும்-தலைவியை யடைந்த. மாணிழையோடு-பெருமை பொருந்திய ஆபரணத்தைத் தரித்த தலைவியோடு. போதுறுமோ-வருவானோ. புக்குறுமோ-போவானோ. ஏதுறும்-என்ன செய்வான். அயிலாய் - வெறியாட்டாளனே.

357. நயந்து-விரும்பி. அளித்தார்தம்-பெற்றவர்களது. மணம்-விவாகம். இயன்ற-பொருந்திய. தனி-ஒப்பற்ற. அம்-அழகிய. எய்துவது - சார்வது.

358. மால் - வேட்கை. அம்மணம் - அழகிய விவாகம், நிர்வாணம். ஒற்றர்-தூதுவர். குவட்டில் - மலையினிடத்து. சூல்-கருப்பம். எங்ஙன் - எவ்வாறு.

359. துளிக்கும் - மதுவைப்பொழியும். வித்தகர்-அறிஞர். தெரிசித்து - பார்த்து. களிக்கும் - மகிழும்.

360. எந்தமர்-எமது உறவினர். இருங்குழு - பெரியகூட்டத்தினது. நாப்பண்-நடுவில். கந்தமர் - சங்கைப்போலுந் தங்கிய. கந்தரம்-கழுத்தையுடைய. வேட்ட - மணந்த. அமர்கண்ட - போரைச் செயித்த. நுந்தமர்-உமது உறவினர். நுவலுதி-சொல்லரல்.

361. தணந்தே பிரிந்து. சாரலர்-பகைவர். தேர்க்கணம்-இரதக்கூட்டம். நிணம்-கொழுப்பு.

362. சூல்-கருப்பம். வான்-மேகம். உறவாதியர்-பந்துக்கள் முதலானோர். நோ - துன்பம். பாழ்ஞ்சுரம் - செய்கையற்றபாலை. அயராது-மறக்காமல்.

363. கூவி - கூப்பிட்டு. அழுங்கும்-வருந்துகின்ற. அனைக்கு -தாய்க்கு. ஓவில்-மாறாத.

364. ஆண்டகை - ஆண்டன்மையையுடைய தலைவனது. கனற்பொறி - அக்கினிப்பொறிகளை. செல - செல்ல. முன்னலர்-பகைவர். என்பு-எலும்பு.

365. பூசற்கு-போருக்கு. பேசற்கரும் - சொல்லுதற் கருமையான. அயில்-வேல். மழு-பரசு. கோதண்டம்-வில். கணை-அம்பு. வீசற்கென-வீசுவதற்கென்று. எந்தையர் - எமது தந்தையர்களான மறவர்கள். பல்-பல. குவிந்தன-குவிந்தாற்போலும்-இரதத்தை-தேரை.

366. நிதியில் - திரவியத்தினால். நியிர்-ஓங்கிய. மதியில்-சந்திரனைப் பார்க்கினும். பொதி-மூட்டை. அனையேன்-ஒப்பாவேன். போந்தீர்க்கு-வந்தவர்க்கு.

367. நாட்டத்து- எண்ணத்தினால். மன்னுயிர்-நிலைபெற்ற சீவர்களை

தரியலர்-பகைவர். இன்-இனிய. எரியழல்-எரிகின்ற அக்கினி.

368. அமையாத-அடங்காத. அலர்மணம்-பூமணம். ஆர்ந்த-பொருந்திய. மணம்-விவாகம். ஆர்-யாவர். (ஒருவருமிலர்.) களி-மகிழ்ச்சி. ஆதரிக்கும்-காப்பாற்றும். இமையாத - மூடிவிழியாத.

369. தன்றுயர் - தமது துன்பத்தை. நோக்கார் - கருதார். இரும்பிணிக்கு - பெரிய நோய்க்கு. இன்னமிழ்து-இனிய மருந்தை. உயர் - உயர்ந்த. நேர்ந்தனை - வேண்டினை. வாழி-நீ வாழக்கடவாய்.

370. மணியொளி - ஒன்றைவிட்டொன்று பிரியாத இரத்தினமும் அதன் பிரகாசமும். மலர்மணம் - பூவும் அதன் வாசமும். மரநிழல்-மரமும் அதன் நிழலும். அணியொளி-ஆபரணங்களின் பிரகாசம். வாய்ந்த - சிறக்கப்பெற்ற. அணங்கொடு-தெய்வப்பெண் போல்பவளாகிய தலைவியோடு. அண்ணல்-பெருமையிற் சிறந்த தலைவனே. என்றூழ்-சூரியன். பணி - வணங்குகின்ற. ஒளி-காந்தியையுடைய. முடி-கிரீடத்தைக் கொண்ட. நணி-அடைந்து. ஒளிபோல் - அச்சூரியனைப் போல. வாழி-நீ வாழக்கடவாய். பல்லாண்டு-பலவருடங்கள்.

371. மாதுனர்-பெண்களது. அலரும்-பழிச்சொற்களும். அலரும் - புஷ்பபாணங்களும். ஆர்பொழுது-பொருந்துகின்ற சமையத்தில். சகித்தது-பொறுத்தது. காறுர் - வாசனை நிறைந்த. அலங்கல்-மாலையையுடைய. கனகம்-பொன்.

372. தணந்தனரேனும்-நீங்கினுராயினும். உள்ளில்-மனத்தினிடத்து. தன்னிலை - தமது நிலைமையை. பொன்-இலக்குமி. நிலைவாழ் - நிலையாக வாழ்கின்ற. ஏது-யாது.

373. மருப்பும்-யானைத்தந்தத்தையும். பொருப்பும் - மலையையும். மருட்டிய-மருளும்படி செய்த-மயனெருப்பும் - மையலாகிய தீயும். விருப்பும்-ஆசையும். அருப்பும் - அரும்பாகிற்கும். இருப்பும்-இருக்கையும்.

374. பொன்-இலக்குமியையொத்த தலைவியினது. அகத்தாமரை - இதயகமலத்தில். அவன் - அத்தலைவன். மின்னகத்தாமரை- காந்தியைத் தன்னிடமாகக்கொண்ட தாமரைமலரைப் பாணமாகவுடைய. பன்னகத்தாம்-பாம்பினது படத்தையொத்த. அரை-நிதம்பத்தையுடைய. பாக்கியம்-அதிர்ஷ்டம்.

375. இல்லறம்-இல்லாச்சிரமம். நல்லறம்-நல்லாச்சிரமம். இயம்பும்-சொல்லுகின்ற. அற - முழுவதும். ஆய்ந்தனை - தெரிந்தாய். மல்லறவன்மையானது கெட. மாய்க்கும்-கொல்லும். பல்லறம்-பலதருமங்களை. ஆற்ற - செய்ய. படர்தரும்- நினைத்தாள்.

376. மாநிதி-பெருமைபொருந்தியசங்கநிதி பதுமநிதி. கனம்-மேகத்தைப்போலும். இனமா-பெண்கள் கூட்டமா. அருந்ததி-அருந்ததியா. தராசகம் துலாக்கோலினிடத்து. வானளவு-ஆகாயம்வரை.

377. அரவு-சருப்பம். ஒல்கிய-தளர்ந்த. அல்குல்-நிதம்பம். இரவு-யாசகம். இனியன-இனிய வார்த்தைகளை. இனம்புரந்தும்-உறவினரைக்காத்தும். வரவறிந்து-வரவைத்தெரிந்து. ஏற்றும்-செலவை மேற்கொண்டும். மதித்தனள்-கணித்து நடத்தினள். நல்லறம்-நல்ல இல்லாச்சிரமத்தை. உரவு-வலிமை.

378. வன்மறம்-பகைவரது கொடிய வீரத்தை. தாழ்த்தும்-குறைக்கின்ற. செல்-செல்லுகின்ற. மறந்தாங்கு-கோபத்தைக்கொண்ட. உளை - பிடர்மயிரையுடைய. தேசியந்தேர்-குதிரைகட்டிய அழகியதேர். அன்னை-தாயே. மல்-போரை. அல்லின்-இரவில். என்-எதை. உறும்-வரும்.

379. எள்ளும் - எள்ளளவும். இகவா-நீங்காத. துன்னும் - மதிகின்ற

மறி-மான்போலும். குழையின்னார்-பரத்தையர்களது. முன்றில்-முற்றத்தில். தோய்ந்து-தங்கி. உன்னும்-கருதாநிற்கும். புலவிக்கு - ஊடலுக்கு.

380. நலம்-இன்பத்தை. கூண்டு-தழுவி. கூர்ந்து-மகிழ்ந்து. இனைந்தாய்-வருந்தினாய். நேரலரை-பகைவரை. சிறையா-காவலாக. பிறை-அர்த்தச் சந்திரனைப்போலும். நுதல்-நெற்றி.

381. ஆர்பவரில் - உண்பவரைப்போல. பரத்தையலர்-அன்னியவேசையர்கள். ஊர் - சேரி. ஆனாது-கெடாமல். நான்-வாசனை.

382. மனையறம் - இல்லறம். பேணி-காத்து. மகிழ்நர் - தலைவரது. பினை-பின்னை. அறம் - புண்ணியம். ஏது-யாது. பேணலர்தம்-பகைவர்களது. வினையற - செயலொழிய. நினை-உன்னை. அறமாதென-புண்ணியமாதென்று சொல்ல. நேரிது-

383. பானுறும்- பாலைப்போலும் பரிமளிக்கின்ற. பற்றலர்-பகைவரது. மெய்யூன் - உடலினிடத்துள்ள தசை. நாறும்-நாறுகின்ற. கிடைத்தாங்கு-கிட்டினாற்போலும். ஆனாத-கெடாத. செவ்வணி-செவ்விய ஆபரணங்களை. ஆயோ-அந்தோ. அவர்-அப்பரத்தையர்.

384. பூமகளாய்- பூமாதேவியாக. புறத்தமைந்த - வெளியிற் றங்கிய. கோமகளாய் - அரச செல்வியாக. கொள்கை - கோட்பாடு. நாமகள்-கலைமகளையுடைய. நலத்த-நன்மையைக்கொண்ட. போமகளிர்-போகின்ற பெண்களே.

385. பொன்னார் - பொன்போலுமகரந்தங்கள் தங்கிய. கமலம்-தாமரையிலிருக்கின்ற. பொலன்-அழகிய. திரு-இலக்குமியையொத்த தலைவி. ஏவும்-ஏவிய. பூவைமொழி-கிளிபோலும் வார்த்தையையுடைய. விரைந்தனர்-விரைந்துவந்தார். மேவலரை-பகைவரை. தன்றாளென-தனதடிமையென்று. பணிப்போன்-பணியச்செய்வோனை. அன்னாய்-தாயே.

386. உள்ளாது-நினையாமல். ஒறுத்து-வெறுத்து. எள்ளாது-தள்ளாமல். இற்கடை-வீட்டின்றலைவாயலில். ஏற்றவர்க்கு-யாசித்தவர்களுக்கு. இன்மை - வறுமை. தன்மம்-தருமம்.

387. முனையும்-பொருதாநிற்கும். கடகரி-மதத்தைக்கொண்ட யானையையுடைய. அங்கனையும்-பரத்தையாகிய அப்பெண்ணும். பல்லாண்டு-பலவருடங்கள். வாழி - வாழக்கடவாள்.

388. மன்னி-பொருந்தி. ஆர்-அனுபவித்த. நவில்வது-சொல்லுவது. நானிலத்து-பூமியினிடத்து.

389. வெண்டாமரை மகள்-கலைமகளை. வெள்ளணி-வெள்ளிய ஆபரணங்களை. தாரகையென-உடுவைப்போலும். ஒன்னலரை - பகைவரை. துண்டாவிழுத்தும்-கண்டமாக விழச்செய்யும். தொண்டா-அடிமையாக. எனை-என்னை.

390. ஈன்ற - உயிர்த்த. மணியென-முத்தைப்போலும். மடம்-மடப்பத்தை யுடைய. ஈன்று - பெற்று. நெய்யாடினள்-நெய்தேய்த்து ஸ்நானஞ்செய்தனள். உலம்புரி-திரளைக்கல்லைப்போன்ற.

391. முன்னைத்தவம் - முன்னாள் செய்த புண்ணியம். முற்றியது-முடிந்தது.

392. உயிர்த்தாளென - பெற்றாளென்று. மாகுறைக்கு-பெரிய குற்றத்திற்காக. உயிர்த்தார்-பெருமூச்சுவிட்டார். மனை-வீட்டை. மேதினிக்கு-பூமிக்கு. அம்பகம் - கண்ணையும். உயிர்த்தாய் - உயிரைக்கொண்ட அன்னையையும். தகவு-தகுதியை. உயிர்த்தாய் - பெற்றதலைவியே. தடையேல்-தடுக்கேல். எதிர் தந்திடற்கு-எதிரேற்பதற்கு.

393. மையை-மேகத்தை. மணி-அழகிய. தழுவும்-பொருந்தும். பொதுமகள்-பரத்தையர்கள். மெய்யை-தேகத்தை. சகியேன் - பொறுக்கேன். சிலையில்-துணியில்.

394. இன்னிசை - இனிய கீதத்தை. மயக்காததற்கு-மயக்குவதற்கு. துன்-நெருங்கிய. பாண-பாணனே. தொலை தொலை-அகலுவாய் அகலுவாய். பன்னிசை-புகழுகின்ற கீர்த்தியை. நின்னிசை-உனது சங்கீதத்தை. வேண்டுவர்-விரும்புவார். எங்கையர்-எமது தங்கையரான பரத்தையர். நிகழ்த்துதி-பாடுவாயாக.

395. அல்லெறி - அந்தகாரத்தையுந் தனக்கொப்பாகாதென் றெறிகின்ற. வார் - நீண்ட. தனத்தின்-சேனையினது. மல்லெறி - வன்மையை யொழிக்கின்ற. வாகையர்-வெற்றியை யுடையோர்களது. எல்லெறி-பிரகாசத்தை வீசுகின்ற. எம்மான்-எமது தலைவரது. பச்சைக்கல்-பசிய விரத்தினக்கல்லை. எறிவார்-போடுவார்கள். காய்ந்து - கோபித்து.

396. துன்பிற் கடைபடும் - துன்பத்தினிறுதியி லுண்டாகும். சூழ்ச்சியை-உபாயத்தை. பரவும் - வணங்காநிற்கும். தென்பிற் பொலிந்தனன்-சந்தோஷத்தினுற் சிறப்புற்றேன். இன்று-இல்லை. புன்றீவினை-இழிந்த தியசெயல்.

397. இயல்பினரும்-இயற்கை யுடையவரும். குறையேற்று-குற்றத்தைத்தாங்கி. பொல்லா-தீய. விதிவழி-ஊழாகிய பாதையில். மல்லால்-வலிமையினுல். அளிப்போன்-காப்பவனுன. காண்மலர்-அன்றலர்ந்த தாமரை.

398. கோலாகலம்-சம்பிரமத்தையுடைய. பெருமான் - பெருமையிற் சிறந்தோனுன. மாலாகினைபோல்-வேட்கைகொண்டாய் போலும். ஈது-இந்தச் சமாச்சாரத்தை. மான்மருட்டும்-மானையு மருளச்செய்யும். சேலாயில்-கெண்டைமீனையும் அரிய வேலையுமொத்த. சேயிழை-செவ்விய ஆபரணத்தைத்தரித்த. எங்கையர்-எமது தங்கையரான பரத்தையர். தேரில்-அறிந்தால். கனலுவர்-கோபிப்பார்.

399. பழுக்கும்-கனிகின்ற. படர்சுவை-விரிந்த மதுரத்தை. கொழுக்கும்-மதக்கும். முழுக்கும்-மூடிக்கொள்ளும்.

400. மறுகுற - வீதியினிடத்துப் பொருந்த. மதலையை-குழந்தையை. இறுகுற-நெருங்கும்படி. சேர்த்து-தழுவி. சிறுகுற-சிறுக. சிமையம்-சிகரத்தையுடைய. குறுகுற- போக. கோடினள்-கவிழ்ந்தாள்.

401. பணிவால்-வணக்கத்தினுல். அன்பால் - அன்போடு. சிரம்-தலையை. பார்த்திபர் - தலைவர். மணி-அழகிய. வார்-நீண்ட. சிலம்பு-தண்டையணிந்த. மாற்றலரை - பகைவரை. துணிவாய்-திடத்தோடு. பொரு-பொருதுகின்ற. தணிவாய்-பொறுப்பாய். குறை-குற்றத்தை.

402. களிறும் - யானையும். குரைபுனல்-ஒலிக்கின்றநீரையுடைய. குறுகும் - நெருங்கிய. புல்லும் - தழுவிய. கணையும்-அம்பையும். வியன்-பெரிய. ஒல்லும் - இணங்கிய. ஒழிவாய்-நீங்குவாய்.

403. அங்குறை-அங்கே தங்கிய. எங்குறை-எமது குற்றம். கொங்கு-வாசனை. தங்குறை - தமது குற்றத்தை.

404. வெம்-வெவ்விய. சூழ்ந்து-வளைந்து. உலர்தாலும்-வருந்தினுலும். அருந்தாது-உண்ணுது. புனலூர - நீரைக்கொண்ட ஊரையுடைய தலைவனே. பொதுமகள்பால்-பரத்தையரிடத்து. தொல்-பழமையான. வெல்லரும்-வெல்லுதற்கருமையான. விழைவதுண்டோ-விரும்புவதுண்டோ. மேலவர்-அறிஞர்.

405. கார்வர - மேகமானது தோன்ற. கனகம்-பொன்னையுடைய. போர்-யுத்தம். புனல்-நீர். பொ

துமகள்-பரத்தையர். மீட்டு-திருப்பி. வாழி-வாழக்கடவன்.

406. ஆவிக்கும் - உயிர்க்கும். உவந்து-மகிழ்ந்து. பாவிக்கும் - பாவனைபண்ணும். கேளிர்-உறவினர். சேவிக்கும்-வணங்கும். பூபர்-அரசர்களது. சீவிக்கும்-பிழைப்பிக்கும். காதல்-மோகம். அன்னாய்-தாயையொத்த பாங்கியே. தேர்ந்தனன்-அறிந்தேன்.

407. கலைக்கு - நூற்களை. அணியாக்கிய - அலங்காரப்படுத்திய. விலைக்கு-கிரயத்திற்கு. மெய்-உடல். இதழ்-அதரம். மின்னார் - பரத்தையர்களது. மொய்ம்புடை - வன்மையை யுடைய. அண்ணல்-தலைவரது. முண்டகத்தாள் - தாமரை மலரையொத்த பாதத்தை. அணியாக்கிய-ஆபரண மாக்கிய.

408. விதை-வித்து. உயிரனைத்தும்-சீவராசிகளெல்லாவற்றையும். தாங்கும் - காக்கின்ற. கலை-நூற்களை. உணர்வான்-கற்கும்பொருட்டு. வாங்கும்-வளைக்கின்ற. வரிசிலை - நீண்டவில்லையுடைய. ஏங்கும்-வருந்தாநிற்கும். கொடுங்கனலை-கொடிய நெருப்பைப் பொருந்திய.

409. கலைக்கடல் - நூற்களாகிய சமுத்திரம். அடல்செய் - வன்மையைக்கொடுக்கின்ற. அன்னாய் - தாயையொத்த பாங்கியே. மாந்தி-குடித்து. அகங்கறுத்து-தன்னிடமானது கறுக்கப்பெற்று. அறவுறத்து - மிகவு மிடித்து. அடல்செய்ய-போர்செய்ய. நிமிர்ந்தது-ஓங்கியது. முகில்-மேகம்.

410. வள்ளம்-கிண்ணத்தையொத்த. செவ்-சிவந்த. இதழுண்டு-அதரபானத்தை யருந்தி. மருவும்-பொருந்தாநிற்கும். குறுகினர்-வந்தார். கூடலர்-பகைவரது. துணித்த-துண்டித்த.

411. மாண்டது-மாட்சிமையுற்றது. கோன்-அரசன், கூர்ந்து தெரிந்து. கான்-வாசனை. கன்னியர்-மாலையை யுடையவர்களது. கனகம்-பொன்னையுடைய.

412. சீதளம்-குளிர்ச்சியையுடைய. வாடை-வடகாற்றானது. திமிர்ந்து-வளர்ந்து. என்மீதளவு-என்மேலளவாக. ஒன்னார்-பகைவரது. மாதளம்-பெரிய சேனையை. அர்த்த-இல்லாமற் செய்த. காதளவு-செவியினளவாக. கட்டிருவே-கண்களையுடைய இலக்குமியையொத்த பாங்கியே. காதலர்-தலைவர்.

413. மன்னுயிர் - நிலைபெற்றசீவர்களை. நேர்ந்தவர்க்கு-தன்னைநேசித்தவர்கட்கு. பொய்க்கினும்-பொய்த்தாலும். தக்கவர்-அறிஞர்.

414. வஞ்சினம்-சபதத்தை. மலையும்-பொருதாநிற்கும். அமர்க்கு-யுத்தத்திற்கு. அஞ்சினராய் - பயந்தவராக. அடங்கா-பணியாத. சின்னம்-விருதுகளை. நஞ்சினம்-விடத்தினினமாகிய. அறம்-புண்ணியத்தை.

415. குனிக்கும்-வளைக்கின்ற. வரிசிலை-நீண்டவில்லையுடைய. கொற்றவர்-அரசர்களது. சீற்றம்-கோபத்தை. குலைப்பதற்கு- இல்லாமற் செய்வதற்கு. சனிக்கும் - உண்டாகாநிற்கும். கட்பனிக்கும்-கண்ணீரானது நீரொழுக்கிற்கும். பனிக்கும்-இமத்திற்கும். பரிந்திலர்-அன்புவைத்தாரிலர். பாதகர்-தீயர்.

416. போந்தனர்-வந்தார். கூர்ந்து-மகிழ்ந்து. ஆற்றும்-செய்கின்ற. அாற்றும்-பொழிகின்ற.

417. உற்றவர்-தம்மை நேசித்தவரசரது. உறுதுணை - உற்றதுணை. செற்று-கொன்று. சின்னம்-விருதுகளை. சிதைத்திட-அழித்திட. சீர்த்த-கீர்த்தியையுடைய. நற்றவர்-நல்லதவத்தை யுடையோர். நளிர்-குளிர்ந்த. கொற்றவர்-தலைவர். மாழ்கல்-மயங்கேல். குறுகுவர்-வருவார்.

418. நட்டார்க்கு-தம்மை நேசித்த அரசர்க்கு. நயந்து-விரும்பி. நாடலர்-நினைத்திலர். கொட்டாவிருக்கும்-கொட்டும். கட்டார் - கள்ளையு

டைய மாலை. மட்டாய் - அளவாய். அழுங்கி-அழுது. விதி-ஊழ்.

419. அழுங்கி-அழுது. மயங்கேல்-மலையேல். அடைந்தோர்க்கு-தன்னைச் சார்ந்தார்க்கு. குலம்-மேன்மைபொருந்திய. சூடி - அணிந்து. துணி-வஸ்திரம். மணி-இரத்தினாபரணம். துலக்குதற்கு-பிரகாசிப்பிப்பதற்கு.

420. வருமொருமையும்-வராநிற்குமறுமையையும். தாங்கும்-காக்கும். உற்ற-பொருந்திய. இருமையும்-இம்மை மறுமையாகிய ஈரிடத்தும். சீர்த்த - சீர்த்தியுற்ற. இயல்-அழகினையுடைய. அணங்கே-தெய்வப்பெண்போலுந் தலைவியே. எந்தலர்-தலைவர்.

421. மாசையில்-பொன்னைப்போலும். பூத்த-தேமற் புள்ளிகள் படர்ந்தன. மணி - இரத்தினவட்டங்களையுடைய. வேனிலும்-வேனிற் காலமும். கூய-கூவியது. உறுதுயர்-உற்றதுன்பத்தை. சீர்த்த - சிறப்புற்ற. பொருப்பு-மலை. ஆசையில் - பொன்னினிடத்து.

422. வார் - ஈச்சையுடைய. கொழுநர்-தலைவர். கொண்டல்-மேகம். எட்டும்-எட்டுகின்ற. கொடை - ஈகை. பொருள்கொடு-திரவியத்தைக்கொண்டு. வேண்டுவ-விரும்புவனவற்றை.

423. அரும்பும்-தாமரை மொட்டும். பிறையும்-அர்த்தசசந்திரனும். சிலையும்-வில்லும். புயலும்-மேகமும். அமையும் - மூங்கிலும். அம்பும்-கணையும். கரும்பும்-கன்னலும். குமிழும்-குமிழ மலரும். கதலியும்-வாழையும். ஆலும்-ஆலிலையும். கமலமும்-தாமரைமலரும். வியன்-பெரிய.

424. சீர்த்து-சிறப்புற்று, எதிர்த்தாரை-எதிர்த்த பகைவரை, தேர்-இரதத்தை, வனத்திலும் - காட்டினிடத்தும், கானிலும்-பாலைநிலத்தும். மன்ன - பொருந்த, ஊர்-பதியை, வலவா-தேர்ப்பாகனே. தனத்தோடு-செல்வத்தோடு, இனத்திலும்-உறவினிலும். மனத்திலும்-மனத்தைப்பார்க்கிலும், வேகமென-விரைவென்று சொல்ல, வியப்பு-ஆச்சரியம்.

425. செய்யாள்-இலக்குமி, தேவியும்-தலைவியும், ஓர் மெய்யாருயிரென - ஒருடலும் அதனிடத்துப் பொருந்திய உயிருமென, கலந்தனம் - சேர்ந்தோம். மேலுமின்றும்-எக்காலத்தும், பொய்யா - பொய்க்காத, வாழ்த்து-ஆசீர்வாதத்தையுடைய, வரவினையுடைய. உரவோன்-அறிஞன், பொருப்பில்-மலையினிடத்து, அவன்-அந்த ஷம்சுத்தாசீனென்பானது, கையாய் கைகளைப்போலும், பொழிபொழி-பொழிவாயாக பொழிவாயாக, மாதமும்மாரி-மாதத்திற்கு மூன்று மழைகளை. கனமழையே-பெருமைபொருந்திய மேகமே.

# ஷம்சுத்தாசீன் கோவை

## அரும்பதவுரை

## முற்றிற்று.

O. M. MOHAMED BUKHARI

# ஷம்சுத்தாசீன் கோவை.

## அபிதான விளக்கம்.

### நகரம்.

ஹாமீம்புரம்.

### மலை.

தமிழ்ச்சிலம்பு } பொதியமலை
மலையவெற்பு }

### நதி.

வன்னி } தாம்பிரவர்ணி
தாம்பிரநதி }

### கொடி.

செருத்தி யிளம்பிறை—இளம்பிறைக்கோடி.

### பாட்டுடைத் தலைவன் பெயர்.

ஷம்சுத்தாசீன்.

### பாட்டுடைத்தலைவன்றந்தைபெயர்.

செய்துமன்சூர்.

### பாட்டுடைத்தலைவன் ஞானாசிரியர் பெயர்.

ஹஸறத்து மவ்லானா ஞானியார் சாகிபு ஒலியுல்லா ஃ.

### பாட்டுடைத்தலைவன் ஞானாசிரியரூர் பெயர்.

கோடை—கோட்டாறு.

# ஷம்சுத்தாசீன் கோவை

## அகப்பொருட்செய்தி நாள்வரையறைச்

## செய்யுள் விளக்கம்.

| | | | |
|---|---|---|---|
| செய்யுள் | 1- முதல் | 35 வரையும் | முதல் நாள். |
| ,, | 36 ,, | 40 ,, | 2 ,, |
| ,, | 41 ,, | 71 ,, | 3 ,, |
| ,, | 72 ,, | 93 ,, | 4 ,, |
| ,, | 94 ,, | 104 ,, | 5 ,, |
| ,, | 105 ,, | 145 ,, | 6 ,, |
| ,, | 146 ,, | 163 ,, | 7 ,, |
| ,, | 164 ,, | 193 ,, | 8 ,, |
| ,, | 194 ,, | 197 ,, | 9 ,, |
| ,, | 198 ,, | 205 ,, | 10 ,, |
| ,, | 206 ,, | 218 ,, | 11 ,, |
| ,, | 219 ,, | 231 ,, | 12 ,, |
| ,, | 232 ,, | 240 ,, | 13 ,, |
| ,, | 241 ,, | 242 ,, | 14 ,, |
| ,, | 243 ,, | 257 ,, | 15 ,, |
| ,, | 258 ,, | 259 ,, | 16 ,, |
| ,, | 260 ,, | 266 ,, | 17 ,, |
| ,, | 267 ,, | 277 ,, | 18 ,, |
| ,, | 278 ,, | 291 ,, | 51 ,, |
| ,, | 292 ,, | 319 ,, | 52 ,, |
| ,, | 320 ,, | 351 ,, | 53 ,, |
| ,, | 352 ,, | 361 ,, | 54 ,, |
| ,, | 362 ,, | 367 ,, | 55 ,, |
| ,, | 368 ,, | — | 56 ,, |

——(:*:)——

## ஷம்சுத்தாசின் கோவை

# விஷய சூசிகை.

—:*:—

### களவியல்.


| பக்கம். | | பாடற்றொகை. |
|---|---|---|
| 1 | கைக்கிளை ... ... | 4 |
| 2 | இயற்கைப்புணர்ச்சி ... | 16 |
| 6 | வன்புறை ... ... | 7 |
| 8 | தெளிவு ... ... | 1 |
| 8 | பிரிவுழி மகிழ்ச்சி ... | 2 |
| 9 | பிரிவுழிக்கலங்கல் ... | 5 |
| 10 | இடந்தலைப்பாடு ... ... | 5 |
| 12 | பாங்கற்கூட்டம் ... | 25 |
| 17 | பாங்கிமதி யுடன்பாடு ... | 19 |
| 21 | பாங்கியிற் கூட்டம் ... | 61 |
| 35 | ஒருசார்பகற்குறி ... | 14 |
| 38 | பகற்குறி யிடையீடு ... | 7 |
| 40 | இரவுக்குறி ... ... | 27 |
| 46 | இரவுக்குறி யிடையீடு ... | 19 |
| 50 | வரைதல் வேட்கை ... | 19 |
| 55 | வரைவு கடாதல் ... | 20 |
| 59 | ஒருவழித் தணத்தல் ... | 12 |
| 62 | வரைவிடைவைத்துப் பொருள்வயிற்பிரிதல் | 21 |


### வரைவியல்.


| | | |
|---|---|---|
| 67 | வரைவுமலிவு ... ... | 7 |
| 69 | அறத்தொடு நிற்றல் ... | 17 |
| 73 | உடன் போக்கு ... | 18 |
| 77 | கற்பொடு புணர்ந்த கௌவை ... | 24 |
| 82 | மீட்சி ... ... | 6 |
| 84 | தன்மனை வரைதல் ... | 5 |
| 85 | உடன்போக்கி யிடையீடு ... | 6 |
| 87 | வரைவு ... ... | 1 |


### கற்பியல்.


| | | |
|---|---|---|
| 89 | இல்வாழ்க்கை ... | 10 |
| 91 | பரத்தையிற் பிரிவு ... | 29 |
| 98 | ஓதற்பிரிவு ... ... | 3 |
| 99 | காவற்பிரிவு ... ... | 3 |
| 100 | தூதிற்பிரிவு ... ... | 3 |
| 101 | துணைவயிற் பிரிவு ... | 3 |
| 102 | பொருள்வயிற் பிரிவு ... ... | 6 |
| 33 | மொத்தம். | 425 |


—(*)—

ஹாமீம்

பிஸ்மில்லாஹி.

# ஷம்சுத்தாசீன் கோவைச்

## செய்யுள் முதற்குறிப்பகராதி.

———:*:———


| பாடல். | பக்கம். |
|---|---|
| அ | |
| அங்குறைவேசைய | 95 |
| அடலுற்றவண்ண | 55 |
| அடிபடும்வட்டு | 10 |
| அணியுந்திருந்தி | 18 |
| அண்ணலருளார் | 73 |
| அமையாதவின்பத் | 88 |
| அரவறிந்தொல்கிய | 91 |
| அரும்பும்பிறையு | 103 |
| அலைவாய்த்துரும்பி | 65 |
| அலைவாய்ப்படிந்த | 16 |
| அல்லும்பகலு | 5 |
| அல்லெறிவார்குழ | 95 |
| அளிக்குங்கொடை | 85 |
| அறந்தான்வளர்த்து | 66 |
| அறியாதறைந்தே | 32 |
| அறிவேயுருவா | 22 |
| அற்றேரணிகுழ | 7 |
| அன்பேயுருவெடுத் | 86 |
| அன்போடருள் | 39 |
| அன்றிலும்பேடு | 82 |
| அன்னையழுங்க | 81 |
| ஆ | |
| ஆகுங்கரும | 27 |
| ஆடித்திரிந்த | 39 |
| ஆடுஞ்சுனையிது | 83 |
| ஆடும்பொழிலு | 41 |
| ஆடும்பொழில்விடுத் | 75 |
| ஆட்சியுங்கோலுங் | 13 |
| ஆந்தனையும்புனங் | 38 |
| ஆயமுமன்னையு | 78 |
| ஆயாதவரை | 47 |
| ஆர்வாயடைப்பினு | 55 |
| ஆலைச்சிலைய | 68 |
| ஆவற்கருமருங் | 50 |
| ஆவாவுலுத்த | 73 |
| ஆவிக்குமாவி | 98 |
| ஆவியுமெய்யு | 37 |
| இ | |
| இணங்காரடுகிரி | 68 |

| பாடல். | பக்கம். |
|---|---|
| இந்தாமெழின் | 66 |
| இரப்பார்க்களிக்கு | 39 |
| இருளும்புயலு | 42 |
| இல்லறமல்லது | 90 |
| இறையளவன்ப | 61 |
| இற்புலிகாணினு | 80 |
| இன்றந்தவீகை | 10 |
| இன்னிசைகாட்டி | 95 |
| ஈ | |
| ஈயாக்கொடிய | 64 |
| ஈவதுயர் | 25 |
| உ | |
| உடலோடுயிர் | 42 |
| உண்மைப்பொரு | 81 |
| உனையொன்று | 71 |
| உள்ளக்கரிக்கு | 74 |
| உள்ளற்கெளிதல | 47 |
| உள்ளாதுனைமுன் | 93 |
| உற்றவர்போருக் | 101 |
| ஊ | |
| ஊடறியாவுரை | 30 |
| ஊரும்பெயரு | 20 |
| ஊரும்பெயருமுரை | 20 |
| ஊரேரலரு | 75 |
| ஊன்றுமுயில் | 79 |
| எ | |
| எடுக்கவெடுக்க | 44 |
| எந்தமர்சூழ்ந்த | 85 |
| எமையாதரிக்கு | 44 |
| எய்திட்டவன் | 76 |
| எல்லாமவளொணக் | 48 |
| எல்லாமறிந்தவியல் | 96 |
| எல்லாமறிந்துமத | 79 |
| எல்லாருமேத்து | 4 |
| என்றும்பிரிகில | 92 |
| எறியுந்திரைக்கட | 60 |
| எறியுமலைகட | 53 |
| என்செய்ததோமண | 25 |
| என்னாட்டணி | 41 |
| என்னுயிரன்னவ | 29 |

| பாடல். | பக்க |
|---|---|
| என்னுயிரொன்றே | |
| என்னுயிர்மாதங்க | |
| என்னேகலைகண் | |
| என்னையும்வீட்டை | |
| ஏ | |
| ஏகமென்றேரெம் | |
| ஏங்கும்விழு | |
| ஏவுஞ்சலித்த | |
| ஒ | |
| ஒருகான்மறந் | |
| ஒருகைக்களிறு | |
| ஒல்காப்புகழ்ப் | |
| ஓ | |
| ஓங்குங்கொடுஞ் | |
| ஓங்கும்பெரும்புகழ் | |
| ஓதுறமெய்ப் | |
| க | |
| கடலிற்படிந்தெழு | |
| கண்டனம்யாமு | |
| கண்டேகிகர்த்த | |
| கண்ணுக்கிமையுங் | |
| கண்பகை | |
| கண்மறந்தாலு | |
| கலகந்தரு | |
| கலைக்கடற்காண | |
| கலைக்கணியாக்கிய | |
| கலைதாண்டி | |
| கலையானவந்த | |
| கல்லுங்காடுங் | |
| கல்லுங்கருதுங் | |
| கல்லென்றடர்ந்த | |
| களக்களிற் | |
| கழையார்தரள | |
| கற்பிற்பெரிதல | |
| கற்றேயலரடி | |
| கனமாமழுதக் | |
| கன்மேற்பொரு | |
| கா | |
| காட்டுக்கெறித்த | |
| காணக்கரிக்கு | |

| பாடல். | பக்கம். |
|---|---|
| காதுங்கனிர் | 7 |
| காமாநலஞ் | 55 |
| காரானையன்ன | 72 |
| காரேயனைய | 19 |
| காரைத்தருவை | 13 |
| கார்கண்டு | 39 |
| கார்செய்தவண்கை | 47 |
| கார்வரவென்ற | 97 |
| காலேபதிர்தன | 2 |
| காவிசிவந்து | 18 |
| காவுங்கண்டேன் | 15 |
| காவேபுகுந்து | 18 |
| கி | |
| கிளையோடுல | 55 |
| கு | |
| குடியிற்பிறந்துங் | 25 |
| குடைபட்டகோ | 11 |
| குடையுமரசுங் | 27 |
| குளிருஞ்சுனையுங் | 31 |
| குறையாப்பெரு | 92 |
| குனிக்கும்வரிசிலை | 101 |
| குன்றுமணிப் | 6 |
| கூ | |
| கூடுஞ்சுகம்பிரிந்தா | 39 |
| கூப்பிட்டுதவு | 75 |
| கூரம்பனையகட் | 77 |
| கூராதொருதயில் | 52 |
| கூராரயில்விழிக் | 51 |
| கூவியருளவல் | 86 |
| கெ | |
| கெம்போடளிர் | 3 |
| கை | |
| கைக்குமுலைக்குங் | 70 |
| கொ | |
| கொண்டாற்பழி | 32 |
| கொந்துற்றதாரப் | 65 |
| கொல்லுங்கொடி | 58 |
| கொல்லுங்களிறு | 97 |
| கொல்லுமமளி | 75 |
| கொல்லும்புலியுங் | 42 |
| கொற்றத்திறனுக்கு | 68 |
| கோ | |
| கோடாதருள்குணத் | 5 |
| கோடும்பிறை | 3 |
| கோணுதுகாக்குநற் | 44 |
| கோயர்தருபடைச் | 71 |
| கோலாகலப் | 96 |
| கோவாவொளிருங் | 17 |
| ச | |
| சங்கைக்குரிய | 56 |
| சதியாச்சுழன்றெழு | 17 |
| சரசகுண | 54 |
| சற்றும்பிரியே | 36 |
| சா | |
| சார்ந்தார்பிரிவர் | 63 |
| சாற்றுங்கவிகைப் | 64 |
| சி | |
| சித்தமும்புத்தியு | 35 |
| சித்தமெலாமவர்க் | 49 |
| சிந்தாகுலமுந் | 61 |
| சிந்திப்பதற்குற்ற | 78 |
| சிப்பியின்முத்தமு | 22 |
| சிரித்தேதரும் | 65 |
| சிலையுங்குலையுஞ் | 31 |
| சிறந்துவளர் | 7 |
| சினத்தினும்போரி | 103 |
| சினமாரயிற்படை | 41 |
| சினைத்தார்படர் | 58 |
| சின்னஞ்சிறியாள் | 69 |
| சீ | |
| சீதளவாடை | 100 |
| சீர்கண்டவண்ணல் | 43 |
| சீர்தரும்வள்ளல் | 37 |
| சு | |
| சுழிக்குநதிக்குந் | 43 |
| சுனையுந்தடமுஞ் | 28 |
| சுனையுந்தடமும் | 74 |
| சுனையும்பொழில் | 22 |
| சூ | |
| சூதாரிளமுலை | 64 |
| சூலுற்றவானென | 86 |
| செ | |
| செயலாலுயர்ந்த | 23 |
| செய்யாளெனவரு | 104 |
| செலவேயொறுக்கு | 45 |
| செல்லுக்கருது | 33 |
| சே | |
| சேய்கொண்டபூம் | 54 |
| சேல்காட்டும் | 85 |
| சேல்வைத்த | 61 |
| சொ | |
| சொல்லரும்வெம் | 97 |
| சொல்லுந்துயி | 57 |
| சொற்கண்டவா | 3 |
| சொன்மலைவாணர் | 67 |
| சொன்னமிலாது | 23 |
| த | |
| தண்டாமரைமுலை | 43 |
| தண்டாவளத்தன | 51 |
| தண்ணுறாநவத் | 44 |
| தருகார்நிகர்கரத் | 70 |
| தருந்தாமரைக்கரத் | 40 |
| தருந்தாருவன்ன | 78 |
| தழையார்கரமுந்தள | 30 |
| தழையாலொருகரி | 21 |
| தழையேயுடைக்கு | 25 |
| தன்றுயர்நோக்கார் | 89 |
| தன்னுருயிரொன் | 60 |
| தா | |
| தாதையெனப்புரப் | 3 |
| தாயோதுயில்கிலள் | 51 |
| தாய்துயிலாத | 49 |
| தாருடைவள்ளலை | 82 |
| தாவுண்டுசெல்பரி | 15 |
| தி | |
| திடங்கண்ட | 5 |
| திண்டந்தமற் | 41 |
| திருவார்மரும | 1 |
| திருவுற்றிலகு | 71 |
| திருவேயமர் | 14 |
| தினமேதரு | 30 |
| து | |
| துங்கந்தருகுணத் | 13 |
| துப்புண்டுசேக்குந் | 19 |
| துருவாவிடயிலை | 83 |
| துறந்தார்ப்பிழைத் | 35 |
| துன்பிற்கடைபடு | 95 |
| தூ | |
| தூங்குங்கனவிற் | 70 |
| தெ | |
| தென்னுஞ்செழும் | 63 |
| தே | |
| தேடித்தனந்தரு | 3 |
| தேறுத்தெளிவி | 50 |
| தொ | |
| தொடிக்கடிசெய்கா | 45 |
| தோ | |
| தோடுறங்காமலர்த் | 49 |

| பாடல். | பக்கம். |
|---|---|
| **ந** | |
| நகமுஞ்சதையு | 29 |
| நஞ்சமுமிழ்படை | 57 |
| நஞ்சமமுது | 36 |
| நஞ்சேயுமிழ்படை | 43 |
| நட்டார்க்குதவ | 102 |
| நண்ணுஞ்சுகிர்த | 31 |
| நந்தாவனத்து | 34 |
| நம்மனைக்கோவன்றி | 81 |
| நன்னென்றிருண்டு | 19 |
| **நா** | |
| நாடரிதாலவ | 40 |
| நாலொன்றுமேன் | 74 |
| நாலொன்றுமெய்ச் | 73 |
| **நி** | |
| நித்மாநிசிகர் | 90 |
| நிதியாலுயர்த | 7 |
| நிதியிற்பெருகு | 87 |
| நிறந்தாங்குழைகா | 37 |
| நின்வாய்மொழி | 61 |
| **நீ** | |
| நீங்குங்கடுஞ்சொ | 59 |
| நீடாழிவையம் | 12 |
| நீடுஞ்சிலைவடி | 57 |
| நீதஞ்செறிகுணத் | 12 |
| **நெ** | |
| நெறிக்குங்கருங் | 53 |
| **நூ** | |
| நூலேணியில்லை | 43 |
| **ப** | |
| பகைதந் | 5 |
| படிப்பாலுயர் | 49 |
| படியோர்குடை | 10 |
| படையேறு | 2 |
| பணிவாற்பகை | 92 |
| பண்ணேறு | 4 |
| பந்தகத்தாசை | 69 |
| பந்தாடியோ | 17 |
| பருக்கும்பெரு | 15 |
| பலர்வாய்ப்புகழ் | 38 |
| பழுக்குமமுதப் | 96 |
| பன்னுடவநு | 79 |
| **பா** | |
| பாட்டாற்றி | 4 |
| பாரார்பழிச்சு | 23 |
| பாராளுமன் | 4 |

| பாடல். | பக்கம். |
|---|---|
| பாருங்ககனும் | 30 |
| பாரோரலரும் | 68 |
| பார்கண்டுவெக் | 65 |
| பாலுங்கசப்பப் | 73 |
| பாலோடமுதும் | 80 |
| பாலோடமுதும் | 79 |
| பாவியனாய்க் | 7 |
| பா[illegible]கொ | 93 |
| **பி** | |
| பிடியே[illegible]ன | 52 |
| பிணை[illegible]த்த | 52 |
| பிழியேயுடலம் | 72 |
| **பு** | |
| புகலோடொளி | 57 |
| புயலேகுழலம் | 14 |
| புள்ளிற்பொலியும் | 28 |
| புனமேபுவனம் | 22 |
| புனமேமறந்தொரு | 36 |
| **பூ** | |
| பூசற்கெழுபுயத் | 86 |
| பூணுமகுடப் | 33 |
| பூமக[illegible]னம் | 56 |
| பூமகளாய்ப்பல | 93 |
| பூவார்மலருக் | 43 |
| பூவிற்படரப் | 82 |
| **பெ** | |
| பெண்ணாரமுதப்பி | 33 |
| பெண்ணாரமுதப்பெ | 48 |
| பெருமையுங்கீர்த் | 102 |
| பெருவாய்ப்பிடிந | 20 |
| **பே** | |
| பேராதரப்பெரு | 53 |
| பேராரமுதப் | 53 |
| பேரேந்திநின்ற | 65 |
| **பொ** | |
| பொங்குமயலனர் | 36 |
| பொய்க்கலையாப் | 56 |
| பொய்க்கொண்ட | 29 |
| பொய்ப்புண்டொளி | 21 |
| பொய்யாமொழித் | 18 |
| பொருளாலறமும் | 19 |
| பொருளேயறஞ் | 62 |
| பொல்லாமதன் | 61 |
| பொறையார்பெருந் | 15 |
| பொன்மாதுறை | 81 |
| பொன்வண்ண | 59 |

| பாடல். | பக்கம். |
|---|---|
| பொன்னகத்தா | |
| பொன்னணிசேர் | |
| பொன்னனைமேனிப் | |
| பொன்னனைதாங்கி | |
| பொன்னுமொளிரு | |
| பொன்னார்கமலப் | |
| பொன்னார்துயரம் | |
| **போ** | |
| போதேதாவிழுந்தது | |
| போர்தந்தவாட்கை | |
| போற்றியுந்தாழ்ந் | |
| போற்றுங்கருங் | |
| போற்றும்புணர் | |
| **ம** | |
| மகவுயிர்த்தாளென | |
| மங்கைக்கரசெனு | |
| மஞ்சங்கடுத்தனே | |
| மணந்தந்தசந்தன | |
| மணந்தேனெனுஞ் | |
| மணிமாளிகைத்திரு | |
| மணியார்கலாப | |
| மணியொளியாகி | |
| மண்ணாக்கும்பூபர் | |
| மண்டலத்தோர்பெ | |
| மதியேநிகர்த்து | |
| மயங்குந்தெளியும் | |
| மருப்பும்பொருப்பு | |
| மருளும்பிணைவிழி | |
| மலர்க்குளொளிரு | |
| மலையும்படிபல | |
| மழையுங்கரிந்து | |
| மறங்காலயில்விழி | |
| மறவாவரமளித் | |
| மறுகுறப்போந்த | |
| மறையனார்மொழிப் | |
| மனமாய்விரைந் | |
| மனையறம்பேணி | |
| மன்னர்க்கதிபதி | |
| மன்னுயிர்காக்க | |
| **மா** | |
| மாங்கனியாவி | |
| மாசையிற்பூத்த | |
| மாணைப்பொலியு | |
| மாலையும்வந்த | |
| மாவேந்தழைத்து | |
| மாறுக்கொடிய | |

பாடல். பக்கம்.
மாறாவமுத 11
மானாரலரு 89
மானார்விழியை 82
மி
மிஞ்சாவிளமுலை 75
மின்னைப்பழித்த 94
மீ
மீறும்பெருந்தன 35
மு
முடிமாலைசூட்டும் 68
முடியிருந்துண்ப 47
முத்துண்டொளிர் 13
முந்தத்தவத்தின் 4
முலைகண்டுவாயிதழ் 34
முலைகாட்டிமுத்த 11
முலைப்பகைசண்டு 14
முலையும்பசப்ப 71
முலையோகெருடி 59
முலையோபருத்தில 28
முற்றுமுடலுயிர் 61
முனைத்தனையா 65
முனையுங்கடகரி 94
முன்னாலறிந்தகின் 24
முன்னிலைவிட்டு 90
முன்னெடுபின்னு 9
மெ
மெய்க்கும்பெருந் 72
மெய்யுஞ்செவியு 16
மெய்யோடிரண் 9
மே
மேகமுமோர்கை 8
மை
மையைநிகர்த்த 95
யோ
யோகத்திற்சிரி 8
வ
வஞ்சினங்காட்டி 101
வஞ்சினமோபகை 50
வந்திரந்தார்க்கு 10
வரத்தாலுயர் 72
வரமேபெருகு 80
வருத்திமயக்தமய 9
வருத்திமயக்குமய 24
வலம்புரியீன்றமணி 81
வலம்புரியீன்றமணி 94
வல்லார்புகழு 70
வழுத்துஞ்சுகிர்த 33
வள்ளக்கமலச்செவ் 99
வள்ளத்திருவாய் 60
வற்போலுயர் 70
வற்றாச்சுகிர்தமெய் 16
வன்மறந்தாழ்ந்து 91
வா
வாங்காய்தழை 32
வாடாமலர் 50
வாடியழுங்கி 102
வாயாலுலகம் 23
வாயாற்கலை 21
வாயேயெவர் 23
வாவியிற்காவி 12
வாளாக்கிடந்து 33
வானகஞ்சூழ்ந்த 14
வானாரமிழ்தும் 94
வானாரமுத 92
வானேமுடி 14
வானேறதிரொலி 48
வானோபுவியோ 2
வான்காக்கும் 100
வான்கொண்டகொ 76
வான்கொண்டமெய் 54
வான்பிறழ்ந்தா 8
வி
விடவாளரவெங் 74
விண்ணைப்பழித்த 27
விண்பட்டசோம 20
விதியேவலிதென 29
விலையளித்துன் 63
வில்லிற்றுணையில் 35
வில்லுக்குவல்ல 57
வினையாற்பயனும் 31
வீ
வீணையழுங்கி 48
வீணையொருத்தி 26
வீணாய்விளம்பல் 30
வெ
வெண்டாமரைமகள் 94
வெப்பாலவிந்த 81
வெல்லுமதமலை 40
வெளிப்பணிநீப்பி 74
வெள்ளத்துண்மூழ் 29
வெறியார்மயலும் 36
வெறியார்மலர்த் 45
வெறுக்கும்பழி 32
வே
வேலையினோக்கு 27
வேலையுங்காவியும் 77
வேள்விடுத்தான் 63

ஷம்சுத்தாசீன் கோவைச் செய்யுள் அகராதி

முற்றிற்று.

# பிழை திருத்தம்.

| பக்கம். | வரி. | பிழை. | திருத்தம். |
|---|---|---|---|
| 10 | 20 | கங்குநோத | கங்குறேத் |
| 18 | 2 | திகழ்ச்ஙியை | திகழ்ச்சியை |
| ” | 25 | சேயீழை | சேயிழை |
| 20 | 17 | முரையு | முழையு |
| 22 | 34 | ணருந்தவ | ளருந்தவ |
| 24 | 10 | சரற்றல் | சாற்றல் |
| 25 | 28 | சொற்றின | சொற்றின் |
| 29 | 33 | வெல்ளர | வெல்லா |
| 30 | 22 | முரையு | முழையு |
| 35 | 26 | நோக்கி | நோக்கிக் |
| 38 | 5 | யேரம்படை | யோம்படை |
| 39 | 32 | னெடுக்தகை | னெடுந்தகை |
| 44 | 32 | றணிகசை | றனிகசை |
| 45 | 16 | சேட்டு | சேட்டு |
| 49 | 26 | கரவலர் | காவலர் |
| 51 | 4 | னயர்த்தறிக் | னயிர்ந்தறிக் |
| 58 | 3 | தலைவனுகு | தலைவனுக்கு |
| 62 | 8 | வயற்பிரி | வயிற்பிரி |
| 65 | 26 | வரழ்த்தல் | வாழ்த்தல் |
| 70 | 12 | குழ்கண் | குள்கண் |
| 73 | 10 | புனலிடை | புனலிடைத் |
| ” | 21 | புடையுன | புடையன |
| 75 | 9 | புரைத்துழி | புரைத்துழித் |
| 75 | 25 | விடுத்தவ் | விடுத்தல் |
| 80 | 14 | குனமலிக் | குனமெலிர் |
| 89 | 13 | பரங்கி | பாங்கி |
| 90 | 31 | திகமா | இனமா |
| ” | ” | சிலென[illegible] | சின்செழுங் |
| 91 | 2 | கல்[illegible] | நல்ல |
| 130 | 7 | ய[illegible] | யாற்று |

Dr. U. V. S. IYER LIBRARY ★ MADRAS-90 ★
23503